2918

T. N. L. H. Debates

OFFICIAL REPORT

VOL: 20 - NO: 2

April. 2 1986

D
211,31 'N86
N86.20.2.
1:6464

வெளியீடு 27-10-1986 Issued 27-10-1986

8841

2418

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 2, 1986-தொகுதி 20 எண். 2
Wednesday the April 2, 1986-Volume 20 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

136464
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

2-4-1986 பக்கங்கள்


1. வினாக்கள்-விடைகள் :
   உடுக்குறியிட்ட வினாக்கள் 289—318
2. தகவல் கோரல் :
   சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய கூட்டங்களில் கலந்து கொள்வது 319—323
3. கவன ஈர்ப்புகள் :
   (அ) சென்னை நகரில் கொசுக்களால் ஏற்படும் இன்னல்கள் குறித்து 324—328
   (ஆ) மோட்டார் வாகனங்கள் வெளியிடும் புகையினால் நகர மக்கள் பாதிக்கப்படுவது 328—332
4. அரசினர் சட்ட முன்வடிவு :
   கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு 1986 332—351
5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)
   கோரிக்கை எண் 35-நுகர்பொருள் வழங்கல் 351—422
   மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு 351, 352, 393—421
   திரு. ந. சிவஞானம் 353—358
   திரு. க. பாலசுப்பிரமணியன் 358—363
   திரு. மா. மணிமாறன் 363—369
   திரு. எல்ல. இராசமாணிக்கம் 369—372
   திரு. எ. தெய்வநாயகம் 372—377
   திரு. பாப்பா சுப்பிரமணியன் 377—381
   திரு. ஜே. ஹேமச்சந்திரன் 381—387
   திரு. எஸ். என். இராமசாமி 387—388
   திரு. பொ. உத்திராபதி 389—393
6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 422

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986 ஏப்ரல் 2, புதன்கிழமை.

பங்குனி 19, குரோதன, திருவள்ளுவராண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''.

வறியவரின் கடும்பசியைத் தீர்க்கவேண்டும்; அதுவே பொருள்பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### விவசாய குடியிருப்புச் சட்டத்தின் கீழ் பட்டாக்கள் வழங்கல்

340—(*வினா எண். 3432) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாய குடியிருப்பு சட்டத்தின்படி, 1971 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து தனியார் நிலத்தில் ஒருவர் சொந்தத்தில் வீடுகட்டி வசித்து வருவதற்கான வீட்டுவரி ரசீது இருப்பதை நிரூபித்தால் மட்டுமே குடியிருப்பு பட்டா வழங்கப்பெற்றும், கடந்த பல ஆண்டுகாலமாக ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக வீட்டு வரி ரசீதுகள் அழிந்துவிட்ட நிலையில் 1971 ஆம் ஆண்டிலிருந்து உள்ள ரசீதுகளை நிரூபிக்க இயலாமல் குடியிருப்பு பட்டா வழங்க இயலாத நிலையுள்ளதால், 1981 ஆம் ஆண்டிலிருந்து உள்ள வீட்டுவரி ரசீது இருப்பதை நிரூபித்தாலே குடியிருப்பு பட்டா வழங்கலாம் என சட்டத்தை திருத்தும் நோக்கம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு சட்டம் கொண்டு வராவிட்டாலும்கூட, கடந்த வெள்ளம், புயலின் காரணமாக வீட்டு வரி

ரசீதுகள் இழக்கப்பட்டிருக்கின்றன. எனவே ரசீதுகளை காண்பிப் பதற்கு பதிலாக பக்கத்து வீட்டிலே வசிக்கின்றவர்களின் ஸ்டேட் மெண்ட்களை வைத்து அவர்களுக்கு பட்டா வழங்கப்படுவதற்கான அதிகாரம் அளிப்பதுபற்றி இந்த அரசின் பரிசீலனையில் இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடியிருப்புச் சட்டம் 40/71, பிரிவு 3-ன்படி குடியிருப்பு பட்டா கேட்பவர்கள் கீழ்க் கண்ட தகுதிகளை பெற்றிருக்கவேண்டும் :—

(1) 19–6–1971ஆம் நாளில் குடியிருப்பு பட்டா கோரும் புலத்தில் அவர்கள் குடியிருந்து இருக்கவேண்டும்,

(2) விவசாயியாகவோ அல்லது விவசாயத் தொழிலாளி யாகவோ இருந்திருக்கவேண்டும்.

(3) குடியிருப்பு இடத்தில் வாடகைதாரராகவோ அல்லது அனுமதி பெற்றவராகவோ இருக்கவேண்டும் என்ற விதிகளின் அடிப் படையில் அவர்கள் நிரூபிக்கவேண்டும். வீட்டுவரி ரசீதை மட்டும் அடிப்படையாகக் கொண்டு குடியிருப்பு பட்டா வழங்கப் படுவது இல்லை. காட்டப்படுகின்ற பல ஆதாரங்களில் அதுவும் ஒன்று. ரசீது காணாமல் போனாலும்கூட பஞ்சாயத்து வீட்டுவரிரசீது பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டும், வாக்காளர் பட்டி யலைக் கொண்டும், வேறு சில ஆவணங்களைக் கொண்டும், அவர் 19–6–1971ல் உண்மையில் குடியிருந்தவரா என்பதைக்கூட முடிவு செய்ய முடியும். அப்படிப்பட்ட ஆதாரங்களை வைத்துகூட அவர்கள் தங்களுடைய குடியிருப்பு பட்டா பெறுவதற்கான முயற்சிகளை செய்யலாம். எனவே 1981ஆம் ஆண்டிலிருந்து குடி யிருந்து வருகிறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்க சட்டத்தில் இடமில்லை.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த அனைத்து தகுதிகளையும் பெற்றிருந்தும்கூட இன்னும் தஞ்சை மாவட்டத்திலே தகுதியுடைய பல்லாயிரக்கணக்கானோர் பட்டா கிடைக்கப்பெறாமல் இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் 1971 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட அந்த பட்டாக்களில் தனியாருக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர—ஆனால் பட்டா கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட அது அரசாங்கத் தினுடைய கணக்கு வழக்கிலே போக்குவரத்து ஆகாத நிலைமை யிலே பட்டா கொடுக்கப்பட்டும் அது தகுதியுடைய பட்டாவாக இல்லாமல் இருப்பது இந்த அரசினுடைய கவனத்திற்கு தெரிய வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே கூறியபடி அந்த மூன்று நிபந்தனைகளின் அடிப்படையிலே பட்டா கோருவதற்கு உரிமைகள் உண்டு. அந்த பட்டா கோருவதற் கான ஆதாரங்கள் எந்தெந்த வழியிலே தர இயலும் என்பதை யும் நான் எடுத்துச் சொன்னேன். அந்த அளவுக்கு தங்களுக்கு பட்டா பெறுவதற்கு உரிமை உண்டு. பட்டா வழங்குவதற்கான முயற்சிகளை முறைப்படி வருவாய் துறையினர் மேற்கொள்வார் கள். 30–4–1985 ஆம் ஆண்டு முடிய நிலவரப்படி தாழ்த்தப் பட்ட வகுப்பினர் 98,978 பேர் பட்டா பெற்றிருக்கிறார்கள்; மலை ஜாதியினர் 244 பேர் பட்டா பெற்றிருக்கிறார்கள்; பின்தங்கிய வகுப்பினர் 48,910 பேர் பட்டா பெற்றிருக் கிறார்கள். மற்ற வகுப்பினர் 31,961 பேர் பட்டா பெற்றிருக் கிறார்கள். ஆகவே மொத்தம் 1,80,093 பேர் பட்டா பெற்றிருக் கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அவர்கள் பட்டா பெறுவதற்கான தகுதியும், அதற்கான உரிமை இருந்தும் அவர்கள் பெறப்படாத அளவு சிலபல சூழ்நிலைகளோ அல்லது தடைக்கற்களோ இருக்குமேயானால் அதை அரசினுடைய கவனத்திற்கோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்கோ கொண்டு வரப்படுமேயானால் அவற்றைப்பற்றி ஆராய்ந்து நியாயத்தை வழங்குவதற்கு அரசு முயற்சி செய்யும்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் பதில் சொல்லும்போது 1971 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டத்தின்படி பட்டா வழங்கப்படுகிறது என்றும் அதற்கு பிறகு இருந்தாலும் அல்லது அதற்கு முன்னால் இருப்பவர்கள்கூட சரியான ஆதாரங்களை அவர்கள் கொடுக்காத தால் அவர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றும் சொன்னார்கள். ஆகவே நான் அரசை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் நெடுங்காலமாக அவர்கள் வாக்காளர்களாக அங்கே இருந்து கொண்டு இருப்பதாலும் அவர்களுடைய பெயரும் இருப்பிடமும் வாக்காளர் பட்டியலில் தெளிவாக தெரிவதால் அதை அடிப்படையாக வைத்து அவர்களுக்கு பட்டா வழங்கு வதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 1961 ஆம் ஆண்டிலிருந்து தற்காலிகமாக இப்படிப்பட்ட பட்டாக்கள் வழங்கப்பட்டாலும் 1971 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலம் நிரந்தரம் ஆக்கப்பட்டது. ஆக அந்த நிபந்தனைகளின்

அடிப்படையில்தான் பட்டா வழங்கப்படுகிறது. ஊரில் குடியிருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்காக இருக்கின்ற ஆதாரங்கள் மூலமோ, வாக்காளர் பட்டியல் மூலமோ, வீட்டு வரி கட்டி அதற்கு உண்டான ரசீது மூலமோ பஞ்சாயத்து மூலம் வீட்டு வரி கட்டியிருந்தால் அந்த பதிவேட்டு மூலமோ நிரூபிக்கலாம். வாக்காளர் பட்டியல் மூலமும் நிரூபிக்கலாம். ஆனால் வாக்காளர் பட்டியலில் 1971 ஆம் ஆண்டுக்கு முன்னால் அவர்கள் இருந்தார்கள் என்று இடம் பெற்று இருக்க வேண்டும்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வீட்டு மனைப் பட்டா பொறுத்தவரையில் 1971 ஆம் ஆண்டு ரசீதை கண்டிப்பாக கேட்கிறார்கள். ஆனால் கிராமத்தில் வாழக் கூடியவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவது போல் பல்வேறு வகையான காரியங்களை நிரூபிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, 1981 ஆம் ஆண்டு வீட்டு வரி கட்டியிருந்தால் போதும் என்று அந்த சட்டத்தை திருத்துவதற்கு—இப்படிப்பட்ட சிக்கல்களை தீர்ப்பதற்காக—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டம் 29-11-61ல் தற்காலிகமாக கொண்டு வரப்பட்டது. தற்காலிகமாக இருந்து வந்ததை பிறகு 1971 ஆம் ஆண்டு நிரந்தரம் ஆக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டுக்கு முன்னால் அவர்கள் கட்டிய வீட்டுவரி ரசீதை எந்த ஒரு ஆண்டில் கொண்டு வந்தாலும் கூட அந்த வீட்டு வரி ரசீதை பெற்று இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக அமையும். அல்லது வாக்காளர் பட்டியலில் இருந்தாலும் அமையும். 1971க்கு முன்னால் இருக்க வேண்டும். 1981க்கு பின்னால் சேர்ந்தார்கள் என்றால் இதில் இடம் பெற முடியாது. ஆதாரங்கள் காட்டுவதிலே ஏதேனும் ஒன்றை வைத்து நிரூபிக்க வேண்டும் என்பதுதான்.

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருக்கிற காரணத்தாலே தற்போதுள்ள சட்டங்களும், உத்தரவுகளும், விதிகளும், விவசாயிகளுக்கும் இதர குடிமக்களுக்கும் பட்டா வழங்குவதிலே குறுக்கீடு இருக்கிற காரணத்தாலே அதை முழுவதையும் மீண்டும் பரிசீலனை செய்து அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு ஒரு புதிய கொள்கையின் அடிப்படையில் சட்டத்தை கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன். ஏராளமானவர்களுக்கு வீடு கிடைப்பது இல்லை



இது எல்லா கிராமங்களிலும், எல்லா தாலுக்காக்களிலும் நிரந்தரமான பிரச்சினையாக மாறி இருப்பதாலே இந்த ஆண்டு புதிதாக இதை பரிசீலிப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியபடி 19-6-1971-ல் உண்மையில் குடியிருந்தாலே அதற்கு முன்னால் இருந்து இருக்கிறார்களா என்ற நிலைமையின் அடிப்படையைப் பார்த்து இது வழங்கப்பட்டு இருக்கிறது. ஆக 15 ஆண்டு காலமாக இவைகளை எல்லாம் நிரூபித்து அவர்கள் இதை பெறுவதற்கு முழு உரிமை இருந்து இருக்கிறது. அந்த வகையில் 1 லட்சத்து 80 ஆயிரத்து 93 பேர் பட்டா பெற்று இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பட்டாக்கள் எல்லாம் நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த ஆதாரங்கள் காட்டுகின்ற அதன் அடிப்படையில் பெற முடியாமல் போவதற்கு என்ன நியாயமான காரணம் என்பதை கண்டு அறிய வேண்டும். அப்படி கண்டு அறிகின்ற முறையில் ஏராளமான தன்மைகள் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் அதை மறுபடியும் பரிசீலிக்க வேண்டி வரும். ஆகவே தான் இதைப்பற்றிய விவரமான குறிப்புகள் முழுவதையும் வைத்துக் கொண்டு தான் முடிவு செய்ய வேண்டிவரும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய குடியிருப்புச் சட்டம் பல காலம் உச்ச நீதி மன்றத்தினுடைய தடையால் இது நிறைவேற்றுவது தடைப்பட்டு இருந்தது. அந்த உச்ச நீதிமன்றத்தினுடைய தடை நீக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். நிலச் சொந்தக்காரர்கள் உத்தேசிக்கப்பட்ட பட்டா இடம் தன்னுடைய விவசாய சாகுபடிக்கு இடையூறான இடமாக இருந்து மாற்று இடத்தைக் கொடுப்பதற்கு முன் வந்தால் அதை ஏற்றுக் கொள்வதற்கு சட்டத்திலே வகை இருக்கிறதா என்பதையும் அப்படி இல்லை என்றால் இடையூறை இரண்டு பக்கமும் தவிர்ப்பதற்கு மாற்று இடம் கொடுப்பதற்கு வழி வகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா பெறுகின்ற இடம் ஒரு குறிப்பிட்டவருடைய நிலத்திற்குப் பக்கத்திலே, வெகு தொலைவிற்கு இல்லாமல், அண்மையில், ஏற்ற ஒரு இடமாக இருந்தால் மாற்று இடம் தருவதற்குச் சட்டத்தில் வழிவகை இருக்கிறது.

[1986 ஏப்ரல் 2

**வெள்ள நிவாரணப் பணிகளுக்கு மைய அரசு உதவி.**

341—(*வினா எண். 7181) **திருமதி பா. வளர்மதி** : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1985 நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு மைய அரசு வழங்கிய உதவித்தொகை எவ்வளவு?

(ஆ) கடன் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(ரூபாய் இலட்சத்தில்.)

| | | |
|---|---|---|
| (அ) மத்திய அரசு அறிவித்த உச்ச வரம்புத் தொகை | .. .. | 6,681·40 |
| மார்ஜின் தொகை | .. .. | 875.00 |
| மீதி | .. | 5,806.40 |
| மத்திய அரசின் பங்கு 75 சதவீதம் | .. | 4,354.80 |
| மாநில அரசின் பங்கு 25 சதவீதம் | .. | 1,451.60 |

(ஆ) இல்லை

**திருமதி பா. வளர்மதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீர்ப்படுத்துவதற்கு எவ்வளவு உதவித் தொகை வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கம் கோரியது? அதில் சென்னை மாநகருக்கு எவ்வளவு தொகையை அரசு அனுமதித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளச் சேதத்தினால் ஏற்பட்ட நிலைமைகளைப் பழுது பார்த்து சீர்படுத்துவதற்கும், அதற்குப் பிறகு, மேம்பாட்டுப் பணிகளை செய்து, நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக ரூ. 187 கோடி கேட்டோம். ஆனால், மத்திய அரசு இரண்டு குழுவினரை அனுப்பியது. உடனடியாக வெள்ளச் சேதத்தின் மூலம் ஏற்பட்ட பழுதுகளைச் சரிபார்ப்பதற்கு மட்டும் தான் ஏற்றுக்கொண்டது. அந்த அளவிற்கு மட்டும் செலவழிப்பதற்கு ஒப்புதல் தந்தார்கள். அந்த வகையில் அறிவித்த உச்சவரம்புத் தொகை 6,681.40 இலட்சம் ரூபாய். அதில் மார்ஜின் தொகை 875 இலட்சம் ரூபாய். மார்ஜின் தொகை ஆண்டுக்காண்டு எட்டாவது நிதிக் குழு சிபாரிசின்



1986 ஏப்ரல் 2]

அடிப்படையிலே அரசு ஒதுக்க வேண்டும். அதில் பாதியை மாநில அரசும், பாதியை மைய அரசும் ஒதுக்க வேண்டும். எந்த ஆண்டு வெள்ளம், வறட்சி ஏற்பட்டாலும், அது அக்யூமுலேட் ஆகி சேர்ந்து கொண்டே வரும். பின்னர் எப்போது வெள்ளம், வறட்சி ஏற்பட்டாலும் அது பயன்படுத்தப்பட்டு, அதைக் கழித்துக் கொண்டு வருவார்கள். அந்த வகையில் ஒதுக்கப்பட்டதுதான் ரூ. 58.064 கோடியாகும். அதில் 75 பங்கை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். 25 பங்கை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். இந்த வகையில் மத்திய அரசின் பங்கு ரூ. 43,54,80,000, மாநில அரசின் பங்கு ரூ. 14,51,60,000 என்றாகும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தனிக் கேள்வி போட்டால், தனியாகப் பதில் சொல்ல முடியும். ஆனால் இதுவரையிலும் கிட்டத்தட்ட ரூ. 59, ரூ. 60 கோடி அளவிற்கு மார்ச் 31 ஆம் தேதி வரையில் செலவு செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக் கிறது. மேற்கொண்டு ரூ. 6 கோடி சில்லறை செலவு செய்வதற்கு மத்திய அரசு அனுமதித்து மாநில அரசு பெற்றிருக்கிறது. ஜூன் 30 ஆம் தேதிக்கு வரை அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். ஜூன் 30 ஆம் தேதிக்குள் நாம் எடுத்துக்கொண்டு, திட்டங்களை நிறைவேற்றிப் பயன்படுத்துகின்ற வகையில், இந்தத் தொகை அமையும்.

**திருமதி பா. வளர்மதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் சேதம் அடைந்த பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய நிபுணர் குழு தமிழக அரசிற்கு அளிக்கும்படி சிபாரிசு செய்த தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மத்திய அரசினுடைய குழுவினர் அறிவித்த வகையிலேதான் இந்த ரூ. 64 கோடி சில்லறையை அவர்கள் சிபாரிசு செய்தார்கள். அதற்குப் பிறகு அடையாற்றில் அடிக்கடி வெள்ளச் சேதங்கள் ஏற்படுவதை எடுத்துச் சொல்லி, 2 கரைகளையும் உயர்த்தி அங்கே இருக்கின்ற குடியிருப்புகளை அகற்ற இனிமேல் ஆகாது, அந்த இடத்தையும் மேடாக்கவும் இனி ஆகாது என்ற காரணத்தால், அதற்குத் தனியாக ரூ. 1½ கோடியை கொடுக்க மத்திய அரசு இசைந்ததன் விளைவாக அதையும் சேர்த்து, ரூ. 66.81 கோடியை ஒதுக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

**திரு சைதை சா. துரைசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளச் சேதங்களால் நிரந்தரமாகப் பாதிக்கப் பட்டு வருகிற அடையாறு கரையை பலப்படுத்துகின்ற திட்டம் இதிலே சேர்க்கப் பட்டிருக்கிறதா? 2 கோடி ரூபாய் செலவில் கரை கட்டுகிற திட்டம் இதிலே சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது இணைக்கப் பட்டிருக்கிறதா என்பதை

அறியவிரும்புவதோடு வெள்ளச் சேதம் ஏற்படுகிறபோது அடிக்கடி பாதிக்கப்படுகிற இடங்களிலே குடிசை வாழ் மக்கள் பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு மாத்திரம் 300 ரூபாய்—பாதி என்றால் 150 ரூபாய் வழங்கப்படுகிறது. இப்போது வறட்சி ஏற்படுகிறபோது மாவட்ட வாரியாக தாலுகா வாரியாக பிரிக்கப்பட்டு அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுத்து அதிகச் சலுகைகள் அளிக்கிறோம். அதைபோலவே வாட்டர் லாங்டு என்று சொல்லப்படுகிற வெள்ளத்தால் பாதிக்கப்படுகிற பகுதிகளிலே இருக்கிற குடிசை வாழ் மக்கள் மட்டுமல்ல, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலே உள்ள கல்வீடுகள் மற்ற வீடுகள் பாதிக்கப்படுகிறபோது அவர்களுக்கும் நிவாரணம் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்திலே உள்ள மிகவும் நலிந்தவர்களாக இருந்து அவர்களுக்கு ஏற்படுகிற ஆபத்திலிருந்து தப்புவதற்கு வழியின்றி இருப்பவர்கள் ஆக இருந்து சேதத்திலிருந்து மீளமுடியாத அளவுக்கு இருக்கிற நிலையில் இருக்கும் ஏழை எளிய குடிசை வாழ் மக்களுக்குதான் உதவி வழங்கப்படுகிறதே தவிர கல்வீடுகளிலே, பங்களாக்களிலே இருக்கிறவர்களுக்கு, திரு சை. துரைசாமி போன்றவர்களுக்கு எல்லாம் கொடுக்கவேண்டும் என்று சொல்வது சரியாக வராது. ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் என்ற முறையிலே நாம் அளிக்கிற 300 ரூபாயிலேயே அவர்களுக்கு ஏற்பட்ட சேதங்களிலிருந்து அவர்கள் நிவர்த்தி செய்து கொள்கிறார்கள் என்று நாம் சொல்ல இயலாது. ஓரளவுக்கு அவர்களுக்கு உதவுகிற வகையில்தான் அமைந்திருக்கிறது. அவர்கள் கஷ்டங்களை எல்லாம் அதன் மூலமாக முழுவதுமாக போக்குகிறோம் என்று சொல்லமுடியாது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க தலைவர் அவர்களே, கழிந்த நவம்பர் மாதத்திலே தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச்சேதத்திற்காக மாநில அரசு மத்திய அரசிடம் 187 கோடி ரூபாய் கேட்டது. மத்திய அரசு 66.81 கோடி ரூபாய் கொடுத்தது. மார்ச் மாதம் முடிவதற்குள்ளாக சற்றேறக்குறைய 60 கோடி ரூபாய்தான் செலவழிக்க முடியும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சற்றைக்கு முன்பு பதில் சொல்கிறபோதுகூட பொருளாதார அடிப்படையிலே அடித்தளத்திலே இருக்கிறவர்களுக்கும் வறுமைக்கோட்டோடு உறவாடிக்கொண்டிருக்கிறவர்களுக்கும் அந்த நிதி போய்ச் சேரவேண்டும் என்று சொன்னார்கள் அப்படிக் காலந்தாழ்த்தி சுணக்கமாகக் கொடுப்பதால் நிதியை. எந்தக் காரியத்திற்காகக் கொடுக்கிறோமோ அது நிறைவேறாமல்





போய்விடுகிறது அல்லவா? தமிழகத்திலே நிலவி வருகின்ற வறட்சி நிவாரணத்திற்காக உதவியை மாநில அரசு மத்திய அரசிடம் கேட்க எண்ணியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ள நிவாரணப் பணிகள் என்று வருகிறபோது குடிசை வாழ் மக்களுக்கு தருகின்றவைகள் அந்தப் பணிகள் எல்லாம் முடிந்துவிட்டன. சாலைகள் சீர்படுத்துதல், ஏரிகளைச் சீர்படுத்துதல், பாலங்களைச் சீர்படுத்துதல், போன்ற பணிகளை நாம் முடிக்கவேண்டியிருக்கிறது. அவற்றை அவசரம் அவசரமாக முடிக்கவேண்டுமென்றால், நவம்பரிலேதான் வந்தது, அதைக் கணக்கு எடுப்பதற்கே 10, 15 நாட்கள் ஆகிறது. வேலை தொடங்குவதற்கு சிலபல நாட்கள் ஆகும், டெண்டர்கள் பெற சிலபல நாட்கள் ஆகும், ஆகவே காரியங்களை அவசரம் அவசரமாக செய்தால் அவசர கோலத்திலே அள்ளித் தெளித்துவிட்டார்கள் என்ற ஒரு குறைபாடும் வரும், அது வராத அளவிலே செய்வன திருந்தச் செய் என்ற முறையிலே அவசரம் இல்லாமல் இருக்கவேண்டும், அதே சமயத்திலே காரியங்கள் நிறைவேறவேண்டும். பணம் ஒழுங்காக காரியங்களுக்கும் போகவேண்டுமென்ற முறையிலே செய்கிறோம். நவம்பரிலே ஆரம்பித்து டிசம்பரிலே வேலைகள் தொடங்குகிறபோது அவசரப்பட்டு அவைகளை முடித்தே தீரவேண்டுமென்று கருதி 66 கோடி ரூபாயை செலவழிப்பதில் அவசரப்பட்டுச் செய்தால் கேடுபாடுகள் வரும். மத்திய அரசு அவசரப்படக்கூடாது என்று சொல்லியிருக்கிறது. ஆகவே நாம் மத்திய அரசிடம 3 மாத காலம் கேட்டோம், மத்திய அரசும் அதைத் தருவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. ஜூன் கடைசி வரைக்கும் செலவழிப்பதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். அந்த அனுமதியின்பேரில் நாம் இப்போது செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். குடிசை வாழ் மக்களுக்குதான் உதவி கொடுக்கிறோம். இது வெள்ளச் சேதத்தினுடைய நிலைமைகள், வறட்சியைப் பொறுத்தவரையிலே நான் நேற்றைக்கு முன்தினம் கூறியபடி ரிப்போர்ட் வந்த பிறகுதான் வஜா பற்றி முடிவு செய்யமுடியும். மத்திய அரசு தலையிடக்கூடிய அளவுக்கு பெரும் வறட்சிகள் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆங்காங்கே பாக்கெட் பாக்கெட்டாக ஏற்பட்டிருக்கிற நிலை இருக்கிறது. அந்த ரிப்போர்ட் வந்த பிறகு அதற்கான சூழ்நிலைகளை ஆராய்ந்துதான் வடிக்கை எடுக்கமுடியும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அவசரம் காட்டி வேலை செய்யவேண்டிய அவசியம் இல்லை, மாநில அரசும் மத்திய அரசும் அப்படிக் கருதுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மதுராந்தகம் ஏரி போன்ற

[1986 ஏப்ரல் 2

(முற்பகல் 9—20)

மிகப்பெரிய ஏரி உடைப்பெடுத்து அந்த வேலைகளில் தாமதம் ஏற்படுகிறது. இதனால் அந்தப் பகுதியில் விவசாயம் பாதிக்கப் படுகிறது; மேலும் டிரங்க் ரோட்டில் உடைப்பு ஏற்பட்டிருப் பதால் போக்குவரத்திற்கும் பலநாட்கள் தாமதப்படுத்தப்பட்டது என்பதால் அம்மாதிரி காரியங்களை உடனடியாக அவசரமாக அவசியமாகச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறதா ? எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரியைச் சீர்படுத்து வதிலே மும்முரமாக அவசரமாக சில பலதன்மைகளிலே ஈடுபட்டு வந்தார்கள். முதலிலே ஏற்பட்ட உடைப்பிலே வந்த வெள்ளம், இருந்த வெள்ளத்தையும் சேர்த்து வெளியே கொண்டுபோய் விட்டது. அதன்பிறகு ஒழுங்குபடுத்தி, கரை அமைந்த பிறகு, ஓரளவு பெய்த பெருமழையின் காரணமாக ஏரி நிரம்புகின்ற அளவிற்கு வந்து, சீர்படுத்தப்பட்ட அணை மறுபடியும் உடைப் பெடுத்து மறுபடியும் ஏரி முழுவதும் காலியாகிவிட்டது. மறு படியும் சீர்படுத்த வேண்டிய கட்டமும் வந்து, ஓரளவுக்குக் கரைகள் சீர்படுத்தப்பட்டது. சாலைகளைச் சீர்படுத்தும் முறை யும் ஆகிவிட்டது. நீண்ட தூரத்திற்குச் செல்கின்ற இரயில்வே யும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதையும் சீர்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இரயில் ஓடுகிறதே தவிர, இன்னும் அந்த இடத்தில் பத்து நிமிடங்கள் தங்கி மெதுவாக விட வேண்டிய அளவிற்குத் தான் இருக்கிறது. ரோடுகளைச் சரியாக்கி விட்டார்கள், தார் போடுகின்ற முயற்சி நடக்கிறது, செம்மைப்படுத்துகின்ற அளவிற்கு முயற்சி நடக்கிறது. அவர்கள் சொன்னது மாதிரி அதைச் சீராகச் செய்ய வேண்டும்; டிரங்க் ரோடாக இருப்பதால், மெயின் லயனாக இருப்பதால் அதிலே கவனம் செலுத்தி வருகிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு விரைவிலே அந்தப் பணிகளைச் செம்மை யாக முடிக்க முடியுமோ அந்த அளவிற்கு முடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

அரசு அலுவலகங்களில் ஆறு நாட்கள் பணி

342 (*வினா எண். 7999)—**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வாரத்தில் ஆறு நாட்கள் அரசு அலுவலகங்களில் பணி புரியும் திட்டம் மீண்டும் கொண்டுவரும் நோக்கம் ஏதேனும் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் இத்திட்டம் கொண்டு வரப்படுமா ?



1986 ஏப்ரல் 2]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) வாரத்தில் ஆறு நாட்கள் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் திட்டம் மீண்டும் கொண்டு வரும் நோக்கம் அரசிற்கு இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசாங்க அலுவலகங்களில் வேலை நாட்கள், மைய அரசினுடைய கொள்கையால், நமது மாநிலத்திலும் ஐந்து நாட்களாக ஆக்கப் பட்டிருக்கின்றது. இதனால் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. சில நேரங்களில், சனி, ஞாயிறை ஒட்டி பொது விடுமுறை வந்தால் ஒரு வார கால அளவிற்குக்கூட அலுவலகங்கள் மூடப் பட்டிருக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. மொத்தத்தில் வாரத்தில் ஆறு நாட்கள் அரசு அலுவலகங்கள் பணிபுரிய வேண்டுமென்று தான் பொதுமக்களில் பெரும்பான்மையோர் கருத்து கொண்டிருக் கிறார்கள். எனவே, தற்போது இந்தத் திட்டம் இல்லை என்றாலும் கூட, இப்படி 6 நாட்களை ஐந்து நாட்களாகக் குறைத்த பிறகு அரசு அலுவலகங்களிலே கோப்புகளை முடிப் பதிலே ஏதாவது காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்காக ஒரு குழுவை அமைத்து, அந்த ஆய்வுக் குழு கொடுக்கின்ற அறிக்கையின் அடிப்படையிலே மீண்டும் ஆறு நாட்களாக ஆக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே, வாரத்தில் ஆறு நாட்கள் வேலை என்றும், மாதத்திலே வருகின்ற நான்கு சனிக் கிழமைகளிலே மூன்று சனிக்கிழமைகள் வேலை என்றும், ஒரு சனிக்கிழமை—அதாவது இரண்டாவது சனிக்கிழமை முழு விடுமுறை என்றும் இருந்ததை மாற்றி, இப்பொழுது வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை, சனி மற்றும் ஞாயிறு ஆகிய நாட்கள் விடுமுறை என்ற அளவிற்கு, வேலை நேரத்தை ஓரளவிற்கு கூட்டி சரிப்படுத்தும் அளவிற்கும் மாற்றியமைக்கப்பட்டது. இது 3—6—1985 அன்று நடைமுறைக்கு வந்தது. இன்னும் ஓராண்டு முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்று, ஓர் ஆண்டுக்குப் பிறகு இதைப்பற்றி நாம் ஓரளவுக்குப் பரிசீலிக்க ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம். அதன்பிறகு, இதனால் அரசுக்கு நன்மை இருக்கிறதா, பொதுமக்களுக்கு நன்மை இருக்கிறதா, அலுவலர்களுக்கு நன்மை இருக்கிறதா, விரும்புகிறார்களா என்று வேண்டுமானால் ஆய்வு நடத்தி, தொடர்ந்து இதை நீடிக்கலாமா அல்லது பழைய முறையையே கொண்டுவரலாமா என்பதைப்பற்றி யோசிக்கலாம். ஆகவே, 3—6—85 அன்று நடைமுறைக்கு வந்தது, ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு வேண்டுமானால் ஆய்வு நடத்திப் பார்க்க

லாம். இதிலே இருக்கின்ற ஒரு சங்கடம் என்னவென்றால், ஐந்து நாட்கள் வேலை என்று சொல்லும்பொழுது, சனி, ஞாயிறு விடுமுறை என்று வருகின்றபொழுது, வியாழக்கிழமை ஏதாவது ஒரு விடுமுறை வந்துவிட்டால் எல்லோரும் வெள்ளிக்கிழமையும் சேர்த்து விடுமுறை எடுத்து விடுகிறார்கள்; அல்லது செவ்வாய்க் கிழமை பொது விடுமுறை வந்துவிட்டால் திங்கட்கிழமையும் சேர்த்து விடுமுறை எடுத்து விடுகிறார்கள். இதனால் நான்கு நாட்கள் சேர்ந்து பணியாற்ற முடியாத அளவிற்கு அதிகாரிகள் வராமல் இருந்துவிட்டால் பொதுமக்களுக்கு இதனால் இடர்கள் ஏற்படுகின்றன. அவர்களைப் பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். மற்ற மற்ற நாடுகளில் இருப்பதைப்போல சிலமுறைகளுக்கு நாம் மாறினாலும்கூட நம் நாட்டிற்கு மிகமிக நல்லது. அலுவலகங்களுக்கு விடுமுறை நாட்களாக இருக்கின்றபொழுது பேங்குகள், கடைகள் ஆகியவைகள் திறந்திருக்கின்றன; அதைப்போல பேங்குகள், கடைகள் ஆகியவைகள் மூடப்படும் நேரத்தில் அலுவலகங்கள் வேலை செய்கின்ற நிலைமைகள் மற்ற மற்ற நாடுகளில் இருக்கின்றன. இப்படி இருப்பதால் கடைகளில் இருக்கின்ற வியாபாரிகளும் பேங்குகளில் வேலை பார்க்கிறவர்களும் அரசாங்க அலுவலகங்களுக்குச் சென்று அந்த நாட்களில் தங்கள் வேலைகளைப் பற்றி கேட்பதற்கு வாய்ப்பு கிடைக்கும். அதைப் போல அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்க்கின்றவர்கள் தங்கள் விடுமுறை நாட்களில், பேங்கு வேலை, கடை வேலை ஆகியவைகளைக் கவனிக்க முடியும். அதே மாதிரி அலுவலகங்களில் இருக்கிற, வேலை செய்கிற ஊழியர்கள் மற்றவர்கள் கடைகளுக்குப் போகவேண்டுமென்றாலோ, பேங்குகளுக்குப் போகவேண்டுமென்றாலோ அல்லது மற்றக் காரியங்கள் செய்ய வேண்டுமென்றாலோ அன்றைக்கு அவை திறந்திருக்குமானால் நல்லது. ஆகவே வாரத்தில் இருக்கிற நாட்களை மாற்றி மாற்றி வைத்துக்கொண்டு ஒரு சூழ்நிலை பிற நாடுகளில் இருப்பதைப் போன்று இங்கேயும் வந்தால் மிகவும் நல்லது, எல்லோருக்கும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை லீவ் என்று வைக்கும்போது யாரும் எந்தக் காரியமும் செய்யமுடியாத நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியது பற்றி தனியாக சிந்திக்கலாம், பின்னால் ஆய்வு நடத்தலாம். இப்போது மத்திய அரசாங்கமே அப்படிப்பட்ட எண்ணம், இரண்டு வகையான எண்ணங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை.



ஒகேனக்கல்லில் இருந்து நாட்ராம்பாளையம் வரை உள்ள சாலை.

81—(*வினா எண். 1503) திரு எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒகேனக்கல்லில் இருந்து நாட்ராம்பாளையம் வரை கிலோ 10.02 சாலை R.L.E.G.P. போடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எச், ஜி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல்லில் இருந்து நாட்ராம்பாளையம் வரை ஆர்.எல்.இ.ஜி.பி. கிலோ 10.02 சாலை 1983–84ல் எடுக்கப்பட்டு அதுபற்றி பெண்ணாகரத்தில் உள்ள நெடுஞ்சாலைத் துறை அதிகாரியிடத்தில் விசாரித்ததில் ஆர்.எல்.இ.ஜி.பி. பண்ட் இந்த ஆண்டு கிடைக்க வில்லை, ஆகவே அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல. அது வனத்துறையைச் சேர்ந்த பாதையாக இருப்பதால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்; இன்னும் 17, கேள்விகள் இருக்கின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதையை செப்பனிட்டால் பெண்ணாகரத்திலிருந்து ஒகேனக்கல் வழியாக பங்களூர் போக சுமார் நூறு கிலோ மீட்டர் குறைவாக இருக்கும். ஆகவே அந்தப் பாதையை சீர்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்.எல்.இ.ஜி பி.யில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டதாக என்னிடம் தகவல் எதுவும் இல்லை. ஆனால் இந்தப் பாதையினால் பலன் பெறப் போவது இரண்டு கிராமங்கள்தான். அவை ஊட்டமலை, விரிகுண்டா ஆகியவை யாகும். இந்த இரண்டு கிராமங்களுக்காக ஏராளமான பணம் செலவழிக்க வேண்டி வரும். அதுவும் அல்லாமல் இந்தப் பாதை போடவேண்டிய இடம் வனப் பகுதியாக இருக்கிறது. அதற்கு மத்திய அரசு அனுமதி வழங்காமல் செய்யமுடியாது. எனவே இப்போதைக்கு அந்த எண்ணம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே' இந்தப் பாதையினால் பயன் இல்லை என்று சொன்னார்கள். பங்களூரிலிருந்து ஓனேக்கல் வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு அந்தப் பாதை பெரிதும் பயன்படுகிறது. இந்தப் பாதை நாட்ராம் பாளயத்திலிருந்து பஞ்சட்டி வரை இருக்கிறது. பங்களூரிலிருந்து ஒகேனக்கல் வருவதற்கு 100 கிலோ மீட்டர் தூரம் குறைவாக இருக்கும் இந்தப் பாதை வழி வந்தால். ஆகவே அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து அந்தப் பாதையைச் செப்பனிட்டு ஒகேனக்கல் வருகிற சுற்றுலாப் பயணிகள் பயன் பெறுமாறு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாதை பெரிய பள்ளத்தாக்கு வழி செல்ல வேண்டியிருக்கிறது. செலவு ஏராளமாக ஆகும். பங்களூருக்கும் ஒகேனக்கல்லுக்கும் குறுக்குப் பாதையாக இருக்கும் என்று சொன்னார்கள். அதைப் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனால் மத்திய அரசிடமிருந்து, வனப்பகுதியாக இருப்பதால், அவ்வளவு சுலபத்தில் அந்தப் பாதை போடுவதற்கு அனுமதி பெறுவது இயலாத காரியம். இருந்தாலும் செலவு ஏராளமாக இருக்கிறது. பள்ளத்தாக்கு வழியாக பாதை போடவேண்டு மென்றால் அதற்கு ஏராளமான பொருள் செலவாகும். எனவே இப்போதைக்கு அந்தத் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

## இராயபுரம் மேம்பாலம்.

82.—(*வினா எண். 2158)—**திரு. அ. செல்வராசன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராயபுரம் மேம்பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் அரசிட முள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆம். இராயபுரம் மன்னார்சாமி கோயில் சாலையிலுள்ள இருப்புப்பாதையின் மேலுள்ள மேம்பாலத்தின் நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, இரண்டு வழித்தடங்கள் இருப்பதற்கு பதிலாக, நான்கு வழித் தடங்களாக அகலப்படுத்தும் திட்டம் குறித்து பரிசீலிக்கப் பட்டது. இத்திட்டத்திற்காகும் உத்தேச செலவு ரூ. 5.60 கோடி என மதிப்பீடப்பட்டிருக்கிறது. இத்திட்டம் மாநகராட் சியின் பரிசீலனையிலுள்ளது.

**திரு. அ. செல்வராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த மேம்பாலம் குறுகியதாக இருப்பதால் திருவொற்றியூர், கத்திவாக்கம், எண்ணூர் போன்ற பகுதிகளில்





தொழிற்சாலைகள் பெருகி இருக்கிற காரணத்தினால் மிகமிகச் சங்கடமாக இருக்கிறது. இரண்டு தொகுதிகளுக்கு—ஒன்று திரு. பொன்னுரங்கம் அவர்கள் தொகுதியான இராயபுரம் தொகுதி. இரண்டு துறைமுகம்—அது பொருந்துகிறது. ஆகவே அதை உடனடியாகப் பழுதுபார்த்து அகலப்படுத்துவதோடு—இப்போது அது பெரிய அபாயத்தில் இருக்கிறது. எனக்கு இப்போது 63 வயதாகிறது. அது எந்தக் காலத்தில் போடப்பட்டது என்று தெரியவில்லை. அங்கே யாராவது நடந்து போனால், வழுக்கி விழுந்தால் செத்து விடுவார்கள். அந்த அளவிற்கு அது அபாய கரமாக இருக்கிறது. ஆகவே அதை உடனடியாக மாநகராட்சி மூலம் பழுதுபார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப, உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாதையினுடைய முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதனால்தான் திட்டம் தயா ரிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். மாநகராட்சியில் நிதி இல்லாததால் முழு நிதியையும் அரசாங்கம் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அது அரசாங்கத்தினிடம் வந்திருக்கிறது, பரிசீலனையில் இருக்கிறது என்று நான் தெரிவித்தேன். இப்போது ஏதோ அபாயகரமா இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருப்பதாக தெரியவில்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுபற்றி தகவல் தெரிவிப்பார்களானால் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும்.

(முற்பகல் 9-30)

**திரு. அ. செல்வராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாளையே நேரில் சென்று பார்த்தாலோ, அல்லது ஸ்பெஷல் ஆபீசர், கமிஷனர் ஆகியோரை அனுப்பினாலோ நிலைமை தெரியும். சபையில் நான் எப்போது தகவல் தந்தாலும், அது சரியான தகவலாகத் தான் இருக்கும். அதிலே பிசகு இருக்காது. அந்த வழியாகப் போகும்போது எனக்கே பயமாக இருக்கும். கொஞ்சம் தவறி னால் ரயில்வே லயனிலே விழவேண்டும். அந்த அளவுக்கு ரோடு உயரமாக இருக்கிறது. கைப்பிடி இரும்பு இரண்டு அடிகூட இல்லை. ஆகவே, உடனடியாக அதைப் பார்வையிட்டு நட வடிக்கை எடுக்கவேண்டும். நான் துணை மேயராக இருந்த போது அதைச் செப்பனிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கைப்பிடிச் சுவரைப் பற்றிச் சொல்லுகிறார் என்று நினைக்கிறேன். ரயில்வே பாலத்தின் கைப்பிடிச் சுவரின் உயரம் குறைவாக இருக்கிறது என்று நினைக்கிறேன். அப்படி இருக்கு மானால், அதை சரிப்படுத்துவதற்கு மாநகராட்சி நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் அத்தியாவசியமானது மட்டுமல்ல; அவசரமானதும்கூட. ஏனென்றால், 2 ஆண்டுகளுக்கு முன்பு, அந்தப் பாலத்திலே ஆக்சிடென்ட் நடந்து, ஆர். எஸ். ஆர். எம். ஆஸ்பத்திரிக்குச் சென்று கொண்டிருந்த பெண்மணி செத்திருக்கிறார், அது நேரோவாக இருக்கின்ற காரணத்தினால். அது மட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் அந்தப் பாலத்தைப் போய்ப் பார்த்தால் தெரியும். அது இத்துப் போயிருக்கிறது. இத்துப் போய் எந்த நேரத்திலே கீழே விழுமோ தெரியாது. ஆக இதிலே உளள அவசரம், துரிதம், முக்கியத்துவம் ஆகியவற்றை உணர்ந்து, பரிசீலனை செய்கிறோம் என்று வைத்துக் கொள்ளாமல், பரிசீலனையை உடனடியாக முடித்து, நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதன் அவசரத்தையும், அவசியத்தையும் அரசு உணருகிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக இருக்கிறது, பழுதுபார்க்க எவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**பத்மனாபபுரம் நகராட்சி அலுவலகக் கட்டிடம்.**

*83 —(*வினா எண். 4508)* திரு. வெ. பாலச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பத்மனாபபுரம் நகராட்சி அலுவலகத்திற்குப் புதியதாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : *(அ)* இல்லை.

*(ஆ)* இக் கேள்விக்கு இடமில்லை.

**விவசாயிகளுக்கு உரம் வழங்கல்**

*343—(*வினா எண். 3496)* திரு ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உரத்தொழிற்சாலை மற்றும் உர கழகம் (கார்ப்பரேஷன்) நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை உரிய காலத்தில் கொடுப்பதற்கு அரசு செய்துள்ள ஏற்பாடுகள் என்ன?



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : *(அ)* இல்லை.

*(ஆ)* காரிப்—ராபி பருவத்திற்கு முன் பருவ உபயோக அளவு வரும் பருவத்தேவை ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு, மத்திய அரசால் மாநில அரசுக்கு ஒதுக்கப்படும் உர ஒதுக்கீட்டை பிரித்து உரத் தயாரிப்பாளர்கள் மாதா மாதம் மாவட்ட வாரியாக வழங்கும் திட்டம் தயாரிக்கப்படுகிறது. அதன்படி உரம் வழங்கப்படுகிறதா என்று ஆய்வு செய்யப்படுகிறது. அந்தந்தப் பகுதியில் உரங்கள் உரிய காலத்தில் வழங்கப்படுவது பற்றி மாவட்ட இணை வேளாண்மை இயக்குநர்களால் கண்காணிக்கப் படுகிறது. தமிழ்நாட்டில் விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பல்வேறு இரசாயன உரங்களையும் எந்த நேரத்திலும் அலைச்சலின்றி மிக அருகில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள வாய்ப்பு வசதிகள் கூட்டுறவுத் துறையினால் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே ஜாயின்ட் செக்டாரிலே ஸ்பிக் உரத் தொழிற்சாலை இருக்கிறது. அந்த உரத் தொழிற்சாலையிலே உற்பத்தி ஆகின்ற அத்தனை உரங்களும் நியாய விலையில் கூட்டுறவுத் துறை மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, பரிசீலிக்கும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல தனியார்கள் மிக்சிங் யூனிட் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மிக்சிங் யூனிட்டுகளிலே கலப்பு உரங்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்த கலப்பு உரங்களில் ரசாயனப் பொருள்கள் சரியாக சேர்க்கப்படுகின்றதா என்பதை கண்காணிப்பதற்கும், அந்த உரங்கள் தரமாக உள்ளதா என்பதைக் கண்காணிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

குமரி மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்.

344–(*வினா எண். 4238) திரு ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் இதுபற்றி பரிசீலித்து வருகிறது.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து நிபுணர்கள் வந்து குமரி மாவட்டத்திலே இரண்டு இடங்களைப் பார்த்துச் சென்றிருக்கிறார்கள் ஏதாவது இடம் அதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால், எப்போது தொடங்குவதாக எண்ணம்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, தேவகிரி தோட்டப் பகுதியில் 95 ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதனுடைய விலை நிர்ணயம் குறித்து. பல்கலைக்கழகம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டிருக்கிறது.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக செல்விடப்படும் தொகை எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ள முடியுமா? இந்த ஆராய்ச்சிக் கழகம் என்னென்ன முறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, எவ்வளவு விலை நிர்ணயம் செய்யப்படுகிறதோ, அந்த விலையில் பல்கலைக்கழகம் வாங்குவதற்கு உத்தேசித்திருக்கிறது. ஐ.சி.ஏ.ஆர். சார்பாக, பல்வேறு ஆராய்ச்சிப் பணிகள், தோட்டக் கலைத் துறை பணிகள் போன்றவை மேற்கொள்ளப்பட இருக்கின்றன.



செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளை நிலங்கள்.

345 (*வினா எண். 7772) திரு ஜி. ஆனந்தகிருஷ்ணா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த பெரும் மழையின் காரணமாக பெரிய நெடுஞ்சாலையிலிருந்தும், ரயில் பாதையிலிருந்தும், ஜல்லி, கற்கள், மணல் முதலியவைகள் பெரும் அளவில் விவசாய நிலங்களில் நிரப்பப்பட்டு நிலம் மேடாகி விட்டது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :

(அ), (ஆ) } பேரவையின் முன் ஒரு விவர அறிக்கை* வைக்கப்பட்டு உள்ளது.

அரசு வழக்கறிஞர்களுக்கு குடியிருப்புகள்.

346 (*வினா எண். 681) திரு ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அரசு வழக்கறிஞர்களுக்கு (A.P.P. Addl. P.P. & P.P.) வீட்டுவசதி வாரியத்தின் மூலம் குடியிருக்க வீடுகள் வழங்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசிஸ்டண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் எல்லாம் 3 வருடத்திற்கு ஒரு முறை ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு மாற்றப்படுகிறார்கள். அந்தச் சூழ்நிலையிலே அவர்களுக்கு வீடுகள் கிடைப்பதில் கஷ்டமான சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்லாமல், அடிஷனல் பப்ளிக் பிராசிக்யூட்டர், மற்றும் இருக்கக்கூடிய பப்ளிக் பிராசிக்யூட்டர்கள், ஜி. பி.க்கள், இவர்களெல்லாம் உள்ளூரிலே நியமிக்கப்பட்டாலுங்கூட, அவர்களையெல்லாம் காவல் துறை அதிகாரிகளும் மற்றும் அலுவலக

*423ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

அதிகாரிகளும் அவர்கள் இருக்கிற இடத்திற்குச் சென்று பார்க்க வேண்டிய சூழ்நிலையிலேதான் அவர்கள் பணி நடத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, வருமான அடிப்படையில் ஏ. பி. பி., ஜி. பி. போன்றவர்களுடைய வருமானம் தாழ்ந்துதான் இருக்கிறது. ஆகவே, அவற்றையெல்லாம் முன்வைத்து, தமிழக அரசானது இந்த நல்ல திட்டத்தினை பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ. பி. பி. 1, ஏ. பி. பி. 2 ஆகியோரைப் பொறுத்தவரைக்கும் நிலைமை வேறு. அடிஷனல் பி. பி. மற்றும் பி.பி. இவர்களைப் பொறுத்தவரைக்கும் நிலைமைகள் வேறு. ஏ. பி. பி-1-ஐப் பொறுத்தவரைக்கும் மாவட்டத்தை விட்டு மாவட்டம் அவர்கள் மாற்றப்படுகிறார்கள். அரசு ஊழியர்களாக அவர்கள் நிரந்தரமாக இருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்காக ஏற்கனவே வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில்தான் அவர்கள் வீடுகள் பெற முடியுமே ஒழிய, அவர்களுக்காக பிரத்தியேகமான சலுகைகள் எதுவும் கொடுப்பதற்கில்லை. நிதிநிலைக்கேற்ப மாவட்டந்தோறும் வீடுகள் ஒதுக்கப்பட்டு வருகின்றன. தற்காலிகமாக, டெனுயூர் போஸ்ட் என்ற முறையிலே செயல்படுகிற பி.பி. ஐப் பொறுத்தவரைக்கும் அவர்களுடைய கட்டணத்திலேயே தனிப்பட்ட முறையிலே, அவர்கள் வீடுகள் அமைத்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு அவை வைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அமைக்கப்படுகின்ற அடிஷனல் பி.பி., ஜி.பி. ஆகியோர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, தனியான முறையிலே, கோட்டா சிஸ்டத்திலே, அவர்களுக்கென்று ஒதுக்கக்கூடிய அளவுக்கு, அவர்களுக்கு முன்னுரிமை தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விருப்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏனைய அரசு ஊழியர்களைப் போலத்தான் இவர்களும் நடத்தப்படுவார்களே ஒழிய, அவர்களுக்கென்று முன்னுரிமை தரப்பட மாட்டாது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கு வீடு கட்டுகிற திட்டத்தைத் தவிர, இன்றைக்குப் பல இடங்களில் நீதிபதிகளுக்கும் வீடுகள் இல்லை. இன்னும் குறிப்பாக சொல்லப் போனால், தென்காசியிலே கூட, சிறப்பு நீதிமன்றம் ஆரம்பித்துப் பல ஆண்டுகளாகியும் கூட, அங்கே நீதிபதிகளுக்கு வீடுகள் கொடுக்கப்படவில்லை. நீதிபதிகளுக்கு வீடுகள் கட்டுவதற்காக,



அரசு ஆண்டுதோறும் எத்தனை வீடுகள் கட்டவேண்டுமென்று, ஏதாவது கொள்கை அடிப்படையிலே, முடிவுகள் எடுத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதிகளுக்கு மட்டுமல்ல, அரசு அதிகாரிகளுக்கும் அதே நிலைதான் இருக்கிறது. நிதி நிலைக்கேற்ப, எந்த, எந்தத் துறைக்கு, வீட்டு வசதிக்காக, எத்தனை வீடுகள் என்று ஆண்டுக்காண்டு அவ்வப்போது ஆய்ந்து ஒதுக்கப்படுகிறது. நம்மைப் பொறுத்தவரை கூட துணை நீதிபதிகளுக்காக அண்மையிலே 32 குடியிருப்புகளையும், மாவட்ட உரிமையில் நீதிபதிகளுக்காக 81 குடியிருப்புகளையும், மாவட்ட குற்றவியல் நீதிபதிகளுக்காக 12 குடியிருப்புகளையும் அதே போல துணை கோட்ட குற்றவியல் நீதிபதிகளுக்காக 10 குடியிருப்புகளையும் முதல் வகுப்பு இளநிலை நீதிபதிகளுக்காக 18 குடியிருப்புகளையும் இரண்டாம் வகுப்பு நீதிபதிகளுக்காக 269 குடியிருப்புகளையும் இதுவரையில் ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னும் ரூ. 67 இலட்சம் திட்டத்திலே, பல மாவட்டங்களில் அவர்களுடைய குறைகளைப் போக்க உயர்நீதிமன்ற பரிந்துரைக்கேற்ப வீடுகள் கொடுக்கிற திட்டமும் அரசினுடைய செயற்குறிப்பில் இருக்கிறது.

**திரு. மு. பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்களுக்கு இதுபோன்ற வீடுகள் கட்டித் தரும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் இல்லை.

## திருச்சியில் நடமாடும் நீதிமன்றம்.

347—(*வினா எண். 5145)—**திரு. அ. மலர்மன்னன், திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் 'நடமாடும் நீதிமன்றம்' (Mobile Court) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

(ஆ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு நடைபெறுகின்ற நடமாடும் நீதிமன்றங்களின் நிலைமை சரியாக இல்லை என்பதை அரசு அறிந்து அவற்றை ஒழுங்குபடுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலும் கோவையிலும் மதுரையிலும் திருச்சியிலும் இயங்கி வருகின்ற நடமாடும் நீதிமன்றங்கள் செவ்வனே இயங்கி வருவதாகத்தான் அரசுக்கு உயர்நீதிமன்றம் தெரிவித்து இருக்கிறது.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் சொல்கிறபொழுது திருச்சி, மதுரை, கோவை, சென்னை ஆகிய 4 இடங்களில் நடமாடும் நீதிமன்றம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எனவே, இந்த நடமாடும் நீதிமன்றம் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்குவதற்கு திட்டம் அரசின் செயற்குறிப்பிலே உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

*(முற்பகல் 9-40)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நடமாடும் நீதிமன்றம் இருப்பது மக்கள் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் ஆண்டுக்காண்டு நிதிநிலைமைக்கு ஏற்ப விரிவுபடுத்த அரசு விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 348, 349 ஆகியவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளிற்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

**அரூர் நகரில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள்.**

194—(*வினா எண். 4041) **திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் நகரத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு என். நல்லுசாமி:** (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவரவர்களே, அரூர் ஒரு தாலுகா தலைநகரம். அங்கே அரசு நிர்வாகம் விரிவடைந்ததன் மூலம் புதிதாக பல பல அரசு அலுவலகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் அரசு அலுவலர்களுக்கு குடியிருப்பு நெருக்கடி அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. அரூர் ஒரு தாலுகா தலைநகரமாக இருப்பதால் வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக இந்த ஆண்டு அலுவலர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? ஆம் எனில் அது எப்படி, எப்போது நிறைவேற்றப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, இந்த ஆண்டைப் பொறுத்தவரையில் வீடு கட்டும் திட்டம் ஒன்றும் இல்லை. ஏற்கனவே 1983 ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழ் நாட்டில் இருக்கிற 81 நகரங்களின் வீட்டுவசதியைத் தெரிந்து கொள்ளும் வகையில் பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அந்தவகையில் அரூரில் 262 பேர்கள் மட்டுமே விண்ணப்பித்திருந்ததால் அங்கே வீடு கட்டும் திட்டம் பரிசீலனை செய்யப்படவில்லை.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** தலைவரவர்களே, அரூர் நகரில் ஏற்கெனவே வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். அப்படி அனுமதிக்கப்பட்ட திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பதாகக் கூறுகிறார்கள். அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பது உண்மையா? அப்படி என்றால் அது சம்பந்தமாக மேற்கொண்டு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** தலைவரவர்களே, அங்கே வீடு கட்டும் திட்டம் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. அந்தமாதிரி இருந்தால் எந்தச் சூழ்நிலையில் அப்படி முடிவு எடுக்கப்பட்டது என்று ஆராய்ந்து, வீடு கட்ட முடியும் என்றால் அதுபற்றி பரிசீலனை செய்யலாம்.

**அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீட்டுவசதி வாரிய வீடுகள்.**

195—(*வினா எண். 3315)—**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் சிப்பந்திகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி :** இல்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** தலைவரவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் வீட்டுவசதி வாரியத்தில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் இல்லை என்றாலும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் 500, 1,000 போக்குவரத்துத் தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருப்பதால் அவர்களுக்கு வாடகை வீடுகளை (ரென்டல் குவார்ட்டர்ஸ்) கட்டிக்கொடுகக வீட்டுவசதி வாரியம் முயற்சி செய்யுமா ? அதுவும் முடியவில்லை என்றால் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, அதன்மூலம வீடு கட்டிக்கொள்ள முன்வந்தால் வீட்டுவசதி வாரியம் பண உதவி செய்ய இந்தத் துறை பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு என். நல்லுசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். முதலிலே நம்முடைய போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வாடகை வீடு என்ற அடிப்படையில் கட்டிக்கொடுக்கும் திட்டம் இருக்கிறதா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட திட்டம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, அந்தத் தொழிலாளர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, அந்தச் சங்கத்தின் மூலமாக வீடுகட்டிக் கொள்ள முன்வந்தால் அதற்கு கடன் உதவி செய்ய துறை முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்த வரையில் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்கள் அவர்களாகவே ஒரு சொசைட்டியை அமைத்து, அதன் பிறகு அரசை அணுகினால் 'ஹட்கோ' மூலமாக வீடு கட்ட உதவி செய்ய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெய்வேலியில் அகதிகளுக்கு மருத்துவமனை, பள்ளிக்கூடம்.**

252—(*வினா எண். 3751)—திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்ஆர்காடு மாவட்டம் நெய்வேலியில் அகதிகளுக்கென்று கட்டப்பட்டுள்ள மருத்துவமனையும், பள்ளிக்கூடமும் செயல்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகள் செயல்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





**மாண்புமிகு திரு. த. இராமசாமி:** தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு மாவட்டம் நெய்வேலியில் தாயகம் திரும்பிய அகதிகளுக்கென்று மருத்துவமனை கட்டிடமும் பள்ளிக்கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மருத்துவ மனைக்காகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்துல் ஏற்கெனவே தாயகம் திரும்பிய அகதகளுக்கென்று தனியார் அதாவது நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டிடத்தல் இயங்கிவரும் மருத்துவ மனையை மாற்றுவதற்கான செயற்குறிப்பும், பள்ளிக்காகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையின் ஆதரவில் ஒரு பள்ளி நடத்துவதற்கான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது நெய்வேலியில் தாயகம் திரும்பிய தமிழர்களுக்காக மருத்துவ மனையும், பள்ளிக்கூடமும் கட்டப்பட்டிருப்பதாகவும் அங்கே குடியிருப்பவர்களுக்கு சத்துணவு மையம் நடத்தப்பட்டு வருவதாகவும் சொன்னார்கள். ஆகவே நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால் அங்கே கட்டப்பட்டிருக்கிற மருத்துவ மனையும், பள்ளிக்கூடமும் உடனடியாக நடத்தப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் ஏ காலனியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகத்தின் சார்பில் பள்ளிக்கூடம் கட்டப்பட்டுள்ளது. அதில் குறிஞ்சிப்பாடி பஞ்சாயத்து ஒன்றியத்தால் நடத்தப்படும் பால்வாடியும், மதிய உணவு மையமும் இயங்கி வருகின்றன. அந்தப் பகுதி நெய்வேலி நகரியப் பகுதியில் அமைந்துள்ளது. எனவே அங்கே ஊராட்சி ஒன்றியத்தால் பள்ளிக்கூடம் நடத்துவது முறையாகாது. எனவே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையின் ஆதரவில் ஒரு பள்ளிக் கூடம் நடத்திடலாம் என்றும் அதற்கு அக்கட்டிடத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையிடம் ஒப்படைக்கலாம் என்றும் தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார். இப்பரிந்துரையை ஏற்பதாக மறுவாழ்வு துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத் துறை இயக்குநரின் கருத்துக்களைப் பெற்று அரசுக்கு அறிக்கை அனுப்பும்படி மறுவாழ்வுத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். அவரது அறிக்கை பெறப்பட்ட பின்னர் பள்ளிக் கூடத்திற்காகக் கட்டப்பட்ட கட்டிடத்தை முறையாக பள்ளி நடத்துவதற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத் துறைக்கு ஒப்படைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

நெய்வேலியில் மருத்துவமனைக் கட்டிடம் ஒன்றும் கட்டி முடிக்கப்பட்டு விட்டது. இப்போது நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு கட்டிடத்தில் வாடகை செலுத்தி அரசு பொது மருத்துவமனை ஒன்று இயங்கி வருகிறது. மருத்துவமனைக்காக கட்டப்பட்ட கட்டடத்தை கடலூரில் உள்ள மாவட்ட மருத்துவ அலுவலருக்கு மருத்துவமனை நடத்திட ஒப்படைக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்துள்ளார். இதற்கு மறுவாழ்வுத் துறை இயக்குநர் இசைவு அளித்துள்ளார். இது குறித்து மாநில பொது மருத்துவம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநரின் ஒப்புதல் பெற்று அரசுக்குத் தெரிவிக்கும்படி மறுவாழ்வுத்துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார். அவரது அறிக்கை கிடைத்த பின்னர் இக் கட்டடத்தை மருத்துவத் துறைக்கு ஒப்படைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. ஏ. தங்கராசு: பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் உள்ள தாயகம் திரும்பிய தமிழர்களுக்கான மருத்துவ மனை தனிக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மறுவாழ்வுத்துறையில் இருந்து மருத்துவ இலாக்காவிற்கும் பள்ளி இலாக்காவிற்கும் எழுதி இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே உடனடியாக நிரந்தரமாக அந்த மருத்துவமனை உரிய கட்டிடத்தில் இயங்கு கின்ற வகையில் ஏற்பாடு செய்வதோடு நிரந்தரமான மருத்துவ அதிகாரிகளைப் போட ஏற்பாடு செய்யப்படுமா? வருகிற நிதியாண்டில் அந்தப் பள்ளிக்கூடத்தையும் மருத்துவமனையையும் செயல்படச் செய்வதற்குரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் எந்த நோக்கத்திற்காக அந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறுகிற வகையில் அந்தக் கட்டிடங்களில் மருத்துவமனையும், பள்ளிக் கூடமும் உடனடியாக நடத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



சாண எரிவாயுத் திட்டம்.

350—(*வினா எண் 5367) திரு. [illegible] தாமரைக்கனி: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாண எரிவாயுவைப் பயன்படுத்தத் தேவையான தொட்டிகளை அரசு இலவசமாக பொதுமக்களுக்கு வழங்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) மத்திய அரசின் விதிமுறைகளின்படி தொட்டிகள் இலவசமாக பொது மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. கலன்கள் அமைக்க ஒரு பகுதி மானியமாக வழங்கப்படுகிறது.

(ஆ) மானியத்தின் விவரம் பின்வருமாறு:—

| கலன். | கொள்ளளவு. | மொத்த நிர்மாணத் தொகை. | தாழ்த்தப் பட்டோர் மலை சாதியினர். | சதவீதம். | ஏனையோர். | சதவீதம். |
|---|---|---|---|---|---|---|
| 1. | 1 க.மீ. | .... | 1250 | .... | 830 | .... |
| 2. | 2 க.மீ. | 5165 | 2350 | (45½%) | 1560 | (30%) |
| 3. | 3 க.மீ. | 6090 | 2860 | (47%) | 1900 | (31%) |
| 4. | 4 க.மீ. | 6760 | 3220 | (47½%) | 2140 | (31½%) |
| 5. | 10 க.மீ. | 11190 | 3700 | (33%) | 3700 | (33%) |

தொட்டிகளின் கொள்ளளவுக்குத் தகுந்தவாறு மானியம் அளிக்கப்படுகிறது. முழு உதவித் தொகையும் மத்திய அரசே ஏற்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1986 ஏப்ரல் 2

(முற்பகல் 9-50)

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சாண எரிவாயு தொட்டிகளை அமைப்பது, குழாய் இணைப்பு கொடுப்பது, அடுப்பு வாங்குவது போன்ற செலவுகள் எல்லாம் அதிகமாக ஆவதால் விவசாயிகளுக்கு அந்த திட்டம் அதிக அளவில் பயன்படாமல் இருக்கிறது என்பதை அரசு அறியுமா? அந்த செலவு முழுவதையும் அரசு ஏற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது போன்ற புகார்களோ, விண்ணப்பங்களோ அரசுக்கு எதுவும் இதுவரையில் வரவில்லை. வந்தால் அது பற்றி பரிசீலித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சாணத்திலிருந்து கிடைக்கும் கேஸ், எல். பி. ஜி. கேஸ் போன்று அவ்வளவு உஷ்ணம் தருவதில்லை. ஆகவே உஷ்ணத்தை அதிக அளவில் தரும் வகையில், சாண எரிவாயு தயாரிக்கும் முறை மாற்றி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி என்னிடம் தற்போது விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாண எரிவாயு ஒரு சிலருக்குத்தான் கொடுக்கப்படுகிறது. எனவே விண்ணப்பம் செய்யும் எல்லோருக்கும் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணப்பம் கொடுக்கின்றவர்களுக்கு வரிசைப் பிரகாரம் கொடுக்கப்படுகிறது. அது ஒரு வருடத்திற்கு எத்தனை பேருக்கு கொடுக்க வேண்டும் என்கிற கொள்கை விவரங்களை எல்லாம் மத்திய அரசே பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசு எத்தனை பேர்களுக்கு கொடுக்கிறார்கள் என்பதை வைத்து, நமது மாநில அரசு தேவையான உதவிகளை அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாண எரிவாயு திட்டத்தில் ஒன்றில்தான் மத்திய அரசு கொடுக்கின்ற மானியம் ஏழை பணக்காரர்கள் என்ற எந்தவித வித்தியாசமும் இல்லாமல் கொடுக்கப்படுகிறது. டாட்டா, பிர்லா மனு செய்து கேட்டால் கூட அவர்களுக்கு



1986 ஏப்ரல் 2]

இந்த மானிய உதவித் தொகை உண்டு. ஆனால் இங்கே கொடுக்கப்பட்ட மூல பதிலில் ஆதிதிராவிடர்களுக்கு சற்று அதிகமாகவும், மற்றவர்களுக்கு சற்று குறைவாகவும் தரப்பட்டிருக்கிறது. இதை சற்று மாற்றி தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஆதிதிராவிடர்களுக்கும் ஒரு பகுதி மானிய உதவி என்று இல்லாமல் முழுக்க முழுக்க எல்லாச் செலவுகளையும் மாநில அரசே ஏற்று, ஒரு பகுதி அவர்கள் மானியமாக கொடுத்துவிடுவதால் மீதிச் செலவை மாநில அரசு ஏற்று, அவர்களுக்கு இலவசமாகவே கொடுக்க, அதுவும் ஒட்டுமொத்தமாக அனைவருக்கும் வழங்கும் வகையில் அளிக்க அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எரி சாண வாயு திட்டத்தில் ஏற்கெனவே நான் கூறியது போல, மத்திய அரசு ஒரு தொகையை மானியமாக அளிக்கிறது. மீதித் தொகையினை நம்முடைய மாநில அரசு கிராமப் புறங்களுக்கு எரி வாயு திட்டத்தை அமைக்கவேண்டும் என்று வங்கிகளின் மூலம் கடன் உதவி பெற்று உதவி செய்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்து ஏற்கக் கூடியதுதான் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி அந்த திட்டத்திற்கான மொத்தத் தொகையையும் முழு மானியமாக கொடுப்பதற்கு உதவி செய்தால், அப்போது நம்முடைய தமிழக அரசும் உதவி செய்ய தயாராக இருக்கும் என்பதைக் கூறி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**காரியப்பட்டியில் தோல் பதனிடுவோர் சங்கம்.**

351—(*வினா எண் 6453) திரு. கு. பாரமலை: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராசர் மாவட்டம், காரியப்பட்டியில் ஆதி திராவிடர்களுக்கான தோல் பதனிடுவோர் குடிசை தொழில் கூட்டுறவு சங்கம் அமைக்கும் நடவடிக்கை தாமதமாவதை அரசு அறியுமா;

(ஆ) ஆம் எனில், விரைவில் நிறுவ என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (அ) மற்றும் (ஆ): காரியப்பட்டியில் அமைக்கபட இருக்கும் உத்தேச கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு நவீன முறையில் தோல் பதனிடும் பயிற்சி அளிக்க தேவையான நிதி உதவி அளிக்குமாறு தமிழ்

நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதிவாரியத்தினை, தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அணுகியுள்ளது. இந்நிதி உதவி கிடைக்கப் பெற்றதும், கூட்டுறவு சங்கம் விரைவில் அமைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேட்டூர் இடதுகரை நிலங்களுக்குப் பாசன வசதி.

352—(*வினா எண் 4812) திரு. ச. கோவிந்தசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் சங்ககிரி தாலுக்கா, மேட்டூர் இடதுகரைகால் கீழுள்ள சுமார் 200 ஏக்கர் நிலத்திற்கு மதகு இல்லாமலும், ஆயகட்டில் சேர்க்காமலும், கசிவு நீரால் பயிர் செய்யப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மதகு அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) மதகு அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

புரவிப்பாளையம் கிராமத்தில் புதிய அணை.

353—(*வினா எண். 7414-ஏ) திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வட்டம், புரவிப்பாளையம் கிராமத்தில் புலிப்பாறை என்னும் இடத்தில் அணை கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அணை கட்டும் வேலை எப்பொழுது ஆரம்பமாகும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) மற்றும் (ஆ): பொள்ளாச்சி வட்டம், புரவிப்பாளையம் கிராமம் அருகே சோலசுலஹல்லி ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் தலைமைப்பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில்(*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. தகவல் கோரல்.

### சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய கூட்டங்களில் கலந்து கொள்வது.

*திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் கொண்டு வர விழைகிறேன். ஊராட்சி ஒன்றிய குழுக்கள் கூடுகிறபோது அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வதில் பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்று தினசரி என்கின்ற பத்திரிகையில் கூட செய்தி வந்திருக்கிறது. விழுப்புரம் தாலுகா விக்கிரவாண்டி ஒன்றியத்தில் கண்டமங்கலம் சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் கலந்துகொள்கிறபோது ஒன்றியக் குழுவினுடைய தலைவர் எம்.எல்.ஏ.-விற்கு இங்கே என்ன வேலை யென்றும், அப்படி உட்கார்வது என்றால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் வரிசையில் கடைசியில் உட்கார வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்றியக் குழுவில் எக்ஸ்-அபிஷியோ மெம்பர்கள். ஆகவே அவர்கள் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருவதற்கும், அதேபோல சில இடங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் அமைச்சர் பெருமக்களும் ஒன்றிய குழு கூட்டங்களில் கலந்துகொள்கிற நிலைமை ஏற்படுகிற பொழுது அவர்கள் எங்கே இருக்கவேண்டும், எங்கே உட்காரவேண்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் எப்படி இருக்கவேண்டும், எந்த இடத்தில் அமர வேண்டும் என்பதையெல்லாம் விளக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று ஒன்றிய அலுவலகங்களில் அறைகள் ஒதுக்குவதிலே கூட சில இடங்களில் பிரச்னை வந்திருக்கிறது. அந்த அறைகள் இனிமேல் கிடையாதென்று ஒன்றியப் பெருந் தலைவர்கள் வாய்மூலமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் விளக்கி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒன்றியக் குழு கூட்டங்களில், ஒன்றிய அலுவலகங்களில் என்ன அந்தஸ்து, என்ன உரிமைகள் இருக்கின்றன என்பதை விளக்கி அரசாங்கம் ஒரு அரசாணையை உடனே வெளியிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் என்னுடைய அறையில் வந்து கேட்டார்கள். அவர்களிடத்தில் விளக்கம் நேரிடையாகச் சொல்லியிருக்கிறேன். உள்ளாட்சித் துறை மானியம் வருகிறபோது இதுபற்றி விளக்கம் சொல்லலாமென்று இருந்தேன். இப்போது சொல்ல வேண்டிய அவசியம் வந்துவிட்டது, சொல்கிறேன். ஏற்கெனவே இருக்கிற சட்ட விதிகளின்படி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் கலந்துகொள்கிற உரிமை படைத்தவர்கள்.

அதை யாரும் தடுக்க முடியாது. உரிமை படைத்தவர்கள் மட்டுமல்ல. அவர்கள் இருக்கிற இடத்திலிருந்து ஊராட்சி ஒன்றியக் கூட்டம் நடக்கிற இடத்திற்குச் செல்வார்களானால் அவர்கள் வழிச்செலவிற்குப் பணம் கொடுக்கவேண்டும். பயணச் செலவு கொடுக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. அது கொடுக்கப்பட வேண்டும். ஆகவே எக்ஸ்-அபிஷியோ மெம்பர் என்ற காரணத்தால் உரிய மரியாதை கொடுத்து மேடையில் நாற்காலி போட்டு அவரை உட்கார வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதுவரையில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் இல்லாமல் இருந்த காரணத்தால் ஊராட்சி ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கென்று ஒரு அலுவலகத்தை வைத்திருந்தார்கள். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்கள் என்ற காரணத்தால் அந்த அலுவலகத்தை கொடுக்க வேண்டி வந்திருக்கிறது. இருந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த உரிமை இருக்கவேண்டுமென்று கருதி ஊராட்சி ஒன்றியத்திலே அவர்களுக்கு நிரந்தரமாக ஒரு இடத்தை ஒதுக்குவதற்கு இப்போது இருக்கிற இடவசதி போதவில்லையென்ற காரணத்தால் ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்யலாமா என்று அரசு யோசித்து வருகிறது. உள்ளாட்சித் துறை மானியம் வருகிறபோது அது பற்றி விளக்கிச் சொல்கிறேன்.

மாற்று ஏற்பாடாக என்ன செய்யவிருக்கிறோம் என்றால், எந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், ஒரு மாதத்தில் இரண்டு நாட்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குச் சென்று விட வேண்டும். 10-ம் தேதி, 20-ம் தேதி உதாரணமாகச் சொல்கிறேன். இந்த இரண்டு நாட்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வருவார்கள். பொதுமக்கள் அவரைக் காண வருபவர்கள், குறைகளைச் சொல்ல வருபவர்கள் அங்கே வந்து அவரைக் காணலாம். குறைகளைச் சொல்லலாம் என்று வெளியே ஒரு அறிவிப்பு பலகை போடப்படும். இந்த இரண்டு நாட்களிலும் அவருக்காக ஊராட்சி ஒன்றிய கூட்டம் நடக்கிற மீட்டிங் ஹாலை திறந்து விட வேண்டுமென்று விதிகளை வகுக்கலாம் என்றால், இருக்கிற சட்டத்தை திருத்த வேண்டுமா அல்லது விதிகளின் மூலமாகவே செய்ய முடியுமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதுவும் செய்யப்படும்.

(முற்பகல் 10-00)

மேற்கொண்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய வாகனங்களை அவர்களுக்கு எத்தனை நாட்களுக்குக் கொடுப்பது, எவ்வளவு பெட்ரோல், அல்லது டீசல் அவர்கள் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் உள்ளாட்சித்





துறை மானியம் வரும்போது, அதைப்பற்றி விரிவாகச் சொல்லலாம் என்று நான் இருக்கிறேன். அதைப்பற்றி ஒரு ஆணை பிறப்பிக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல் நகராட்சிகளில் கலந்து கொள்கின்ற, ஊராட்சி மன்றங்களில் கலந்து கொள்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன பங்கு என்று கேட்கிறார்கள். இதுவரையில் சட்டத்திலே எந்த விதியும் இல்லை என்றாலும், வளர்ந்து வருகிற நம்முடைய நாட்டில், நகராட்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் இருக்கவேண்டும் என்று கருதி நகராட்சிக் கூட்டங்களிலேயும், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம் என்று விதி செய்வதற்கு அரசு முடிவு செய்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக் கலந்துகொள்கிற நேரத்தில ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களிலோ அல்லது நகராட்சி மன்றக் கூட்டங்களிலோ சட்டமன்ற உறுப்பினர் விவாதத்தில் கலந்துகொள்ளலாமே தவிர வாக்களிக்கின்ற உரிமை அவர்களுக்குக் கிடையாது என்று ஏற்கனவே விதி இருக்கிறது. அதே விதியைத்தான் இப்போதும் நடைமுறைப்படுத்தலாம் என்று அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. இதுதான் நடைமுறை.

ஒருவேளை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொல்லியது உண்மையாக இருக்குமானால்,—பத்திரிகையில் வருகிற பல செய்திகளை நம்புவதற்கு இந்த நேரத்தில் முடியவில்லை—சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் புகார் எழுதிக் கொடுப்பாரானால், நிச்சயமாக அதற்கு உண்டான விளக்கங்கள் கேட்கப்படும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை நான் அளிக்கிறேன். உறுதி அளிக்கிற இந்த நேரத்தில், இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இது முதல் முறையாக நடக்கிற காரணத்தால், அரசு காழ்ப்புணர்ச்சியோடு தண்டித்து விடும் என்று நினைக்கவேண்டாம். ஆனால் உரிய மரியாதையை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கவேண்டும் என்றுதான் அரசு விரும்புகிறது என்பதை நான் விளக்கமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்திற்காகக் கேட்கிறேன். நகராட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தகுதிகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்களில் ஸ்தலஸ்தாபனங்களின் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள், ஒரு மாவட்டத்திலே பெரும் பகுதிக்கு அங்கம் வகிக்கின்ற காரணத்தால், அவர்கள் எந்த ஒன்றியக் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். அதைப்

போலவே பாராளுமன்றத்தின் மேலவையில் உறுப்பினராக இருக்கிற எம்.பி.க்கள் எந்த ஒன்றியங்களில் அல்லது நகராட்சி களில் பிரதிநிதித்துவம் வகிக்கலாம் என்பதைப் பற்றி விளக்கமாகச் சொன்னால் நல்லது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி பழைய சட்டத்திலே சொல்லப் பட்டு இருக்கிறது. மேலவை உறுப்பினர் எந்த ஒரு ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் அல்லது நகராட்சி எல்லைக்குள் இருக்கிறா ரோ, அந்த ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களிலே, நகராட்சி மன்றக் கூட்டங்களிலே கலந்து கொள்ளலாம் என்று ஏற்கனவே விதி இருக்கிறது. அந்த விதியை நாம் அப்படியே நடைமுறைப் படுத்துவோம். அதிலே எந்தவிதமான மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் உறுப்பினர்களுடைய கடமையையும், உரிமையையும் பாதுகாப்பது தங்களுடைய பொறுப்பு என்று நினைக்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் ஒரு நிகழ்ச்சி நடக்கும்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்பது குறித்து பல முறை இங்கே நாங்கள் சொல்லியிருக்கிறோம். வாதாடியிருக்கிறோம். இதைப்பற்றி பல உறுப்பினர்கள் இங்கே குறை சொல்லி யிருக்கிறார்கள்.

ஆனால் நேற்றைய தினம் திண்டிவனத்திலே பால் குளிரூட்டு நிலையம் திறப்பு விழா என்று சொல்லி, அங்கே மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியாக இருக்கிற சின்னசேலம் தொகுதியில் இருக்கக்கூடிய குடியிருப்பு இல்லம், மருந்தகக் கட்டிடம் இரண்டையும், சின்னசேலத்தில் கட்டிவிட்டு, அந்தக்கட்டிடங்களின் வேலை முற்றும் முடியாத நிலையிலே, திண்டிவனத்திலே சென்று, அங்கே திறப்பு விழா என்று நடத்தியிருக்கிறார்கள். திறப்பு விழா நடத்தியிருந்தாலும் சட்டமன்ற உறுப்பினராக உள்ள எனக்கு இன்விடேசன் கிடையாது. எனக்கு எந்தவிதமான முன் அறிவிப்பும் கிடையாது. பெயரையும் அதிலே போடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி நான் அமைச்சர் அவர்களிடம் விளக்கம் கேட்கிறேன். என்னைவிட உங்களுக்கு யார் உரிமையையும் பாதுகாப்பையும் கொடுக்கப்போகிறார்கள்.

(குறுக்கீடு) தொகுதிகளில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு



அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களை அழைக்கவேண்டும் என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். எனவே இந்த நடை முறையைப் பின்பற்றினால் நல்லது என்று நினைக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஏதோ எங்களுடைய பெருமையும் புகழும் குறைக்கப்படுகிறது என்ற காரணத்திற்காக மாண்புமிகு உறுப்பினர் சிவராமன் அவர்கள் இதை எழுப்பவில்லை. பல நேரங்களில் இப்படி எங்களுடைய உரிமை மறுக்கப்படுகிறது.

மேலும் இரண்டு லட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாக இருப்பவர்களுடைய பெயர்கள் போடப்படவில்லை. எந்த திண்டிவனம் தொகுதியில் இந்த விழா நடைபெறுகிறதோ, அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பெயர் கடைசியில் இருக்கிறது. மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றுதான் போடப்பட்டு இருக்கிறது. எல்லா அதிகாரிகள் பெயர்களையும் மேலே போட்டுவிட்டு, மக்கள் பிரதிநிதிகளைப் போடவில்லை என்பதற்காக, எங்களுடைய உரிமைக்காக இதைக் கேட்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிப்பாக I will view it seriously.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தெந்த வகையிலே மரியாதை தரவேண்டு மென்று சொன்னார்கள், நன்றி. நான் இன்னொன்றையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு திங்களுக்கு, அதாவது இரண்டு மாதங்களுக்கு முன்னாலே அறிவிப்பு கொடுத்துவிட்டு செல்ல வேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் சென்று அங்கே எந்த இடத்தில் அமர்வது? மக்கள் சொல்கிற கோரிக்கைகளை கேட்டு அதாவது சேர்மேனுக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையெல்லாம் மானியத்திலே விவரமாகச் சொல்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

## 3. கவன ஈர்ப்புகள்.

**(அ) சென்னை நகரில் கொசுக்களால் ஏற்படும் இன்னல்கள் குறித்து.**

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " சென்னையில் கொசுத் தொல்லையினால் பொது மக்கள் படும் இன்னல்கள் குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

ஒரு தேக்கரண்டி அளவு தண்ணீரை ஒரு வாரத்திற்கு மேல் தேங்கவிட்டால் எந்த ஒரு இடத்திலும் கொசுத் தொல்லை உண்டாக வாய்ப்பு உள்ளது. சென்னை மாநகரில் கொசுத் தொல்லைக்குக் கீழ்க்கண்ட சென்னை நகரில் உள்ள ஐந்து நீர்வழிகள் தான் முக்கிய காரணமாகும்.

| நீர் நிலையின் பெயர். | | நகரில் அதன் நீளம். |
|---|---|---|
| அ. பக்கிங்காம் கால்வாய் | .. | 12 கி.மீ. |
| இ. கூவம் நதி .. | .. | 10 கி.மீ. |
| உ. ஓட்டேரி கால்வாய் | .. | 6 கி.மீ. |
| எ. மாம்பலம் கால்வாய் | .. | 5 கி.மீ. |
| ஓ. அடையாறு நதி | .. | 6 கி.மீ. |

மேலே குறிப்பிட்டுள்ளவைகளைத் தவிர கீழ்க்கண்டவைகளும் கொசு உற்பத்தியாவதற்கு காரணமாக இருப்பதால் வாரம் ஒருமுறை சிகிச்சை செய்யப்பட வேண்டியுள்ளது.

(i) மழைநீர் வடிகால்களின் நீளம் 452 கி.மீ.

(ii) கிணறுகள் — 78,310.

(iii) நீர்த் தேக்கத் தொட்டி — 52,640.

(iv) மேல்நிலைத் தொட்டிகள் — 42,526

பாதுகாக்கப்படாத, கழிவுநீர் குழாய்களுடன் இணைக்கப்படாத மலக் குழிகளும் கொசுத் தொல்லைக்குக் காரணமாகும்.





**செயல்முறை :**

கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்காக சென்னை மாநகரம், ஒவ்வொரு யூனிட்டும் ஐந்து நகரப் பகுதிகளைக் கொண்டதாக உள்ள 30 யூனிட்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது- ஒவ்வொரு யூனிட்டிலும் ஒரு துப்புரவு ஆய்வாளர் 25 முதல் 30 மஸ்தூர்கள், 2 முதல் 5 தலைமை மஸ்தூர்கள் பணியாற்று கிறார்கள். ஒரு யூனிட்டில் உள்ள 5 பகுதிகளில் ஒரு வாரத்தில் ஒரு நாளைக்கு ஒரு பகுதி வீதம் எல்லாப் பகுதிகளிலும் மருந்து தெளிக்கப்படுகிறது. மருந்து தெளித்ததற்கான அத்தாட்சியும் அப்பகுதியில் வாழும் மக்களிடமிருந்து பெறப்படுகிறது. ஒரு உதவி பூச்சி இயலர் (Entomological Assistant) 2 துப்புரவு ஆய்வாளர் களின் பணியை மேற்பார்வையிடுகிறார். அப்பகுதி, உதவி சுகாதார ஆய்வாளர்களால் ஒட்டுமொத்த மேற்பார்வைப் பணி செய்யப்படுகிறது. களப்பணியை செய்ய வழிகாட்டவும், குறுக்கு சரிபார்ப்புப் பணியை மேற்கொள்ளவும் இரண்டு முதுநிலை பூச்சி இயலர்களும் மற்றும் இரண்டு உதவி சுகாதார அலுவலர்களும் வடக்கு மாவட்டத்திற்கு ஒருவரும், தெற்கு மாவட்டத்திற்கு ஒருவருமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மொத்தப் பணிகளும் நகர மலேரியா அலுவலரின் உதவியுடன் சுகாதார அதிகாரியின் நிர்வாகத்தின் கீழுள்ளது. ஒரு நாளைக்கு ஏறக்குறைய 200 லிருந்து 230 தெளிப்பான்கள் தெளிப்பு வேலையில் ஈடுபடுத்தப் படுகின்றன.

**மலேரியா ஒழிப்பு நடவடிக்கையில் உள்ள தடைகள் :**

(அ) பெரிய தண்ணீர் செல்லும் தடங்களில் அடிக்கடி தண்ணீர் தேங்கி நிற்பதால், கொசுக்கள் முட்டையிடுவதற்குச் சாதகமாக அமைந்து, மருந்து தெளிப்பிலிருந்து தப்பித்துக் கொள்கின்றன. சென்னை கழிவு நீரகற்று வாரியமும், சாக்கடை நீரை கூவம் தண்ணீரில் கலக்க விட்டு விடுவதனால் கூவம் தண்ணீர் போக்கு தடைபட்டு, அதன் மூலம் கொசுக்கள் இனப் பெருக்கம் அடைய ஏதுவாகிறது. இந்த செடியினங்கள் குறிப்பிட்ட கால முறைகளில் ஒரு தனிப்படையாக ஆட்களைக் கொண்டு அகற்றப்படுகின்றன.

(ஆ) அடையாறு முகத்துவாரத்தில் தடையாக உள்ள மண் அடைப்புதான் இந்த ஆற்றிலுள்ள நீரின் தேங்கலுக்குக் காரணம். இந்த மண் தடைப்புகளை அகற்றினால், தண்ணீர் ஓட்டம் தடைபடாது செல்லும். தண்ணீர் தங்கு தடையின்றி செல்லுமானால் கொசுக்கள் இனப் பெருக்கமடைய வழி ஏற்படாது.

(இ) மழைத் தண்ணீர் வடிகாலிலிருந்து வெளிவரும் சாக்கடை நீர்.

(ஈ) கால்வாய் ஓரங்களில் வசிக்கும் குடிசைவாழ் மக்கள், தங்கள் கழிவு குப்பைகளைத் தாறுமாறாக கொட்டுவதன் மூலம் தண்ணீர் ஓட்டப் போக்கு தடைப்பட்டு அதன் மூலம் அதிகக் கொசுக்கள் இனப் பெருக்கமடைய வழியாக அமைகிறது.

**புகைபரப்பும் இயந்திரங்களைப் பயன்படுத்துதல் :**

60 கையினால் இயக்கக் கூடிய புகை பரப்பும் இயந்திரங் களும், புகை பரப்புவதற்காக வண்டியில் பொருத்தப்பட்டுள்ள ஒரு திபா (TIFA) இயந்திரமும் உள்ளது. ஏராளமான கொசுக் களை ஒழிக்கும் பொருட்டு மாலை நேரத்தில் புகைபரப்பும் பணி செய்யப்படுகிறது. கையினால் இயக்கக் கூடிய இயந்திரத்தைப் புகைபரப்புவதற்கு பயன் படுத்துவதற்கு ஒரு நாளைக்கு சுமார் ரூ. 30 வீதமும், திபா (TIFA) புகை பரப்பும் இயந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு ஒரு மணி நேரத்திற்கு சுமார் ரூ. 525 வீதமும் செலவாகிறது. கொசு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கும், கொசுவினால் ஏற்படக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஆண்டிற்கு ரூ. 1.5 கோடி செலவாகிறது. மலேரியா, யானைக் கால் போன்ற வியாதிகள் கொசுக்களினால் ஏற்படுகின்றன. 1985 ஆம் ஆண்டில், 51,376 பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டார்கள். சுமார் 4.90 லட்சம் இரத்தத் தடவல்கள் எடுத்து ஆய்வு செய்யப்பட்டன. நகரில் பல பகுதிகளில் உள்ள 16 மலேரியா மருத்துவமனைகளில் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நபரின் இரத்தம் இலவசமாகப் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப் படுகிறது. நோயாளியின் வீட்டிற்கு சென்று இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**பூச்சியியல் ஆய்வுகள் :**

ஒரு மாதத்தில் 780 மணி நேரம் (Man Hou) கொசு சேகரிப்பதற்கு செலவழிக்கப்பட்டு, சுமார் 12,000 கொசுக்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த கொசுக்களை அறுவை செய்து, தொற்று நோய் பற்றிய திறன் தீர்மானிக்கப்படுகிறது. கொசுக்கள் அதிகமாக உள்ள பகுதிகளைக் கண்டுபிடித்து அவற்றைக் கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. வட சென்னையில் நான்கும், தென் சென்னையில் மூன்றுமாக மொத்தம் 7 இரவு நேர யானைக்கால் நோய் தடுப்பு மருந்தகங்கள் இயங்கி வருகின்றன.

இம் மருந்தகங்களால் 1985 ஆம் ஆண்டில் செயல்படுத்தப் பட்ட பணிகள் பின்வருமாறு :

(i) இரவில் இரத்தத் தடவல்கள் எடுத்து ஆய்வு செய்யப்பட்டவை : 1.02 இலட்சம்

(ii) நுண் நோய்க் கிருமிகள் உள்ளவை : 1541

(iii) [illegible] உள்ளவை : 594





நோய் அறிகுறி கண்ட அனைவருக்கும் இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது.

மலேரியா மற்றும் கொசுக்கள் பரவுவதைத் தடுக்க ஒரு ஒருங்கிணைந்த அடிப்படைக் குழு அமைக்கப்பட்டு கிணறுகள் மற்றும் மேல்நிலை நீர்த் தொட்டிகளை கொசுக் களிலிருந்து பாதுகாப்பாக வைப்பது போன்ற பல்வேறு வழிவகைகள் பல துறைகளின் மூலமாக ஒருங்கிணைந்து செயல் படுத்தப்பட்டு வருகின்றன. கொசுக்கள் பரவும் நீர் நிலைகளில் மீன்களை வளர்த்தல் மற்றும் மலேரியா நோய் அதிகமாக உள்ள பகுதிகளில் தீவிரமாக மருந்து தெளித்தல் மூலமும் கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்தலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த காலத்திலிருந்து சென்னையில் கொசுக்களை ஒழிக்கவேண்டுமென்று பல தீர்மானங் களையும் பல கேள்விகளையும் கொடுத்திருக்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று பக்க அறிக்கையை வைத் திருக்கிறார்கள். ஆனால் சென்னையில் கொசுக்கள்தான் அதிக மாகிக்கொண்டே போகிறதே தவிர கொசுக்கள் ஒழிந்தபாடில்லை. சென்னையிலுள்ள கொசு ஆட்களையே தூக்கிக்கொண்டு போகக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆதலால் இந்தக் கொசுவை ஒழிப்பதற்கு மருத்துவ செலவும், அரசுக்கு சுகாதாரச் செலவும் அதிகமாகிறது. எனவே கொசுவை பூரணமாக ஒழிப்பதற்கு ஒரு மாஸ்டர் பிளான் அரசு நிறைவேற்றுமா? சீனாவின் தலை நகரமான பீக்கிங்கில் ஈ, கொசுக்களை அறவே ஒழித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். பரிட்ச்சார்த்தமாக சென்னையிலாவது கொசுக் களை ஒழிப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொசு ஆட்களை தூக்குகின்ற அளவுக்கு சென்னையிலே இருப்பதாகச் சொன்னார். நண்பர் தாமரைக் கனியை தூக்குகின்ற அளவுக்கு அவர் சாதாரணமாக இல்லை. ஒருவேளை அவரை தூக்கி இருந்தால் நான் அதற்காக வருத்தப் படுகிறேன். கொசுவைத்தான் தண்டிக்கவேண்டும். கொசுவை ஒழிப்பதற்கு மாநகராட்சி தன்னாலான எல்லா நடவடிக்கை களையும் எடுத்து வருகிறது. சாக்கடைகள், மற்றும் பல வழி களிலும் தண்ணீர் வருவதாலும், ஸ்டார்ம் வாட்டர் போய் அதிலே கலந்து விடுகிற காரணத்தாலும் கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. சென்னையைச் சுற்றி இருக்கின்ற கூவம், அடையாறு இவைகளில் தண்ணீர் தேக்கமாக இருக்கிற காரணத்தாலும், முகத் துவாரத்தில் தண்ணீர் கடலோடு கலக்க முடியாத காரணத்தாலும் இந்தத் தொல்லைகள் ஏற்படுகின்றன என்று விவரமாக அறிக்கை யிலே சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் தீர்க்கப்பட்டாலன்றி

கொசுத்தொல்லையைப் போக்க முடியாது. கொசுத் தொல்லையைத் தீர்ப்பதற்கு ஆங்காங்கே பூச்சி மருந்து அடிக்கும் வேலையையும் மாநகராட்சி செய்து கொண்டு இருக்கிறது. அதைத்தான் செய்ய இப்போது முடியுமே தவிர தற்காலத்தில் வேறு எதுவும் சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் கொசு இருக்கும் பகுதிகளில் இப்போது புகை மருந்து அடிக்கிறார்கள். ஒருநாள் அடித்துவிட்டு அப்படியே நிறுத்திவிடுகிறார்கள். மிகவும் சக்திவாய்ந்த மருந்து தெளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? மருந்துக்கு கொசு கட்டுப்படாவிட்டால் கொசுக்களுக்கு மலட்டுந் தன்மையை உருவாக்கி அதனுடைய இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியுமா? சாக்கடை குடி தண்ணீர் சம்பந்தப்பட்ட புகார்களை அளிக்க மாநகராட்சியில் தனி பிரிவு இருப்பதுபோல, கொசுத் தொல்லைப்பற்றி புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு தனி பிரிவு அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் கொசு ஒழிப்பதற்கான தனிப் பிரிவு ஒன்று சென்னையைப் பொறுத்தமட்டில் 30 யூனிட்டுகளாக பிரித்து தனித்தனியாகச் செய்து கொண்டிருக்கிறோம். அதைத் தவிர மேற்கொண்டு கொசு ஒழிப்பதற்கும் கொசு தொல்லைகள் இருக்கிறது என்று புகார்கள் வந்தாலும் ஆங்காங்கு தனித்தனியாக அனுப்பி பூச்சிமருந்து தெளிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்ப(டுகின்றன).

## (ஆ) மோட்டார் வாகனங்கள் வெளியிடும் புகையினால் நகர மக்கள் பாதிக்கப்படுவது.

(முற்பகல் 10–10)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னை, அண்ணா சாலையில் போக்குவரத்து வாகனங்களால் வெளியிடப்படும் கரியமில வாயுவால் ஏற்படும் பொது சுகாதாரக் கேடுகள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—



### அறிக்கை.

சென்னை அண்ணா சாலையில் மோட்டார் வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகையால் பொது சுகாதாரக் கேடுகள் ஏற்படுவதாக கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரப் பகுதிகளில் மோட்டார் வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகை பற்றி பொதுவாகப் புகார் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மோட்டார் வாகனங்களிலிருந்து புகை, கண்ணுக்குத் தெரியக்கூடிய வாயு தீப்பொறிகள், சாம்பல்-சிறுதுகல்கள் அல்லது எண்ணெய் வெளிப்படுதல் ஆகியவை தொடர்பாக மாநில அரசு விதிகள் இயற்றுவதற்கு 1939ஆம் ஆண்டைய மோட்டார் வாகனங்கள் சட்டத்தின் 70(2) ஆம் பிரிவு வகை செய்கிறது. எனவே, புகையை வெளிப்படுத்தும் வாகனங்களை சாலையில் ஓட்டும் உரிமையாளர்களுக்கு தண்டனை விதிக்க ஏற்கனவே விதிகள் இயற்றப்படாமலிருந்தால் மாநில அரசுகள் தேவையான விதிகளை இயற்றலாமென்று மத்திய அரசு, மாநில அரசுகளைக் கேட்டுக் கொண்டது. சாலையில் புகையை வெளிப்படுத்தும் வாகனங்களை நிறுத்துவதற்கு, வாகனங்களை ஓட்டுபவர்களும் அவற்றின் உரிமையாளர்களும் புகை எதனால் வருகிறது என்பதைக் கண்டறிந்து பழுது பார்ப்பதை உறுதி செய்வதற்காக அவர்களுக்கு அபராதம் விதிப்பதற்கும் போக்குவரத்துக் காவலர்களுக்கு அதிகாரமளிக்க வேண்டியது அவசியமாகலாம். இத்தகைய நடவடிக்கை எடுப்பதன் மூலம் உடனடியாக தூய்மைக் கேடல்லாத சுற்றுப்புறச் சூழ்நிலையை உணர முடிவதோடு டீசல் பயன்பாடும் பொதுவாகக் குறையும்.

2. 1940 ஆம் ஆண்டைய தமிழ் நாட்டு மோட்டார் வாகன விதிகளைச் சேர்ந்த 323ஆம் விதியின்படி, தவிர்க்கத்தக்க புகை, கண்ணுக்குத் தெரியக்கூடிய வாயு, எண்ணெய் அல்லது கேடு விளைவிக்கக்கூடிய பொருள் ஏதும் வெளிப்படாத வகையில் வாகனம் தயாரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டுமென்றும், புகையுடன் சாலைகளில் ஓடும் வாகனங்களை நிறுத்துவதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சென்னை காவல்துறை ஆணையர் தெரிவித்தார். பொதுமக்களுக்கும் ஓட்டுநர்களுக்கும் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைக் கருத்தில் கொண்டு பார்த்தால், விதிகளைக் கண்டிப்பாகச் செயற்படுத்துவதன் மூலம் மோட்டார் வாகனங்களிலிருந்து மிக அதிகமாகப் புகை வெளிப்படுவதைக் கட்டுப்படுத்துவது அவசரத் தேவையாகும் என்றும் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்துள்ளார். அதன்படி, மகாராஷ்டிரா மாநிலம் அதன் மோட்டார் வாகன விதிகளுக்கு வெளியிட்ட திருத்தத்தையொட்டி, மோட்டார் வாகனங்களிலிருந்து வெளிப்படும் புகைக்குச் சில தரங்களை (Standards) நிர்ணயித்து, 1940 ஆம் ஆண்டைய தமிழ் நாட்டு மோட்டார் வாகன விதிகளைச் சேர்ந்த 323 ஆம் விதியில் செய்ய வேண்டிய தேவையான வரைவு திருத்தங்களை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த புகையின் அளவை கண்டறிவதற்காக 58 மீட்டர்கள் வாங்குவதற்கான ஆணையை அரசு பிறப்பித்து இருக்கிறது. அவைகளைப் பயன்படுத்தி விரைவில் உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவு.

**கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு 1986.**

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் தனி அதிகாரிகள் நியமன சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் அன்றைக்கு எதிர்ப்பை தெரிவித்தோம். எப்படி தமிழகத்தில் அண்மைக் காலங்களிலே ஆண்டு தோறும் வறட்சி வருகிறதோ அதேபோல் இந்த தனி அதிகாரிகளின் பதவி காலம் நீட்டிப்புச் சட்டம் என்பது ஒவ்வொரு ஆண்டும் வந்து கொண்டு இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். எதிர் வரிசையில் இருந்து இந்த சட்ட முன்வடிவு வருகிற போது எல்லாம் தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிப்பு என்பதை மேலும் நீட்டிக்கக் கூடாது அந்த அந்த ஆண்டுக்குள்ளாகவே இந்த கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்தப்படவேண்டும்.

---

*1986-ம்-ஆண்டு மார்ச் 31-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





என்று பல்வேறு காலக் கட்டங்களில் வலியுறுத்திச் சொல்லப்பட்டு வந்து இருக்கின்றன. ஆளும் கட்சித் தரப்பிலும் வெகு விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்று உறுதி மொழி சொல்லிக் கொண்டு இருந்தாலும்கூட என்ன காரணத்தாலோ சற்று ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்த கூட்டுறவு சங்கங்களில் தேர்தல் நடைபெறாமல் இருந்துகொண்டு வருகின்றன. அதிலும் கூட இந்த சட்டமுன்வடிவில் கொடுக்கப்பட்டு இருக்கின்ற நோக்க காரண விளக்கக் குறிப்பில் 1976 ஆம் ஆண்டு நம்முடைய தனி அதிகாரிகளின் சட்டமுன்வடிவு முதன் முறையாக வரும்போது 2 ஆண்டுகள் என்று கொண்டு வந்தார்கள். பின்னால் ஒவ்வொரு ஆண்டும் இந்த தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டு 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி அன்று கடந்த ஆண்டு நாம் கொடுத்த அனுமதி நிறைவு பெறுவதால் இப்போது மீண்டும் ஒரு ஆண்டுக்கு அனுமதி கேட்டு இந்த சட்டமுன் வடிவு நம்முடைய ஒப்புதலுக்காக இங்கே இருந்து கொண்டு இருக்கிறது.

நேற்றையதினம் இந்தச் சட்டமுன் வடிவை எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும், மாண்புமிகு உறுப்பினர்கள் படிப்பதற்கு 3 நாள் அவகாசம் வேண்டும் என்று கேட்ட நேரத்திலே, இது ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது. இந்தத் துறை ஏன் இவ்வளவு காலம் இதைக் கொண்டுவராமல் இருந்தது. இந்த அசட்டைக்குக் காரணம் என்ன, கடந்த மாதம் 17 ஆம் தேதியிலிருந்து இந்த சட்டசபை கூடியபோதும்கூட, ஏன் இவ்வளவு அவசர அவசரமாகக் கொண்டு வரவேண்டுமென்ற வினாக்களை எழுப்பினோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் நேற்றையதினம் இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டு மென்று சொன்ன நேரத்திலே சொன்னார்கள். நீங்கள் வழக்க மாகச் சொல்வதைச் சொல்லுங்கள். நாங்கள் சொல்லப் போவதைச் சொல்லப் போகிறோம் என்று சொன்னார்கள். எப்படியும் இது நிறைவேறப் போகிறது என்ற நிலையிலே சர்வசாதாரணமான பதிலைச் சொன்னதால்தான் எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. இந்த அரசுக்கு இதைச் சட்டமாக்க ஒரு ஆண்டு ஏன்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, தவறான நோக்கத்தோடு சொல்லவில்லை. வழக்க மாக நீங்களும் பொறுப்புணர்ச்சியோடு பேசுகிறீர்கள். நாங்களும் பொறுப்புணர்வோடு பதில் சொல்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் தமிழிலே பேசுவதில் கெட்டிக்காரர். ஆனால் அமைச்சரவர்கள் இதுபோன்ற தொனியில் சொல்லவில்லை. அவர் சொன்ன கருத்தை எடுத்துக் கூற விரும்புகிறேன். இது என்னுடைய கருத்து மட்டுமல்ல (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியது, நாங்கள் படிக்கவில்லை, படிக்கவேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். 10 ஆண்டுக் காலமாக இதே சப்ஜெக்ட்டைப் பற்றி மேலும் மேலும் பேசிக்கொண்டிருப்பதால், அதைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தைத்தான் நான் சொன்னேன். உங்களுக்கு இருக்கிற வாய்ப்பு வசதிகளை நீங்கள் சொல்கிறீர்கள். எங்களுக்கு இருக்கிற வாய்ப்பு வசதிகளை நாங்கள் சொல்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் ; அமைச்சருடைய விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். நேற்று மாண்புமிகு அமைச்சர் சொன்னபோது அந்தத் தொனி அப்படி இருந்தது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். அதையே திரும்பத் திரும்ப பேசவேண்டாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் சொல்வது போன்று நான் மெத்த பொறுப்போடுதான் பேசுகிறேன். மக்களுடைய எண்ணங்களைப் பிரதிபலித்துத்தான் பேசுகிறேன். ஜனநாயகத்தினுடைய நாற்றங்காலாக இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையான தேர்தல் நடைபெறாத காரணத்தால் பல்வேறு குறைபடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு அதிகாரிகள் சாம்ராஜ்யமாக இருக்கிறது. ஆனால் எல்லா இடங்களிலும் குறைபாடுகள் இருக்கிறது என்று சொல்லவில்லை. பல்வேறு இடங்களில் பல்வேறு குறைபாடுகள் நடைபெற்று இருக்கின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அலங்கரித்திருப்பார்களேயானால், இந்தக் கூட்டுறவு என்ற இயக்கம் எந்த நல்ல நோக்கத்துக்காக கொண்டுவரப்பட்டதோ, அந்த எண்ணம் நிறைவேறும் என்ற நல்ல எண்ணத்தில் தான் இதைச் சொல்கிறேன். அதிலும் கூட காரண காரிய விளக்கங்களைச் சொன்ன நேரத்திலே ஏன் இந்த ஓராண்டுக் காலம் நீட்டிக்கவேண்டுமென்று கேட்ட நேரத்திலே சொன்ன விளக்கம் தான் வேடிக்கையாக இருக்கிறது. விதிகளைச் செய்வதற்கு அவகாசம் வேண்டுமென்று சொன்னார்கள். உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளி வைப்பதற்கு உள்ளாட்சித்



துறை அமைச்சர் அவர்கள் சொன்னபோது, வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அச்சடிக்க அவகாசம் வேண்டுமென்று சொன்னார்களே, அது போன்று இந்த விதிகளைச் செய்வதற்கு அவகாசம் வேண்டுமென்று கேட்கிறார்கள். விதிகளைச் செய்வதற்கு ஒரு ஆண்டுக் காலமா ? மூன்று மாதக் காலம் போதாதா ? நம்முடைய இலாக்கா திறமையான இலாக்கா. அதிகாரிகளின் திறமையிலும் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. காரண நோக்க விளக்கத்தில் இதைச் சொன்னதால் தான் நான் சொல்கிறேன், காரண நோக்க விளக்கத்தில் ஏன் அப்படிச் சொன்னார்கள் ? யார் மீதாவது பழியைப் போடவேண்டும், எதையாவது சொல்லவேண்டுமென்று சொல்கிறீர்களா ? விதி என்ன நம்முடைய தலைவிதியா ? பாரதி சொன்னதுபோல், 'இனி ஒரு விதி செய்வோம், அதை எந்த நாளும் காப்போம்' என்ற முறையிலே விதி செய்துவிடுங்களேன். நான் ஏன் இப்படிச் சொல்கிறேன் என்று சொன்னால் இனிமேல் இப்படிப்பட்ட காலதாமதம் இருக்கக் கூடாது. ஒரு ஆண்டுக் காலம், ஒரு ஆண்டுக் காலம் என்று சொல்லிவிட்டால், அதனுடைய முக்கியத்துவமே போய்விடுகிறது. மக்கள் மத்தியிலே பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகள் களையப் டவேண்டும், கூட்டுறவுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரவேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு தான் உற்ற தோழனாக இந்தக் கருத்துக்களை இந்த அரசுக்குச் சொல்கிறேன். ஒரு ஆண்டுக்காலம் கொடுக்கிறோம் என்று சொன்னாலும்கூட, 3 மாதம், 6 மாதங்கள் போதும். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே, தேர்தலுக்கான தேதியை இன்றைக்கே அறிவிக்கலாம். அப்படி அறிவித்தால், அதனால் நமக்கு சங்கடம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அப்படி அறிவிப்பு செய்தால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இப்படியே 1, 2 3 ஆண்டுக்காலம் தள்ளிக் கொண்டு போகுமோ என்ற அச்ச நிலை இருக்கிற காரணத்தால், 3, 6 மாதத்திற்குள்ளே தேர்தல் நடத்தப்படும் என்று அவர்கள் அறிவிப்பார்களேயானால் அதன் மூலம் மக்களுக்கு நல்ல பலன் ஏற்படும் என்று தெரிவித்து, இதை எதிர்த்து நான் அமைகிறேன்.

(முற்பகல் 10-20)

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் தனி அதிகாரிகளுடைய காலத்தை 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் தேதிக்குப் பிறகு 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் தேதி வரையிலும் ஒரு ஆண்டுக்காலம் நீட்டிக்கவேண்டுமென்று மசோதா கொண்டுவந்தார்கள். இதை அறிமுகப்படுத்துகின்ற போதே நாங்கள் இதை எதிர்த்தோம். இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது தேர்தலுக்கு சில திருத்தங்கள் கொண்டுவர வேண்டும் என்றும் அதற்காக மேலும் ஒரு ஆண்டுக்காலம்

தேவைப்படுகிறது என்றும் சொல்கிறார்கள்- இன்றைக்குச் சட்டத் துறை அமைச்சராக இருக்கின்றவர் தான் அன்றைக்குக் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தார். அந்தக் காலத்திலே இந்த கூட்டுறவு தனி அதிகாரிகள் காலத்தை நீடிக்கின்ற மசோதா வரும்போது எல்லாம் கூட்டுறவுச் சட்டத்திலே சில திருத்தங்கள் செய்யவேண்டியிருக்கிறது. அந்தத் திருத்தங்களைச் செய்ததற்குப் பின்னால் கண்டிப்பாக தேர்தல் நடத்தப்படும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு அந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்குக் கொண்டு போகவேண்டுமென்று சொல்லப்பட்டு அந்தக் கமிட்டியில் பரிசீலிக்கப்பட்டு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதற்குப் பிறகு தேர்தல்களைக் கொண்டுவராமல் தனி அதிகாரிகள் பதவிக்காலத்தை நீட்டிக்கும் அடுத்த மசோதா ஒன்றைக் கொண்டுவந்தார்கள். அப்போது இனிமேல் நாங்கள் தனிஅதிகாரிகள் காலத்தை நீட்டிக்கும் மசோதாவைக் கொண்டுவர மாட்டோம், உறுதியாக கண்டிப்பாக தேர்தலை அறிவிப்போம் என்று அமைச்சர் சொன்னார்.

அதற்குப் பிறகு இப்போது வந்திருக்கிற கூட்டுறவுத் துறை அமைச்சர் மேலும் காலத்தை நீட்டிக்கவேண்டுமென்று சொல்கிறார். இப்படி பத்து ஆண்டுக்காலமாக கூட்டுறவுத் துறையிலே தேர்தல்கள் நடத்தப்படாத நிலைமை இருக்கிறது. கடன்பெற்ற விவசாயிகளிடத்திலே வசூலிக்கிறபோது அமைச்சர் அவர்கள் அடிக்கடி செல்வார்கள், விவசாயிகளைத் தூண்டிவிடுகிறார்கள், அதனால் கூட்டுறவுத் துறையிலே பல பிரச்சினைகள் உண்டாக்கப்படுகின்றன, பல நெருக்கடிகளுக்கு அவை ஆளாக்கப்படுகின்றன என்றெல்லாம் சொன்னார்கள். இப்போது நான் அதைத் திரும்பக் கேட்க விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையிலே இந்த பத்தாண்டுக் காலமாக தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிப்பதாலே கூட்டுறவுத் துறை என்ற பெயரை மாற்றி தனி அதிகாரிகள் துறை என்று சட்டத்தைக் கொண்டுவந்தால் அப்படி அடிக்கடி நீட்டிக்கிற மசோதாக்களைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை, எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற நாங்களும் பேச வேண்டியதில்லை, ஒவ்வொரு சட்ட மன்றக் கூட்டத் தொடரிலும் அறிமுகப்படுத்துகிறபோது அரை மணி நேரமும் ஆய்வு செய்கிறபோது 1 மணி நேரமும் ஆக ஒன்றரை மணி நேரம் சட்டமன்ற பேரவையின் காலத்தை விரையமாக்க, வீணாக்கக்கூடிய அவசியம் இல்லை. நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இது கடைசித் தடவையாக இருக்கவேண்டும். கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய சம்பவங்களைப்பற்றி இப்போது சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கை வருகிறபோது சந்தர்ப்பம் கிடைத்தால் நிறையச் சொல்லமுடியும். எல்லா அதிகாரிகளைப்பற்றியும் சொல்ல விரும்பவில்லை. கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய தனி



அதிகாரிகள் பெரும்பாலானோர் அதைத் தனி அதிகாரிகள் துறையாக மாற்றியமைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு கீழே வேலை செய்யக்கூடிய பணியாளர்களை அவர்கள் வேலையாட்களாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளம் சலுகைகள் போன்றவை வழங்கப்படுவதிலே பெரும்பகுதி விவசாயிகள் கொடுக்கக்கூடிய வட்டிப்பணம் தான். அவர்கள் விவசாயிகளை மிகவும் வேதனைப் படுத்தக்கூடிய முறையிலே நடத்துகிறார்கள். இதையெல்லாம் மாற்றியமைக்கவேண்டுமானால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அமர்ந்தால்தான் முடியும். விவசாயிகள் அந்தத் துறைக்கு வருகிறபோது மரியாதை கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கும். ஆகவே இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கணக்கிலே எடுத்துக் கொண்டு நீட்டிப்பு, நீட்டிப்பு என்று கொண்டுவராமல் கூட்டுறவுத் துறை விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படுகிற வகையிலே இன்னொரு முறை நீட்டிப்புக் கேட்க மாட்டோம், இது தான் கடைசித் தடவையாகக் கொண்டுவருகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி வாக்குறுதியைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு இந்த மசோதாவை எதிர்த்து அமர்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, *** *** (குறுக்கீடு).....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பில்லைப் பற்றி மட்டும் பேசுங்கள். எமர்ஜன்ஸி பற்றி பேசியவைகள் நீக்கப் படுகின்றன.

திரு. வி. பி. சிந்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கசப்புணர்வு தெரியாமல் நான் பேசவில்லை. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தப் பகுதியில் தேர்தல் நடத்தாமல் இருப்பது அந்த உணர்வைத்தான் எடுத்துக் காட்டுகிறது. மாநில அரசு சமீபத்தில் நடந்த உள்ளாட்சித் தேர்தலின் முடிவுகளைப் பார்த்தால், என்னைப் பொறுத்தவரையிலே, இந்தக் கூட்டுறவுத் துறையிலே தேர்தல் நடத்தாமல் பத்தாண்டுகளாக இருக்கின்ற ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற காரணத்தினால்தான் ஆளும் கட்சிக்கு இந்த விளைவு ஏற்பட்டது என்று கருதுகிறேன் நான். நான் குறை சொல்லவில்லை. பத்தாண்டுகளாக இந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதை எப்படி நியாயப் படுத்த முடியும்? தேர்தலுக்கான தயாரிப்புகளுக்கு நேரம் வேண்டுமென்று சொல்கிறார்கள். உப விதிகளைத் தயாரிக்க நேரம் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒருகாலத்தில் காம்ப்ரஹன்சிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வர வேண்டும், விரிவான சட்டம் கொண்டு வர

---

[redacted] *** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(திரு. வி. பி. சிந்தன்) [1986 ஏப்ரல் 2

வேண்டுமென்று நீங்கள் அதற்கு அவகாசம் வேண்டுமென்று கோரி, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அந்தச் சட்டமும் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்திற்கு ரூல் போடவில்லை என்று இப்பொழுது தேர்தலை ஒத்தி வைப்பது எப்படி நியாயம் ஆகும்?

கூட்டுறவுத் துறை மேலும் பலப்பட வேண்டுமென்று விரும்புகின்றவன் நான். சோஷலிச நாடுகளில் அநேகமாக எல்லா உற்பத்தித் துறைகளிலேயும் கூட்டுறவு உண்டு. கூட்டுறவு இல்லாத, கூட்டுறவுத் துறைக்கு விஸ்தரிக்கப்படாத, சேர்க்கப்படாத ஒரு பகுதியும் அங்கே இல்லை. ஆகவே, ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கே ஆதாரமாக இருக்கின்ற இந்தக் கூட்டுறவுத் துறையைத் தனி அதிகாரியின் பொறுப்பிலே விட்டு விடக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் நான் இதைப் பேசுகிறேன்.

ஒவ்வொரு கூட்டுறவுத் துறையிலேயும் தேர்தல் நடத்தாத காரணத்தினால், உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லக்கூட முடியவில்லை; உறுப்பினர்கள் பல இடங்களிலே இதுபற்றி முறையிடுகிறார்கள்; கையெழுத்து இயக்கம் நடத்துகிறார்கள்; உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்ற இடம் கூட உண்டு. ஏன் தேர்தலை நடத்தக்கூடாது? தேர்தலை நடத்தினால் உறுப்பினர்கள் தங்கள் குறைகளைச் சொல்வதற்கும், கூட்டுறவு இலாக்காவிலேயிருந்து, கூட்டுறவு அமைப்புகளிலேயிருந்து அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகளைப் பெறவும் வாய்ப்பாக அமையும். இந்த வாய்ப்புகளையெல்லாம் கெடுக்கின்ற நான் கடுமையாகச் சொல்ல விரும்பாவிட்டாலும்,—இந்தத் தனி அதிகாரிகள் ஒரு நந்திமாதிரி உட்கார்ந்து கொண்டு, இந்தக் கூட்டுறவு இலாக்காவில் பலன்கள் பூராவையும் உறுப்பினர்களோ அல்லது அந்தப் பகுதி மக்களோ அனுபவிக்க முடியாமல் ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், பொருளாதாரத்தின் முக்கியமான இந்த அமைப்பிலே உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும்; மீண்டும் ஒரு ஆண்டுக்கு இந்தத் தேர்தலை ஒத்திவைப்பது என்பது எந்தவிதத்திலும் நியாயப்படுத்தப் படக்கூடியது அல்ல. உங்களுக்கு மெஜாரிட்டி உண்டு. நான் பேசி முடிந்ததற்குப் பிறகு இன்னும் ஒன்றிரண்டு உறுப்பினர்கள் பேசினால், துணைத் தலைவர், ஆதிரிப்போர் ஆம் என்க என்று ஆரம்பிப்பார்கள். ஆம் என்று சொல்லி அதை முடித்து விடுவார்கள்.**

(முற்பகல் 10—30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, எல்லாப் பேரவைகளிலும் நடைபெற்று வரக்கூடிய முறை இது. * * *

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்ற முறைப்படி அப்படித்தான் நிறைவேற்றுகிறோம். **என்பதை நீக்கிவிடுகிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: துணைத் தலைவர் அவர்களே சட்டமன்றமும் பாராளுமன்றமும் மெஜாரிட்டி இருக்கிற அடிப்படையில் தான் இயங்குகிறது என்று புரிந்தே நான் பேசுகிறேன். ஆனால் அந்த மெஜாரிட்டி உணர்வு, மெஜாரிட்டியான உறுப்பினர்களுக்கு நீங்கள் வழங்க மறுப்பதன் பொருள் என்ன? இங்கே மெஜாரிட்டி அடிப்படையில் முடிவு எடுக்கிறீர்கள். நீங்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே, அந்த மெஜாரிட்டியானவர்கள் விரும்புகிற தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு, அந்த ஜனநாயக உரிமை*** வார்த்தைகளிலே நாம் சண்டை போட்டுப் பிரயோஜனம் இல்லை. அந்த உறுப்பினர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிற அளவு ஒரு வசதி செய்து கொடுக்கவில்லையென்றால், உங்களுக்கு மெஜாரிட்டி உண்டு, நீங்கள் இதை நிறைவேற்றினால், நான் மைனாரிட்டி, மெஜாரிட்டி ஆகிறவரை காத்திருக்க வேண்டியதுதான். அதையெல்லாம் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதே தத்துவத்தை நீங்கள் உறுப்பினர்களுக்கு வழங்க மறுக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, காத்திருந்து பயன் இல்லை.

திரு. வி. பி. சிந்தன்: துணைத் தலைவர் அவர்களே, காலம் கனியட்டும், அப்போது பார்ப்போம். வரலாற்றினுடைய மாற்றத்தை நீங்களும் விரைவிலே பார்க்கப் போகிறீர்கள்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்தப் பகுதியை நீக்கி விடுகிறேன்.

திரு. வி. பி. சிந்தன்: துணைத் தலைவர் அவர்களே, காலத்தினுடைய போக்கை யாராலும் நிர்ணயிக்க முடியாது. உரிமையைப் பாதிக்கிற முறையில், இந்த ஓராண்டு என்பதைக் கைவிட்டு, தேர்தலுக்குத் தயாராக, ஒரு மாதமோ, இரண்டு மாதமோ வைத்து, அதற்குள்ளே அமைத்துவிடும் வகையில் இதை நிறைவேற்றுவதுதான் ஜனநாயகத்தைப் பாதுகாக்கிற ஒரு முறையாக அமையும், இல்லாவிட்டால் அதனுடைய அரசியல் விளைவுகளை நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள். உங்கள் மீது அனுதாபம் இருக்கிற காரணத்தாலே, இந்த வார்த்தையைச் சொல்லி நான் முடிக்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*திரு. மா. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தனி அலுவலர் நியமன சட்டத் திருத்தத்தை எங்களுடைய கட்சியின் சார்பாக நாங்கள் எதிர்க்கின்றோம்.

இந்தத் தனி அலுவலர்கள் நியமனத்தை 1976-லே தொடங்கி, இன்றையதினம் ஒரு வருடத்திற்கு, இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை அவர்கள் நியமனத்தை நீட்டித்துக் சட்டம் கொண்டு வருவதும் அதை எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஆட்சேபிப்பதும் வழக்கமாக இருக்கிறது. நாங்களும் இந்தத் தனி அலுவலர்களுடைய சட்டத்திருத்தத்தை இங்கே வன்மையாக எதிர்ப்பதற்குக் காரணம், மக்களுடைய குறைகளையும் விவசாயிகளுடைய குறைகளையும் கேட்க, உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, இங்கே தனி அலுவலர்கள், தங்களுடைய பதவியின் காரணமாக அலட்சியப்படுத்தி, இன்றையதினம் தஞ்சை மாவட்டத்திலே மட்டுமல்ல, விவசாயத்திலே அதிக ஈடுபாடுடைய, திருச்சி, புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டு, ரூ. 130 கோடிக்கு மேல் நட்டம் இருப்பதைச் சட்டமன்றத்திலே கேள்விப்பட்டோம். அந்த அளவுக்கு கூட்டுறவுச் சங்கங்களுடைய நடவடிக்கை இந்த தனி அலுவலர்கள் நிர்வாகத்தில் சீரானபடி நடக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் நான் சொல்வேன். திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகித்த நேரத்தில் ஏதோ ஊழல் செய்துவிட்டார்கள், தவறு செய்துவிட்டார்கள் என்று சொல்லி, விசாரிக்க பாரதி கமிஷன் என்று ஒரு கமிஷனைக்கூட போட்டார்கள். ஆனால் அந்த பாரதி கமிஷனுடைய ரிப்போர்ட்டை இதுவரையில் சட்டமன்றத்தில் வைக்கவில்லை. எங்கள்மீது சந்தேகப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கிற உறுப்பினர்கள் தங்களுக்கு சாதகமாக இருப்பார்களா என்ற ஐயப்பாட்டில் தனி அலுவலர்களுடைய நிர்வாகத்தை ஏற்படுத்தினார்கள். அதற்குப் பின்னாலே தேர்தல் நடத்த இன்று வரையில் தயக்கம் காட்டுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒருவேளை உள்ளாட்சித் தேர்தல் எப்படி அமைந்ததோ அந்தமாதிரி இந்த கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் முடிவுகளும் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் தனி அலுவலர்களுடைய கால நீட்டிப்பை கேட்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. எது எப்படி இருந்தாலும் இந்த தனி அலுவலர்கள் நியமனம் ஜனநாயகத்திற்கு விரோதமானது மட்டுமல்ல, மக்களுக்கு விரோதமானதாக இருந்துகொண்டிருக்கிறது. இன்றையதினம் தனி அலுவலர்கள் தன்னிச்சையாக நடந்துகொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக பல ஊழல்கள் நடைபெறுகின்றன. என்ன என்ன வகைகளிலே ஊழல் நடைபெறுகிறது என்பது பற்றி நாங்கள் கூட்டுறவு மானியத்திலே விரிவாக எங்கள் கட்சியின் சார்பில் பேசவிருக்கிறோம். இன்றைய தினம் கூட்டுறவுத் துறையில் கூட்டு கொள்ளை நடக்கிறது என கூறுகிறேன். மிகச் சிறப்பாக நடைபெற்றுகொண்டிருந்த கூட்டுறவுச்



சங்கங்கள் இன்றைக்கு இந்த தனி அலுவலர்கள் நிர்வாகத்தில் மிகவும் கேவலமாக, ஊழல் நிறைந்ததாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த தனி அலுவலர்கள் நியமனம் என்பது கூடாது. எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டதைப்போல, உடனடியாகத் தேர்தல் வைத்து, தேர்தல் நடத்த திட்டவட்டமாக ஒரு நாளைக் குறிப்பிட்டு, இந்த தனி அலுவலர்கள் நியமனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று எங்கள் கட்சியின் சார்பாக கேட்டு, அமர்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவின்மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக நான் ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க முன்வருகிறேன்.

பொதுவாக கூட்டுறவே நாட்டுயர்வு என்பதை நாம் மறந்துவிடவில்லை. ஆகவேதான் இந்த தனி அலுவலர்கள் நியமனத்தை சற்று நீட்டித்தர வேண்டுமென்பதற்காக இங்கே திருத்த மசோதா வந்திருக்கிறது. உண்மையிலேயே நிலைமை என்ன என்பதை நாம் உலகுக்கு அறிவிப்பதற்காக இந்தத் திருத்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது தனி அலுவலர்கள் இருக்கிற காரணத்தால் சில கேவலங்கள் ஏற்பட்டுவிட்டதுபோல சில பிரச்சனைகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் தனி அலுவலர்கள் இன்னும் சில காலம் இருக்க வேண்டும், அவர்களுடைய நியமனத்தை கொஞ்சம் நீட்டித்தர வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம் இந்த ஆட்சி வருவதற்கு முன்பே கூட்டுறவுத் துறையிலே ஏற்பட்ட கேவலத்தைப் போக்கக்கூடிய வகையில், மிகச் சிறப்பாக தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய எல்லாவிதமான உரிமைகளையும் பெறக்கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் பழைய வீட்டை இடித்துக் கட்டுவதற்கும் புதிய வீட்டைக் கட்டுவதற்கும் உள்ள வித்தியாசம் இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் இருக்கிறது என்பதை ஏற்கனவே இந்த நாட்டை ஆண்டவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே ஒரு கட்சி ஆட்சியில் இருக்கும்போது பல்வேறு பினாமி பெயரில், பல்வேறு தவறுகள் குற்றங்கள் நடைபெற்றன என்பதால் கமிஷனும் வந்தது. கோர்ட்டுக்கும் போனார்கள். நிரபராதிகள் தண்டிக்கப்பட்டார்கள், குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள் என்று தினம் தினம் பத்திரிகையில் செய்தி வந்தது எல்லோருக்கும் தெரியும். "அரைத்தவன்

(டாக்டர் கே. சமரசம்) [1986 ஏப்ரல் 2

ஆட்டுக்கல்லையும் சுட்டவன் தோசைக் கல்லையும் எடுத்துச் சென்றார்கள்" என்பதைப்போல கூட்டுறவுத் துறையில் நிலைமை இருந்தது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. அந்த அடிப் படையில்தான் இன்றைய தினம் இங்கே வருகின்ற இந்த நேரத் தில் அந்த பினாமிகள் ஊடுருவல் செய்யக்கூடாது என்ற நோக் கத்திலே தகுந்த பாதுகாப்பு கூட்டுறவுத் துறைக்குத் தேவை என்பதால் இந்த சட்டத்திருத்த மசோதா வந்திருக்கிறது. இப்படி இருந்தால் ஒழிய இந்த நிர்வாகம் நல்லமுறையில் ஈடேற முடியாது. பினாமிகள் ஊடுருவல் செய்ய முடியாமல் இன்றைக்கு தனி அலுவலர்கள் இருக்கின்ற காரணத்தால் இது அந்த அள வுக்கு பெருமை தருவதுதான்.

ஏற்கெனவே இந்தத் துறையில் ஏற்பட்ட அவலங்கள், குற் றங்கள் போகக்கூடிய வகையிலும் மீண்டும் பினாமிகள் தலை தூக்கக்கூடாது. குற்றங்கள் ஏற்படக்கூடாது என்ற வகையிலும், இப்படிப்பட்ட பல்வேறு கருத்துக்களின் அடிப்படையிலும் கூட்டுறவுத் துறைச் சட்டத்தை இயற்றியிருக்கிறோம். அந்தச் சட்டத்தை முழுமையாக ஆராய்ந்து பார்த்து, நல்லமுறையில் செயல்படுத்தக்கூடிய வகையில் தேர்தலை நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும். அதற்கேற்ற ஒரு குறிப்பிட்டக் காலத்திற்குள்ளாக நல்ல முடிவினை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10–40)

அதுமட்டுமல்ல. இப்போது இருக்கிற மத்திய வங்கியாக இருந்தாலும் மொத்த விற்பனைப் பண்டகசாலையாக இருந் தாலும் மிகச் சிறப்பாக நடக்கிறது என்ற பெயரைப் பெற்றிருக் கின்றன. ஏற்கெனவே இருந்த ஆட்சியில் இருந்ததைவிட, ஏழை எளியவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர் களுக்கும் உதவி செய்யக்கூடிய வகையில் இந்தக் கூட்டுறவுத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்ற நல்ல பெயரை இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ்நாடு பெற்றி ருக்கிறது. இப்படி பெயர் பெற்றிருக்கிற இந்த கூட்டுறவுத் துறையினுடைய சேவை நமக்கு மிக மிகத் தேவை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையிலே இங்கே சென்னை போன்ற பெருநகரங்களில் பெண்கள் மேம்பாட்டுக்கான கூட்டுறவுச் சங்கங்களை இயக்கி மிக நல்ல முறையில் நிர்வகித்து வருகிறோம் என்பதைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே தமிழ்நாடு சிறப்பான பெய ரைப் பெற்றிருக்கிறது. எனவே இப்படிப்பட்ட உணர்வு தமிழ் நாடு முழுவதும் வருவதற்குரிய வழிவகைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.



1986 ஏப்ரல் 2] (டாக்டர் கே. சமரசம்)

ஏற்கெனவே இந்த கூட்டுறவுத் துறை இடிந்து போன நிலை மையில், இடிந்துபோன நிலைமையில் இருந்ததை மாற்றி மிக வேகமாக இயங்க வைக்க உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் சரிபாதி யாக இருக்கக்கூடிய பெண்கள் நலனையும் பாதுகாக்கக்கூடிய வகையில் அவர்களையும் இந்த நிர்வாகத்தில் இணைக்கக்கூடிய வகையில் அவர்களையும் கூட்டுறவுத்துறையில் சேர்க்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்தால் நல்லது. ஏனென்றால் அதிக அளவில் பலன் தரக்கூடியவர்கள் அவர்கள். கூட்டுறவுத் துறை யினைப் பொறுத்தவரையில் ஆண்களைவிட பெண்கள் அதிகமான வகையில் தொடர்பு உடையவர்கள். இங்கே தேர்தல் என்று வருகிறபோதும், வேறு பல பிரச்சினைகள் வருகிறபோதும், அரிசனங்களுக்கு இடம் இல்லை, பெண்களுக்கு இடம் இல்லை என்று போட்டி போட்டுக்கொண்டு மாற்றுக் கட்சியிலே இருப் பவர்கள் குறை சொல்கிறார்கள். ஆனால் ஆளும் போது கோட்டை விட்டிருப்பார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே இந்த கூட்டுறவுத் துறையிலே பெண்களுக்கும், அரிசனங்களுக்கும் உரிய பாதுகாப்பு கொடுக்கவேண்டும். இந்த நாட்டு மண்ணில் உள்ள எல்லோரும் சரிசமம் என்று சொல்லக்கூடிய வகையில் அந்தஸ்தை அவர்களுக்குத் தரக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கு முன்வரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தேர்தலை நடத்துவதற்கு முன்பே தேர்தலில் வாக்களிக்க கூடியவர்களின் மொத்த பட்டியலை நீங்கள் வாங்க வேண்டும். தில்லு முல்லு எங்கே என்றால் இந்தக் கூட்டுறவுத் துறையிலேதான் வரும். ஏதோ பினாமி, ஏதோ டிஃபால்டர் என்பதெல்லாம் இந்த கூட்டுறவுத்துறையிலேதான் வரும். கடந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை வைத்துப் பார்க்கிறபோது இப்போது இதனை நல்லமுறையில் நிர்வகித்து நிறைவேற்றக் கூடிய மிகப் பெரிய பொறுப்பினை ஏற்றிருக்கிற அமைச்சர் அவர்கள் சிறந்த முறையில் நிர்வகித்து வருவதை நான் பாராட்டுகிறேன். புரட்சித் தலைவர் அரசு போட்டிருக்கிற பல்வேறு திட்டங்கள் ஏழைகளையும், எளியவர்களையும், இல்லாதவர் களையும் பாதுகாக்கக்கூடிய வகையில்தான் அமைந்திருக்கின்றன. எனவே அந்த வகையில் பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது ஒரு சில கருத்துக்களைச் சொன் னார்கள். மெஜாரிட்டிதான் தீர்மானிக்குமா என்றெல்லாம் கேட்டார்கள். மக்கள்தான் மெஜாரிட்டியை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்தவர்கள் மக்கள்

என்பதால் அந்த மக்களுக்காகச் சேவை செய்யவேண்டும். அப்படி சேவை செய்வோம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி நாங்கள் தீர்மானங்களை நிறைவேற்றுகிறோம். அது உங்களுக்கு இல்லை என்று சொன்னால் அதாவது அடுத்த வீட்டிலே இருப்பவள் ஆண் பிள்ளை பெற்றால் எதிர்த்த வீட்டிலே இருப்பவள் இடித்துக் கொண்டு சாவது என்றால் அது எந்த வகையிலே நியாயம் என்பதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. யார் எங்களுக்கு இந்த உரிமையைக் கொடுத்திருக்கிறார்களோ, எந்த உணர்வின் அடிப்படையில் இந்த உரிமையை எங்களிடத்தில் ஒப்படைத்தார்களோ அந்த மக்களின், அந்த உணர்வை பிரதிபலிக்கிற வகையில் சட்டமும், திட்டமும் இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் சூசகமாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று சொன்னார்கள். கூட்டுறவுத்துறை என்பது ப்யூரிட்டன் என்ற வகையிலே இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். அப்படி ப்யூரிட்டன் என்று சொல்வதெல்லாம் ஊருக்கு உதவுபவர்கள் சொல்லக்கூடியது அல்ல. எனவே ப்யூரிட்டன் என்பது கூட சரியாக வராது. மழை பெய்கிறது என்று சொன்னால் அந்த மழைத்தண்ணீர் மண்ணிலே விழுந்தால் தான் நல்ல தண்ணீராக மாறும், சுவை நீராக மாறும். அதன் பின்னர்தான் அதன்மூலம் புல், பூண்டு முளைக்கும். அது மண்ணிலே விழவில்லை என்றால் மக்களுக்கு உதவாததாகத்தான் இருக்கும். கூட்டுறவுத்துறை மிகத் தலைசிறந்த அமைப்பு முறை என்பதை எண்ணிப்பார்த்து. ஏற்கெனவே நடைபெற்ற, நடந்த ஆட்சியில் ஏற்பட்ட கேவலங்களையும், அவலங்களையும் அகற்றக் கூடிய வகையில் நல்ல திட்டத்தை உருவாக்கி நாம் கொண்டுவர வேண்டும். அதுவரையில் இந்தத் தனி அதிகாரிகள் இருக்க வேண்டும் என்று சொல்கிற அதே நேரத்தில் அந்தத் தனி அதிகாரிகளையும் கூட கண்காணிக்கக்கூடிய வகையில் கண் காணிப்புக் குழு, ஆலோசனைக் குழு போன்றவற்றை அமைக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வணங்கி விரும்பி கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் பேசும் போது அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொள்ளலாம். ஆகவே அதை நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு. கு. சுப்பராயன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்ட அந்த நம்பிக்கையை நான் பாராட்டு கிறேன். ஆனால் அதேநேரத்தில் எதிர் தரப்பிலேயும் அது பற்றி அவநம்பிக்கை இருப்பதால் பத்தாண்டுக்காலமாக இருந்து வரும் அந்த தனி அதிகாரிகளின் பணிகளைப் பற்றி ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க ஆளும் கட்சி தயாரா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை உறுப்பினர் சொல்ல முடியாது. உறுப்பினரிடம் கேட்டு உபயோகமில்லை. அமைச்சர்தான் சொல்ல வேண்டும். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அத்துணை பேரும் தங்களுக்கே உரிய பாணியில் இங்கே பேசினார்கள். அத்துணை பேரும் பேசினாலும் ஒரு கருத்தை மட்டும் முக்கியமாக வைத்துப் பேசினார்கள். அந்த தனி அதிகாரிகளுடைய பதவி நீட்டிப்புக் காலம் இனிமேல் வருகிற ஆண்டில் தொடர்ந்து இருக்கக்கூடாது என்ற அந்தக் கருத்தின் அடிப்படையில்தான் பேசினார்கள். இதை மாண்புமிகு உறுப்பினர் சித்தனாக இருந்தாலும் சரி, மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதியாக இருந்தாலும் சரி எல்லோரும் இந்த மைய கருத்தையே அடிப்படையாக வைத்து, அந்த தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடாது என்று பேசினார்கள்.

இந்தக் கருத்திலே எங்களுடைய அரசாங்கத்திற்கும் மாண்பு மிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் மாறுபட்ட கருத்து கிடை யாது என்பதை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். போன தடவை இந்தத் தனி அதிகாரிகள் நீட்டிப்புச் சட்ட முன் வடிவு கொண்டு வந்தபோது அப்போது சொன்னார்கள், பஞ்சாயத்து தேர்தலை சந்திப்பதற்கு பயந்துக் கொண்டுதான், இப்படி எல்லா வற்றிலும் தனி அதிகாரிகள் பதவியை நீட்டிக்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், எங்கள் முதலமைச்சரைப் பொறுத்தவரையில், இதற் கெல்லாம் லாப நஷ்டங்களை கணக்கிடுகிற அந்தச் சூழ்நிலையில் இல்லை. நாட்டு மக்களுக்கு எது நல்லதாக இருக்குமோ, அதைச் செய்ய வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தோடு தான் எங்கள் முதலமைச்சர் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தனி அதிகாரிகளுடைய

(திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். [1986 ஏப்ரல் 2
இராமச்சந்திரன்)

நீடிப்பு அவசியமா என்று சொன்னால், மிக வேகமாக அவர்களை எல்லாம் படிப்படியாக குறைத்து வருவது நல்லது என்றுதான் அரசாங்கமும் கருதுகிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையில் எவ்வளவு வேகமாக இந்தத் தேர்தலைக் கொண்டு வர முடியுமோ அப்படிக் கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நிச்சயமாக இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதை இந்த அரசாங்கத்தின் சார்பாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்லிய நேரத்தில் சொன்னார்கள், இந்தச் சட்டம் கொண்டு வருவதிலே ஏன் அவசரம்? அச்சத்தின் காரணமாக வேகவேகமாக இந்தச் சட்டத்தை ஆய்வுக்கு கொண்டு வந்திருக்கிறீர்களே என்று சொன்னார்கள். இதில் அச்சத்திற்கு அவசியமே இல்லை. சட்ட வரையறைக்குள் உட்பட்டுத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, இந்தச் சட்டமுன் வடிவினைக் கொண்டு வருவதில் எங்களுக்கு எந்தவித அச்சமும் இல்லை, என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் கால நீட்டிப்பு ஒரு வருட காலத்திற்கு இப்போது கேட்கப்படுகிறது என்றாலும், எவ்வளவு வேகமாக அந்தத் தேர்தலைக் கொண்டு வர முடியுமோ அப்படிக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களே பேசும்போது சொன்னார்கள். இந்த அரசு அதிகாரிகள் எவ்வளவு திறமையானவர்கள் நல்லவர்கள், நாம் சொன்னால் செய்வார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படி அரசு அலுவலர்களைப் பாராட்டியமைக்காக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தேர்தலை வேக வேகமாக கொண்டுவர தேவையான நடவடிக்கைகளை அரசு நிச்சயமாக எடுக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால் மக்களின் பிரதிநிதிகள் அந்தப் பொறுப்புகளை அலங்கரிக்கிற நேரத்தில்தான் தவறுகள் குறைய முடியும். அப்போது தவறுகளே நடக்காது என்று சொல்லமுடியாது. தவறுகளை குறைக்க முடியும். இப்போதும் தவறுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. பொதுமக்களின் பிரதிநிதிகள் இருந்து, அதில் தவறுகள் ஏற்பட்டது என்று சொன்னால், ரோட்டிலே போகிறபோது, மக்கள் அவர்களை ஏளனம் செய்வார்கள். அந்த அச்ச உணர்வு அவர்களுக்கு இருக்கும் என்ற காரணத்தினால்தான், பொதுமக்களின் பிரதிநிதிகள் இவற்றை அலங்கரிக்க வேண்டும் என்ற உணர்வு எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய நல்ல கருத்துக்களை எல்லாம் ஏற்றுக் கொண்டு, மிக வேகமாக இந்த கூட்டுறவு இயக்கங்கள் தேர்தலைச் சந்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1986 ஏப்ரல் 2] திரு. கே. கே. எஸ். எஸ். ஆர்.
இராமச்சந்திரன்)

ஏறத்தாழ 25 ஆயிரம் கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அந்த 25 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்களிலும் தவறுகளே நடக்கவில்லை என்று சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. தவறுகள் நடைபெற்றிருக்கலாம். அப்படி தவறுகள் நடந்திருப்பதைச் சுட்டிக் காட்டினால் நிச்சயமாக அந்த தவறுகள் களையப்படும். அந்தத் தவறுகளைச் செய்தவர்கள் மீது, அவர்கள் எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகத்தான் பொது மக்கள் எங்களை ஆளுகின்ற பொறுப்பிலே கொண்டு வந்து அமர்த்தியிருக்கிறார்கள். தவறுகளை சுட்டிக் காட்டி களையச் செய்வதற்கு நீங்கள் உதவியாக இருக்க வேண்டும் என்றுதான் உங்களை எதிர் வரிசையிலே கொண்டு வந்து உட்கார்த்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே தவறுகள் நடக்கிறது என்று சுட்டிக்காட்டினால் நிச்சயமாக தவற்றிற்கு காரணமானவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுப்போம்; அதிலே எந்த விதமான மாறுபட்ட கருத்தும் உறுப்பினர்களுக்கு வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிகாரிகளை எல்லாம் நாங்கள் அப்பாயின்ட் செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழககாரர்கள் அவர்களைப் போட்டிருக்கலாம். காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அவர்களைப் போட்டிருக்கலாம், ஏதோ எங்கள் கட்சிக்கு வேண்டிய அதிகாரிகளைப் போட்டு, அவர்கள் அங்கே உட்கார்ந்துக் கொண்டு தவறுகள் செய்வதை நாங்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று யாரும் தயவுசெய்து கருத தேவையில்லை. ஆகவே எங்கேனும் தவறுகள் நடக்கிறது என்று, சுட்டிக் காட்டினால் சஸ்பென்ட் செய்வது போன்ற கடுமையான நடவடிக்கைகளைக் கூட இந்த அரசாங்கம் எடுக்கத் தயாராக இருக்கிறது, தயங்காது என்பதை மட்டும் பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் தனி அதிகாரிகளை நீட்டிப்பது கடைசி தடவையாக இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு வேண்டிய முயற்சியை எடுக்கிறோம். நிச்சயமாக இந்த ஓராண்டு காலத்திற்குள்ளாக தேர்தல் நடத்துவதற்கு வேண்டிய நவடிக்கைகளை எடுப்போம் என்பதைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மரியாதைக்குரிய உறுப்பினர் சிந்தன் அவர்கள் பேசுகிறபோது அனுதாபத்தோடு பேசினோம் என்று சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதிர் அணியாக இருந்தாலும் கூட எங்கள் மீது இந்த அரசாங்கத்தின் மீது பழைய பாசம் இன்னும் வைத்திருப்பதைக் கண்டு உள்ளபடியே பாராட்டுகிறோம். அடுத்தபடியாக மாண்புமிகு சிந்தன் அவர்கள் சொல்கிறபோது லட்சக்கணக்கான உறுப்பினர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

நாங்கள் அந்த முயற்சியை நிச்சயமாக எடுத்துக்கொள்வோம். முந்தைய காலத்தில் உறுப்பினர்களாக இல்லாதவர்கள்கூட தலைவர் பதவிக்கு வந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக்கழக ஆட்சிக்காலத்தில் தலைவர் பதவிக்கு வந்தவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இல்லாதவர்கள்கூட வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை குறைத்துக்கொண்டு உறுப்பினர்களாக இருப்பவர்கள்தான் தலைவராக வரவேண்டுமென்ற வகையில் புதிய சட்டத்தை வகுத்திருக்கிறோம். நாங்கள் நினைத்தால்கூட, அரசாங்கம் நினைத்தால்கூட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னால் தனிஅதிகாரிகள் சட்டத்தை நீட்டிக்கக்கூடாது என்று கடுமையாக வார்த்தையை கூட சேர்த்திருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில் மக்களுடைய நன்மையைக் கருதி வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் உணர்வோடு இருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் மீனாட்சிசுந்தரம் அவர்கள் பாரதி கமிஷன் ரிப்போர்ட்டை வைக்கவில்லையென்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் பழைய ரெக்கார்டை தேடிக்கண்டுபிடிப்பது எவ்வளவு சிரமம் என்பது உங்களுக்கு தெரிந்ததுதான். அந்த ரெக்கார்டுகளை எல்லாம் தேடி ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. உங்களுக்கு தெரியாதது இல்லை. பழைய கணக்கை பில்புக்கை எடுத்துப் பார்க்க வேண்டுமென்றால் எங்களுக்கே வயதாகிவிடும் போலிருக்கிறது. அதற்கென்று தனியாக ஒரு கண்ணாடியைப் போட்டுக்கொண்டால் தான் சரியாக இருக்கும் போலிருக்கிறது. அந்த அளவிற்கு நிலைமை இருக்கிறது. 2 வருடம், 4 வருடம் ஆகிவிட்டாலே கார்பன் காப்பியெல்லாம் மோசமாகிவிடுகிறது. ஆகவே பாரதி கமிஷனில் இருக்கிற தவறுகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். அது முடிந்த பிறகு அதனை வைப்போம் என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சமரசம் அவர்கள் பேசியபோது பெண்களுக்கும் அரிசன மக்களுக்கும் முன்னுரிமை வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களின் நல்ல யோசனையே முடிந்த அளவிற்கு பெண்களுக்கும் அரிசனப் பெருங்குடி மக்களுக்கும் உதவிகளைக் செய்யவேண்டுமென்று எங்களுக்கு கடுமையாக உத்தரவிட்டிருக்கிறார்கள். கடன் போன்ற வசதிகளைச் செய்கிற நேரத்தில் இந்த இருதரப்பினருக்கும் வேண்டிய சலுகைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்த இரு தரப்பினருக்கும் அதிக அளவிற்கு சலுகைகளைச் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை





மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வருங்காலத்தில் இன்னும் அதிகமாக சலுகைகளை அவர்களுக்கு செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில் மக்கள் பிரதிநிதிகள் கூட்டுறவுத் துறையில் வரவேண்டுமென்ற கருத்தில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. நீங்கள் வேகமாகச் செய்ய வேண்டுமென்ற உணர்வோடு இருக்கிறீர்கள். நாங்கள் அரசாங்கத்தின் பொறுப்பிலே இருக்கிறதால் அதில் ஒருசில சிக்கல்கள் இருக்கின்றன. அவற்றை சரிசெய்து விதிகளை வேகமாக அமல்படுத்துவதில் நிச்சயமாக செய்யவேண்டிய பணிகளைச் செய்வோம் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். ஆகவே இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

திரு. என். எல். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முக்கியமான விளக்கத்தைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். விதிகளைச் செய்வதில் கால அவகாசம் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். என்ன விதிகள், ஏன் காலதாமதம் என்பதைக் குறித்து சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் பேசுகிறபோது விரைவிலே தேர்தல் நடத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம் தேர்தலை நடத்த தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு உறுதியைப் பெற விரும்புகிறேன். 3 மாதம் அல்லது 6 மாத காலத்திற்குள்ளாக நிச்சயமாக தேர்தல் நடைபெறுமென்று ஒரு அஷ்யூரன்சை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு கொடுக்க முடியுமா? அல்லது குறைந்தபட்சம் இன்னொருமுறை இந்த பதவி நீடிப்பு வராது என்கிற உறுதியை அவர்கள் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே, எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, விதிகளை அறிமுகப் படுத்துவதில் ஏன் தாமதம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இன்றைக்கு கூட்டுறவுத் துறையென்று ஒரே பெயரில் இருந்தாலும் கூட இந்த துறையினுள்ளே இயங்குபவர்களாக 12 பேர்கள் இருக்கிறார்கள். துணை மாநில இயக்குநர் தனியாக இருக்கிறார்கள். மீன்வள இயக்குநர் தனியாக இருக்கிறார்கள். தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தனியாக இருக்கிறார்கள், கிராம நல இயக்குநர் தனியாக இருக்கிறார்கள், கைத்தறி இயக்குநர் தனியாக இருக்கிறார்கள். பால் வள ஆணையர் தனியாக

இருக்கிறார்கள். வீட்டுவசதிச் சங்க இயக்குநர் தனியாக இருக்கிறார்கள், சர்க்கரை பொருள் இயக்குநர் தனியாக இருக்கிறார்கள். வேளாண்மைப் பொறியியல் பணித் துறை தனியாக இருக்கிறது. பூமிதான வாரியத் தலைவர் தனியாக இருக்கிறார்கள். எண்ணெய் வித்துத் துறை இயக்குநர் தனியாக இருக்கிறார்கள். சமூகநலத்துறை தனியாக இருக்கிறது. இப்படி நிறைய துறைகள் கூட்டுறவுத்துறையின் கீழ் வருகிறபோது, ஒவ்வொரு துறைக்கும் ஏற்றாற்போல விதிகளிலே திருத்தத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதை நாங்களாக செய்ய முடியாது. ஒவ்வொரு துறையிலிருந்தும் திருத்தங்கள் வந்தவுடன் அவைகள் சட்டத்துறைக்கு அனுப்பப்படுகின்றன. சட்டத்துறை அதைப் பார்த்து எங்களுக்கு அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரே துறையாக இருந்தால், இதை எப்போதோ முடித்து இருக்கலாம். பல துறைகள் இதிலே இருக்கின்ற காரணத்தால் ஒவ்வொருவருடைய கருத்தையும் கேட்டு, அந்தத் திருத்தங்களிலே மாறுதல்களைச் செய்யவேண்டும் என்று சொல்லி, அதற்கேற்றாற்போல் நடைமுறைகளை மாற்றுவது என்று நாங்கள் பணிகளைச் செய்து வருகிறோம் என்றால், நல்ல சட்ட விதிகளைக் கொண்டு வரவேண்டும் என்ற முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டு இருக்கிறோம் என்பதுதான் இதிலேயிருந்து தெரிகிறது. எனவே இதிலே எந்த விதமான மாசோ அல்லது தெரியாமல் இதைச் செய்யக்கூடாது என்ற உணர்வோ எங்களுக்கு இல்லை. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். ஓர் ஆண்டுக்காலத்திற்குள்ளாக நிச்சயமாக தேர்தலை நடத்துவதற்கான வேலைகளை நிச்சயமாக நாங்கள் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பாரதி கமிஷனுடைய அறிக்கையினுடைய எழுத்துக்கள் பொடிசாக இருக்கிறது, படிப்பதற்கு சிரமமாக இருக்கிறது, திருத்தவேண்டியதை இன்னும் திருத்தவில்லை, எனவே திருத்திய பிறகு கொண்டுவரலாம் என்று சொன்னார்கள். எனவே ஒரு கமிஷனுடைய அறிக்கையை திருத்தி அவையிலே வைக்கிறோம் என்று சொல்வது சரியா? அல்லது திருத்துவதற்கு முன்னாலே இந்த அவையிலே வைக்கப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியதை தவறாக இங்கே சொல்லக்கூடாது. எப்படி தவறு நடந்திருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும். அப்போது இருந்தவர்கள்தான் நீங்கள். நாங்கள் தவறுகளைச் சரி பார்த்து, அதை நல்ல



முறையில் கொண்டு வரவேண்டும் என்றால், அதிலே எவ்வளவு சிரமங்கள் இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். பாரதி கமிஷனைப் பற்றி நான் சொன்னதை அவர்கள் தவறாக புரிந்து கொண்டார்கள். புரிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல், தங்களுக்குச் சாதமாக அந்த பதிலை எடுத்துக்கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: ''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 30/1986) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**5. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**

**கோரிக்கை எண். 35-நுகர் பொருள் வழங்கல்**

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 35-நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 145,23,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதி அரியநாயகிபுரம், மணல்விளை உதயநேரி ஆகிய கிராமங்களுக்கு நுகர்பொருள் வழங்க தனிக்கடை ஒன்று திறக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 35-நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற, ரூ. 145,23,45,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ. 35-க்கு உர டோக்கன் கொடுப்பதை மாற்றி ரூபாயாக கொடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 35-நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 145,23,45,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. ஜே. முகம்மது கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கந்தர்வகோட்டை அல்லது ஆதனகோட்டையில் புதிதாக ஒரு நவீன அரிசி ஆலை கட்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 145,23,45,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்''.

திரு. பொன்முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,45,23,45,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பு* மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. அதை நான் படித்ததாக ஏற்றுக்கொண்டு,

* 424-442ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



அவைக்குறிப்பில் ஏற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைச் சொன்னதற்குப் பிறகு என்னுடைய பதிலைச் சொல்கிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87ஆம் ஆண்டிற்கான நுகர் பொருள் வழங்கும் மானியத்தின் மீது சில வார்த்தைகளை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். 'தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்' என்று சொன்ன பாரதியினுடைய வாக்குக்கு இணங்க நம்முடைய நாட்டில் இருக்கின்ற எல்லா மக்களுக்கும் உணவு கொடுக்கவேண்டிய அவசியம் குறிப்பாக பட்டினியால் சாகக்கூடாது என்ற லட்சியத்துடன், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்கள் ஆனாலும் சரி அடித்தள மக்களாக இருந்தாலும் எல்லோருக்கும் சம வாய்ப்பு கொடுத்து உணவு கொடுத்து வாழவைக்கவேண்டியது அரசினுடைய கடமை என்ற முறையில் இன்றையதினம் அரசு உணவுத் துறையில் பல்வேறு சலுகைகளையும் பல்வேறு மானியங்களையும் கொடுத்து பெருமுயற்சி செய்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக சென்ற ஆண்டில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வெள்ளம், மழை, வறட்சி ஒரு பக்கம்; குறிப்பாக தமிழகத்திலே ஓரிரு இடங்களிலே மழை அதிகம் இருந்தாலும் குறிப்பாக அணைக்கட்டுகளிலே மன நிறைவு தருகின்ற அளவுக்கு தண்ணீரினுடைய அளவு இல்லாவிட்டாலும் குறிப்பாக நம்முடைய உற்பத்தி-நெல் உற்பத்தியாக இருந்தாலும், அரிசி உற்பத்தியாக இருந்தாலும் இப்படிப்பட்ட ஒரு உற்பத்திக்கு வழி செய்கின்ற அளவுக்கு மிக நல்லமுறையிலே இந்த உற்பத்தியை நடத்தியிருக்கிறது என்பதை நான் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலேயும் குறிப்பாக பொது விநியோகம்; ஏழை மக்களுக்கு எல்லாம் பல்வேறு வாய்ப்பு கொடுக்க வேண்டும், குறிப்பாக மைய அரசு தருகின்ற பிரத்யேகமாக வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அடித்தள மக்களுக்கும், வாங்கி சாப்பிடுகின்ற பல்வேறு உரிமங்களுக்காக உணவிலே பல்வேறு மானியங்களை கொடுத்த மைய அரசு மாநில அரசுக்கு பல்வேறு உதவிகளையும் செய்கின்றது. அதேபோல மாநில அரசை இத்தகைய விநியோக முறையிலே இந்தியாவிலேயே பாராட்டத்தக்க அளவுக்கு விநியோக முறை செய்திட வேண்டும். பொது விநியோக முறை, இந்தியாவிலே போட்ட முறை, அதிலும் குறிப்பாக காங்கிரஸ் பேரியக்க காலத்திலிருந்து இந்த கூட்டுறவு

முறையிலே சாதாரண நியாயவிலைக் கடைகளை இப்படிப்பட்ட முறையெல்லாம் இருக்கவேண்டும் என்ற லட்சியத்தோடு இருந்த காரணத்தினாலேதான் பொது வினியோக முறை தமிழகத்திலே ஒரு எடுத்துக்காட்டான முறையிலே இப்போது செய்து கொண்டு வருகிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஏறத்தாழ நம்முடைய வினியோக முறையில் 25,822 நியாய விலைக் கடைகள் இருப்பதாக கொள்கை குறிப்பிலே இப்போது சொல்லப்படுகிறது. மக்களுக்கு, அடித்தள மக்களுக்காக இருக்கின்ற இந்த வினியோகத் திட்டம், அரிஜன மக்களுக்காக இருக்கின்ற இந்த வினியோகத் திட்டம், இந்த எல்லா மக்களுக்காக பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், சாதாரணமாக நியாய விலைக்கடை என்பது, கிராமத்திலே இருக்கின்ற முக்கியமான கிராமத்திலே இருக்கிறது. சில கிராமங்களிலே, உங்களுக்கு நன்றாகத் தெரியும்; குக்கிராமங்களை எடுத்துக்கொள்வோமானால் அங்கே அரிஜன மக்கள் இருக்கின்றார்கள். அடித்தள மக்களிடத்திலே பொருளாதாரத்திலே நலிவுற்ற மக்கள் இருக்கிறார்கள். அங்கே சாதாரணமாக 400 கார்டு அல்லது 500 கார்டு என்றால் முன்னாடி வருகின்ற அந்தப்பகுதியிலே இருக்கின்ற சராசரி மக்கள்தான் வாங்கிக்கொள்கிறார்கள். ஆனால் அடித்தள மக்கள் போகின்ற நேரத்தில் அம்மக்களுக்குச் சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஆகவே அவைகள் கிடைப்பதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக நியாய விலைக் கடைகளிலே சொல்கிறார்கள், காலையிலிருந்து மாலை 7 மணி, 8 மணி வரை இருக்கவேண்டுமென்று, ஆனால் ஒரு சில இடங்களில் உள்ள நியாய விலைக் கடைகளில் ஆட்களே இருப்பது இல்லை. அடித்தள மக்கள் வாங்குகிற நேரத்திலே, பொருளாதாரத்திலே நலிவுற்ற மக்கள் வாங்குகிற நேரத்திலே அவர்களுக்கு சேரவேண்டிய அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை போன்றவை கிடைப்பதில் சில சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே அரசாங்கம் இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதே போன்று சமையல் எண்ணெய், பாம் ஆயில் சாதாரணமாக எல்லா மக்களுக்கும் கிடைக்கிறதா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். குறிப்பிட்ட சில இடங்களில், குறிப்பிட்ட சில சமுதாயத்தினர் தான் வாங்கிக்கொள்கிறார்களே தவிர, சமுதாயத்திலுள்ள அடித்தள மக்கள் கடையிலே போய் கேட்டால் அவர்களுக்கு இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே இதற்கெல்லாம், அரசாங்கம் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்காக, அடித்தள மக்களுக்காக, வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களுக்காக நியாய விலைக் கடைகளைத் திறப்பதன் மூலம் அவர்களுக்கு சமையல் எண்ணெய், அரிசி, சர்க்கரை போன்றவை கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும்,





சாதாரண மக்களுக்காக அவர்களுக்கென தனியாக பிரித்துக் கொடுக்கவேண்டுமென்பதையும் நான் திட்டவட்டமாக அரசுக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன்,

இதேபோன்று பல இடங்களில் நியாயவிலைக் கடைகள் இல்லை. சட்டமன்ற உறுப்பினர்களும், பல்வேறு துறைகளுக்குச் செல்கின்ற நேரத்திலே, 1000 கார்டுக்கு ஒரு நியாய விலைக் கடை என்று சொல்கிறார்கள். சாதாரணமாக 500 கார்டு அல்லது 600 கார்டுகள் இருந்தாலும் கூட அந்த இடத்திற்கும் மக்கள் இருக்கின்ற இடத்திற்கும் 4 கிலோ மீட்டரிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. தூரத்திலே கடைகள் இருப்பதால் அவர்களுக்கு பொருட்களை வாங்குவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரேரணையை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள்; தூரமும் அதிகமாக இருக்கிறது என்று. 1000 கார்டுக்கு என்று இருப்பதை 500 கார்டுகளாக சில பிரத்யேக இடங்களில் செய்யவேண்டும். இதற்கு அரசின் அனுமதிக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பிரேரணைகளை அனுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரேரணைகளை அரசு தயவு செய்து இதற்கு என்று பிரத்தியேகமாக பல்வேறு காரியங்களில் ஈடுபட்டு இருக்கிற இந்த நியாயவிலைக் கடைகளை அரிசன மக்கள் இருக்கின்ற இடத்திற்கும், வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கக்கும் மக்கள் இருக்கக்கூடிய இடத்திற்கும் ஓரளவுக்கு அதை பிரித்துக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒரு வாரத்தில் 3, 4 நாட்களுக்கு அந்த இடத்திற்குச் சென்று அங்கே இருக்கின்ற மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதற்கு வழி வகையை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய உணவு நிலைமைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு எதிர்பாராமல் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தால் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டன. சாதாரணமாக இந்தியாவில் பல்வேறு பொருட்களுக்கு உற்பத்திச் செலவு குறைவு. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நெல் உற்பத்திக்கு செலவு அதிகம். மத்திய அரசால் விலையை இன்றையதினம் நிர்ணயித்து இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நெல்லுக்கு உற்பத்திச் செலவு அதிகம். விலை குறைவாக இருக்கிறது. விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத விலை இருப்பதால் காவேரி டெல்டா பகுதியைப் பொறுத்தவரையில் ஏக போக கொள்முதலுக்கு 35 ரூபாய் இன்றைக்கு இடுபொருட்களுக்கு மானியமாக கொடுப்பதை நான் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். ஆக இப்படி இடுபொருட்கள் கொடுப்பது 31.3.86 வரை சம்பா பகுதிக்கு மட்டும் என்று அரசு சொல்லியிருக்கிறது. இந்தக் கூட்டத்

தொடரில் இதை நீட்டிக்கவேண்டும் என்று நாங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அதை நீட்டிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் குறுவை விவசாயிகளுக்கு சாதாரணமாக அந்த டி.பி. சென்டர்களிலே இந்த மாதிரியான உரங்கள் கிடைக்கவில்லை ஏதோ காலம் கடந்து போய்விட்டது என்று சொல்லுகிறார்கள். அதை எல்லாம் அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் சார்பில் இன்றைக்கு அரசுக்கு பல்வேறு கோரிக்கைகள் வந்து இருக்கின்றன. குறுவைப் பட்டத்தில் போடப்பட்ட அந்த விவசாயிகளுக்கு இடுபொருட்கள் கொடுக்கவில்லை என்று புகார்கள் இருக்கிறது. அதையும் நீட்டித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் பல ரீஜினல் அலுவலகங்களை கொண்டு இருக்கிறது. அந்த அலுவலகம் என்பது பல்வேறு இடங்களில் இருந்து கொண்டு இருக்கிறது. குறிப்பாக காவேரி டெல்டாப் பகுதியில் தஞ்சையில் அது அமைந்து இருக்கிறது. அது பெரிய ரீஜினல் அலுவலகமாக அமைந்து இருக்கிறது. இந்த சமுதாய மக்களுக்கு ஒருங்கிணைந்த முறையில் பல்வேறு திட்டத்தால் பல்வேறு காரியங்களை செய்ய வேண்டியிருப்பதால் அந்த தஞ்சையில் உள்ள அந்த ரீஜினல் ஆபீஸை வாணிபக் கழகமே அதை விலைக்கு வாங்கி அதை நல்லமுறையில் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாதாரணமாக ரீஜினல் ஆபீஸ் மூலமாக டி. பி. சென்டர் மூலமாக எல்லா இடங்களிலும் கொள்முதல் செய்கிறார்கள். குறுவை பட்டத்தில் என்றால் மழை இருக்கும். அப்படி மழை இருப்பதால் நல்லமுறையில் கொள்முதல் செய்யலாம். ஆகவே டி. பி. சென்டர்களை பல கிராமங்களில் கட்டவில்லை. ஆகவே அரசு இன்றைக்கு வாணிபக் கழகம் மூலம் டி. பி. சென்டர்களை எல்லா கிராமங்களிலும் கட்டவேண்டும்.

இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் இந்த ஆண்டு சில இடங்களில் கட்டப்போவதாக அறிவித்து இருக்கிறார்கள். இந்த நிதி போதாது. குறிப்பாக காவேரி டெல்டா பகுதியில் எல்லா இடங்களிலும் அது தஞ்சை மாவட்டமாக இருந்தாலும் தென் ஆற்காடு மாவட்டம் ஆக இருந்தாலும், இந்த டிஸ்ட்ரிக்ட் சென்டர்களை கட்டவேண்டும், ஏக போக கொள்முதலை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைவிட குறிப்பாக ஏழை விவசாய மக்கள் எல்லாம் கடன் வாங்கியிருக்கிறார்கள். இயற்கை சீற்றத்தால் இன்றைக்கு அவர்கள் கடனாளியாகி இருக்கிறார்கள். இந்த சட்டமன்றத்திலே ஆளும்கட்சி சார்பாகவும், எதிர்க்கட்சிகள் சார்பாகவும் பல்வேறு நிலையை இன்றைக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.



நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆயிரம் ரூபாய் கடன் வாங்கிய ஒருவன் இன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டிய கடனாளியாகி இருக்கிறான். அவர்களுக்கு ஒரு சலுகையை செய்யவேண்டும். இன்றைக்கு அரசு வரியாக இருந்தால் சாதாரண மக்களுக்கு அணாவாரி சர்டிபிகேட் வாங்கி சலுகை செய்கிறோமோ அதேபோல் தேசிய மைய வங்கியில் வாங்கியிருந்தாலும், கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியிருந்தாலும் அவன் இன்றைக்கு கடனாளி ஆகி இருக்கிறான். அந்த நிலையை மாற்றுவதற்கு அரசு நிச்சயமாக அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் இன்றைக்கு இயற்கைச் சீற்றத்தால் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன.

நம்முடைய சமுதாய மக்களுக்கு நம்மிடம் அரிசி இல்லாவிட்டாலும் மத்திய அரசின் குவியலில் இருந்து மாதம் ஏறத்தாழ 1 லட்சம் டன் அரிசியை நம் அரசு கொண்டு வருவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இன்றைக்கு நம்முடைய கொள்முதலை அபிவிருத்திச் செய்யவேண்டும்.

குறிப்பாக பல்வேறு இடங்களில் கிடங்குகளைக் கட்ட வேண்டும். அப்படி கட்டினால்தான் மக்களுக்கு நல்லமுறையில் நன்மை செய்யமுடியும். ஆங்காங்கு உற்பத்தி செய்கின்ற நெல்லை கொள்முதல் செய்து இவற்றில் வைக்க வாய்ப்பு ஏற்படும். இன்றைக்கு இந்த வாணிபக் கழகமே பல்வேறு இடங்களில் கொள்முதல் செய்து இருக்கின்ற அந்த நெல்லை அந்த சேமிப்புக் கிடங்குகளை அதிகமாக கட்டுவதற்கு நல்ல முறையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்பதை இந்தநேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

குறிப்பாக 6 நவீன அரிசி ஆலைகளை வாணிபக் கழகம் நடத்தி வருகிறது. கடந்த காலத்தில் மயிலாடுதுறையில் ஒரு நவீன அரிசி ஆலையை அமைப்பதாக கொள்கை குறிப்பிலே அரசு தெரிவித்திருக்கிறது. ஒரு அரிசி ஆலை போதாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற சூரக்கோட்டை என்ற ஊரில் ஒரு நவீன அரிசி ஆலையை அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரேரணையை அனுப்பியிருக்கிறார்கள். அரசு இதை நிச்சயமாக செய்திடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திய உணவுக் கார்ப்பரேஷன் 6 நவீன அரிசி ஆலைகளை நம்முடைய அரசுக்கு வழங்குவதாக இருக்கின்றார்கள். உடனடியாக நாம் அதை வாங்கினால் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்திட முடியும். முக்கியமாக அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு அமைப்பானது லாபம் தரத்தக்க அளவிற்கு ஒரு நிறுவனமாக இருக்கிறது என்றால், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், பல்வேறு வகைகளிலே லாபம் தரத் தக்க அளவிற்கு ஆண்டுக்காண்டு அதனுடைய விகிதாச்சாரத்தினுடைய அடிப்படையில், லாபம் தரத் தக்க வகையில் இந்த சேமிப்பு கிடங்கு சேமிப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கிடங்குகளை இன்னும் அதிக அளவில் நிறுவ, நிதி நிலையை விரிவுபடுத்தி, வெவ்வேறு இடங்களில், வங்கிகளின் மூலமாகவோ, அல்லது வேறு நிதி நிறுவனங்களின் மூலமாகவோ கடன் பெற்று சேமிப்புக் கிடங்குகளை நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில், ஒரு நல்ல கொள்கையாக இன்றைக்கு மத்திய அரசிலே இருக்கின்ற நல்ல அரிசியை வாங்கி ஏழை எளிய மக்களுக்கு நிச்சயமாக கொடுக்க வேண்டும்.

பொது விநியோக முறையில் தமிழகம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது, மேலும் திகழவேண்டுமென்பதற்காக, அமைச்சராக இருந்தாலும், அதிகாரிகளாக இருந்தாலும், அங்கேயிருக்கின்ற குறைபாடுகளை, நிச்சயமாக, உடனடியாக தீர்க்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன்.

*திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் இதயத் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு தமிழகத்திலே உணவு நிலை குறித்து கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து, ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு கிடைத்த வாய்ப்பிற்கு உங்களுக்கு நன்றி கூறி, ஒரு சில கருத்துக்களைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

உணவுத் துறை என்றாலே அதிலே அதிகமாக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வது, தஞ்சை மாவட்டம் என்பதை தமிழகம் அறியும். ஆகவே இன்றைக்கு அனுமதித்திருப்பதிலே கூட, மேலத் தஞ்சைக்காக மாண்புமிகு சிவஞானம் அவர்களுக்கும், கீழ்த் தஞ்சையைப் பொறுத்தவரையில் இங்கே எனக்கும்



வாய்ப்பு கொடுத்து, தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற இழுக்கைப் போக்கவேண்டுமென்ற வகையிலே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு எடுத்து வந்த பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி இங்கே கூறுவது என்னுடைய கடமையாகும்.

'Tanjore is the granery of South India' என்று ஆங்கிலத்திலே சொல்வார்கள். தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் தஞ்சை மாவட்டம் என்று சொல்வார்கள். ஆனால் அந்த தஞ்சை மாவட்டத்திற்கு, அந்த களஞ்சியத்திற்கு களங்கம் ஏற்பட்டதற்கான காரணம், 1974-லே காவிரி ஒப்பந்தம் கைவிடப்பட்டதன் விளைவு தான். அதை மாற்றியமைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்கள் நல்ல திட்டங்களை, தமிழகத்திற்கு, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்கு உணவுத் துறையின் மூலமாக கொண்டுவந்து தந்திருக்கிறார்கள்.

என்னுடைய தொகுதி தஞ்சை மாவட்டத்தினுடைய கடைக்கோடிப் பகுதியாக இருந்தாலும், அங்கே என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற எருக்கூரில், மிகப் பெரிய நவீன அரிசி ஆலையை வழங்கி, வருகின்ற ஜூன் மாதம் வேலை முடிவுற்று, அதற்கு நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வந்து திறக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, அவர் வர இருக்கின்றார் என்று சொல்லி, அதற்காக புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை, அந்தத் தொகுதி மக்களின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே சொல்கிறபோது வள்ளுவப் பெருந்தகை எப்படி சிறந்த அரசு இருக்கவேண்டுமென்ற இலக்கணத்தைக் காட்டினார் என்பதைச் சொன்ன நேரத்திலே,

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு'

என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னார்கள். அப்படியென்றால், பொருள் வருகின்ற வழியைக் கண்டுபிடித்தும், அங்கு வேறு வழியிலே பொருளை வரவழைத்தும், வரவழைத்த பொருளை முறையாக காத்து வைத்தலும், காத்த பொருளை சரியான முறையிலே விநியோகம் செய்வதும் தான் ஒரு சிறந்த அரசு என்று வள்ளுவன் சொல்லியிருக்கிறார். அதனுடைய விளைவு தான் நேற்றையதினம் உணவுப் பொருள், இயற்றல் என்று சொல்லக் கூடிய அளவிலே வேளாண்மைத் துறையை மானியக் கோரிக்கைகளிலே முதலாவதாக வைத்திருக்கிறார்கள். 'ஈட்டலும்' என்று சொல்கிறபோது வணிகவரித் துறைமீதான விவாதம் வருகிற 5ஆம் தேதி நடைபெற இருக்கிறது. 'காத்தலும் காத்த வகுத்தலும்'

எடுத்துக் கொண்டாலும் ஆதரவற்றோருக்குக் கொடுக்கின்ற விநியோகத்தை எடுத்துக் கொண்டாலும் அரசினுடைய நியாய விலைக் கடைகளிலே உள்ள விநியோகத்தை எடுத்துக் கொண்டாலும் 1¾ அல்லது 2 ரூபாய்க்கு மேலே போகாத அளவுக்கு விநியோகம் இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறோம். அந்த அளவுக்கு பல்வேறு இடங்களிலே இந்த உணவுத் துறை எந்த அளவுக்கு சிறப்பாக நடைபெறுகிறது என்பதை நாம் அறிவோம். இரண்டு தினங்களுக்கு முன்னாலே எங்கள் மாவட்டத்திலிருந்து சில வியாபாரிகள் வந்திருந்தார்கள். கொஞ்சம் லெவி தருகிறோம் தலைவரிடம் சொல்லி அனுமதியை கேட்டுத் தாருங்கள் என்று சொன்னார்கள். தலைவருடைய நிலைமை என்ன என்பதை நான் புரிந்துகொண்டேன். மக்களுக்காக சரியான முறையிலே உணவைச் சேர்த்துக்கொண்ட பிறகுதான் மற்ற எந்தக் காரியத்தையும் செய்யமுடியும் அதைத்தவிர வேறு யாரும் எந்த முயற்சியிலும் ஈடுபடக்கூடாது என்று சொன்னேன். இப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுகிற இப்படிப்பட்ட தலைவரையும் நான் பார்க்கிறேன். அதே நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலே எங்களுடைய பகுதியாகிய கொள்ளிடத்திலே டோல் கேட்டிலிருந்து ஆயிரக்கணக்கான லாரிகள் 1972-லோ 1973-லோ ஒரு இரவு அதாவது 9, 10 மணி நேரத்திலே தஞ்சை மாவட்டத்திலிருந்த நெல்லையெல்லாம் எடுத்துக்கொண்டு வெளியேறியதை எண்ணிப் பார்க்கிறேன். இப்படி ஏழை எளிய மக்களுக்காக நல்ல திட்டங்களை சீரான விநியோகத்தை முறையாக நேர்மையாக அரிசி கிடைக்கக்கூடிய வகையிலே செய்திருப்பதற்காக நாம் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நான் சொன்னது எல்லாம் அரசு கவனத்தில் இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே உணவுத்துறை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியிலே எவ்வளவு சீராக சிறப்பாகச் செயல்படுகிறது என்பதைப் பார்க்கவேண்டும், இந்தத் துறையை யாரும் குறை சொல்ல முடியாது. மற்றவற்றில் வேண்டுமானால் ஏதோ சொல்லலாம். மத்திய அரசு கொடுக்கிற விலை ஒன்று. மாநில அரசு போனஸாக பூச்சி மருந்துக்குக் கொடுக்கிற விலை ஒன்று. அன்றாடம் காய்ச்சிகளுக்கு சாதாரண மக்களுக்கு அவர்கள் சாப்பிடுகிற அரிசியின் விலை நேருக்கு மாறாக மிகக் குறைவாக இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கு, தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் இல்லாததால் எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றித் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-20)

இப்பொழுது என்னுடைய பகுதியிலே பெரும்பாலான நிலங்கள் விளையவில்லை, தண்ணீர் இல்லாததால் எல்லாம் தரிசாகக் கிடக்கின்றன, இதனால் மக்களுக்குச் சரியான வருவாய் இல்லை. வேலைக்கு உணவுத் திட்டம், வறட்சி நிவாரணம் என்று சில திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அனுமதி பெறுவதற்காகக் கொண்டு வந்தார்கள். ஆனால், அதற்குள்ளாக வெள்ளம் வந்துவிட்டது. எனவே, வெள்ள நிவாரணப் பணிகள் நடந்து கொண்டு வருகின்றன. ஆகவே. வறட்சி நிவாரணப் பணியாக அரிசியோ அல்லது கோதுமையோ வழங்கினால் அந்தப் பகுதி மக்களுக்கு வேலையும் செய்வார்கள், ஓரளவுக்கு மன நிறைவோடு பொருட்களைப் பெற்றுக்கொள்வார்கள், கிடைக்கின்ற பணத்தைக்கொண்டு அவர்களுக்குத் தேவையான அரிசியையோ, பொருட்களையோ அமுதத்திலேயோ அல்லது சொசைட்டியிலேயோ பெறுவார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலையைத் தமிழக முதல்வரவர்கள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் மத்திய அரசு விலையை நிர்ணயித்துக் கொடுத்தாலும்கூட, மாநில அரசு மலைவாழ் மக்கள் நலன் கருதி, மத்திய அரசு நிர்ணயித்த விலை கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் 45 காசு அல்லது 1 ரூபாய் 60 காசு என்று இருந்தாலும்கூட, புரட்சித் தலைவரவர்களின் அரசு 1 ரூபாய் 55 காசு என்று அரிசியைக் கொடுக்க வேண்டும், 1 ரூபாய் 40 காசு என்று கோதுமையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி அந்தப் பகுதி மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

கடைசியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தஞ்சை மாவட்டத்தினைத் தமிழக முதல்வரவர்கள் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்க இருக்கிறார்கள். அதிலே நாகை ஒரு மாவட்டத்தின் தலைநகரமாகவோ அல்லது திருவாரூரை ஒரு மாவட்டத்தின் தலைநகரமாகவோ ஆக்கினால், இந்த இரண்டு இடங்களுக்கும் இடையில் இருக்கின்ற தூரம் 15 மைல்கள்தான். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், மயிலாடுதுறை கீழத் தஞ்சை மாவட்டத்தின் கடைசி பகுதியாக இருக்கிறது. நான் சீர்காழியில் இருந்து புறப்பட்டு தஞ்சைக்குச் செல்வது என்றால் 100 கிலோ மீட்டர் செல்ல வேண்டும்; நாகப்பட்டினத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் 75 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும்; திருவாரூருக்குச் செல்ல வேண்டுமென்றால் 70 கிலோ மீட்டர் செல்லவேண்டும். ஆகவே, மயிலாடுதுறையை மையமாக வைத்தால் கும்பகோணத்திலிருந்து வருகின்றவர்கள் 30, 32 கிலோமீட்டர் தூரம் வந்தால் போதும்; தரங்கம்பாடியிலிருந்து வருபவர்கள்—கீழத் தஞ்சையின் கடைசிப் பகுதியாக உள்ள அந்த இடத்திலிருந்து வருபவர்கள் 30 கிலோ மீட்டர் தூரம் வந்தால் போதும். கொள்ளிடம் கடைசிப் பகுதி—அந்தப் பகுதியிலிருந்து



செல்பவர்கள் 30 கிலோ மீட்டர் செல்ல வேண்டும்; அதைப் போல தெற்கே இருக்கின்ற நன்னிலத்தின் கடைசிப் பகுதியிலே இருந்து வருகின்றவர்கள் 20 அல்லது 25 அல்லது 30 கிலோ மீட்டர் தூரம் வந்தால் போதும். ஆகவே, மயிலாடுதுறை இப்படி மையமாக இருக்கிறது. வள்ளியம்மை மாவட்டம் என்று அமைக்கப் போவதாக ஏற்கனவே மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் அரசு அறிவித்திருப்பதால், வள்ளியம்மை பிறந்த தில்லையாடியும் மிகவும் அருகாமையிலே இருப்பதால் மயிலாடுதுறையை மாவட்டத் தலைநகராக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

கடைசியாக ஒரே ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 73 பேர் தற்காலிகமாகப் பணி செய்து வருகிறார்கள். அவர்களுக்குப் பணி பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. 1972ஆம் ஆண்டுக்கு முன்னால் வந்தவர்கள் பணிப் பாதுகாப்பு சொடுக்கப்பட்டு நிரந்தரமாக ஆக்கப்பட்டிருக்கிறார்தள். ஆனால் 1978-ஆம் ஆண்டுக்குப் பிறகு வந்தவர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லை. ஆகவே, அவர்களுடைய பணியை முறைப்படுத்தும் நிலையில், சர்வீஸ் ரெகுலரைசேஷன் செய்து கொடுத்தல் புரட்சித் தலைவரவர்களின் அரசின் கடமை என்று கூறி, அதைச் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நுகர் பொருள் வழங்கல் பற்றிய 35-வது எண் மானியக் கோரிக்கையின்கீழ் 1,45,23,45,000-க்கு மேற்படாத செலவினத்திற்கு ஒப்புதல் கேட்டு மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையின்மீது நாங்கள் கொடுத்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஓரிரண்டு கருத்துக்களை சொல்லலாம் என்று கருதுகிறேன்.

சிவில் சப்ளைஸைப் பொறுத்தவரையில் 1967ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்தில், சென்னை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் உள்ள மொத்த இருப்பு, சென்னை நகரத்திற்கு அளித்தால் ஒரு நாளைக்குக்கூடப் போதாது என்ற நிலைதான் இருந்தது. இப்படி அன்றைக்கு சென்னை நகரத்திற்கே போதாத நிலையில் உணவு நிலமை இருந்த காலத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, ஏறத்தாழ ஓராண்டுக் காலத்திற்குள்ளாகவே குறுவையை அதிகமாகப் பெருக்கி அது தன்னிறைவு பெறுகின்ற அளவிற்கு— தன்னுடைய இன்னுயிர் பிரிவதற்கு முன்—நிறைவேற்றி இருக்கிறார்கள். அதற்குப் பிறகும் உணவு நிலைமை மிகச் சிறப்பாக இருந்தது.

(திரு. மா. மணிமாறன் [1986 ஏப்ரல் 2

1975-76-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி இந்தத் தமிழ்நாட்டில் கலைக்கப்பட்டவுடனே, அன்றைக்கிருந்த இருப்பை எண்ணிப் பார்க்கிற நேரத்தில், போதுமான இருப்பாகத் தான் இருந்திருக்கிறது: 1975-76 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்தது 8.80 இலட்சம் டன்னாகும், விநியோகம் 3.9 இலட்சம் டன்னாகும்; இருப்பு 5 இலட்சம் டன் அன்றைக்கு வைத்திருந்தார்கள். அதைத் தொடர்ந்து 1976-77-ல் கவர்னருக்கு ஆலோசகர்களாக வந்த, திரு. தாவே, திரு. சுப்பிரமணியம் போன்றவர்கள், உணவு நிலைமை பற்றி அறிக்கை கொடுத்த நேரத்தில் திரு. சுப்பிரமணியம் அறிக்கை கொடுத்தார்கள். தமிழ்நாட்டில் மிக நன்றாக உணவு நிலைமை இருக்கிறது என்று அன்றைக்குக் கூட அறிக்கை கொடுத்தார்கள். திரு. சுப்பிரமணியம், திரு. தாவே இருந்தபோது, கொள்முதல் செய்தது 1.5 இலட்சம் டன். 6.7 இலட்சம் டன் விநியோகம் செய்திருக்கிறார்கள். எனவே, ஆலோசகர்கள் அமர்த்தப்பட்ட நேரத்திலே கூட உணவு நிலைமை, தமிழகத்தைப் பொறுத்தவரை, சிறப்பாக இருக்க கலைஞர் ஆட்சி காரணமாக இருந்திருக்கிறது. அதற்குப் பின்னாலே, உணவு நிலைமை சிறப்பாக இருந்திருக்கிறதே தவிர, உணவு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய நிலைமையை அதற்குப் பின்னாலே பார்க்கிற நேரத்திலே, மெத்த வருத்தப்படக்கூடியதாக இருந்து இருக்கிறது.

1974-75, 1975-76-ல் உற்பத்தி செய்த நெல்லுக்கு ரூ. 15 போனசாக வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல்; அன்றைக்கு நெல் 4 ரகமாகப் பிரிக்கப்பட்டு, மோட்டா ரகம், நடுத்தர ரகம், சன்ன ரகம், மிகச் சன்ன ரகம் என்று பிரிக்கப்பட்டு, அன்றைக்குப் போனஸ் வழங்கப்பட்டு வந்தது. ஆனால், 10-3-1976-க்குப் பின்னாலே, 4 ரகமாக இருந்ததை 3 ரகமாக ஆக்கி விட்டார்கள், அதிலே கூட போனசை நிறுத்தி விட்டார்கள். கலைஞரால் ஏறத்தாழ, 33,000 டன் அரிசி கர்நாடகா, கேரளம் போன்ற மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிற நிலைமையை நம்மாலே, 1973-74 ஆம் ஆண்டுகளிலே பார்க்க முடிகிறது. இப்படி உணவுத் துறையில் அன்றைக்கு, சிவில் சப்ளைஸ் செலவு செய்ததைப் பார்க்கிற நேரத்தில், 1974-75-ல் ரூ. 1.2 இலட்சமாக இருந்தது. 1975-76-ல் அது ரூ. 1.6 இலட்சமாக இருந்தது. இன்னும் தள்ளிப் போனால், 1980-81-லே கூட, ரூ. 17.3 இலட்சமாகத்தான் அன்றைக்கு இருந்தது. ஆனால், 1982-83-லேதான் ரூ. 51 கோடியாகப் பெருக்கம் எடுத்திருக்கிறது. அதற்குப் பின்னாலே, 1983-84-லே அது ரூ. 95.9 கோடியாக மாற்றம் எடுத்திருக்கிறது. இன்னும் அடுத்த ஆண்டிலே பார்த்தால், மிக அதிகமாக ரூ.187.4 கோடியாக பெருக்கம் எடுத்திருக்கிறது. இப்படி ஏற்றங்கள் எடுத்திருப்பதற்குக் காரணமாக இருந்ததை நாமெல்லாம் நன்றாக அறிவோம்.



1986 ஏப்ரல் 2] (திரு. மா. மணிமாறன்)

இன்றைக்குக்கூட உணவு நிலைமை இப்படியிருந்தாலும், நம்முடைய உணவுத் துறை அமைச்சர் மிக சந்தோஷமாக இருக்கிறார். அப்படி இருப்பதற்கு, அன்றைக்குப் போதுமான உணவுப் பொருள் கையிலே இருப்பது ஒன்றும் காரணம். அது மட்டுமல்லாமல், இதற்கு முன்னாலே அந்தத் துறையிலே செலவு செய்யப்பட்ட தொகையை விட, இன்றைக்கு ஏறத்தாழ ரூ. 145 கோடிக்கு மேலாக வரவு இல்லாமல் செலவு செய்வதன் காரணமாக, அந்தத் துறையிலே இருக்கிற இழப்புகளை ஈடு செய்வதன் காரணமாக, வெளிச்சந்தையிலே வாங்குவதற்கு வாய்ப்பு பெற்றிருப்பதன் காரணமாக, இன்றைக்குத் தொல்லையில்லாமல் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நெல்லை விற்கின்ற நேரத்திலே விவசாயிகள், 1977-ல் எமர்ஜன்சி காலத்தில் நீக்கப்பட்ட போனசை வழங்கும்படி கேட்டார்கள். அப்படி கேட்ட நேரத்தில், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள், முன்பு கொடுத்த போனசை விட, கூடுதலாகக் கொடுப்போம் என்று சொன்னார்கள். 3 ஆண்டுக் காலம் வரை எந்த போனசும் கொடுக்கப்படாமல் தடைப்பட்டது. அதற்குப் பின்னாலே போனஸ் கொடுத்தார்கள். ஏறத்தாழ ரூ. 35 திடீரென்று போனசாகக் கொடுக்கப்பட்டது, மிகப் பாராட்டப்பட வேண்டிய பணிதான். 1983-84-லே, இந்த மாநிலத்திலே உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, வெளி மாநிலங்களிலே வாங்குகின்ற நிலைமை ஏற்பட்டதற்குப் பின்னாலே, மிக அதிக விலையைப் பார்த்துதான் போனசை அறிவித்தார்கள். அதுவும் எப்படி அறிவிக்கப்பட்டது என்று சொன்னால், 1983-84-லே வெளி இடங்களிலே வாங்கியிருக்கிறோம். ஆந்திரப் பிரதேசத்திலே வாங்கிய அரிசி, ஏறத்தாழ 1 குவிண்டால் ரூ. 360, ரூ.367-க்கு வாங்கியிருக்கிறோம். டெல்லி, பஞ்சாப், மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து ஒரு குவிண்டால் ரூ. 385-க்கு வாங்கியிருக்கிறோம். ஆந்திராவிலே ரூ. 367, உத்திரப் பிரதேசத்திலே ரூ. 290-க்கு வாங்கியிருக்கிறோம். ஆனால் பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே, ரூ. 360, ரூ. 367-க்கு வாங்கியிருக்கிறோம். அப்படி வாங்கியிருக்கிற இடங்களைப் பார்க்கிற நேரத்தில், அதுவும் வேடிக்கையாக இருக்கிறது. ஆந்திரா மாநிலத்திலே ஆலையாளர்கள் என்ற பெயராலே சங்கம் ஒன்றை ஏற்படுத்தி, அந்த ஆலையாளர்களிடத்திலே யிருந்து ரூ. 367-க்கு வாங்கியிருக்கிறது. அதே நேரத்தில், ஆலையாளர்களிடத்திலே—ஆந்திராவிலேயிருந்துதான் ரூ. 360-க்கு வாங்கியிருக்கிறார்கள். இப்படி வாங்கியிருக்கின்ற, அதன் நிலைமைகளை நாம் பார்த்தால், 1983-84-லே என்றால் நீங்கள் கொடுத்த ரூ. 122-யும், மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலையையும் நீங்கள் கூட்டிக் கொடுத்த ரூ. 35-யும் சேர்த்தால், ரூ. 157 தான் ஒரு குவிண்டாலுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குவிண்டால் அரிசிக்குச் செலவுக் கணக்கு கையல்லாம் சேர்த்தால், கிட்டத்தட்ட ரூ. 250 ஆகும். $1\frac{1}{2}$ குவிண்டால்

நெல்லை அரிசி ஆக்கினால், ஏறத்தாழ் 1 குவிண்டால் அரிசி சேரும் என்று சொல்கிறார்கள். 1½ குவிண்டால் நெல் ரூ. 235. சேவை ஏறக்குறைய ரூ. 15 சேர்த்தால் கூட ரூ. 250 தான் ஒரு குவிண்டால் அரிசியின் விலை. இங்கே, நீங்கள் ரூ. 35 கூடக் கொடுத்து, இறுதியிலே உங்களுக்குக் கிடைக்கயிருப்பது ரூ. 250. ஆனால், வெளி மாநிலங்களில் சென்று ரூ. 360, ரூ. 367-க்கு வாங்கினீர்கள். இப்படியெல்லாம் ரூ. 130, ரூ. 110-க்கு மேல் அதிகமாக விலை கொடுத்து வாங்குகிற இந்த அரசு, தஞ்சை மாவட்டத்திலே சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற, வெள்ளம், புயல், வறட்சி போன்ற நிலைமைகளாலே பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு அந்த போனசைத் தொடர்ந்து கொடுப்பதிலே தயக்கம் காட்டுவது, விவசாயிகளிடத்திலே மெத்த வருத்தத்தைத் தருவதாக இருக்கிறது. அந்த வருத்தத்தை உங்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

(முற்பகல் 11-30)

அந்த வருத்தத்திற்குரிய காரணம் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மழைக் காலத்தில் குறுவை கெடுகிறது. குறுவை சாகுபடி செய்த பின்னால், அறுவடைக் காலத்தில் வெள்ளம் அடித்துச் செல்கிறது; விளைவை எடுக்க முடியாமல் சேதம் ஏற்படுகிறது. அதற்காக ஒரு சிறப்புச்சாலை திட்டத்தை 50 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்ற வேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியிருக்கிறேன். ஒரேயடியாக 50 கோடி ரூபாய் ஒதுக்க முடியாவிட்டாலும், ஒரு பேஸ்ட் புரோகிராமாகப் பாட்டு, ஆண்டுக்கு 5 கோடி ரூபாய் அல்லது 6 கோடி ரூபாய் என்று ஒதுக்கி, ஆர்.எல்.இ.ஜி.பி., ஐ,ஆர்.டி.பி. திட்டங்கள் மூலமாகவாவது ஒதுக்கி, அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் கீழ்த்தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் ஏற்படுகின்ற சேதத்தை நிச்சயமாகத் தவிர்க்க முடியும். இப்போது சாலைகள் சரியாக இல்லை. எல்லா சாலைகளையும் தார் சாலைகளாகச் செப்பனிட்டால் அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை உலர்த்துவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் வசதி ஏற்படும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் இதுபற்றி தெரிவித்திருக்கிறேன் இந்த ஆண்டு நிதி ஒதுக்காவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவக்களிடம் சொல்லி, இந்தத் திட்டத்தை சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1983-84 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 95 கோடி ரூபாய் திடீரென்று செலவு அதிகரித்திருப்பதற்கான காரணத்தைப் பார்க்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் பெயரில் இருக்கிற சத்துணவுத் திட்டம்தான் காரணம் என்று தெரிகிறது. சத்துணவுத் திட்டம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.





நல்ல திட்டம், ஏழை எளிய மக்களுக்கு சாப்பாடு போட வேண்டியதுதான். ஆனால் செய்யப்படுகிற செலவு முறையாக இல்லை, தவறு நடக்கிறது என்பதுதான் எங்களுடைய குறை. 1983-84 ஆம் ஆண்டில் செப்டம்பர், அக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டத்திலுள்ள 35 வட்டாரங்களில், 25 வட்டாரங்களை ஆய்வு செய்திருக்கிறார். இரண்டு மாதத்து கணக்கை 25 வட்டாரங்களில் மட்டும் ஆய்வு செய்ததில் 79 முதல் 931 மாணவர்கள் வரையில் தவறாக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருப்பது கண்டுபிக்கப்பட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவரே சொல்லியிருக்கிறார். இப்படி அதிகமான எண்ணிக்கையில் கணக்கைக்காட்டி, பொய் கணக்கு எழுதி, அதன் மூலமாக அதிகமாகக் காட்டப்பட்ட கணக்கு 4,756 என்று சொல்லியிருக்கிறார். அவர்களுக்கும் சேர்த்து உணவு அளித்த மொத்தச் செலவு 8.94 இலட்சம். இதுகூட பாதி மாவட்ட கணக்குத்தான் இருக்கிற எல்லா வட்டாரங்களிலும் கணக்கு பார்த்தால் இதைவிட இரண்டு மடங்காகும். இரண்டு மாத காலத்திலேயே இந்த அளவுக்கு தவறு நடந்திருக்கிறது என்றால் ஆண்டு முழுவதற்கும் பார்த்தால் இன்னும் பல மடங்காக இருக்கும். தமிழ்நாடு முழுவதும் இப்படி கணக்கெடுத்துப் பார்த்தால் 15 கோடி ரூபாய்க்கான தவறு ஏற்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிக்கிறது. ஆடிட்டர் ஜெனரல் அவர்களும் இந்தத் தவறை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆடிட்டர் ஜெனரலுடைய அறிக்கை நமக்கும் கிடைத்திருக்கிறது. சத்துணவு என்ற பெயரால் இப்படிப்பட்ட தவறுகள் நடக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்து இந்த செலவு அந்த ஆண்டின் கூடுதல் செலவாகிறது.

சத்துணவுத் திட்டத்திற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமும்செலவு ஏற்படுகிறது. கூட்டுறவுத் துறையிலும் இதற்கு செலவுஏற்படுகிறது. ஆனால் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு ஏற்படுகிற செலவுகளை எல்லாம் அரசாங்கம் கொடுக்கிறது, கணக்கை சரிசெய்துவிடுகிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில் ஏற்படுகின்ற செலவுக்கு பணம் கொடுப்பதில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் வழங்கப்படுகின்ற பொருள்கள் எல்லாம்கூட்டுறவுத் துறையிலும் வழங்கப்படுகின்றன. அதே நேரத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளமும் அதிகமாக இருக்கிறது. கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு ஊதியம் குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. இப்படி இந்த இரண்டு துறைகளிலும் பெருத்த வேறுபாடு இருக்கிறது. கிட்டதட்ட 145 கோடி ரூபாயில் 11 கோடி ரூபாய்தான் எஸ்டாபிளிஷ்மெண்டுக்காகவும் கூட்டுறவு துறைகளுக்கும் செலவிடப்படுகிறது. மொத்தத்தில் பார்க்கும்போது உணவுத் துறையில் 134 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் கூட்டுறவுத்துறை புறக்கணிக்கப்படுகிறது ஆனால் உணவுப்பொருள் வினியோகத்தில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பங்குகொள்கின்ற அளவுக்கு கூட்டுறவுத் துறையும் தன்னுடைய பங்கைச் செலுத்து

கிறது. அந்த ஊழியர்களுக்கு சம்பளமும் குறைவாக இருக்கிறது
வழங்கப்படுகின்ற பொருள்களை வாங்குவதற்கு தேவை
யான மூலதனமும் இல்லை. அதனால் நிலைமை என்ன என்று
பார்க்கிறபோது கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்கு சரியான
முறையிலே அத்தியாவசியப் பொருள்களை வாங்கி முறையாக
விநியோகம் செய்ய முடியவில்லை, அந்த மக்களுக்கு உணவுப்
பொருள்கள் சரியாகக் கிடைக்கவில்லை.

அது மட்டுமல்ல. இன்றைக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்ப
ரேஷனில் தவறுகள் அதிகமாக நடக்கின்றன. குறிப்பாக,
எடைகற்களே சரியாக இல்லை, தராசுத்தட்டு சரியாக
இல்லை என்று சொல்கிறார்கள். தராசுத் தட்டில்
பொருள் வைக்கின்ற எதிர் பக்கத்தில் 'மாக்னட்' வைத்துவிடுவ
தாகவும் அதனால் அந்தத் தட்டு மேலே தூக்கி, குறைவான
பொருள் வழங்கப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. பொருளை
வாங்குகிறவர்களுக்கு எடை குறைவாக இருக்கிறது. தவறு செய்
புவர்கள்மீது நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. காரணம்
இன்றைக்கு அந்த ஊழியர்களுடைய சங்கங்கள் அரசியல்வாதிகள்
கைக்கு மாறிக்கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 145 கோடி
ரூபாய் செலவு செய்கின்ற இந்தத் துறையில் உண்மையாக ஊழியர்
கள் சங்கத்தை தலைமை தாங்கி நடத்த முடியவில்லை. தனியார்
உள்ளே வருகிறார்கள். அரசியல்வாதிகள் கை ஓங்குகிறது. உண்
மையான ஊழியர்களுக்கு இடமில்லை. அரசியல்வாதிகள் புகுந்து
விடுகின்ற காரணத்தால் தவறு செய்கின்ற அதிகாரிகளைத் தண்
டிக்க முடியவில்லை, அதிகாரிகள் தவறு செய்கின்ற ஊழியர்களை
கேட்க முடியவில்லை. இன்றைக்கு சங்கம் வைத்திருக்கிறவர்கள்
கடைக்கு 20 ரூபாய் தினம் வசூலித்து, தினம் தினம் அவர்களுக்கு
கல்லா கட்டக்கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதனால்
தான் உண்மையான ஊழியர்களுக்கு இடமில்லை, தவறு செய்கிறவர்
களைக் கண்டிக்க முடியவில்லை. இப்படிப்பட்ட சங்கங்கள்
இருக்கிற காரணத்தாலேதான் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு
இருக்கிறது. அதிகமான ஊழல் உருவாகி அதை அரசியல்வாதிகள்
பங்கிட்டுக்கொள்கிற நிலைமையிலே இன்றைக்கு மாற்றப்படு
கிறது. இப்படி அரசியல்வாதிகள் தவறு செய்வதைக் கண்டிப்ப
தற்காகத்தான் இதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சியிலே இருந்தபோது ஒரு சட்டத்தை உருவாக்கி
வைத்திருந்தார்கள். அந்தச் சட்டத்தைக் கூட இன்றைய அரசு
வந்ததற்குப் பிறகு நீக்கிவிட்டது. அந்தச் சட்டம் நீக்கப்படுகிற
நேரத்தில் கூட குறிப்பிட்டுக் காட்டினார்கள். இப்படி அரசியல்
வாதிகள் செய்கிற தவறுகளைக் கண்டிப்பதற்கும், விசாரிப்பதற்கும்
பாதுகாப்பாக இருந்த முறையை ரத்து செய்ததன் காரணமாக
பின்னர் எப்படி அரசியல்வாதிகளைக் கண்டிக்கப் போகிறீர்கள்,
எப்படி தண்டிக்கப் போகிறீர்கள் என்று கேட்ட நேரத்தில் இந்தச்
சட்டம் தவறு, எனவே புதிய சட்டம் வரும் என்று சொன்னார்கள்.
அப்படி புதிய சட்டம் வருகின்ற வரையிலாவது இந்தச் சட்டம்
இருக்கவேண்டும் என்று கேட்ட நேரத்திலும் கூட அதை ஒத்து



கொள்ளாமல் முரட்டுத்தனமாக அந்தச் சட்டத்தைக் காலாவதி
பாகச் செய்தீர்கள். அப்படி அது காலாவதியாகச் செய்ததற்குப்
பிறகு இப்போது நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்....
(மணியடிக்கப்பெற்றது).

திரு. எல்ல. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே
நுகர்பொருள் வழங்கல் பற்றிய 35-வது எண் மானியக் கோரிக்
கையின்கீழ் 145 கோடியே 23 இலட்சத்து 45 ஆயிரத்திற்கு
மேற்படாத தொகையை வழங்கவேண்டும் என்று மாண்புமிகு
உணவுத்துறை அமைச்சர் கொண்டுவந்து இருக்கின்ற இந்தத்
தீர்மானத்திற்கு ஆதரவாக என்னுடைய கருத்துக்களை எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தில் கிட்டத்தட்ட 20 ஆயிரத்திற்கு
மேற்பட்ட நியாய விலைக் கடைகள் மூலம் நுகர்பொருள் வாணிப
கழகம் சிறப்பான முறையில் விநியோக முறையைச் செய்து
வருவதை நாடு அறியும். குறிப்பாகச் சொல்லப்போனால் பசி
வந்தால் பத்தும் பறந்துவிடும் என்பது பழமொழி. அதற்கு
இலக்கான அரசுகளும் இரண்டு உண்டு. 20 ஆண்டுகளுக்கு
முன்னால் அரிசி காரணமாக மக்கள் ஒரு அரசை நிராகரித்த
தையும் அதற்குப் பின்னால் அதிக விலை கொடுத்து அதாவது
10 ரூபாய் கொடுத்து அரிசி வாங்கவேண்டிய சூழ்நிலை உருவான
காரணத்தால் இன்னொரு அரசு வீழ்ந்ததையும் நாம் கண்டு
இருக்கிறோம்.

அதேநேரத்தில் இன்றைய புரட்சித் தலைவரின் அரசு
20,000 நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி, அதிலும் ஆயிரம்
கார்டுகளுக்கு, அதாவது ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு ஒரு
கடை என்ற வகையில் திறந்து சீரான முறையில் விநியோகம்
செய்து வருவதை அனைவரும் பாராட்டுகிறார்கள். அதேநேரத்
தில் சிலபல குறைகளும் ஆங்காங்கு இருக்கத்தான் செய்கின்றன
என்பதை அனைவரும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். நமது
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்குப்
புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள நகரசபை உறுப்பினர்
களையும், நகரசபைத் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்
களையும் உள்ளடக்கிய வகையில், ஆங்காங்கே கண்காணிப்புக்
குழுக்களை அமைப்பதன் மூலம் இந்த விநியோகத்தில் நடக்கின்ற
சில தவறுகளைத் திருத்த நமக்கு வாய்ப்பு உண்டு. குறிப்பாக
முதல் வாரத்தில் எல்லா பொருட்களையும் வாங்கிக்கொள்ளலாம்
என்று இன்றையதினம் உத்தரவிட்டு இருக்கிறோம். அதன் படி
முதல் வாரத்திலே ஒரு குடும்பத்திலே உள்ள தாய்க்குலத்தைச்
சேர்ந்தவர்கள் அங்கே போய் பொருட்களை வாங்குகிறபோது
அந்த முதல் வாரத்தில் இரண்டு பொருட்கள் மட்டுமே கிடைக்கக்
கூடிய சூழ்நிலையில் மற்ற பொருட்கள் இல்லாத நிலையை

இருக்கிறது. அந்தப் பொருட்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஞாயிற்றுக் கிழமையில் அந்தப் பொருளை வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் அப்போது வாங்கி உபயோகிப் போர் போக முடியாத சூழ்நிலை பெரும்பாலான நேரத்தில் உருவாகிறது. அதற்கப்புறம் அந்தப் பொருளை அந்த மாதக் கடைசியில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார். கிராமங்களிலே உள்ள விவகாரங்களைப் பற்றி எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும், ஆளும் கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நகரத்தில் ஒரு பிரத்தியேகமான நிலைமை உள்ளதை நாமெல்லாம் எண்ணிப்பார்க்கவேண்டும். தாமாஷாக ஒன்று சொல்வார்கள். அதாவது முதல் வாரம் என்பது சம்பளம் வாங்கியவர்களின் கரன்சி வீக் என்றும், இரண்டாவது வாரம் சில்வர் வீக் என்றும் மூன்றாவது வாரம் காப்பர் வீக் என்றும் நான்காவது வாரம் பாப்பர் வீக் என்றும் சொல்லக்கூடிய வகையில் நகரத்தில் உள்ள மக்கள் பணத்தைச் செலவு செய்வார்கள்.

(முற்பகல் 11.40)

அப்படி கடைசி வாரம் பாப்பர் வீக் என்று ஆகிற நேரத்திலே இந்தப் பிரச்னை எழுகிறது. ஆகவே, கடைசி வாரத்தில் சென்று நீங்கள் பொருள்களை வாங்கிக் கொள்ளுங்கள் என்று போட்டுள்ள உத்தரவை மறு பரிசீலித்து, வேறு மாதிரியாக மக்களுக்கு எல்லைறைக்கும் பொருள்கள் கிடைக்கக் கூடிய அளவுக்கு இந்தத் துறையில் திருத்தம் செய்ய வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்கு வருவாய் உள்ளவர்களுக்கு அரிசி இல்லை என்ற நிலை இருக்கிறது. சென்னையிலே இன்றையதினம் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கு கிறார்கள் என்றால் அவர்கள் நிலை உயர்ந்திருக்கிறது என்ற நிலையில் நாம் பார்க்க முடியாது. காரணம் ஆயிரம் ரூபாய் என்பது அவ்வளவு சர்வ சாதாரணமாக இன்றையதினம் நாட்டிலே செலவழிக்கப்படுகிறது. ஆகவே ஆயிரம் ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் அரிசி விநியோகம் கொடுப் பதற்கு மாண்புமிகு உணவு துறை அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு விநியோக கூடத்திலே இருந்து சம்பந்தப்பட்ட கடைக்கு லாரிகள் மூலமாக ஏற்றிச் செல்லப்படுகிற பொருள்கள், இடையிலே உள்ள சில நபர்களால் களவாடி விடப்படுகிறது என்பதை தயவுசெய்து, அந்தத் துறை தொடர்புள்ள அதிகாரி கள்—இங்கே வந்திருப்பவர்கள்—அவசியம் கண்காணிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





அது மட்டும் அல்ல அந்தத் துறையைச் சார்ந்தவர்கள்,
அந்தத் துறையை கண்காணிப்பதற்கு ஒரு உஷார் பிரிவு போலீஸ்
பிரிவிலே வைத்து இருப்பதாகக் கூட நான் அறிவேன். அவர்
களுக்கு என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட ஒரு விவரத்தை
எடுத்துச் சொல்லிய நேரத்தில் 3 நாட்கள் கழித்துத்தான் அவர்கள்
வந்தார்கள். அப்படி வருகின்ற நேரத்திற்குள்ளாக, இருக்கின்ற
கணக்குகளை எல்லாம் மாற்றுகிறார்கள். ஒரு புகார் வருகிறது
என்று தெரிந்தவுடன் அதில் சம்பந்தப்பட்ட சிலர், பலர் என்று
சொல்லவில்லை, சிலர் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, ஒவ்வொரு வாரமும் இந்த நியாய
விலைக் கடைகளில் வாங்கப்படாத பொருள்களை எல்லாம்
திருட்டுத் தனமாக வேறு வெளிக் கடைகளில் விற்பனை செய்
வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதை நாங்கள் கண்கூடாக காண்கிற
நேரத்திலே, சில இடங்களில் கையும் களவுமாக பிடித்து,
அங்கேயே கண்டித்தும் விட்டு விடுகிறோம். ஆனால் சில இடங்
களில் தப்பித்துக் கொள்கிறார்கள். இன்னும் சில இடங்களில்
நாள்தோறும் அந்த திருட்டுத்தனம் இரவிலே நடந்து வருகின்றது.
ஆகவே ஒவ்வொரு நாளும் இரவிலே அந்த உஷார் பிரிவைச்
சேர்ந்தவர்கள், பல பகுதிகளுக்கும் சென்று திடீர் சோதனைகளை
நடத்தினால் அன்றி, இந்த விநியோகக் கடைகளில் உள்ள
குறைகளை களைந்தால் அன்றி, அந்தக் குறைகளை களைய
சர்க்காரால் நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம், சர்க்கா
ரால் ஒரு கொள்கையை கொண்டு வரத்தான் முடியுமே தவிர,
ஒவ்வொன்றிற்கும் நேரடியாக செல்லமுடியாது. அத்தோடு
அவற்றை செயல்படுத்துவதும் நடைமுறைப்படுத்துவதும், அதி
காரிகளின் பணிகளாக ஆகிவிடுகிறது என்பதை இந்த நேரத்திலே
சொல்லி, இந்த பொது விநியோக முறை இன்னும் சீராக்கப்படு
மானால் அரசின் சார்பாக கொடுக்கப்படுகின்ற எத்தனையோ
மானியங்கள் ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் போய் சேரும்
என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
கூட்டுறவுத் துறை மூலமாக அமைக்கப்பட்ட கடையானாலும் சரி,
சிவில் சப்ளைஸ் கடையானாலும் சரி, அவர்களோடு இரவோடு
இரவாக உறவாடக் கூடிய திருடர்களைக் கண்காணிப்பதற்கும்,
கண்டு பிடித்து தண்டிப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை
மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தீவிரமாக சிந்தித்து
நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே அன்
போடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நாட்டிலே பல பிரச்னைகள் எழுகின்றன.
பிரச்னைகளே இல்லாமல் இல்லை. பிரச்னைகளே இல்லை
என்றால் தான் அதிசயமாக பார்க்க வேண்டுமே தவிர பிரச்னை
இருக்கிறது என்றால் அதில் அதிசயமே இல்லை. அப்படி
பிரச்னைகள் மலிந்திருக்கின்ற சூழ்நிலையில், இன்றைய சமுதாயத்
தில், பிரச்னைகள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டிருப்பதும்,

(திரு. எல்ல. இராசமாணிக்கம்) [1986 ஏப்ரல் 2

இருக்கிறது. அந்தப் பொருட்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஞாயிற்றுக் கிழமையில் அந்தப் பொருளை வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் அப்போது வாங்கி உபயோகிப்போர் போக முடியாத சூழ்நிலை பெரும்பாலான நேரத்தில் உருவாகிறது. அதற்கப்புறம் அந்தப் பொருளை அந்த மாதக் கடைசியில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார். கிராமங்களிலே உள்ள விவகாரங்களைப் பற்றி எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும், ஆளும் கட்சியிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களும் குறைகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நகரத்தில் ஒரு பிரத்தியேகமான நிலைமை உள்ளதை நாமெல்லாம் எண்ணிப்பார்க்கவேண்டும். தாமாஷாக ஒன்று சொல்வார்கள். அதாவது முதல் வாரம் என்பது சம்பளம் வாங்கியவர்களின் கரன்சி வீக் என்றும், இரண்டாவது வாரம் சில்வர் வீக் என்றும் மூன்றாவது வாரம் காப்பர் வீக் என்றும் நான்காவது வாரம் பாப்பர் வீக் என்றும் சொல்லக்கூடிய வகையில் நகரத்தில் உள்ள மக்கள் பணத்தைச் செலவு செய்வார்கள்.

(முற்பகல் 11.40)

அப்படி கடைசி வாரம் பாப்பர் வீக் என்று ஆகிற நேரத்திலே இந்தப் பிரச்னை எழுகிறது. ஆகவே கடைசி வாரத்தில் சென்று நீங்கள் பொருள்களை வாங்கிக் கொள்ளுங்கள் என்று போட்டுள்ள உத்தரவை மறு பரிசீலித்து, வேறு மாதிரியாக மக்களுக்கு எல்லைறைக்கும் பொருள்கள் கிடைக்கக் கூடிய அளவுக்கு இந்தத் துறையில் திருத்தம் செய்ய வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்கு வருவாய் உள்ளவர்களுக்கு அரிசி இல்லை என்ற நிலை இருக்கிறது. சென்னையிலே இன்றையதினம் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள் என்றால் அவர்கள் நிலை உயர்ந்திருக்கிறது என்ற நிலையில் நாம் பார்க்க முடியாது. காரணம் ஆயிரம் ரூபாய் என்பது அவ்வளவு சர்வ சாதாரணமாக இன்றையதினம் நாட்டிலே செலவழிக்கப்படுகிறது. ஆகவே ஆயிரம் ரூபாய்க்கு மேலே சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் அரிசி வினியோகம் கொடுப்பதற்கு மாண்புமிகு உணவு துறை அமைச்சர் அவர்கள், புரட்சித் தலைவர் அவர்களோடு கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு வினியோக கூடத்திலே இருந்து சம்பந்தப்பட்ட கடைக்கு லாரிகள் மூலமாக ஏற்றிச் செல்லப்படுகிற பொருள்கள், இடையிலே உள்ள சில நபர்களால் களவாடி விடப்படுகிறது என்பதை தயவுசெய்து, அந்தத் துறை தொடர்புள்ள அதிகாரிகள்—இங்கே வந்திருப்பவர்கள்—அவசியம் கண்காணிக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 2] (திரு. எல்ல. இராசமாணிக்கம்)

அது மட்டும் அல்ல அந்தத் துறையைச் சார்ந்தவர்கள், அந்தத் துறையை கண்காணிப்பதற்கு ஒரு உஷார் பிரிவு போலீஸ் பிரிவிலே வைத்து இருப்பதாகக் கூட நான் அறிவேன். அவர்களுக்கு என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட ஒரு விவரத்தை எடுத்துச் சொல்லிய நேரத்தில் 3 நாட்கள் கழித்துத்தான் அவர்கள் வந்தார்கள். அப்படி வருகின்ற நேரத்திற்குள்ளாக, இருக்கின்ற கணக்குகளை எல்லாம் மாற்றுகிறார்கள். ஒரு புகார் வருகிறது என்று தெரிந்தவுடன் அதில் சம்பந்தப்பட்ட சிலர், பலர் என்று சொல்லவில்லை, சிலர் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. ஒவ்வொரு வாரமும் இந்த நியாய விலைக் கடைகளில் வாங்கப்படாத பொருள்களை எல்லாம் திருட்டுத் தனமாக வேறு வெளிக் கடைகளில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்வதை நாங்கள் கண்கூடாக காண்கிற நேரத்திலே, சில இடங்களில் கையும் களவுமாக பிடித்து, அங்கேயே கண்டித்தும் விட்டு விடுகிறோம். ஆனால் சில இடங்களில் தப்பித்துக் கொள்கிறார்கள். இன்னும் சில இடங்களில் நாள்தோறும் அந்த திருட்டுத்தனம் இரவிலே நடந்து வருகின்றது. ஆகவே ஒவ்வொரு நாளும் இரவிலே அந்த உஷார் பிரிவைச் சேர்ந்தவர்கள், பல பகுதிகளுக்கும் சென்று திடீர் சோதனைகளை நடத்தினால் அன்றி, இந்த வினியோகக் கடைகளில் உள்ள குறைகளை களைந்தால் அன்றி, அந்தக் குறைகளை களைய சர்க்காரால் நடவடிக்கை எடுக்க முடியாது. காரணம், சர்க்காரால் ஒரு கொள்கையை கொண்டு வரத்தான் முடியுமே தவிர, ஒவ்வொன்றிற்கும் நேரடியாக செல்லமுடியாது. அத்தோடு அவற்றை செயல்படுத்துவதும் நடைமுறைப்படுத்துவதும், அதிகாரிகளின் பணிகளாக ஆகிவிடுகிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இந்த பொது வினியோக முறை இன்னும் சீராக்கப்படுமானால் அரசின் சார்பாக கொடுக்கப்படுகின்ற எத்தனையோ மானியங்கள் ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் போய் சேரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுத் துறை மூலமாக அமைக்கப்பட்ட கடையானாலும் சரி, சிவில் சப்ளைஸ் கடையானாலும் சரி, அவர்களோடு இரவோடு இரவாக உறவாடக் கூடிய திருடர்களைக் கண்காணிப்பதற்கும், கண்டு பிடித்து தண்டிப்பதற்கும் வேண்டிய முயற்சிகளை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் தீவிரமாக சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது நாட்டிலே பல பிரச்னைகள் எழுகின்றன. பிரச்னைகளே இல்லாமல் இல்லை. பிரச்னைகளே இல்லை என்றால் தான் அதிசயமாக பார்க்க வேண்டுமே தவிர பிரச்னை இருக்கிறது என்றால் அதில் அதிசயமே இல்லை. அப்படி பிரச்னைகள் மலிந்திருக்கின்ற சூழ்நிலையில், இன்றைய சமுதாயத்தில், பிரச்னைகள் மேலும் மேலும் வளர்ந்துக் கொண்டிருப்பதும்,

அதன் காரணமாக கோர்ட்டிற்கு போவதும் சர்வ சாதாரணமாகி விட்டது. இங்கே பேசிய சில நண்பர்கள் தஞ்சை மாவட்டத்துப் பிரச்னைகளைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நகர்ப்புறத்திலேதான் இந்தப் பிரச்னை அதிகம். சாதாரணமாக ஒருவரை தவறு செய்தார் என்று வேலையிலிருந்து சஸ்பெண்ட் செய்கிறோம் என்று உத்தர விட்டாலும் கூட, உடனடியாக கோர்ட்டிற்கு போய் அதற்கு ஒரு தடை வாங்கி விடுகிறார்கள். அதற்கு பிறகு இன்னொருவர் வருகிறார்கள். அந்தத் தடையை நீக்கியவுடன் அவர்கள் வருகிற காலத்தில் எந்த அதிகாரி ஒரு நபர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கின்றாரோ அவருக்கு எதிரிலேயே இந்தத் தடையுத்தரவை வாங்கி கொடுத்துவிட்டு ஏகவசனத்தில் பேசுவதும், அவரைக் கண்டித்து பல தீர்மானங்கள் போடுவதும் இன்றையதினம் காண்கிற காட்சிகளாகும். இதை யெல்லாம் தடுப்பதற்கு நாம் முறையாக சீரமைத்தாலன்றி, இருக்கிற குறைபாடுகளை நீக்கினாலன்றி வேறு வழியில்லை யென்பதை தயவுசெய்து எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க மனிதனால் முடியுமா என்றால், எந்தப் பிரச்னையையும் தீர்ப்பவன் தான் மனிதனாக இருக்க முடியும். பிரச்னைகள் வருகிறதே என்று அதிகாரிகள் ஆனாலும் சரி, சட்ட மன்ற உறுப்பினர்கள ஆனாலும் சரி, மற்றவர்கள் ஆனாலும் சரி, அவைகளைக் கண்டு பயந்தால் பிரச்னைகள்தான் பெரியதாகிவிடும். பிரச்னைகள் தீர்ந்துவிடாது. ஆகவே பிரச்னைகள் உள்ள நாட்களில்தான் நாம் வாழ்கிறோம். ஒவ்வொரு நாளும் நம்முடைய பிரச்னைகளத் தீர்ப்பதற்கு நாம் அனைவரும் பாடுபடவேண்டும். இன்றைக்கு பெரிய தொகையை செலவழித்து இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக மக்களுக்கு நன்மைகளைச் செய்வற்காக பாடுபடுகிறோம். அரசியல்வாதிகள் ஆனாலும் சரி, அதிகாரிகள் ஆனாலும் சரி இந்தப் பிரச்னைகளோடு போட்டியிட்டு செயல்பட்டால் பிரச்னைகளை நல்ல முறையில் தீர்க்க முடியும். மக்களுக்கு சீரான உணவுப் பொருள் விநியோகத்தை நுகர்ப்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக தந்து, மக்கள் பட்டினி கிடக்கிற நிலைமையை தடுக்கவும் முடியும் என்பதைத் தெரிவித்து அந்த நம்பிக்கையோடு செயல் படுவோம் என்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கல் என்ற மானியக் கோரிக்கை யின்மீது நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நுகர் பொருள் வழங்கல் இயக்கமானது நமது நாட்டில் இந்திய தேசிய



காங்கிரசினால் ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுக்காலமாக நடை பெற்று வருகிறது, அதனை அடுத்து பெருந்தலைவர் காமராசர் அவர்கள் இந்தத் திட்டத்தை செயலாற்றி வருகிறபோது இந்த இயக்கம் பல கடத்தல்காரர்களின் கையிலே சிக்கி சீரழிக்கப்பட்டு, ஏழை மக்களின் வயிற்றிலே மண்ணைவாரி தெளித்து, பல முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் திட்டத்தை தோல்வியுறச் செய்ததை நாம் கண்டோம். அடுத்தபடியாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இந்தத் திட்டத்தை வலிமைபடுத்தி சீரும் சிறப்புமாக நடத்தியதைக் கண்டோம். அப்படி செய்கிற போது அவர்களும் அந்த வலையில் சிக்கி நாட்டில் படி அரிசி 10 ரூபாய் விற்கும் அளவிற்கு வந்து அவர்களும் கீழே இறக்கப் பட்டார்கள்.

இன்றைக்கு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு நல்லபல திட்டங்களை செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு நல்ல பக்கபலமாக இருந்து, அரிசி விநியோகத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து, ஏழை எளிய மக்கள் பட்டினி கிடக்கக்கூடாது என்ற நல்ல எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டத்தை சீரும் சிறப்புமாக செயல்படுத்திக்கொண்டு வருகிறது. அதனை நான் வரவேற்கிறேன். இந்தத் தருணத்தில் சில அதிகாரிகள் குறுக்கிட்டு அதிலே சில சங்கடங்களை ஏற்படுத்துவதாக நான் எண்ணு கிறேன். காரணம் என்னவென்றால் அரிசி விநியோகம் சீரும் சிறப்புமாக நடைபெறுவதாக நாம் கூறிக்கொண்டி ருக்கிறோம். அதிலே சில்லரை சச்சரவுகளை (சய்து வாணிபக் கழகத்தில் இருக்கும் அதிகாரிகள் நல்ல திட்டத்தின் செயல்திறனைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே அரவை முகவர்களாக இருப்பவர்களிடம் தொடர்பு கொண்டு சில சச்சரவுகளை ஏற்படுத்தி சரியான விநியோக முறையை தடைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நல்ல தரமான அரிசி சப்ளை செய்வதில் குறுக்கிடுகிறார்கள். காரணம் நெல்லை கொள்முதல் செய்கிறோம். கொள்முதல் செய்யும் நெல்லை அரவை முகவர்களிடம் கொடுத்து திரும்பவும் அவர் களிடம் அரிசியாக வாங்குவதில் அவர்கள் கவனம் செலுத்துவ தில்லை.

(முற்பகல் 11-50)

அவர்கள் கவனம் செலுத்துவதில்லை என்ற காரணத்தால், அதிலே சில முறைகேடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. நெல்லைக் கொடுக்கிறார்களே தவிர அதற்கு உரிய நெல்லினுடைய ரகத்தைப் பெற்று, அதற்குண்டான அரிசியைப் பெறுவதில்லை. ஏதோ பல மாநிலங்களிலிருந்து வருகின்ற அரிசியை இவர்கள் வாங்கி, நுகர் பொருள் வாணிபக் கழகக் கூடங்களில் கொண்டு செலுத்தி விடுகிறார்கள். இதிலும் பல ஊழல்கள் நடந்து கொண்டு

இருக்கின்றன. அதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன். அவர்களும் ஆவன செய்வதாக என்னிடத்திலே சொல்லி இருக்கிறார்கள். ஆனால் நடைமுறையில் என்ன நடைபெறுகிறது என்றால் சரியான முறையில் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகளிலிருந்து கீழ்மட்டத்தில் உள்ள அதிகாரிகள் வரை சரியாக இருப்பார்கள் என்று சொல்ல நான் தயாராக இல்லை. மேல் அதிகாரிகள் உத்தரவு வழங்குகிறார்களே தவிர, கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள் அதைச் செயல்படுத்துவதிலே ஏதோ சில தில்லுமுல்லுகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் ஆங்காங்கு உள்ள சிறுசிறு கடைகளிலும், நியாய விலைக் கடைகளிலும் வழங்கப்படுகிற பொருட்களினுடைய அளவு குறைவாக இருப்பதாக பலதரப்பட்ட மக்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். எனக்கு முன்பாக பேசிய தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் விவசாயிகளுக்கு மட்டும் பரிந்துரை செய்தார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்கள் சொன்ன கூற்று என்னைப் போன்ற நகர வாசிகளுக்குப் பொறுத்தமான ஒரு கூற்றாகத்தான் இருக்கிறது. நகரவாசிகளுக்கு வழங்கப்படுகிற பொருட்களுடைய தரம் மிகவும் குறைவாக இருப்பதோடு மட்டுமல்லாமல், எடையும் குறைவாக இருக்கிறது என்று பரவலாக பேசப்படுகிறது. எங்கு பார்த்தாலும், எல்லாக் கடைகளிலும் இந்த நிலைமைகளை நாங்கள் சுட்டிக்காட்டும்போது, நாங்கள் தான் இதிலே தோல்வி அடைகிறோமே தவிர, அந்தக் கடைக்காரர்கள் ஜெயித்து விடுகிறார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் பல விதத்தில் அதிகாரிகளை அணுகி வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாங்கள் பெரிய அதிகாரிகளுக்கு போன் செய்து அல்லது நேரிலே சென்று குறைகளைச் சொல்கிறோம். அதை அவர்கள் செவி சாய்த்துக் கேட்பது இல்லை, காரணம் என்னவென்றால், அவர்களுக்கும் இவர்களுக்கும் ஏதோ ஒரு உடன்பாடு இருக்கிறது. அந்த உடன்பாட்டைக் களைவதற்கு பெரிய அதிகாரிகள் முற்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நாட்டிலே மக்கள் மத்தியிலே நிலவுகின்ற எண்ணங்கள் அத்தனையும் இந்த ரேசன் கடைகளைப்பற்றித்தான் இருக்கிறது. அவர்களுக்கு தரமான உணவையும், அதேசமயத்தில் சரியான எடை அளவு உள்ளப் பொருட்களைப் பெறுவதிலே பல சிரமங்கள் இன்றைக்கு இருக்கின்றன. இப்படிப்பட்டக் குறைகளைச் சொன்னால் அதை நிவர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் முன் வருவதில்லை. சென்ற தடவை பேசும்போது நான் சொன்னேன். இப்படிப்பட்ட இடர்பாடுகளைக் களைவதற்கு ஒரு பொதுக் குழுவை நியமித்து, விவாதித்தால், இதில் உள்ள பல சிரமங்கள் களைய வாய்ப்பிருக்கிறது என்று நான் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நிவர்த்தி செய்வோம் என்று





கூறினார்கள். ஆனால் இதுவரையிலும் நடைபெறவில்லை. எனவே அந்த உறுதிபாட்டிலேயிருந்து பின்வாங்காமல், அவர்கள் செயல்படுவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இப்போது வியாபாரிகளிடமிருந்து 50% லெவி வசூலிக்கும் முறை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அது உபரியாக உள்ள மாவட்டமாக இருக்கிறது. அதனால் அங்கே கொள்முதல் வேகமாக நடைபெறுகிறது. நிறைவு பெறுகிறது. ஆனால் மதுரை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அது ஒரு தன்னிறைவு மாவட்டம். அந்த மாவட்டத்தில் 8 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். 8 லட்சம் பேர்களுக்கு உணவு வசதியை அளிப்பதற்கு அங்கே போதுமான உணவு உற்பத்தி இல்லை. இப்படி உணவு உற்பத்தி இல்லாத காரணத்தால் 50% லெவி என்று சொல்லி, அதிகாரிகள் வியாபாரிகளிடம் முறைகேடாக நடந்து வசூலில் ஈடுபடுகிறார்கள். இது பற்றி விவரம் கேட்டால் அதிகாரிகள் சொல்கிறார்கள். எங்களுக்கு மேல் இடத்திலிருந்து 36 ஆயிரம் டன் கொள்முதல் செய்ய வேண்டும் என்று டார்கெட் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். 1984–85-லே அவர்கள் வசூலித்த அரிசியினுடைய எடை 6 ஆயிரம் டன்கள் தான். 36 ஆயிரம் என்று குறியீட்டை குறித்துவிட்டு, 6 ஆயிரம் டன் தான் வசூல் செய்கிறார்கள். இதனுடைய விஷயம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. அதை எல்லாம் பார்க்கும்போது, கசக்கிப் பிழிந்து வியாபாரிகளை கஷ்டப்படுத்துவது என்கிற ஒரு முறையைக் கைவிட்டு நல்ல பல திட்டங்களைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு மொத்த வியாபாரி, இன்னொரு மொத்த வியாபாரிக்கு விற்கக்கூடாது என்று சட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். மேலும் போக்குவரத்துக் கட்டுப்பாடு வேறு விதித்திருக்கிறார்கள். எங்களுடைய மதுரை மாவட்டத்திலிருந்து அண்ணா மாவட்டத்திற்குச் செல்லவேண்டும் என்றால், போக்குவரத்துக் கட்டுப்பாடு, கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். இதை அமுல்படுத்துகிற போது சிரமங்கள் ஏற்படுகின்றன. அந்தச் சிரமங்களைப் பற்றிக் கேட்கும் போது, அதிகாரிகள் லஞ்ச லாவண்யத்திற்கு ஆட்படுகிறார்கள். அதை வியாபாரிகளும் ஒத்துக்கொள்கிறார்கள். இதனால் வியாபாரிகளின் கள்ளச் சந்தை வளர்கிறது. கள்ளச் சந்தையிலே அவர்கள் அதிகமாக ஈடுபடும்போது, அதிலே அவர்கள் மிகப் பெரிய புள்ளியாக மாறிவிடுகிறார்கள். நல்ல வியாபாரிகள் இதனால் செயல்பட முடியவில்லை. எனவே இதையெல்லாம் கருத்திலே கொள்ள வேண்டும். சட்டம் கொண்டு வந்தால் மட்டும் போதாது. அதை எப்படி செயல்படுத்தினால் நன்றாக இருக்குமோ, அந்த வகையில் இதை வடிவமைத்துச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடப்பாரையை முழுங்கிவிட்டு, சுக்குக் கசாயம்

சாப்பிடுகிற மாதிரி சட்டத்தைப் போட்டுவிடக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அதுமட்டுமல்லாமல் இந்தச் சமுதாய வளர்ச்சியிலே உணவு வழங்குவது என்பது ஒரு முக்கியமான புரட்சிகரமான திட்டம் இந்தத்திட்டத்திலே சிறிதளவும் எள்ளளவும் எந்தச் சபலத்திற்கும் ஆட்படாமல் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் நமது சென்னை மாநகரத்திலே ***
என்று நான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ***

என்று ஒட்டுமொத்தமாகச் சொல்கிறார்கள். அதிகாரிகள் யார் தவறு செய்திருந்தாலும், எந்த மட்டத்திலே தவறு நடந்திருந்தாலும் அவர்களை எப்போதும் புரட்சித் தலைவர் அவர்கள் காப்பாற்றமாட்டார். எந்த அதிகாரியையும் காப்பாற்றவேண்டிய அவசியம் கிடையாது. ஆனால் இங்கு சொல்கிறபோது ஆதாரங்களோடு சொன்னால் நான் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்ல முடியும். பதில் சொல்ல முடியும். அதேமாதிரி பெயரைச் சொல்லி நீங்கள் பேசுகிறபோது....(குறுக்கீடு) தனிப்பட்ட முறையில் சொல்கிறபோது விசாரித்து என்ன நடந்தது என்று நீங்கள் சொன்னால் உடனே அதற்கான பதிலைத் தருகிறேன்; இப்பொழுதே தருகிறேன். ஆகவே அந்த விவரத்தை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த ரெப்பரன்ஸ் நீக்கப்படுகிறது. நீங்கள் முதலிலேயே கொடுத்திருந்தால் அதைப்பற்றி பேசலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே ஆதாரம் இருந்தால் தரட்டும். நான் விசாரித்து பதில் சொல்கிறேன். ***

என்று சொல்கிறார் அது என்னவென்று விசாரித்துச் சொல்கிறேன். (உறுப்பினர் மாண்புமிகு அமைச்சரிடம் ஒரு தாளைக் கொடுத்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலில் அந்தத் தாளை என்னிடம் கொடுக்கவேண்டும்; அதில் என்ன இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள வேண்டாமா?

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு அமைச்சரிடம் கொடுத்ததாகப் பொருள்.

**திரு. எ. தெய்வநாயகம் :** தலைவர் அவர்களே, நீங்கள் கொடுக்கச் சொன்னீர்கள், கொடுத்தேன். வேறு ஒன்றும் தவறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த அவையில் எழுப்புவதற்கு முன்னால் நான் கொடுக்கச் சொன்னேன் என்றால், அதை என்னிடம்தான் கொடுக்கவேண்டும் என்று சொன்னேன். நான் பார்த்துவிட்டு, First I should get myself satisfied and then only I will permit you.

**திரு. எ. தெய்வநாயகம்:** தலைவர் அவர்களே, புரஸிஜர் பற்றிச் சொன்னதற்கு நன்றி, நான் சொன்ன குற்றச்சாட்டு வேண்டுமென்றே சொன்னதல்ல. நடைமுறையிலே இருந்த குற்றச்சாட்டு தான் அது. அதற்காகத்தான் நான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. இப்படிப்பட்ட அதிகாரிகள் தவறு செய்யாமல் இருக்க நாம் போடுகிற சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயல்பட்டால் உணவு நிலைமை சீராகவும் நலமாகவும் இருக்கும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஏதோ பெட்டிசன் காப்பியை கொடுத்திருக்கிறார். அது யார் போட்ட பெட்டிசன் என்று பெயர் போடவில்லை. எம்.எல். ஏ. வே கொடுக்கிறாரா அல்லது யாரிடமிருந்தாவது வந்ததாகக் கொடுக்கிறாரா என்ற விவரத்தைச் சொன்னால் சரியாக இருக்கும்.

**திரு. எ. தெய்வநாயகம் :** தலைவர் அவர்களே, அந்தப் பெட்டிசனை நான்தான் கொடுத்தேன். கையெழுத்து வேண்டுமென்றால் போட்டுக்கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, கையெழுத்து தேவையில்லை. நீங்கள் சொன்னதே போதும். அதற்கான பதில் உங்களுக்குத் தரப்படும். குற்றச்சாட்டு வாரியாக அந்த அதிகாரி மீது தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்பற்றிய விவரங்கள் தங்களுக்குத்தரப்படும்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை வாழ வைத்துக்கொண்டிருக்கிற, வாழ வைத்த தெய்வம், எங்களுடைய கண்கண்ட தெய்வம் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் இன்றைய தினம் இந்த உணவு மானியத்தை ஆதரித்து பேசுகின்ற வாய்ப்பை தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12.00)

அரசியலை மையமாக வைத்து பல்வேறு அரசியல் சூழ்நிலைகள் மாற்றப்பட்டு இருக்கிறது. அரசியலுக்கே அடிப்படையாக அமைந்து இருக்கின்ற ஒரு இயல் இன்றைய கால கட்டத்தில் அரிசி இயல் என்பதை உணர்ந்து அதன் அடிப்படையாக ஒவ்வொரு கால கட்டத்திலும் அரசியல் சூழ்நிலைகள் மாறியிருக்கின்றன. 1967-லும், 1977-லும் என்பதை இங்கே இருக்கின்ற அத்தனை பேரும் தெரிந்திருக்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட இந்த ஆட்சியில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இல்லமும் என்று சொல்லப்படுகிற முக்கியமான 3 அடிப்படை வசதிகளில் முதலாவதாக மேல் ஓங்கிய, நிலையில் இந்த உணவுத்துறை இருக்கிறது. அந்த உணவுத் துறை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மிகவும் சிறப்பாகவும், சீர் பெற்றும் தன்னிறைவு பெற்றும் இருப்பதோடு மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் வாரி வழங்கக்கூடிய அளவுக்கு இந்தத் துறை மேல் ஓங்கியிருக்கிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் வெள்ளமும், வறட்சியும் மாறிமாறி வந்து இருந்தாலும்கூட எவ்வளவு இயற்கை சோதனைகள் இந்த ஆட்சியை கவ்விக்கொண்டு இருந்தாலும்கூட புரட்சித் தலைவர் என்கிற அந்த நல்ல ஒரு உத்தமரால் இந்த உணவுத்துறை எந்த அளவுக்கு சிறப்பாக மேல் ஓங்கியிருக்கிறது என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

அது மட்டும் அல்ல, இந்த ஆண்டு கூட தஞ்சை மாவட்டத்திலே வெள்ளமும் வறட்சியும் மாறி மாறி வந்து கொண்டு இருந்தது. தஞ்சை மாவட்டம் எந்த காவேரியை நம்பி வாழ்ந்ததோ, எந்த காவேரியால் தஞ்சை செழித்ததோ அந்த காவேரி பொழித்து இருந்தும் கூட கண் கண்ட காவேரியாக இருந்த அந்த காவேரித்தாய் நம்முடைய கண்ணில் படாத அளவுக்கு மறைந்து கொண்டு இருந்தாலும் கூட அப்படி மறைவதற்கு காரணமாக வெவ்வேறு ஆட்சியில் இருந்தவர்கள் அவர்கள் காலத்தோடு செய்து கொள்ளாத ஒப்பந்தத்தால் அவர்கள் தங்கள் கடமைகளை ஆற்றாததன் விளைவாக தஞ்சைத் தரணி பாதிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் கூட நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை, என்ற அளவுக்கு தஞ்சை மாவட்டம் அதுவும் குறிப்பாக ஜனவரி, பிப்ரவரி மாதத்தில் காவேரியில் தண்ணீர் இல்லாத நேரத்தில் அங்கே தாளடி பயிரை காபந்து செய்யக்கூடிய அளவுக்கு மிகவும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருப்பதால் அங்கே 2, 3 மாதங்கள் மழை பொழிந்து தஞ்சையை காபந்து செய்ததோடு மட்டும் அல்லாமல் தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை பேர்களையும் காபந்து செய்து இருக்கிறது. அது புரட்சித் தலைவர் அவர்கள் ஆண்டு கொண்டு இருக்கிற காரணத்தால் காவேரி பொழித்தாலும் பரவாயில்லை புரட்சித் தலைவர் ஆட்சியில்



மக்களை வாழவைப்பதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொண்டு இருக்கிற பொறுப்புக்கு களங்கம் வந்து விடக்கூடாது என்பதற்காக இயற்கையே வானமே பெய்து இன்றையதினம் இந்த தஞ்சையிலே உற்பத்தி பெருகக்கூடிய அளவுக்கு வளம் பெற்று இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அப்படி உணவு உற்பத்தியில் சிறப்பாக உற்பத்தி செயதுவிட்டால் மட்டும் போதாது. ஒரு காலக் கட்டத்தில் உணவு உற்பத்தி சிறப்பாக இருந்தாலும் கூட தன்னிறைவை எட்டியிருந்த சூழ்நிலையிலே கூட தஞ்சை மாவட்டத்திலே 1977க்கு முன்பு ஆண்டவர்கள் அந்த காலத்தில் தமிழகத்தில் இருந்து அரிசியையும், நெல்லையும் ஒரு உத்திரவின் பெயரால் பல மாவட்டங்களுக்கு கடத்தப்பட்டதன் விளைவாக, அப்புறப்படுத்தப்பட்டதன் விளைவாக ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அதன் விளைவாக உத்தரவு பிறப்பித்ததன் விளைவாக நெல் கடத்தப்பட்டதன் விளைவாக நெல்லை உற்பத்தி செய்கின்ற தஞ்சை மாவட்டத்தில் எந்த அளவுக்கு உணவு பஞ்சம் இருந்தது என்பதை யாரும் மறந்து விட முடியாது. ஒரு கிலோ அரிசி 5 ரூபாய், 6 ரூபாய் 10 ரூபாய் என்று எல்லாம் விற்ற கொடுமையை நாம் பார்த்தோம்.

ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் உணவு உற்பத்தி அல்லது இயற்கையின் காரணமாக பாதிக்கப்பட்டு இருந்தாலும் கூட அவைகளை எல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் ஈடு செய்து உற்பத்தியான நெல்லை பல மாநிலங்களுக்கு கடத்தப்படாமல் சிறப்பாக பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள், கண்காணித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை யாரும் மறந்து விட முடியாது.

அது மட்டும் அல்ல, இந்த நாட்டில் வாழையடி வாழையாக ஏழையாக இருந்து கொண்டு இருக்கிறானே அதாவது உழைப்புத்தான் அவனுக்குச் சொந்தம். உழைப்பதற்காகத்தான் இந்த நாட்டில் பிறந்து வாழ்ந்து கொண்டு இருக்கிறான். அப்படி இந்த நாட்டில் வாழ்கிற மனிதர்கள் இரண்டு வகை உண்டு. ஒன்று, உண்ணுவதற்காகவே வாழ்பவர், மற்றொன்று வாழ்வதற்காகவே உண்ணுபவர். உண்ணுவதற்காக வாழ்கிறவர்கள் சமுதாயத்தில் அதைப் பெற முடியாமல் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களால் இந்த சமுதாயத்திற்கு ஒன்றும் பயனில்லாமல் போகலாம். ஆனால் இந்த நாட்டிலே உழைக்கின்ற வர்க்கமான, பாட்டாளி வர்க்கமான ஏழைஎளிய மக்கள் ஒரு கிலோ அரிசியை ரூ. 3, ரூ. 4, ரூ. 5 என்ற விலைக்கு வாங்கி சாப்பிட முடியாத அளவிற்கு சாப்பிடாது வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த உணவை உற்பத்தி செய்யக் கூடியவன், உற்பத்தி செய்கின்ற அந்த உணவை அவன் விலை கொடுத்து வாங்கமுடியாத நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட ஏழை மக்களின் கண்ணீரை துடைக்கின்ற வகையில், மானிய விலையில் ரூ. 1.75-க்கு எல்லா கிராமங்களுக்கும் அரிசி கொடுக்கக் கூடிய அளவிற்கு புரட்சித் தலைவருடைய ஆட்சி உயர்வு பெற்றிருக்கிறது என்று சொன்னால், இந்த

நாட்டிலே வறுமைக்கோட்டிற்கும் பின்னால் தள்ளப்பட்டிருக் கிறார்களே, அதுதான் அவர்களுடைய வாழ்க்கையே என்று இருக் கிறார்களே, அப்படிப்பட்டவர்களுடைய கண்ணீரை துடைக்கின்ற வகையில், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னர் ஒவ்வொரு கிராமத்திலும் அமுதம் அங்காடியைத் திறந்து, ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொரு ரெவின்யூ வட்டத்திலும் ரூ. 1.75-க்கு சாதாரண ரக அரிசியைத் தருகின்ற ஒரே அரசு புரட்சித் தலைவர் அரசு என்பதை யாரும் மறந்துவிட முடியாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல அப்படி அந்த உணவை உற்பத்தி செய்கின்ற விவசாயி, தன்னுடைய நெல்லை விற்பதற்கு ஒவ்வொரு ஏரியா விலும்—தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும், மிக முக்கியமாக பல்வேறு பகுதிகளில் சிவில்சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நெல் கொள்முதல் நிலையங்களை ஆரம்பித்து, அங்கே விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நெல்லை உடனடியாக அவர் களுக்கு நல்ல விலை கொடுக்கக் கூடிய அளவிற்கு, மார்க்கெட் வீழ்ந்து விடக் கூடாது என்ற அளவிற்கு நெல்லினுடைய விலையை பேலன்ஸ் செய்து, விவசாயிகள் விற்கக்கூடிய அளவிற்கு இன்றையதினம் புரட்சித்தலைவர் அரசு பல கொள்முதல் நிலையங் களை உருவாக்கித் தந்திருக்கிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

அதுமட்டுமல்ல. விவசாயம் செய்கின்ற விவசாயிகளுக்கு ஊக்க மளிக்க, ஒரு குவிண்டாலுக்கு இடுபொருள் மான்யமாக ரூ. 20 முதல் ரூ. 35 ரூபாய் வரை உரத்தை புரட்சித் தலைவர் அரசு தருகிறது என்று சொன்னால், இது ஒரு சாதாரணமான காரியமல்ல. இப்படி அந்த ரூ. 20-ஐத் தரக் கூடாது, ரூ. 35-ஐ விவசாயி களுக்குத் தரக்கூடாது என்று பல்வேறு நிலைகளில், மத்திய அரசு தடுத்தாலும், நெல்லினுடைய விலையை ஏற்றக்கூடாது என்று மத்திய அரசு கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தாலும் கூட, புரட்சித்தலைவர் அரசு இந்த விவசாயிகளுக்கு ஏதாவது நம் மால் இயன்ற அளவிற்கு செய்யவேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத் தோடு தான் ரூ. 20 லிருந்து ரூ. 35 வரை மான்யமாக உரத்தைத் தருகிறார்கள். இந்த ரூபாயைக் கூட, ரூ. 50-ஆக உயர்த்தித் தந் தால் தஞ்சையில் இருக்கின்ற விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். அவர்களைக் காப்பாற்றுகின்ற ஒரு தன்மையாக இருக்குமென்பதை மிக மிகப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, இங்கே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தந்த புரட்சித் தலைவர் அரசு மிகவும் சிறப்பாக இந்த உணவுத் திட்டத்தைக் கையாண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, என்னுடைய தொகுதி யில் துலார் என்ற ஊரில் ஒரு அமுதம் சிறப்பங்காடி தேவைப்படு கிறது. அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட குடும் பங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள்





மிக நீண்டகாலமாக தங்களுக்கு ஒரு நியாய விலைக் கடை வேண்டு மென்று அரசாங்கத்திற்கு மனு செய்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று சுரைக்காயூர் என்ற ரெவின்யூ வட்டத்திலே ஒரு அமுதம் அங்காடி, நியாய விலைக் கடை வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பல ஆண்டுக்காலமாக முயற்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதை யும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் பல இடங்களில் நியாய விலைக் கடைகள் இல்லாமல் இருக்கின்றன. அப்படி எங்கெல்லாம் இல்லாமல் இருக்கின்றதோ, அங்கெல்லாம் உடனடியாக நியாய விலைக் கடைகளை துவக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, சத்துணவிற்காக உணவுத் துறை எந்த அளவிற்கு தீவிரமாக செயல்படுகிறது என்பதையும் தெரிவித்து அதற்காக பல ஆயிரக்கணக்கான டன் அளவிற்கு உணவுப் பொருள்களை இந்தத் துறையின் மூலமாக வழங்குகிறது.

(பிற்பகல் 12-10)

இந்தச் சத்துணவுத் திட்டத்தின் காரணமாக உணவு நிலை பாதிக்கப்பட்டு விட்டது என்று மாற்றுக் கட்சி நண்பர்கள் இந்தத் திட்டத்தைப் பார்த்து பொறாமைப்படக்கூடியவர்கள் சத்துணவுத் திட்டத்தை இழிவுபடுத்தவேண்டுமென்ற உணர்வின் அடிப்படை யிலே சில இடங்களிலே பேசி வருகிறார்கள். அவர்கள் எப்படிப் பேசி வந்தாலும்கூட நாம் கவலைப்படவில்லை. சிறப்பாகப் பணி யாற்றிவருகின்ற மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர் களுக்கு எங்கள் தொகுதியின் சார்பாக பாராட்டுதலைத் தெரி வித்து அமைச்சரவைக்கும் பாராட்டை தெரிவித்து வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன், நன்றி. வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொடுத்திருக்கிற கொள்கை விளக்க அறிவிப்பில் 9வது பாராவில் 'உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கிறது' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. நேரம் போதுமான அளவுக்கு இல்லாத காரணத் தினால் நான் அந்தப் பாராவை இங்கே படிப்பதற்கு முயற்சிக்க வில்லை. நாம் என்ன பார்க்கிறோம் என்றால் 1985வது வருடத் திலே அதேபோன்று இதற்கு முன்னாலே கொடுக்கப்பட்ட விளக்க அறிக்கைகளிலேயும் இந்தத் துறை அது சம்பந்தமாக குறிப்பிட்டிருக் கிறது. ஆனால் நடைமுறையிலே 20 கிலோ அரிசி ஒரு கார்டுக்கு வாங்கக்கூடிய உரிமை இருந்த நிலைமை மாறி இப்போது அது 12 கிலோவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே அது 6 கிலோவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே 7-வது பாராவிலே குறிப்பிடப்பட்டிருப்பதுதான் 1985 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட பாலிசி நோட்டின் 6-வது பாராவிலேயும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால் மக்களைப் பொறுத்தவரையில் 20 கிலோ அரிசியை ஒவ்வொரு கார்டுக்கும் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் நாட்டு மக்களுடைய எண்ணம், விருப்பம்.

இன்றைக்குக் கொடுக்கப்படக்கூடிய அரிசியைப் பொறுத்த வரையில் குறைசொல்வதற்காகச் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற பாலிசி நோட்டிலே ஒரு இடத்திலே சொல்லபட்டிருக்கிறது "the quality of the rice is not good" இதை விட கிராமப்புறங்களிலே மக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் மாடல் ஷாப்களிலும் கூட்டுறவுக் கடைகளிலேயும் கொடுக்கக்கூடிய அரிசி நாற்றமடிக்கக்கூடிய அரிசியாக இருக்கிறது, சாப்பிடுவதற்கு லாயக்கற்ற அரிசியாக இருக்கிறது. இப்படி நாற்றமடிக்கக்கூடிய, சாப்பிடுவதற்கு லாயக்கற்ற அரிசியைக் கொடுப்பது அரசுக்கு அழகல்ல. அதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே 1980 ஆம் ஆண்டு வரையிலே 30 கிலோ அரிசி ஒரு குடும்பத்திற்கு கட்டாய ரேஷன் முறையின் மூலமாக கொடுக்கப்பட்டு வந்தது. குறைந்த பட்சம் பார்டர் ஏரியாவிலே, பெல்ட் ஏரியாவிலே அதைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பார்டர் ஏரியாக்களிலே கொல்லங்கோடு போன்ற பகுதிகளிலே சில வியாபாரிகள் லைசென்ஸ் பெறுகிறார்கள். உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால் ஊரம்புக்கார் என்ற வியாபாரி தமிழகத்திலே அவர் பெயரால் ஒரு லைசென்ஸ் வாங்கியிருக்கிறார். கேரளாவில் அவர் மனைவி பெயரால் ஒரு லைசென்ஸ் வாங்கப்பட்டிருக்கிறது. வைஸ் வெர்ஸா லைசென்ஸ்களை வாங்கி—மாவட்ட ஆட்சித் தலைவரை எப்படியோ பிடித்து லைசென்ஸ் வாங்கி—பிளாக் மார்க்கெட் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இது விஜிலன்ஸ் டிபார்ட்மெண்டிற்கு நன்றாகத் தெரியும். இந்த நிலைமையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து விதவைகளுக்கு அரிசி வழங்கப்படுவது பற்றிப் பெருமையோடு சொல்லப்படுகிறது. அங்கே நாற்றம் அடிக்கிற அரிசி கொடுக்கப்படுவதன் காரணமாக எந்த நோக்கத்தோடு அரசாங்கம் அரிசி கொடுக்கிறதோ அதை நிறைவேற்றமுடியாமல் போகிற நிலைமை இருப்பது துரதிருஷ்டமான நிலைமையாக இருக்கிறது. அதை மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு வந்திருக்கும் ரிப்போர்டின் படி, அரிசியின் விலை கூட இன்றைக்கு மார்க்கெட்டில் 4 ரூபாய் 55 காசு ஒரு கிலோ; படி அரிசி 7 ரூபாய் என்ற அளவிற்கு வந்திருக்கிறது. இதை நான் சொல்வதுமட்டுமல்லாமல், இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை, மார்ச் 25ஆம் தேதிய பத்திரிகையில் அது சம்பந்தமாக Tamil Nadu will feel squeezed on rice front. என்று சொல்லி குறிப்புகூட வந்திருக்கிறது. அவர்கள் அதிலே தெளிவாக சொல்கிறார்கள். மத்திய அரசின் கொள்கையின் காரணமாகத் தமிழகத்தைப் பொறுத்தவரையில், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கொள்முதல் செய்யக்கூட கஷ்டப்படும் நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஏனென்றால், ஆந்திரப் பிரதேசத்திலேயிருந்து வேறு எங்கோ அரிசி செல்லுகின்ற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே கொள்கைக் குறிப்பிலே திருப்திகரமான நிலை இருக்கிறது என்று குறிப்பிட்டாலும்கூட, அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு வந்துள்ள தகவலின்படி, மத்திய அரசு Two Million tons of wheat and one million tons of rice 1986-87-லே வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கின்ற நேரத்திலே நான் ஒன்றைக் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1984-ஆம் வருஷத்திலே இருந்த டார்ஜெட்படி, ஓப்பன் மார்க்கெட்டிலே விற்பதற்காக 15·6 மில்லியன் டன் கோதுமை ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் யதார்த்தத்தில் மார்க்கெட்டில் விற்க முடிந்தது எவ்வளவு என்றால் கிட்டத்தட்ட 11½ மில்லியன் டன்கள்தான். ஆகவே இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற நேரத்தில், 1983-ஆம் வருஷத்திலேயிருந்து 1986-ஆம் ஆண்டு வரையிலேயும் உள்ள பட்ஜெட் ஸ்பீச்சுகளிலே பார்த்தால் அதிலேயும் சரி, பாலிசி நோட்டிலேயும் சரி மத்திய அரசு போதுமான அளவிற்கு அரிசி தரவில்லை என்ற ஒரு கருத்தைக் சொல்கிறோம். ஒரு இலட்சம் டன் மாதம் ஒன்றுக்கு இந்த மாநிலத்திற்குத் தேவை. ஆனால் மத்திய அரசு அந்த அளவிற்குக் கொடுக்கவில்லை என்பதை இன்றைக்கு அரசே ஒப்புக்கொள்ளுகின்ற விஷயமாக இருக்கிறது. ஆனால் அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றி நாம் நிச்சயமாக ஆராய வேண்டும். மத்திய அரசின் கொள்கை காரணமாக ஏற்பட்டுள்ள நிலை இது. மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக அவர்கள் ஏற்படுத்தி உள்ள பட்ஜெட்டின் காரணமாக இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதை இந்த அரசு கண்டிக்காதவரையில், எதிர்க்காமல் இருக்கின்ற வரையில் இந்த நிலை தமிழகத்தில் நீடித்துக்கொண்டுதான் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்,

இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய அரசு விவசாயிகளுக்கும், அதேமாதிரி உணவுப் பொருட்களை வாங்கி உபயோகப்படுத்துகின்றவர்களுக்கும் சப்சிடி குறைக்கப்படுவதால், ஏழை மக்களைப் பொறுத்தவரையில் அவர்களின் வருவாய்க்கும் அதிகமாக அல்லது அவர்களின் வாங்கும் சக்திக்கு அதிகமாக இன்றைக்கு மார்கெட்டில் அரிசியின் விலை சென்று கொண்டிருப்பதால் பாவர்ட்டி லயனுக்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு இந்தப் பலன் எட்ட முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1961-ஆம் வருஷத்திலேயிருந்து, Figure of Popula ion and output, இன்றைக்கு 1986-ஆம் ஆண்டு வரையிலும் உள்ள நிலையை நாம் ஒப்பிட்டுப் பார்த்தால் இன்றைக்கு அரசினுடைய கணக்குப்படி பத்து கிலோ—அதாவது 187 கிலோவிலிருந்து 197 கிலோவரை உயர்ந்திருப்பதாகக் கணக்குச் சொல்லப்படுகிறது. ஆனால் யதார்த்தத்தில் உற்பத்தியின் விவரங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் 184 கிலோதான் இன்றைக்கு ஒரு வருஷத்திலே ஒரு மனிதனுக்கு கிடைக்கின்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக்காரணம் அரசினுடைய பாலிசி, Region l imb l nce காரணமாக இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. 1,800 கிலோ அந்தப் பக்கத்திலேயிருந்து உணவுப் பொருட்களை எடுத்து வரவேண்டிய ஒரு துரதிருஷ்டவசமான நிலை அரசினுடைய சென்ற கால நடவடிக்கை, கொள்கை ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. தகுந்த நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கின்ற வரையில் இந்த பாவர்டி லயனுக்குக் கீழே—அதாவது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களைப் பொறுத்தவரையில் இன்னும் உணவுப் பொருட்கள் கிடைப்பதிலே கஷ்டமான நிலைமை நீடிக்கும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏற்கனவே அரசு விநியோகிக்கின்ற அரிசியின் தரம் குறைவாக இருக்கின்ற நேரத்தில் அரிசியின் விலை மட்டும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அரிசியின் விலை 2.15-லிருந்து 2.50 வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகள் இருக்கிறார்கள். விவசாயிகளைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு இன்று குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் இன்று அரசினுடைய கொள்கை காரணமாக, அந்த அளவுக்கு அவர்களுக்கு விலை கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படவில்லை.

(பிற்பகல் 12-20)

அது மட்டுமல்ல, இன்று அரசு கொள்முதல் செய்யக்கூடிய விலையிலிருந்து அதிகமான விலைக்கு அரிசி மக்களுக்கு விற்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு அல்லது அப்படிப்பட்ட புகார்





இன்று மக்களிடம் இருந்து வந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றும் நிலைமையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கொள்கைக் குறிப்பிலே, 11-வது பக்கத்திலே, உணவுப் பொருள்களுடைய விலையை கன்ட்ரோல் பண்ணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக, வியாபாரிகளுடைய கூட்டங்களை அடிக்கடி கூட்டி இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் நடைமுறையில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால், அப்படி விலையைக் குறைக்கிற நேரத்திலே. குவாண்டிட்டியை அவர்கள் குறைத்துக்கொண்டு வருகிறார்கள், குவாண்டிட்டியைக் குறைத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே. ஒரு பக்கத்திலே உணவுப் பொருள்களுடைய விலையைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற முறையிலே இன்று நடைமுறையிலே என்ன ஏற்படுகிறது என்றால், ஏற்கனவே இந்த இடத்திலே என்ன நிலைமை இருந்ததோ, அதிலேயிருந்து பிரத்தியேகமான நிலைமை ஏற்படவில்லையென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் நான் சுட்டிக்காட்ட விரும்புவது, ஒருசில இடங்களிலே மாதத்திற்கு ரூ. 1,000-க்கு அதிகமான வருவாய் உள்ளவர்களுக்கு கார்டு கொடுக்கப்பட வேண்டாம் என்று கொள்கை முடிவை அரசு எடுத்திருப்பதாக எங்கள் மாவட்டத்திலே சொல்லப்படுகிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்பதை நான் விசாரித்துப் பார்த்ததிலே, அப்படியில்லையென்று சொல்கிறார்கள். ஆனால், எங்கள் மாவட்டத்திலே ரூ. 1,000-க்கு அதிகமான வருமானமுள்ளவர்கள், அந்த கார்டை வைத்துக் கொண்டு சீனி, போன்ற பொருள்களை வாங்க முடியாத நிலைமையிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றுவதன் காரணமாக, இன்று ஒரு பஞ்சாலைத் தொழிலாளியினுடைய ஊதியம் கூட, ரூ. 1,000-க்கு பக்கத்திலே வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட கொள்கை முடிவு எடுக்கப்படுமானால், அது மாற்றப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கொள்கைக் குறிப்பிலே, 7வது பக்கத்திலே, போகஸ் கார்டுகளை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1983-84-வது ஆண்டிற்கான ஆடிட் ரிப்போர்டிலேயிருந்து ஒரு பகுதியை இங்கே படிக்க விரும்புகிறேன். முதல் அமைச்சர் மதிய உணவு திட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்டு, பல இடங்களிலே என்ன நடக்கிறது என்றால், உண்மையிலே உள்ள மாணவர்களைவிட, அதிகமான போகஸ் மாணவர்களுடைய அட்டென்டன்சைப் போட்டு, அதன் காரணமாக, இன்று பல

முறைகளிலே ஊழல்கள் நடக்கின்றன, அதிகமாக உணவுப் பொருள்களைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று 1983-வது ஆண்டு Report of the Comptroller and Auditor-General of India-லே சொல்லப்பட்டிருக்கிறது.

அதிலே பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது :

Page 33 of the report—The reports of such intensive verification conducted during September-October 1983, in 20 out of 35 blocks in the district disclosed that the number of children fed was considerably less than that recorded in the feeding attendance register in the previous months, the difference ranging from 79 to 931 children per block.

அதுமட்டுமல்ல, அதே பக்கத்திலே, கடைசியிலே பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

Government stated that they had issued in March 1984 guide lines for drawal of daily rations by the centres and also instructed the organisers of the centres to mark correct attendance without resorting to false or incorrect marking for the purpose of tallying the number for whom rations were drawn with the number actually fed.

இப்படி ஒரு பக்கத்திலே, அரசிடமிருந்து தெளிவான கைட்லைன்ஸ் இருந்ததற்குப் பிறகு, இப்படி போகஸ் அட்டென்டன்ஸ் போட்டு, அந்த உணவுப் பொருள்களை வாங்கி, ஒருசிலர் தங்களுடைய சொந்த தேவைகளுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதுதான் இதன் விளைவு. அப்படிப்பட்டவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அந்தக் கொள்கை அறிவிப்பிலே பக்கம் 7-லே சுட்டிக்காட்டியிருப்பதைப் போல, போகஸ் கார்டுகளை மாற்றுவது என்பதோடு மட்டுல்லாமல், இப்படி போகஸ் அட்டென்டென்ஸ் காட்டி, உணவுப் பொருள்களைத் திருடி இன்று கொள்ளை அடிக்கக்கூடியவர்களை, பார்க்கிறோம். யதார்த்த நிலையில் ஏழை மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உணவுப் பொருள்களை இவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக, இன்று ஏழை மக்கள், வாங்கும் சக்தி குறைவு காரணமாக, ஓபன் மார்க்கெட் விலை ஏற்றம் காரணமாக ஒரு படி அரிசி ரூ. 7 விற்பதன் காரணமாக, இன்று அவர்களுக்கு 20 கிலோ கிடைக்க வேண்டிய இடத்திலே, 12 கிலோவாகவும், 6 கிலோவாகவும் அரிசி கிடைத்துக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் இப்படிப்பட்ட மக்களுக்கு செல்லவேண்டிய அரிசியை ஒரு சிலர் கொள்ளையடிக்கக்கூடிய நிலைமை இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அதை தடுத்து நிறுத்த தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போன்று இன்னொரு பக்கத்தில் பப்ளிக் டிஸ்டிரிபியூஷன் சிஸ்டம் எப்படி இருக்கிறது என்று பார்த்தால் இன்றைக்குப் பல இடங்களில் ஊழல்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றையும் தடுத்து நிறுத்தவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள உணவுத்துறை நுகர்பொருள் மானியக் கோரிக்கைமீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்று, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் பொருள்கள் யாவும் பஞ்சாயத்துக்கு ஒரு நியாயவிலைக்கடை என்ற அளவில் அமைத்து, அதன் மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் கிராமத்தைப் பொறுத்தவரையில் ஒரு பஞ்சாயத்தில் 6 சிற்றூர்கள் 8 சிற்றூர்கள் இருக்கின்றன. அந்த கிராமங்கள் சுமார் 4 முதல் 6 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து வருகின்றன். அப்படிப்பட்ட கிராமத்தில் வசிக்கக்கூடிய மக்கள் அநேகமாக கூலி வேலை செய்பவர்களாக இருந்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் காலையில் வேலைக்குச் சென்று, மாலையில்தான் வீட்டுக்கு வருகிறார்கள். அப்படி வருவதன் காரணமாக அவர்களுக்கு இந்தப் பொருள்கள் சரியாக கிடைப்பதில்லை. அதன் காரணத்தை முக்கியமாகக் கொண்டுதான் ஒரு பஞ்சாயத்தில் இருக்கும் 500 ரேஷன் கார்டுக்கு ஒரு கடை வீதம் வைத்தால் எல்லோருக்கும் நுகர்பொருள் வாங்க வசதியாக இருக்கும். அல்லது இருக்கும் சிற்றூர்களில் ஓர் ஊர் அல்லது இரண்டு ஊர்களை தெரிவு செய்து வாரத்தில் இரண்டு நாட்கள் அங்கே கொண்டுபோய் விநியோகம் செய்ய வேண்டும். அப்படி விநியோகம் செய்வது மூலம் எல்லா கிராமவாசிகளுக்கும் சமமான முறையில் எல்லா பொருள்களும் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இன்றைக்கு பாமாயில், மண்ணெண்ணெய் போன்ற வகைகள் சரியாகக் கிடைப்பதில்லை. அந்த எண்ணெய் வகைகளும் சரியான முறையில் சப்ளை செய்யப்பட வேண்டும். தனியார்கள் சில சொசைட்டிகள் என்ற பெயரை வைத்துக்கொண்டு எல்லா விதமான நுகர்பொருள்களையும் பெற்று, மக்களுக்கு வழங்காமல் இரவு நேரம் பொருள்களை கடத்திச்சென்று விற்றுவருவது போன்ற நிலை இருந்துவருகிறது. திருச்செந்தூர் தொகுதியைச் சேர்ந்த குறும்பூர் என்ற ஊரில் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் இருந்துவரும் பெருங்குளம் சொசைட்டி என்ற பெயரை வைத்து, நுகர் பொருள்களை விற்றுவருகிறார்கள். பெருங்குளத்திற்கும் குறும்பூருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இரண்டு

ஊர்களுக்கும் சுமார் 12 கிலோமீட்டர் தூரம் உள்ளது. இது போன்ற நடவடிக்கைகள் உள்ள இடங்களை உடனடியாக கண்டு பிடித்து, நடவடிக்கை எடுத்து, நிறுத்துவதன் மூலம் சில தப்பான நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது,

எனது தொகுதியில் முக்கியமாக நியாயவிலையில் பொருள் களைப் பெறமுடியாத ஒருசில பஞ்சாயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு உடனடியாக நட வடிக்கை எடுத்து, மாற்று கடைகள் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வல்லகுளம் பஞ்சாயத்து நியாயவிலைக் கடை மூலம் பொருள்கள் வாங்க முடியாத நிலை ஏற்பட்ட ஊர்களுக்கு மாற்று ஊர், அரியநாயகிபுரம் அல்லது மணல்விளை. இந்த ஊர்களில் ஒரு கடை அமைத்து வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதைப்போன்று பளங்குளம் பஞ்சாயத்தில் நியாயவிலை கடையின் மூலமாகப் போடப்படும் பொருள்களைத்தான் செட்டிகுளம் பஞ்சாயத்தைச் சேர்ந்தவர்களும் வாங்கவேண்டிய நிலை இருந்துவருகிறது. எனவே, செட்டிகுளம் பஞ்சாயத்துக்கு ஒரு தனி கடைக்கு ஏற்பாடு செய்து செட்டிகுளம் அல்லது நொச்சிகுளத்தில் வைத்து விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்பேன்று அசூர்பூச்சிக்காடு பஞ்சாயத்தைச் சேர்ந்த 2,500 கார்டுதாரர்கள் சரியான முறையில் நுகர் பொருள்களை வாங்க முடியாத நிலைமை இருந்துவருகிறது. இந்தக் குறைபாட்டைப் போக்க பூச்சிக்காட்டில் ஒரு தனி கடை எற்பாடு செய்து கொடுத்து சரியான முறையில் எல்லா மக்களுக்கும் நுகர்பொருள் கிடைக்க வழிவகைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று முதலூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த நியாய விலைக் கடை மூலம் சில சிற்றூர்கள் எந்த விதமான நுகர் பொருள்களையும் பெற முடியாத நிலை இருக்கிறது. இக் குறையைப் போக்க உடனடியாக அடைக்கலாபுரம் என்ற ஊரில் வாரத்திற்கு இரண்டு நாள் நுகர்பொருள்களைக் கொண்டு போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று தயிலாபுரம் பஞ்சாயத்தைச் சார்ந்த, நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் பொருள்களைப் பெற முடியாத எழுவர்முக்கி என்ற கிராமத்திற்கு வாரத்தில் இரண்டு நாள் பொருள்களளக் கொண்டுபோய் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறு முடிக்கிறேன். வணக்கம்.





(பிற்பகல் 12-30)

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள உணவுத்துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள் கிறேன்.

தமிழகத்தின் உணவு நிலைமை திருப்திகரமாக இருப்பதாக இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தமிழகத்தில் அதிலும் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தியாகக்கூடிய நெல் முழுவதையும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் அரசு கொள்முதல் செய்கிறது. அவ்வாறு கொள்முதல் செய்யப்படுவதைப் பொறுத்த வரையில் குறிப்பாக குறுவையைப் பொறுத்தவரையில் மழைக் காலத்தில்தான் அந்தக் கொள்முதலைச் செய்கிறார்கள். அப்படி எடுக்கிறபோது 18 சதவீதத்திலிருந்து 25 சதவீதம் வரையிலும் நெல் எடுக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் 20-க்கு மேற்பட்டு அந்த ஈரப்பதம் இருப்பதன் காரணமாக அதிகமான அளவுக்குப் பிடித்தம் செய்கிறார்கள். அப்படி செய்து அந்த நெல்லை எடுத்தாலும் அந்த நெல்லை வைப்பதற்கு பாது காப்பான இடம் இல்லை. பாதுகாப்பான இடம் இல்லை என்கிற நிலைமையில் கொள்முதல் செய்வதிலும் மிகப்பெரிய தேக்க நிலை ஏற்பட்டு அதன் காரணத்தால் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே தண்ணீர் வந்ததிலிருந்து அறுவடை செய்து நெல்லை கொண்டு வருகிற வரையில் விவ சாயிகள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். மழையால் பாதிக்கப் படுகிறார்கள்; பூச்சியால் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப் பல் வேறு பாதிப்புக்களிலிருந்து பாதுகாக்கப்பட்டு கொண்டுவரப் படக்கூடிய அந்த நெல்லுக்கு பாதுகாப்பான இடங்கள் இல்லாமல் தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். அரசாங்கம் கொள்முதல் செய்ததற்குப் பிறகும் 15 தினங்கள் ஒரு குடோனில் அடைத்து வைத்துவிட்டால் அது முளைத்துவிடுவதன் மூலமாக அரசாங்கத்திற்கும் நஷ்டம் வருகிறது. இப்படி இரண்டு தரப்பாருக்கும் ஏற்படுகின்ற நஷ்டத்தைத் தடுக்கின்ற வகையில் தஞ்சை மாவட்டத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும், அதாவது கொள்முதல் நிலையம் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் 15 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் மூட்டை வரையில் பாதுகாப்பாக வைக்கக்கூடிய அளவுக்கு பாதுகாப்பான இல்லங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கடுமையான மழை பெய்கிறபோது கொள்முதல் செய்யப்படுவதால் ஈரம் என்ற பெயரில் திருப்பிவிட்டுவிடுகிறார்கள். அப்படி திருப்பி விடுவதன் மூலமாக யாருக்கு இலாபம் கிடைக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அங்கே கிராமங்களிலே இருக்கக்கூடிய வியாபாரிகள் அதே நெல்லை வாங்குகிறார்கள். விவசாயிகளைப் பொறுத்தவரையில் சிறிய வீடாகத்தான் வைத்திருக்கிறார்கள். ஆகவே அங்கே அந்த நெல்லை வைக்க முடியவில்லை. அந்த நிலைமையில் வியாபாரிகள் மூட்டைக்கு 10 ரூபாய், 15 ரூபாய் என்று குறைத்து வாங்குகிறார்கள். அப்படி வாங்கிக் கொண்டுவந்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் உள்ள அதிகாரிகளிடத்திலே விற்றுவிடுகிறார்கள். இப்படி திருப்பி விடப்பட்ட நெல்லை வியாபாரிகள் கொண்டுவந்து விற்கிற நிலைமை இருக்கிறது. இதைத் தடுக்கின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயிகள் கொண்டுவரக்கூடிய நெல் முழுவதையும் அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்றுக்கொள்கிற வகையில் ஏற்படுகின்ற சிறிய நஷ்டங்களை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தமிழகத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சென்று உணவு கொள்முதல் செய்கிறார்கள். அதாவது மகாராஷ்டிரா, ஆந்திரா, பஞ்சாப் மாநிலங்களுக்குச் சென்று கொள்முதல் செய்கிறார்கள். அப்படி கொள்முதல் செய்கிறபோது 290 ரூபாய், 380 ரூபாய், 310 ரூபாய் என்றெல்லாம் விலை கொடுத்து வாங்கி வருகிறார்கள். ஆனால் இங்கே கொடுக்கின்ற விலை 142 ரூபாய், 146 ரூபாய், 150 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். அந்த 150 ரூபாயோடு 35 ரூபாய் அந்த ஊக்கத் தொகையைச் சேர்த்தால் 185 ரூபாய்தான் வருகிறது. இதிலே இன்னும் ஒரு 30 ரூபாய் அல்லது 20 ரூபாய் சேர்த்து 200 ரூபாய் குவிண்டால் ஒன்றுக்குக் கொடுத்து இங்கே கொள்முதல் செய்தால் வெளி மாநிலங்களில் இருக்கக்கூடிய இடைத்தரகர்களுக்குக் கிடைக்கின்ற அந்தத் தொகை இங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குக் கிடைத்து அதனால் அவர்கள் பயன் பெற முடியும். அவர்களைப் பாதுகாக்க முடியும். எனவே இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்திலாவது ஆவன செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உரத்திற்கு 35 ரூபாய் தருகிறார்கள் அதை வரவேற்கிறோம். 35 ரூபாய்க்கு கூப்பன் வாங்கிய பிறகு, குறுவை நாற்று பருவம் வந்த 30 நாட்கள் கழித்து நடப்படவேண்டும் என்று சொன்னால், அந்த 30 நாட்களுக்கும் உரம் கிடைப்பது இல்லை. கூட்டுறவு சொசைட்டியிலே கேட்டால் உரம் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதனால் நாற்றை 40 நாட்கள் வரை வைத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. 40 நாட்கள் வைத்திருந்தால் ஒரு கணு ஏறிவிடுகிறது. அப்படி அந்த நாற்றினுடைய பருவம் கெட்டுவிட்டால் அடுத்த மகசூல்





குறைகிறது. அதனாலே எந்த நேரத்திலே விவசாயிகள் உரம் கேட்டாலும் அந்த உரத்தைக் கொடுக்க வேண்டும். அப்படி உரம் கொடுக்க முடியாவிட்டால் அந்த விவசாயிகளுக்கு பணமாக கொடுத்து, அதன் லாபம் விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய அளவுக்கு எதிர்காலத்தில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தாற்போல அமுதம் அங்காடி. உண்மையிலேயே இந்த அமுதம் அங்காடி இருப்பது கிராமத்திலே இருக்கிற ஜனங்களுக்கு நன்மை பயக்கிறது. அதை இல்லை என்று சொல்லவில்லை. ஏனென்றால் மண்ணெண்ணெய் கிடைக்கிறது. அரிசி கிடைக்கிறது. புளி கிடைக்கிறது. எல்லாப் பொருள்களும் கிடைக்கிறது. ஆனால் எப்படி கிடைக்கிறது என்று சொன்னால் கிராமப்புறத்திலே இருக்கிற விவசாயத் தொழிலாளி காலையிலே வயலுக்குப் போய்விட்டால் இரவு 6½ மணி அல்லது 7 மணிக்குத்தான் வீட்டிற்கு வருவார்கள். ஆனால் அமுதம் அங்காடியை இரண்டு மணிக்கு திறக்கிறார்கள் 7 மணிக்கே மூடிவிட்டுப் போய்விடுகிறார்கள். விவசாயத் தொழிலாளி காலையில் வாங்க வந்தாலும் கடை மூடிக்கிடக்கிறது. காலையிலே அவன் அப்படியே வேலைக்குப் போய்விடுகிறான். இரவிலே 7, 8 மணிக்கு திரும்ப வரும்போது சம்பளம் வாங்கிக் கொண்டு வந்து அரிசி வாங்க வந்தால் கடை மூடிக்கிடக்கிறது. அப்படி அவர்கள் வாங்காத போது அரிசி தேக்க நிலை ஏற்பட்டு மாதக் கடைசியில் எப்படியும் கணக்கு காட்டப்பட வேண்டும் என்பதற்காக அரிசியை வெளியிலே விற்று விடுகிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அமுதம் அங்காடி காலையில் 8 மணிக்கு திறக்கட்டும் ஒரு மணிக்கு சாத்தட்டும். மாலை 3 மணிக்கு திறந்து இரவு 8 வரையில் கடை திறந்திருந்தால்தான், அரசு மூலமாகக் கொடுக்கப்படக்கூடிய தானியங்கள் கிராமப்புற விவசாயிகளுக்கும் நியாய விலையில் போய்ச் சேரக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இந்த அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் அமுதம் அங்காடியில் மிகப் பெரிய தவறுகள் நடக்கிறது. பாமாயில் வருவது கண்ணுக்கே தெரிவதில்லை. போன வருஷம் தீபாவளி சமயம் திருத்துறைப்பூண்டியிலே பாமாயில் ரயிலிலே வந்தது. அப்போது எல்லோருக்கும் கிடைக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் கடைசிவரையில் கிடைக்கவில்லை. ரயில் மூலமாக வந்த அந்த பாமாயில் எங்கே போச்சு என்றே தெரியவில்லை. ஆகவே ஒவ்வொரு அமுதம் அங்காடியிலும் குறைந்த விலையில் விற்கப்படக்கூடிய இந்த பாமாயில் ஜனங்கள் எல்லோருக்கும் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல தவறுகள் நடப்பதற்கு என்ன காரணம் என்பதை யோசிக்க வேண்டும். அங்கு வேலை செய்கிற ஊழியர்களுக்கு குறைந்த சம்பளம். இந்தக் காலத்தில் இந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு வாழ்வது கட்டுப்படியாகாது. ஆகவே ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதோடு அமுதம் அங்காடியில் பணியாற்றக் கூடிய அந்த ஊழியர்களை நிரந்தரமாக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல நெல் கொள்முதல் குறித்து மிகப்பெரிய தவறுகள் நடந்திருக்கின்றன. அந்தத் தவறுகள் நடந்ததற்கு காரணம் என்ன என்பதைக் குறித்து எல்லாம் நான் விவரிக்க விரும்பவில்லை. அந்தத் தவறுகளைப் போக்க வேண்டும் என்றால், நெல் கொள்முதல் நிலையத்தில் வேலை செய்யக்கூடிய பணியாளர்களுக்கு சம்பளத்தை, இன்றைக்கு நிலவக் கூடிய விலைவாசிக்கு ஏற்றார் போல உயர்த்திக் கொடுக்க வேண்டும். அவர்களை நிரந்தர ஊழியர்களாகவும் ஆக்க வேண்டும். காரணம் 10 மாதம் வரையில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்த அடிப்படையில் அந்த ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்த அமுதம் அங்காடியில் 500 கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக்கடை அமைக்கப்படும் என்று இந்த குறிப்பிலே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமை எப்படி என்று சொன்னால், 700, 800, 1000 கார்டுகளுக்கு கூட ஒரு நியாய விலைக் கடை அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அந்த கார்டுதாரர்கள் 5 மைல், 4 மைல் 7 மைல், என்று சென்று அரிசி வாங்க வேண்டிய அவல நிலை இருக்கிறது. குறிப்பாக கிராமப்பகுதியிலே தொண்டியகாடு என்ற ஊர் கடற்கரை அருகாமையில் இருக்கிறது. அதன் நியாயவிலைக் கடை கர்ப்பக நாதர்குளம் என்னும் இடத்திலே 7 கிலோ மீட்டர் தாண்டி இருக்கிறது. டவுன் பஸ்ஸில் போய் அங்கே மக்கள் பொருள்களை வாங்கி வருகிறார்கள்.

அதேபோல கீழநம்மங்குறிஞ்சிப் பகுதியில் இருக்கும் மக்கள் மங்கல்கிராமம் என்ற இடத்தில் 6 கிலோ மீட்டர் தொலைவில். அதேபோல கோட்டூர் யூனியனில் திருநெல்லிக்காவலில் இருப்பவர்கள் வந்து வாங்கக் கடை இல்லை. திருகாமணி என்ற இடத்திற்கு போக வேண்டும். அது 7 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இதையெல்லாம் உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். இப்படி கிராமப்புறங்களிலே 7 கிலோமீட்டர், 5 கிலோமீட்டர் தள்ளி அமுதம் அங்காடி இருப்பதனால், கிராமத்திலே இருப்பவர்கள் ஒரு நாள் வேலையை இழந்துதான், மண்ணெண்ணெய் அரிசி போன்றவை வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது



அதைப்போக்க வேண்டும் என்றால் அந்தந்த கிராமத்திலேயே 500 கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற நியதிப் படி, கடைகளை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இறுதியாக தமிழகத்தினுடைய உணவு நிலைமை எப்படியோ திருப்திகரயாக இருக்கிறது என்றெல்லாம் இதிலே இருந்தாலும் கூட தன்னிறைவு பெறவில்லை. தமிழகத்தின் நெற்களஞ்சியமாக இருக்கிற தஞ்சை மாவட்டம், காவிரிப் பாசனத்தை நம்பி வாழக்கூடிய பகுதி. அப்படிக் காவிரிப் பாசனம் இருந்தும் தமிழகம் இன்றைக்கு தன்னிறைவு பெற முடியாத நிலையில் மத்திய சர்க்காரிடம் கையேந்தி நிற்கக்கூடிய நிலை இருக்கிறது. எதிர்காலத்தில் மத்திய சர்க்காரிடத்தில் கையேந்தாமல் தமிழகத்தின் உணவு நிலைமை தன்னிறைவாக இருக்கும் வகையில், தமிழகத்தின் உற்பத்தி இலக்கை நாம் விஞ்சிவிட்டோம் என்ற நிலையில் உணவு உற்பத்தி செய்கின்ற நிலையை உணவுத் துறையும், அமைச்சர் அவர்களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

(பிற்பகல் 12–40)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஒன்பது உறுப்பினர்கள் உணவுத் துறை மானியக் கோரிக்கையில் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் இந்த அரசின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஒன்பது உறுப்பினர்களில் சிலபேர் உணவுத் துறை சிறப்பாக நிர்வகிக்கப்படுகிறது என்று பாராட்டினார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றி. சிலபேர் இருக்கிற குறைபாடுகளை அல்லது இருப்பதாகத் தாங்கள் கருதுகிற குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்கும் என்னுடைய நன்றி. கீழ்மட்டத்தில் தவறுகள் நடக்குமானால், அந்தத் தவறுகளைத் திருத்த, முறையாக பொது விநியோகம் நடக்க மக்கள் அடிப்படை அத்தியாவசியப் பண்டங்களை சிரமமின்றி, சீராகப் பெற தங்கள் கருத்துக்கள் உதவியாக இருக்குமென்ற அடிப்படையில் கருத்துத் தெரிவித்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

சென்ற ஆண்டு இதே மானியக் கோரிக்கையில் மாண்புமிகு உறுப்பினர்கள் 24 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருந்தார்கள். இந்த ஆண்டு 54 வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருப்பதிலிருந்து இந்தத் துறையின் மீது அல்லது இந்தத் துறை நேரிடையாக மக்களுக்கு வேண்டிய பணிகளில் ஈடுபட்டிருப்பதால் அந்த மக்களின்

மீது ஈடுபாடு கொண்டு அவர்களின் குறைகள் களையப்பட வேண்டுமென்ற அக்கறையோடு மன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதை அறிய முடியும். எனவே நான் மீண்டும் அதற்காக என்னுடைய பாராட்டுக்களை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களால் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போல உணவு நிலைமை தமிழகத்தில் அப்படியொன்றும் கவலைக்கிடமாக இல்லை. அதனால் தான் சீராக இருக்கிறது, திருப்தியாக இருக்கிறது என்ற வாசகங்களை நாங்கள் கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்பிலே அரசின் சார்பிலே சொல்லியிருக்கிறோம். அது எப்படி சீராக இருக்கிறது, திருப்திகரமாக இருக்கிறது என்பதற்கான புள்ளிவிவரங்களை கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் விவரமாகத் தந்திருக்கிறோம். முதலில் ஒவ்வொன்றாக இந்தத் துறையில் நடைபெற்று வருகிற பணிகளை விளக்கி விட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற சீர்திருத்தங்களுக்கு, கேட்டிருக்கிற தேவைகளுக்கு, சொல்லியிருக்கிற குற்றச்சாட்டுகளுக்கு அதற்குப் பின்னாலே பதில் தருகிறேன்.

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசினுடைய முகவராக இருந்து பொது விநியோகத்திற்கான நெல்லைக் கொள்முதல் செய்து அரைத்து, பாதுகாத்து, சேமித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்கிற பணியிலே ஈடுபட்டிருக்கிறது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில் 1976-77-ஆம் ஆண்டிலே இதனுடைய கொள்முதல் மதிப்பு அதாவது 'பர்சேஸ் டர்ன்-ஓவர்' ஏறக்குறைய 79 கோடியாக இருந்தது. இன்றைக்கு 1984-85-ம் ஆண்டில் இந்த அளவு சுமார் 518 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

அதேபோல் 1976-77-லே விற்பனை மதிப்பீடு, சேல்ஸ் டர்ன் ஓவர் 187 கோடியாக இருந்தது. இன்றைக்கு, இந்த ஆண்டு, 1985-86-லே 526 கோடியாக உயர்ந்திருக்கிறது. சென்ற ஆண்டு சுமார் 443 கோடியாக இருந்தது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு விற்பனை மதிப்பீடு சுமார் 18 சதவீதம் உயர்ந்திருக்கிறது. பணிகள் எப்படி விரிவாக்கம் செய்யப்பட்டு மக்களுக்கு வேண்டிய காரியங்கள் வேகமாக விரிவாக்கம் செய்யப்பட்டு நடைபெறுகின்றன இந்தக் கழகத்தின் சார்பிலே என்பதை சுட்டிக்காட்டத்தான் இந்தப் புள்ளிவிவரத்தை நான் இங்கே குறிப்பிட்டேன்.

அதோடுமட்டுமல்லாமல், தமிழகத்திலே இருக்கிற சுமார் 66,504 முதலமைச்சர் சத்துணவுக் கூடங்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தான், வழங்கப்படுகிற அரிசி,





பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருட்களை முறையாகக் கொண்டு போய்ச் சேர்க்கிற பணியிலே ஓர் ஆண்டுக்காலமாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, மிகச் சிறப்பாக அந்தப் பணியை செய்து கொண்டு இருக்கிறது.

கொள்முதலைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அந்தப் பணியிலே ஈடுபட்டு இருக்கிறது. இந்த ஆண்டு காவிரி நீர் முறையான காலத்தில் போதுமான அளவில் வராத சூழ்நிலையில், பருவ மழை எதிர்பார்த்த அளவு இல்லாத நிலை ஆகியவற்றால் காவிரி டெல்டா பகுதிகளில் மட்டும் ஏறக்குறைய சுமார் 1 லட்சத்து 46 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு பயிரிடும் அளவு குறைந்து இருக்கிறது. இதன் காரணத்தால், ஏறக்குறைய 7.14 லட்சம் டன் நெல் உற்பத்தி குறைந்திருக்கிறது. பயிரிடப்பட்ட அளவிலே சென்ற ஆண்டுக்கும் இந்த ஆண்டுக்கும் சுமார் 32 சதவீதம், இயற்கையின் பாதிப்பு, காவிரி நீர் நான் சொன்னது போல், முறையான நேரத்தில் சரியான அளவு வராத காரணத்தால், பயிரிடும் நிலப்பரப்பு குறைந்திருக்கிறது. இருப்பினும் கொள்முதல் அளவு, 1985-86-லே குறுவையைப் பொறுத்தவரைக்கும் ஏறக்குறைய 2 லட்சத்து 96 ஆயிரம் டன்னும், சம்பாவைப் பொறுத்தவரைக்கும் 3 லட்சத்து 90 ஆயிரம் டன்னும், ஆக ஏறக்குறைய 6 லட்சத்து 70 ஆயிரம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, மற்ற மாவட்டங்களிலே 50 சதவீதம் டிரேடர்ஸ் லெவி, வியாபாரிகளிடத்தில் இருந்து லெவியும், தஞ்சை மாவட்டம் முழுவதும், தென் ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு தாலுக்காக்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 தாலுக்காக்கள். திருச்சி மாவட்டத்திலே சில பகுதிகள், சுமார் 5, 6 தாலுக்காக்கள், இப்படி இந்தப் பகுதிகளிலே எல்லாம் ஏகபோக கொள்முதல் என்கிற நிலையை, தேவையைக் கருதிக் கொண்டு வந்து, இப்படி நேரடிக் கொள்முதல் நிலையங்களிலே கொண்டு வந்து, லெவி தருகிற விவசாயப் பெருங்குடி மக்கள் பலன் பெறுவதற்காக, சுமார் 35 ரூபாய் இடுபொருள் மானியமாக தொடர்ந்து ஏகபோக கொள்முதல் அமுலாக்கப்பட்டதிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இதிலே இதுவரை குறுவையைப் பொறுத்தவரைக்கும் சுமார் 11.62 கோடியும், சம்பாவைப் பொறுத்தவரைக்கும், இதுவரை 5.55 கோடியும், ஆக மொத்தம் ஏறக்குறைய 17.17 கோடி ரூபாய் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டு இருக்கிறது.

(திரு. எஸ். திருநாவுக்கரசு) [1986 ஏப்ரல் 2

(பிற்பகல் 12-50)

அதனாலே பலன் அடைந்திருக்கிற விவசாயப் பெருமக்கள் சுமார் 5.55 லட்சம் பேர் ஆவார்கள். சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் மாண்புமிகு சிவஞானம் அவர்கள் பேசுகிற போதும், அதைப்போல மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோதும் இந்த மாதத்தோடு, வழங்கப்படுகிற ஈட்டுப் பொருள் மானியம் நிறுத்தப்படுவதாக அறிகிறோம், இன்னும் அதைத் தொடரவேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் விவசாயிகளுடைய மெனில் அக்கறை உள்ளவர் என்கிற காரணத்தினாலே ஏகபோகக் கோள்முதல் ஏப்ரல் மாதம் இறுதிவரை நீட்டிக்கப்படுவதோடு வழங்கப்பட்டுள்ள 35 ரூபாய் ஈட்டுப்பொருள் மானியமும் வருகிற ஏப்ரல் மாதத்திலேயிருந்து தொடர்ந்து வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவு இட்டார்கள். அது தொடர்ந்து வழங்கப்படும்.

இப்படி உங்களிடத்திலே நான் ஏற்கனவே சொன்னதுபோல சுமார் 6 லட்சத்து 70 ஆயிரம் டன் அரிசி கொள்முதல் செய்யப் பட்டிருக்கிறது ஆனால் பொது வினியோகத்திற்கு தமிழகத்திலே நாம் வழங்கி இருக்கிற குடும்ப அட்டைகள் மொத்தம் சும்மார் 1,19,65,000 ஆகும். இப்படி வழங்கப்பட்ட 1,19,65,000 குடும்ப அட்டைகளுக்கும் நாம் அரிசி மற்றும் அத்தியாவசியப் பண்டங்களை வழங்குகிறோம். இதோடு அல்லாமல் மாண்புமிகு முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்கும் சராசரியாக ஒரு மாதத்திற்கு சுமார் 20 ஆயிரம் டன் அரிசி ஏறக்குறைய 80 லட்சம் குழந்தைகளுக்கும், 2 லட்சம் முதியோருக்குமாகச் சேர்த்து வழங்கப்படுகிறது. ஆக சராசரியாக, மூன்று மாதங்களுக்கு முன்னாலே இருந்ததைச் சொல்கிறேன். ஒரு மாதத்திற்கு பொது வினியோகத்திற்கு, சுமார் 1 லட்சத்து 10 ஆயிரத்திலிருந்து 1 லட்சத்து 20 ஆயிரம் வரை பொது வினியோகத்திற்கும், 20 ஆயிரம் டன் வரைக்கும் முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்கும், ஆக ஒரு மாதத்திற்கு 1 லட்சத்து 30 ஆயிரத்திலிருந்து 1 லட்சத்து 40 ஆயிரம் டன் வரைக்கும் தேவைப்பட்டது. அதற்குப் பின்னால், ஒரு சமயத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர் சுட்டிக்காட்டியதுபோல 20 கிலோவாக இருந்த உச்ச அளவு 12 கிலோவாக குறைத்ததற்கு பின்னால் சராசரியாக ஒரு மாதத்திற்கு பொது வினியோகத்திற்கு சுமார் 80 ஆயிரம் டன் அரிசி தேவைப்படுகிறது. சத்துணவுத் திட்டத்திற்கும் அதே அளவுதான் 20 ஆயிரம் டன். ஆக ஒரு மாதத்திற்கு சுமார் 1 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. தமிழகத்திலே ஏறக்குறைய 20,823 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. இந்த 1 கோடியே 19 லட்சம் குடும்ப அட்டைகளுக்கும் இந்த 20,823 நியாய விலைக் கடைகளை. கூட்டுறவுத் துறை மற்றும்



1986 ஏப்ரல் 2] (திரு. எஸ். திருநாவுக்கரசு)

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நடத்தப்படுகிற அந்தக் கடைகளின் மூலமாக அரிசி மற்றும் அத்தியாவசியப் பண்டங்களும் வழங்கப்படுகின்றன. இதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் பேசுகிறபோது இந்தக் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற செலவினத்தைப்பற்றியெல்லாம் சுட்டிக் காட்டினார்கள். அதற்சாகத்தான் சொல்ல விரும்புகிறேன். 77-லே இந்த ஆட்சி ஏற்படுகிறபோது புரட்சித் தலைவர் முதலமைச்சராக இந்த நாட்டு மக்களால் அங்கீகாரம் செய்யப்பட்டபோது, இந்த ஆட்சி ஏற்படுத்தப்பட்டபோது சுமார் ஏறக்குறைய 9 ஆயிரம் நியாய விலைக் கடைகள்தான் இருந்தன. அதற்குப் பின்னாலே மக்களின் நலன் கருதி ஆண்டுதோறும் இப்போதும் கூட சில சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது தங்களுடைய தொகுதிகளிலே நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். இப்படி வந்த வேண்டுகோளின் அடிப்படையிலே நியாய விலைக் கடைகள் அதிகரிக்கப்பட்டு வந்து இன்றைக்கு அதனுடைய அளவு ஏறக் குறைய 20,723 ஆக இருக்கிறது. அதிலேயும் மாண்புமிகு முதல்வர் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை வீதம் இருக்கவேண்டுமென்று 15–9–1984லே அறிவித்தார்கள்.

அதற்குப்பின்னால் அப்படி மாற்றி அமைக்கப்பட்டபிறகு ஏறத்தாழ 3,021 கடைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. இங்கே பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு கடை வீதம் மீண்டும் மாற்றி அமைத்தால் பொதுமக்களுக்கு தொல்லை இல்லாமல் நலன் தருவது ஆகும் என்று சொன்னார்கள். ஏற்கனவே ஆயிரம் குடும்ப அட்டைக்கு ஒரு நியாய விலைக் கடை என்ற முறையில் 1984 ஆம் ஆண்டு 8-வது மாதம் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார்கள். அதன்படி மாற்றம் செய்யப்பட்டன. ஒரு நியாய விலைக் கடைக்கு இவ்வளவு குடும்ப அட்டைகள் இருந்தால் அந்த நியாய விலைக் கடை லாபகரமாக இல்லாவிட்டாலும் நஷ்டம் இல்லாமல் நடக்கும் என்ற அளவுக்கு ஆய்வு செய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு பரிந்துரை செய்தது ஒரு நியாய விலைக் கடைக்கு குறைந்த பட்சம் 1,500 குடும்ப அட்டைகள் இருந்தால் தான் நியாய விலைக் கடை ஓரளவுக்கு பெரிய அளவில் நஷ்டம் இல்லாமல் நடத்த முடியும் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறது.

அந்த மக்கள் நலன் காக்கும் இந்த அரசு ஆயிரம் குடும்ப அட்டைக்கு ஒரு கடை என்று மாற்றி அமைத்தது. பெயர் அளவில் ஆயிரம் குடும்ப அட்டைக்கு ஒரு கடை என்று இருக்கிறதே தவிர நீங்கள் சராசரியான அளவை எடுத்துப் பார்த்தால் இருக்கிற 20,823 நியாய விலைக் கடைக்கும் வழங்கப்பட்டு இருக்கிற குடும்ப அட்டைகளை சராசரியை கணக்கு எடுத்துப் பார்த்தால்

ஒரு கடைக்கு சுமார் 575 அட்டை வீதம் தான் வருகிறது. அனேகமாக நாம் பெருமையோடு சொல்ல முடியும். இந்தியாவில் இருக்கிற எந்த மாநிலத்தோடு ஒப்பிட்டாலும் இந்த அளவுக்கு பொது மக்கள் நலன் கருதி சராசரியாக 575 குடும்ப அட்டைகள் ஒரு நியாய விலைக் கடைக்கு என்ற அளவில் இருக்கிறது. எல்லா ரெவின்யூ கிராமங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகள் இன்றைக்கு பல குக்கிராமங்களில் அமைந்து இருக்கின்றன என்ற விதத்தில் தமிழ்நாட்டில் சிறப்பாக இந்த பொது விநியோக முறை அமல் செய்யப்பட்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடும் பெருமையோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் விவரமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் 500குடும்ப அட்டைக்குக் கீழும் இருக்கிற நியாய விலைக் கடைகள் 9 ஆயிரம் கடைகள் இருக்கின்றன. இருக்கிற 20 ஆயிரம் கடைகளில் 9 ஆயிரம் கடைகளில் 500 அட்டைக்கும் குறைவாக தான் இப்போது இருந்து கொண்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். இப்படி சீரான முறையில் பொது விநியோகம் பொது மக்கள் நலன் கருதி தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் சிறப்பாக செயல் பட்டுக்கொண்டு வருகிறது.

அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபேர் இங்கே பேசுகிற போது 20 கிலோவாக இருந்த அளவை 12 கிலோவாகக் குறைத்து விட்டார்கள் என்று ஏதோ காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எல்லாம் கிராமம் தோறும் நியாய விலைக் கடைகள் தோறும் குடும்ப அட்டைகளுக்கு 20 கிலோ அரிசி தொடர்ந்து தந்தது போலவும் இந்த அரசு வந்த பிறகு தான் அதைத் தடுத்துக் குறைந்து விட்டது போலவும் இங்கே பேசுகிற போது சுட்டிக் காட்டினார்கள். மாமன்ற உறுப்பினர்கள் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக சில விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். 15—4—1984க்கு முன்னால் கிராமப் புறங்களில் குடும்ப அட்டைக்கு தரப்பட்ட அதிகப்பட்ச அரிசி 6 கிலோதான். 15—9—1984க்கு முன்னால் கொடுக்கப் பட்டு வந்த அதிகப்பட்ச அரிசி ஒரு குடும்ப அட்டைக்கு 6 கிலோ கிராமப் புறத்திலும், நகர் புறத்தில் 12 கிலோ அரிசி என்றும் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் 15-9-1980க்கு பின்னால் அப்போது அதிகமாக அரிசி கையிருப்பு இருந்ததை மனதில் கொண்டு பொது மக்களின் நலன் கருதி நகர்ப்புறமாக இருந்தாலும் கிராமப்புறமாக இருந்தாலும் எல்லோருக்கும் 20 கிலோ என்று அறிவித்தார்கள். இப்போது சிரமமாக இருப்பதால் 3 மாத காலமாக 1-11-1985 முதல் இந்த 20 கிலோ என்பதை 12 கிலோ என்று குறைத்து



(பிற்பகல் 1-00)

இருக்கிறோம். குறைத்திருக்கிறோம் என்று சொன்னால், 1.19 கோடி குடும்ப அட்டைகளுக்கும் இப்படி குறைக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால், இல்லை. ஏதோ எல்லோருக்கும் 20 கிலோ அரிசி வழங்கப்பட்டதுபோலவும், அது இப்போது 12 கிலோவாக குறைக்கப்பட்டதுபோலவும் மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கருதிக்கொண்டு, தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள். உண்மை அப்படியல்ல. ஒரு குடும்பத்திற்கு, கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் என்று சொன்னால் கணவருக்கு 4 கிலோ, மனைவிக்கு 4 கிலோ குழந்தைகளுக்கு 2 கிலோ ப்ளஸ் 2 கிலோ ஆக 12 கிலோ, கணவன் மனைவி 2 குழந்தைகள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு கொடுக்கப்பட்டது. இதற்கு முன்னால் 12 கிலோ அரிசி தான் உச்ச அளவாகத் தரப்பட்டது. ஒரு நபருக்கு 4 கிலோ, குழந்தைகளாக இருந்தால் 2 கிலோவாகக் கொடுக்கப்பட்டு, 12 கிலோ வரைக்கும் கொடுக்கப்பட்டு, பலபேர் பெற்றுக்கொண்டு வந்தார்கள். 20 கிலோவை ஒரு பகுதியினர் பெற்றுக்கொண்டு வந்தார்கள்- அது சுமார் எவ்வளவு பேர் என்று சொன்னால், ஏறக்குறைய 39 இலட்சம் பேர்கள். 12 கிலோவிலிருந்து 20 கிலோ வரை பெற்று வந்தார்கள். 1-11-1985-க்கு முன்னால் உள்ள நிலைமைகளைச் சொல்கிறேன். அப்போது 12 கிலோவிலிருந்து 20 கிலோ வரை பெற்றுக்கொண்டிருந்தவர்கள் 39 இலட்சம் பேர். 1.19 கோடி குடும்ப அட்டைகள் அல்ல. அந்த 39 இலட்சம் பேரில், எல்லோரும் 20 கிலோ பெற்றார்களா என்றால் இல்லை, அந்தந்தக் குடும்பத்தின் அளவிற்கு ஏற்றாற் போல், சில பேர் 15 கிலோ வாங்கியிருப்பார்கள். சில பேர் 16 கிலோ வாங்கியிருப்பார்கள். மற்றும் சில பேர் 18 கிலோ அல்லது 20 கிலோ வாங்கியிருப்பார்கள். ஆக மொத்தத்திலே 20 கிலோ வீதத்தில் எத்தனை பேர் என்று பார்த்தால், தோராயமாக, மூன்றில் ஒரு பகுதியினர் என்று எடுத்துக்கொண்டால், சற்றேறக்குறைய 10-லிருந்து 13 இலட்சம் பேர் இருக்கலாம். ஏறக்குறைய 20 கிலோ பெற்றிருப்பார்கள் இந்த இடைப்பட்ட காலத்தில்.

நிலப்பரப்பிலே குறைவு இருக்கிறது, உற்பத்தியிலே குறைவு இருக்கிறது. இவற்றையெல்லாம் மனதிலே கொண்டு, இந்த அளவிலே சிறிய மாறுதலை, நான் ஏற்கனவே சொன்னதுபோல, தனி நபருக்கு வழங்கப்பட்ட 4 கிலோ குறைக்கப்படவில்லை, குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட 2 கிலோவும் குறைக்கப்படவில்லை. 1 கிலோவிற்கு மேல் வாங்கிக் கொண்டிருந்தவர்களான, கிட்டத்தட்ட 10, 13 இலட்சம் பேர்கள் தான் இந்தக் குறைப்பால், இந்த இடைப்பட்ட காலத்தில் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். இது தான் நடந்ததே தவிர, அதற்குக் காரணம் ஏற்கனவே நான் சொன்னதுபோல் கொள்முதல் போதிய அளவு இல்லாததால். ஆக ஏதோ முதலில் 20 கிலோ

கொடுக்கப்பட்டது போலவும், இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு இது குறைக்கப்பட்டது போலவும் சொல்வது உண்மைக்கு புறம்பான வாதம். இன்னும் சொல்லப்போனால், முன்னால் இருந்ததை விட இப்போது அதிகமாகத் தருகிறோம். கிராமப்புறங்களில் 6 கிலோவிலிருந்து உயர்த்தி இப்போது 12 கிலோவாகத் தரப்படுகிறது. ஆக அதிகரித்துத் தரப்படுகிறது என்பது தான் உண்மையே தவிர, ரேஷன் அரிசியின் அளவு குறைக்கப்பட்டது என்பதல்ல. அதற்கான குற்றச் சாட்டுகளிலே, அதிகமான ஆதாரங்களில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்படி நாம் கொள்முதல் செய்தது போக, நமக்கும் இன்னும் தேவைப்படும் அளவு ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு 1 இலட்சம் டன் அரிசி, பொது விநியோகத்திற்கும், மதிய உணவுத் திட்டத்திற்கும் சேர்த்து. நாம் கொள்முதல் செய்தது $6\frac{3}{4}$ இலட்சம் டன். மீதித் தேவையைச் சரிக்கட்ட, மத்திய தொகுப்பிலிருந்து அதிகரித்துத் தரவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டோம். சுமார் 25,000 டன் மத்திய தொகுப்பிலிருந்து மாநில அரசிற்கு மத்திய அரசு தந்து கொண்டிருந்தது. இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டபோது, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார்கள். நேரிலும் சென்று வலியுறுத்தினார். அதற்குப் பிறகு, உணவுத் துறை அமைச்சர் என்ற முறையில் என்னுடைய தலைமையில், நானும், நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களும், உணவுத் துறை செயலாளர் அவர்களும், நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் அவர்களும், இப்படி நான்கு பேர்களைக் கொண்ட குழு சம்பந்தப்பட்ட மத்திய உணவு அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் சந்திக்க மாண்புமிகு முதல்வர் அவர்களால் அனுப்பப்பட்டு, நாங்களும் சென்று நேரடியாக வலியுறுத்தினோம். அதற்குப் பின்னாலே தான் 25,000 டன் ஆக இருந்த அந்த அளவை மாற்றி 1985 செப்டம்பரில் 35,000 டன் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அக்டோபரிலே 40 ஆயிரம் டன்னாக அது உயர்த்தப்பட்டது. ஆகவே மாதா மாதம் தருகிற அளவு இப்பொது 40 ஆயிரம் டன்னாக உயர்த்தப்பட்டிருக்கிறது, 40 ஆயிரம் டன் தருகிற ரெகுலர் அலாட்மெண்ட் தவிர 1 லட்சம் டன் நமக்குத் தேவை என்று நாம் மத்திய அரசைக் கேட்டோம். அந்த அடிப்படையிலே ஒன் டைம் அலாட்மெண்டாக ஒரு நேர ஒதுக்கீடாக ரெகுலர் ஒதுக்கீடான 40 ஆயிரம் டன்னைத் தவிர அடுத்த அடுத்த மாதங்களில் நவம்பர், டிசம்பர் மாதங்களிலே 40 ஆயிரம் பிளஸ் 50 ஆயிரம் என்று சேர்த்து 90 ஆயிரம் டன்னை மத்திய அரசு தந்தது. 1986 ஆம் ஆண்டு ஜனவரியில் 45 ஆயிரம் டன் தான் தந்தது. 1986 ஆம் ஆண்டு பிப்ரவரியில் மார்ச்சில் ஏப்ரலில்





நாம் பெற்றுக்கொண்டிருக்கிற சராசரி அளவான 40 ஆயிரம் டன்னைத்தான் தந்து கொண்டிருக்கிறார்கள். நாம் அது போதாது என்று சொல்லி ஏற்கெனவே தந்ததைப்போல் மீண்டும் 50 ஆயிரம் டன் ஒதுக்கீடு சேர்த்து 90 ஆயிரம் டன்னாக ஒரு மாதத்திற்குத் தரவேண்டுமென்று இன்னும் சில மாதங்களுக்கு அப்படித் தரவேண்டுமென்று கேட்டு மத்திய அரசின் உணவு அமைச்சருக்கு மாநில அரசின் சார்பாக கடிதங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அங்கேயும் புது அமைச்சர், அமைச்சர் மாறியிருக்கிறார், நானும் துறை அதிகாரிகளும் அவரைச் சந்தித்து தமிழகத்தின் கோரிக்கையை வலியுறுத்திக் கூடுதல் ஒதுக்கீட்டைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம், அப்படி மேற்கொள்ளுமாறு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் அவர்கள் பேசுகின்றபோது 1982—83, 1983—84 இல் இதுபோன்று பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் வெளி மாநிலங்களிலிருந்து அரிசி வாங்கியதைச் சுட்டிக்காட்டி ஏதோ மிகப் பெரிய தவறு மிகப் பெரிய ஊழல் நடக்கக் கூடாத கொடுமை தமிழகத்திலே நடந்துவிட்டதைப் போல அவர் பேசுகின்றபோது அவருக்கே உரிய பாணியிலே வருணித்தார். 1982—83, 1983—84 இல் அதுபோன்று எந்தத் தவறும் நடக்கவில்லை, எந்த ஊழலும் நடைபெறவில்லை என்பதை அன்றைக்கு இருந்த கோப்புகளை வரவழைத்துப் பார்த்ததற்குப் பின்னாலே அதற்குரிய புள்ளி விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெளி மாநிலங்களிலே நாம் வாங்குகிற சூழ்நிலை எப்போது ஏற்படுகிறது என்று சொன்னால் விவசாயிகளிடமிருந்து நேரடிக் கொள்முதல் மூலமாக எவ்வளவு செய்யமுடியுமோ அத்தனை முயற்சிகளையும் செய்கிறோம். அவர் சொன்னதைப்போல் தஞ்சை மாவட்டத்திலே ஏகபோகக் கொள்முதல் கொண்டுவரப்பட்டு 1982—83, 1983—84 இல் இப்போது இருக்கிற அதே முறை கொண்டுவரப்பட்டு இப்போது தரப்படுவதைப்போல் 35 ரூபாய் அதிகமாக அப்போது இடுபொருட்களுக்கு வழங்கப்பட்டு விவசாயிகள் நெல் தந்து நேரடிக் கொள்முதல் செய்து, ஏகபோகக் கொள்முதல் பகுதியிலே கொள்முதல் செய்ததற்குப் பிறகு, மத்திய அரசு ஒதுக்கீடு செய்ததற்குப் பிறகு இன்னும் நமக்குத் தேவையிருக்கிறது என்கிறபோது தேவையான அளவை, அந்த மார்ஜினை மாத்திரம்—ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு 12 லட்சம் டன் நமக்குத் தேவை என்றால் 11 லட்சம் டன்போக மீதம் தேவைப்படும் 1 லட்சம் டன்னை நாம்—மற்ற மாநிலங்களிலிருந்து டெண்டர்கள் மூலமாக அழைப்பு விடுத்து அதிலே அரசுத் துறை நிறுவனங்கள், தனியார்கள் அத்தனை பேர்களும் பங்கேற்கச் செய்து அதிலே யார் குறைவாக தருகிறார்களோ

அவர்களிடத்திலே வாங்கப்படுகிறது. 1982—83 இல் மாண்புமிகு உறுப்பினர் ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னார். ஆந்திராவிலே அதிகம் கொடுத்து வாங்கினீர்கள், பஞ்சாபிலேயும் உத்திரப் பிரதேசத்திலேயும் குறைத்துக் கொடுத்து வாங்கியிருக்கிறீர்கள் பக்கத்திலே இருக்கிற ஆந்திரத்திலே ஏன் அதிகம் கொடுத்து வாங்கினீர்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோதே அவரே இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். பஞ்சாபிலேயும் உத்திரப் பிரதேசத்திலேயும் அதிகம் கொடுத்து வாங்கியிருந்தால் தான் தவறு. ஏன் என்று சொன்னால் ஆந்திராவிலிருந்து வாங்குகிறபோது டிரான்ஸ்போர்ட் செய்யப்படுகிற நிலையையும் பஞ்சாபிலே, உத்திரப் பிரதேசத்திலே வாங்கிக் கொண்டுவரப் படுகிற நிலையையும் சேர்த்துப் பார்ப்பார்களானால் வேறு பாட்டைப் பார்க்கமுடியும். ஏற்கெனவே 1982—83 இல் நான் சொன்னதைப்போல் 1 லட்சத்து 70 ஆயிரம் டன் வாங்கப்பட்டிருக்கிறது. அதிலே மொத்தத்திலே 1982—83 இல் ஆந்திரத்திலிருந்து வாங்கியதில் ஒன்றும் அதிகமான வித்தியாசம் இல்லை.

(பிற்பகல் 1–10)

எனவே, இவர்கள் சொன்னதைப்போல ஏதோ 390, 240 என்றெல்லாம் புள்ளி விவரங்களைச் சொன்னார்கள். ஆக 1983–84-லே வாங்கி இருக்கிறபொழுது அதிலே அதிகமான அளவு பெரிய அளவிலே அதிலே வித்தியாசம் இல்லை. ஏறக்குறைய சுமார் 5,000 டன் அளவிற்குத்தான் நீங்கள் சொல்வதைப்போல அப்பொழுது ஆந்திராவிலேயிருந்து வாங்கப்பட்டு இருக்கிறது. மற்றதெல்லாம் மற்ற மாநிலங்களிலிருந்து வாங்கப்பட்டுஇருக்கிறது. ஆகவே, ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்றபொழுது இந்த இரண்டு ஆண்டுகளிலே, 1982–83, 1983–84 ஆம் ஆண்டுகளிலே அப்போதைக்கு வாங்கப்பட்டது; வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கப்பட்டது. ஆகவே, அதற்கு அரிசியை நம்முடைய மாநிலத்திலே கொள்முதல் செய்ய முடியாத சூழ்நிலையில், மத்திய அரசிலேயிருந்து அதிகமாகப் பெற முடியாத சூழ்நிலையில், பொது மக்களுக்கான விநியோகத்தையும் நிறுத்த முடியாது. அளவைக் குறைக்க முடியாது; சத்துணவுத் திட்டத்திற்கோ, பொது மக்களுக்கோ தரப்படுகின்ற அரிசியினுடைய அளவைக் குறைக்க முடியாது; எனவே, பொதுமக்களுடைய நலன் கருதி வெளி மாநிலங்களிலேயிருந்து அரிசி வாங்கப்பட்டது. அதிலே எந்த விதமான தவறும் இல்லை. இவர்கள் சொன்னதைப்போல இங்கே முயற்சி செய்திருக்கக்கூடாதா, வெளி மாநிலங்களிலேயிருந்து வாங்கினீர்களே என்று மணிமாறன் கேட்டார், அருமைத் தோழர் உத்திராபதி அவர்களும் கேட்டார்கள். இங்கே அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு ஏறக்குறைய 35 ரூபாய் வரைக்கும் வழங்கப்பட்டது. அதற்குமேலே இன்னமும் நீங்கள் தந்து இங்கேயே வாங்கியிருக்கலாமே என்றுகூட அவர்கள் கேட்டார்கள்.





அப்படி நீங்கள் பார்த்தால் இங்கேயே இன்னமும் வாங்கி. நமக்குத் தேவையான 12 இலட்சத்தையும் நம்முடைய விவசாயி களிடத்திலேயிருந்தே வாங்குவார்களேயானால் அந்த விலை அட்ராக்டிவாக இருக்காது, ஆனால் யாரிடத்திலேயிருந்து வாங்க லாம் என்றால் நம்முடைய விவசாயிகளிடத்திலேயிருந்துதான் வாங்கலாம். அப்படி வாங்குகிறபொழுது அதனாலே பாதிக்கப் படுகின்றவர்கள் யார் என்றால் மற்ற பொதுமக்கள்தான். நம் முடைய தேவை முழுவதையும் நாம் இங்கே வாங்குகிறபொழுது, விவசாயிகளிடத்திலேயிருந்து ஏகபோகக் கொள்முதல் மூலமாக அல்லது லெவி மூலமாக அதிகமாக விலை கொடுத்து வாங்குகிற பொழுது தமிழகத்தில் உள்ள அத்தனைக்கும், குடும்ப அட்டைகள் மூலமாகவோ எல்லாக் குடும்பங்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கவில்லை. நம்முடைய தேவை போக, வெளி மார்க்கெட்டிலேயிருந்து வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப் பொது விநியோகத்திலே நிச்சயமாக அதிகமாக விலை உயரும். அந்த விலையேற்றத்தைத் தாங்க முடியாமல் மக்கள் கஷ்டப்படுவார்கள். அதற்குப்பிறகு மொத்தமாகவே, குடும்ப அட்டைக்குக் கொடுப்பதற்கு மட்டுமல்ல, பொதுமக்களின் விநியோகத்திற்குக்கூட இதைவிட அதிகமாக வெளி மாநிலத்திலே யிருந்து கொண்டு வர வேண்டியிருக்கும். எனவே, அந்த அடிப் படையிலே, நாம் கொள்முதல் செய்தது போக மார்ஜினராக நமக்குத் தேவைப்படுகின்ற குறைந்த பட்ச அளவை மட்டும் சுமார் ஒரு இலட்சமோ, ஒன்றரை இலட்சமோ 1982—83 ஆம் ஆண்டிலே வாங்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் அந்தப் பிரச்சினையும் இப்பொழுது கிடையாது. இப்பொழுது நாம் எங்கும் வாங்கவில்லை. நேரிடையாகக் கொள்முதல் செய்கிற அந்த அளவு, மத்திய அரசு கொடுக்கின்ற அளவு, இந்த இரண்டை யும் வைத்துக்கொண்டுதான் சமாளித்துக்கொண்டு இருக்கிறோமே தவிர, இப்பொழுது சமீபத்திலே டெண்டரெல்லாம் கால்பார் செய்யப்பட்டது, ஒருவேளை அதை மனத்திற்கொண்டே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன். இப்பொழுது எந்த மாநிலத்திலே யிருந்தும் வாங்குகின்ற முயற்சியில் ஈடுபடவில்லை; வாங்கவும் இல்லை. ஏனென்றால் மத்திய அரசை ஓரளவு நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். தந்துகொண்டு இருப்பதாலே நிலைமையை ஓரளவுக்குச் சமாளித்துக்கொண்டு இருக்கிறோம். இங்கேயும் கொள்முதல் ஓரளவிற்குக் கூடியிருக்கிறது. இவற்றை வைத்துக் கொண்டு சமாளித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, 82-லே, 83-லே, 84-லே ஆந்திராவிலே வாங்கியதிலேயும், பஞ்சாபிலே யிருந்து வாங்கியதிலேயும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல எந்தவிதமான தவறுகளும் நடக்கவில்லை; ஊழலும் நடக்கவில்லை. தங்களுடைய குற்றச்சாட்டுக்கு அதிலே எந்த விதமான ஆதாரமும் இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுமக்களின் நலன் கருதி, விவசாயப் பெருமக்கள் தங்களால்

முடிந்த அல்லது நாமே ஏகபோகக் கொள்முதல் மூலம், கட்டாயப் படுத்தியெல்லாம் வாங்கியது போக, பொதுமக்கள் மத்தியிலே விலையேற்றம் இல்லாமல் இருக்க, பொதுமக்கள் பாதிக்கப்படா மல் இருக்க, பொதுமக்களுக்கு, நாம் அதிகமான விலையிலே வாங்கி, குறைந்த விலையிலே கொடுத்து, அந்த மானியத்தை அரசு ஏற்றுக்கொண்டு, குறைந்த விலையிலே பொதுமக்களுக்குத் தரப்படுகின்ற பொது விநியோகம் சீராக நடக்க என்ற அடிப் படையிலேதான் அந்தக் கொள்முதல் நடைபெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்படிருக்கிறேன்.

அரிசியினுடைய விலையைப் பொறுத்தவரைக்கும் மத்திய அரசு நமக்குத் தருகிற விலை, சாதாரண ரகம் 2 ரூபாய் 31 பைசா; சன்ன ரகம்—அதாவது ஃபைன் வெரைட்டி 2 ரூபாய் 43 பைசா; மிகச்சன்ன ரகம் 2 ரூபாய் 58 பைசா. நாம் குடும்ப அட்டைகளுக்கு பொது விநியோகத்திலே கொடுக்கிற விலை, மாநில அரசு கொடுக்கிற விலை, சாதாரண ரகம் ஒரு ரூபாய் 75 பைசா; சன்னம் 2 ரூபாய் 25 பைசா; அதைப் போல மத்திய அரசு ஐந்து தடவை அரிசியினுடைய விலையை ஏற்றியதற்குப் பின்னாலே நாம் 1-11-85-க்குப் பிறகு ஒரு தடவை அரிசியினுடைய விலையை ஏற்றியிருக்கிறோம்—77-க்குப் பின்னாலே தமிழகத்திலே புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்டதற்குப் பிறகு அரிசி விலையை ஏற்றியதே கிடையாது. இப்பொழுதுகூட சன்ன ரகத்திற்கு— சாதாரண ரகத்திற்கு அரிசி விலையை ஏற்றவே இல்லை. மத்திய அரசு 5 தடவை ஏற்றியதற்குப் பின்னாலேயும் நாம் ஏற்றவில்லை. ரூ. 1.75-க்குத்தான் விற்கிறோம். அதே அரிசியை, சாதாரண ரகத்தை, ரூ. 2.31-க்கு மத்திய அரசு விற்கிறபொழுது, நாம் ரூ. 1.75-க்குப் பொதுமக்களுக்கு விற்கிறோம். சன்னம், மிகச் சன்ன ரகம், இந்த இரண்டும் ரூ. 2.25, ரூ. 2.50-க்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுவும் மத்திய அரசு விலை யிலேயிருந்து நாம் குறைத்துக் கொடுக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் பேசுகின்ற பொழுது நஷ்டத்தைச் சுட்டிக் காட்டினார். 1973—74-லே ஏதோ புள்ளி விவரத்தைச் சொன்னார். மிகக் குறைந்த அளவிலே தான் அப்போது நஷ்டம் ஏற்பட்டது, வாணிபக் கழகத் திற்கு. இப்பொழுது சுமார் ரூ. 100 கோடிக்கு மேலே நஷ்டத் திலே போய்க் கொண்டிருக்கிறது என்றெல்லாம் சுட்டிக் காட்டி னார்கள். அந்த நஷ்டத்திற்குக் காரணம், வெளியே அதிகமான விலைக்கு வாங்கி, அது மத்திய அரசு நமக்கு விற்கிற விலையாக இருந்தாலும், நாம் கொள்முதல் செய்கிற விலையாக இருந் தாலும் சரி, அதிலிருந்து நாம் பொதுமக்களுக்கு விற்கிற அரிசி— நான் நினைக்கிறேன், இந்தியாவிலே ஒரு கிலோ அரிசி, ரூ. 1.75-க்கு விற்கிற மாநிலம் தமிழ்நாடு தான் இப்பொழுது என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்வதிலே



மகிழ்ச்சி அடைகிறேன், அவரும் மகிழ்ச்சி அடைவார். வேறு
எந்த மாநிலத்திலேயும் ரூ. 1-75க்கு ஒரு கிலோ தரவில்லை.
வெளி விலைகூட உயர்வாக இருக்கிறது.

20,000-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகள் மூலம்
ஒரு கோடியே 19 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு நாம் அரிசி
வழங்குவதன் மூலமாக வெளி விலையை கட்டுப்படுத்தியிருக்
கிறோம். பொது விநியோகம் பொறுத்தவரைக்கும், ஏறக்
குறைய 17,000-க்கு மேற்பட்ட வருவாய்க் கிராமங்கள்
தமிழகத்திலே இருக்கின்றன. ஆனால், நம்முடைய கடைகள்
20,000-க்கு மேல் இருக்கின்றன. நீங்கள் கணக்குப் பார்த்தால்
ஒரு ரெவினியூ கிராமத்திற்கு ஒரு கடைக்கு மேலே, சில இடங்
களிலே 2, 3 கடைகள் இருக்கின்றன. அதைத் தவிர,
கூட்டுறவுத் துறையிலே நடக்கிற கடைகளிலே, பகுதி நேர
கடைகள் — சில உறுப்பினர்கள் சொன்னதைப் போல், 4 கிலோ
மீட்டர், 5 கிலோ மீட்டர் தூரம் இருந்தால், அங்கே போய்
கடை வைத்து, அங்கேயே அரிசி போன்ற அத்தியாவசியப்
பண்டங்களை, வாரத்திலே 2 நாட்கள், அந்த ஊரிலே, அந்தக்
கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு விநியோகம் செய்கிறார்கள்.
இப்படிப் பகுதி நேரக் கடைகளும் இருக்கின்றன. அநேகமாக
எல்லா கிராமங்களையும் உட்படுத்தக்கூடிய அளவுக்கு
இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு பொது
விநியோகம் மிகச் சிறப்பாக நடக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் பேசும்பொழுதுகூடச்
சொன்னார், மாண்புமிகு உணவு அமைச்சர் திருப்தியாக இருக்
கிறார், மகிழ்ச்சியாக இருக்கிறார், என்று. நான் உண்மையிலே
திருப்தியாகத்தான் இருக்கிறேன், மகிழ்ச்சியாகத்தான் இருக்
கிறேன். அதற்குக் காரணம், தமிழகத்தினுடைய நிலைமை
திருப்தியாக இருக்கிறது.

உங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி,
ஏகபோகக் கொள்முதலைக் கொண்டு வந்து, ஒரே நாளிலே,
எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமல், தஞ்சாவூரிலேயிருந்து,
நூற்றுக்கணக்கான ஏன் ஆயிரக்கணக்கான லாரிகளிலே நெல்
மூட்டைகளை ஏற்றி, இங்கிருந்து கேரளாவுக்குக் கொண்டு
சென்று, அது பெரிய ஸ்காண்டல்லாக, அல்லது பெரிய ஊழலாக,
எல்லா பத்திரிகைகளிலும் வந்து, நீங்கள் செய்ததைப் போல,
ஒரு செயற்கையான வறட்சியை (குறுக்கீடு) நான் பேசி முடித்து
விட்ட பிறகு பேசலாம், தி.மு.க. ஆட்சியிலே, உங்களுடைய
தலைவர் கருணாநிதி முதல்வராக இருந்தபொழுது ஏற்படுத்
தினார்களே, அந்தச் செயற்கை வறட்சி இல்லை. (குறுக்கீடு)

அதைப் போல, காங்கிரஸ் உறுப்பினர் திரு. தெய்வநாயகம் சொன்னாரே, அப்பொழுது ஆட்சி கலைக்கப்பட்டபோது, இதற்கு முன்னாலே, படி அரிசி ரூ. 10-க்கு விற்றது என்று சொன்னார்களே, அப்படி, இப்பொழுது படி அரிசி ரூ. 10-க்கு விற்க இல்லை.

இப்பொழுது அமுதம் அங்காடிகளில் கிலோ ரூ. 4-க்குக் கிடைக்கிறது. பொன்னி, நல்ல ரகம், கிலோ ரூ. 4-க்குக் கிடைக்கிறது, ரூ. 4.50-க்குக் கிடைக்கிறது. ஓப்பன் மார்க்கெட்டிலேகூட அந்த விலைக்குத்தான் கிடைக்கிறது. ரூ. 4-க்கு நல்ல ரகம், பைன் வெரைட்டி, சூப்பர் பைன் வெரைட்டி கிடைக்கிறது. சாதாரணமான ரகங்கள் ஏறக்குறைய ரூ. 3, ரூ. 3.50-க்கு கிலோவிற்கு கிடைக்கிறது. நாம் குறைத்து, ரூ. 2.75, ரூ. 2.50-க்கு விற்கிறோம். அரிசி விலையைப் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, சீர்படுத்தியிருக்கிறது, அதிகமாக விலை ஏற்றம் இல்லாமல் இருக்கிறது, கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது, திருப்தியாக இருக்கிறது. எனவே, உணவு அமைச்சர் என்ற முறையில் நானும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். மணிமாறன் சொன்னது போல், அவர்கள் ஏற்படுத்திய செயற்கையான வறட்சியை நாங்கள் ஏற்படுத்தவில்லை. அதனாலே புரட்சித் தலைவர் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள், உணவு அமைச்சர் என்ற முறையில் நானும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.

அதற்கடுத்து, இந்தக் கழகத்தின் சார்பிலே, வருகிற ஆண்டுகளிலே நடக்க இருக்கிற பணிகளிலே ஒன்றிரண்டை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ஏறக்குறைய 14 நவீன அரிசி ஆலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(பிற்பகல் 1–20)

மேலும் 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே இரண்டு நவீன அரிசி ஆலைகள் கட்டப்படவிருக்கின்றன. அவை தவிர, நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 6 இடங்களில் 6 நவீன அரிசி ஆலைகள் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொன்றும் 100 டன் அரைவைத் திறன் கொண்டதாக இருக்கும். ஆக, மொத்தம் 8 இடங்களில் தமிழ்நாட்டில் நவீன அரிசி ஆலைகள் அமைக்கப் படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவுக்கு சொந்தமான தமிழ்நாட்டில் இருக்கின்ற நான்கு அரிசி ஆலைகளை தமிழக அரசுக்கு விற்பனை செய்ய முன்வந்திருக்கிறார்கள். 'புக் வேல்யூ'-வுக்கு அவர்கள் தந்தால் தமிழக அரசு வாங்கத் தயார் என்று சொல்லியிருக்கிறோம்.



இதுகுறித்து அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அதே நேரத்தில் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள் "நீங்கள் இந்த அரிசி ஆலைகளை எடுத்தால் நாங்கள் வேறு மாநிலங்களுக்குப் போகவேண்டியிருக்கும், நாங்கள் பாதிக்கப்படுவோம்" என்று மனு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சனையையும் நாம் கருதிப் பார்க்கிறோம். இப்படி எல்லா சூழ்நிலைகளையும் வைத்துப் பார்க்கிறபோது, புக் வேல்யூவுக்குத் தந்தால் நமக்கு லாபகரமாக இருக்கும் என்ற முறையில் மத்திய அரசு அதிகாரிகளுடன் நம்முடைய அரசு அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசி விலையைப்பற்றிச் சொல்லும்போது பொது மக்களுக்கு நாம் தருகிற விலையைச் சுட்டிக்காட்டினேன். அதிலே மலைவாழ் மக்களுக்கு இன்னும் குறைந்த விலையில் கொடுக்கிறோம். ஏறத்தாழ 35,000 மலைவாழ் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு நாம் 1—7—1985-ல் இருந்து ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் 40 காசுக்கு தந்துகொண்டிருக்கிறோம் என்பதை அறியும்போது மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பிலே நேரடியாக லெவி போன்ற வகைகளில் கொள்முதல் செய்கின்ற உணவுப் பொருள்களை சேமித்து வைக்க கிடங்குகள் கட்டவும் முடிவு செய்திருக்கிறோம். இதற்காக சுமார் 73.73 கோடி ரூபாய் எதிர்காலத்திலே செலவிடப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசி பொது விநியோகத்தில் பெறப்படுவதைப்போல பொதுமக்களுக்குத் தேவையான மற்ற அத்தியாவசியப் பண்டங்களையும், மத்திய அரசு வழங்குகின்ற பண்டங்களையும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக வழங்கி வருகிறோம். இதிலே மண்ணெண்ணெயை எடுத்துக்கொண்டால் நமக்கு மாதாமாதம் சுமார் 80,000 கிலோ லிட்டர் தேவைப்படுகிறது. ஆனால் மத்திய அரசு சுமார் 50,000 கிலோ லிட்டர்தான் நமக்கு தருகிறது. அதை நாம் பிரித்து, மாநகராட்சிப் பகுதியில் இருப்பவர்களுக்கு கார்டுக்கு 10 லிட்டர் வீதமும், நகராட்சிப் பகுதியில் இருப்பவர்களுக்கு 6 லிட்டர் வீதமும், நகரப் பஞ்சாயத்துப் பகுதியில் இருப்பவர்களுக்கு 5 லிட்டர் வீதமும், கிராமங்களில் இருப்பவர்களுக்கு 3 லிட்டர் வீதமும் வழங்கி வருகிறோம். நமக்கு தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால், நம்முடைய தேவைக்கு ஏற்ப மத்திய அரசு மண்ணெண்ணெய் தரவேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கிறோம்; மீண்டும் இந்த நேரத்தில் வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தியா முழுவதிலும் மண்ணெண்ணெய் விநியோகம் சீராக நடக்கிறதா, பொது மக்களுக்கு போய்ச் சேருகிறதா என்பதைக் கண்டறிய மாத்தூர் என்பவரை ஒரு நபர் குழுவாக மத்திய அரசு நியமித்தது. மாத்தூர் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு தமிழ்நாட்டில் மண்ணெண்ணெய் விநியோகம் எப்படி இருக்கிறது என்பதை பார்வையிட்ட பின்னால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் மண்ணெண்ணெய் சீராக, சிறப்பாக விநியோகம் செய்யப்படுகிறது என்று நற்சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். சீராக விநியோகம் நடைபெறுகிறது என்பதற்கு இது ஒரு ஆதாரம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போன்று நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சமையல் எண்ணெய் பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. நம்முடைய மாநிலத்திற்கு மாதாமாதம் ஏறத்தாழ 12,000 டன் சமையல் எண்ணெய் தேவைப்படுகிறது. ஆனால் சராசரியாக மாதத்திற்கு சுமார் 3,600 டன்தான் நமக்குக் கிடைக்கிறது. அதோடு சுமார் 1,000 டன் இந்துஸ்தான் தாவர எண்ணெய் நிறுவனத்தின் மூலமாகவும் கிடைக்கிறது. ஆக மொத்தம் ஏறந்தாழ 4,500 டன் சமையல் எண்ணெய்தான் மாதாமாதம் நமக்கு கிடைக்கிறது. அதை நாம் இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக விநியோகம் செய்து வருகிறோம். அப்படி விநியோகம் செய்கிறபோது மூன்று மாதத்திற்கு, ஒரு குடும்ப அட்டைக்கு ஒரு கிலோ சமையல் எண்ணெய் என்ற வகையிலே பிரித்து கொடுக்கிறோம். இதுவும் நம்முடைய தேவைக்குப் போதாது. நமக்கு 12,000 டன் தேவை. அகவே, சமையல் எண்ணெய் அளவையும் அதிகரித்துத் தரவேண்டுமென்று ஏற்கெனவே மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறோம்; இங்கேயும் அதை வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்டுப்பாட்டுத் துணியைப் பொறுத்தவரையில் 1985—86-ல் சுமார் 18 மில்லியன் சதுர கிலோ மீட்டர், குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோல் லெவி சர்க்கரை ஒரு மாதத்திற்கு 21,292 டன் மத்திய அரசு நமக்கு ஒதுக்குகிறது. அதனை குடும்ப அட்டைகளுக்கு நாம் வழங்கிக் கொண்டு இருக்கிறோம். கோதுமையைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 30.000 டன் மத்திய அரசு நமக்கு ஒதுக்குகிறது. அவ்வாறு ஒதுக்குவது போதுமானதாக இருக்கிறது. கோதுமையைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் உள்ள பொது மக்கள் அதனை அதிகமாக வாங்குவதில்லை. இருந்தாலும் தேவைக்கேற்ற அளவுக்கு அதாவது 20 கிலோ வரைக்கும் குடும்ப அட்டை ஒன்றுக்குக் கோதுமை வழங்கப்பட்டு வருகிறது.



இப்படி பொது மக்களோடு மிக நெருங்கிய தொடர்புடையதாக இருக்கிற சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், அதாவது தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்தப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறது. ஒரு புறத்தில் இவ்வாறு விநியோகம் செய்கின்ற சூழ்நிலையில் இன்னொரு புறத்தில் அது சிறப்பாக நடக்கிறதா என்று கண்காணிப்பதற்காக பல்வேறு வகைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அனேகமாக இந்தியாவிலேயே நமது மாநிலத்தில்தான் கன்ஸ்யூமர் ப்ரட்டக்ஷன் என்ற வகையில் அந்தப் பெயரையே மாற்றி வைத்து பொது மக்களின் நலன்களைக் காப்பதில் இந்த அரசு அக்கறை காட்டிக்கொண்டிருக்கிறது. இந்த விதத்தில் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

உணவுப் பொருள் வழங்கு கண்காணிப்புத் துறையின் கீழ் அதாவது '' புட் செல் '' (Food Cell) என்பதன் மூலமாக கடந்த ஆண்டு ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவுக்குரிய பொருட்கள் தமிழ்நாடு முழுவதும் கைப்பற்றப்பட்டு இருக்கின்றன. இதிலே வழக்குகள் முடிந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் ஏறக்குறைய 68 இலட்சம் ரூபாயாகும். ஏறக்குறைய 223 லாரிகள் பிடிபட்டு இருக்கின்றன. அரசு ஊழியர்களே 110 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அதாவது இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியபடி எடை குறைவு, கலப்படம்—மேக்னட் வைத்து எடை குறைக்கப்படுவதாகக் கூட சொன்னார்கள்—போன்ற பல்வேறு விதமான நிலைமைகளை எல்லாம் கண்டுபிடிக்கின்ற வகையில் 110 பேர் அதிகாரிகளே கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

கடந்த ஓராண்டுக்கு முன்னாலே பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அனேகமாக யாரையுமே கைது செய்யவில்லை. கடத்தல், பதுக்கல், கலப்படம் என்ற வகையில் திருநெல்வேலியிலே ஒருவரும், சென்னையிலே ஒருவரும், தென்னாற்காடு மாவட்டத்தில் மூவரும் இப்படி மொத்தம் ஐவர் இந்த ஆண்டு பாதுகாப்பு சட்டத்தின்படி சிறைப் பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். ஏறக்குறைய பதிவான வழக்குகள் சுமார் 1,451. இதிலே 80 சதவீதத்திற்கு மேல் நாம் வெற்றி பெற்று இருக்கிறோம். இப்படி பல்வேறு விதமான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

பொதுமக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வாங்குகின்ற உணவுப் பண்டங்கள் கலப்படம் இல்லாமல் இருக்கிறதா, சிறந்த முறையில் வழங்கப்படுகிறதா என்றெல்லாம் பார்க்கிற வகையில் ஒரு விழிப்புணர்ச்சியை உண்டாக்க பல்வேறு விதமான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது. உதாரணமாக

ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் பார்வையாளர் புத்தகம் வைக்கப்பட்டு இருக்கிறது. உணவுப் பண்டங்களை வாங்கிச் செல்கிற கன்ஸ்யூமர்ஸ் அந்த பார்வையாளர் புத்தகத்திலே தங்களுடைய குறைகளை எழுதலாம். ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் பார்வையாளர் புத்தகம் உண்டு. தாலுகா மட்டத்தில் கூட ஒவ்வொரு நியாய விலைக் கடையைப் பொறுத்த வரையிலும் ஏற்கெனவே தனியாக இதற்காகக் குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

தற்போது மாநிலத்திலே 9 மாவட்டங்களில் உணவுப் பொருள்களின் தரத்தினைப் பரிசோதனை செய்கிற பரிசோதனை நிலையங்கள் இருக்கின்றன. வருகிற ஆண்டில் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் எல்லா மாவட்டத்திலும் இதுபோல் தரத்தைப் பிரித்துப் பார்க்கின்ற வகையில், அதாவது தரப்பரிசோதனை செய்ய பரிசோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அளவிலேயும் இது போன்ற விழிப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஐந்தாம் வகுப்பு பாடத் திட்டத்திலேயே நுகர்பொருள் பாதுகாப்பு பற்றிய அவசியத்தை வலியுறுத்துகிற வகையில் பாடத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆரம்பக் கல்வி என்ற நிலையில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை எட்டாம் வகுப்பு, ஒன்பதாம் வகுப்பு ஆகியவற்றிலும் அதாவது நடுநிலைப் பள்ளியிலும் மற்றும் மேல்நிலைப் பள்ளியிலும் கொண்டு வரலாமா என்று அரசு யோசித்துக்கொண்டு இருக்கிறது.

அடுத்து ஹோட்டல் பண்டங்களின் விலை எல்லாம் அதிகமாக இருப்பதைக் கவனத்தில் கொண்டு ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தோடு பேசி மிக அவசிய உணவுப் பண்டங்களான அளவுச் சாப்பாடு, இட்டிலி, தோசை, வடை, காபி....

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து வகையான உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து சென்னையிலே நிர்ணயிக்கப்பட்ட விலையோடு ஒட்டி மற்ற மாவட்டங்களிலுள்ள ஆட்சித் தலைவர்கள், அந்தந்த மாவட்டங்களில் விலை நிர்ணயிக்க வேண்டும் என்று, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டு, அவர்களும் ஆங்காங்கே இருக்கிற ஓட்டல் சொந்தக்காரர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இப்படி



பொது மக்கள் சாப்பிடுகிற அனைத்து பண்டங்களிலும் விலை ஏறாத அளவுக்கு ஒரு நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது. அதிலும் வெற்றி பெற்றிருக்கிறது.

அடுத்து வழங்கப்படுகிற உணவுப் பொருள்களில் எல்லாம் கலப்படம் செய்வதை கண்டு பிடிப்பதற்காக அனலைசிங் கிட்ஸ் என்று சொல்லப்படுகிற இரசாயன பகுப்பு ஆய்வு பெட்டிகள் ஏறக்குறைய 400 பெட்டிகள் தயார் செய்யப்பட்டு, பொது மக்களுக்கு அதை இயக்குவது எப்படி என்று செய்துகாட்டி, அவர்கள் விரும்பினால் பயன்படுத்திக் கொள்ளவும் வழங்கப்பட்டிருக்கிறது.

அதற்கு அடுத்து வேர்-ஹவுசிங் கார்ப்பரேஷனைப் பற்றி சொல்லி முடித்துவிடுகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெய்வநாகம் அவர்கள் அதைப்பற்றி சில குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். அதிலே கன்ஸ்டிரக்ஷன் விங்கிலே டெண்டர் விட்டதைப் பற்றியும், அதனாலே அங்கேயிருக்கிற ஒன்றிரண்டு அதிகாரிகள் பெயரைச் சொல்லி, அவர்கள் வீடுகூட கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சில குற்றச்சாட்டுகளை சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் முறையாக விசாரிக்க, ஒரே துறையிலே இருக்கிற அதிகாரிகளைப் போடாமல், உணவுத் துறையிலே இருக்கிற மற்ற அதிகாரிகளை, ஐ.ஏ.எஸ். தரப்பில் உள்ள அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்தி அதிலே உண்மையாகவே தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி தவறுகள் நடந்ததா இல்லையா என்ற விவரத்தையும் விசாரித்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பல பொது நிறுவனங்கள் நஷ்டத்திலே போய்க் கொண்டிருக்கிறபோது, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் லாபத்திலே நடந்து வந்திருக்கிறது. சிறப்பாக நடந்து வந்திருக்கிறது என்பதையும் நான் இந்த மன்றத்தினுடைய நினைவிற்கு கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே பொதுத் துறை நிறுவனங்கள் என்று சொன்னாலே நட்டத்திலே இயங்குவதுதான் என்ற எண்ணம் பரவலாக இருந்து கொண்டிருக்கும் போது, இந்த நிறுவனம் 1984-85-லே சுமார் $1\frac{1}{4}$ கோடி ரூபாய் லாபம் சம்பாதித்து இருக்கிறது. 1985-86-லே சுமார் 2 கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அந்தோடு சென்ற ஆண்டு ஏறக்குறைய $4\frac{1}{4}$ கோடி செலவில் கிட்டங்கிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளைப்போன்றே அத்தியாவசியமான உணவுப் பொருள்களை தேக்கி வைக்க வேண்டும் என்பதற்காக, வருகிற 1986-87 ஆம் ஆண்டிலே, 20 இடங்களில் 30 கிடங்குகள் கட்டப்படும். அதற்காக 4 கோடியே 78 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும். இப்படி

இந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நிறுவனத்தின் உள்ளே இருக்கின்ற இரண்டு மூன்று அதிகாரிகள் தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்று பெயரைக் கூட குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி விசாரித்து அறிக்கை தரப்படும்.

இப்படி ஒட்டு மொத்தமாக உணவு துறையைப் பொறுத்த வரைக்கும் தொடர்ச்சியாக வறட்சி, வெள்ளம் அல்லது காவிரியிலிருந்து போதிய அளவுக்கு குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் வராத சூழ்நிலை, பயிரிடும் நெல் பரப்பு குறைவு, உற்பத்தி குறைவு போன்ற பலவிதமான குறைபாடுகளுக்கு மத்தியிலேயும், பொதுமக்களுக்கு, அவர்களுடைய நலனுக்கு எந்தவிதமான பாதிப்பும் வராத அளவுக்கு சீரான நிலையிலே அரிசி மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் மிகச் சிறப்பான முறையிலே வினியோகம் செய்யப்பட்டன. இந்தியாவிலேயே அப்படி தமிழ் நாட்டில் தான் மிகச் சிறப்பான முறையிலே நியாய விலையிலே வினியோகம் செய்யப்பட்டதால், 100 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிற சிரமம் இருக்கிறது என்றாலும், அந்த நஷ்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு ஏற்றுக் கொண்டு, பொது மக்களுக்கு நலப்பணிகளை நல்ல முறையிலே செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு தலைவர் அவர்களின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் ஏதோ புள்ளி விவரம் புள்ளி விவரம் என்று கொச்சையாக அடிக்கடி சொன்னார்கள். அது ஏதோ புள்ளி விவரம் அல்ல. இந்த அரசினால் தயாரிக்கப்பட்ட புள்ளி விவரம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, இதற்கு முன்னாலே 20 கிலோ அரிசி மக்களுக்கு வழங்கப்பட்டது. அதாவது அண்ணாவின் பிறந்தநாள் விழாவின்போது அறிவிக்கப்பட்டு அன்றிலிருந்து 20 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. ஒரு கிலோ இனாமாக வழங்கப்பட்டது. அப்படிக் கொடுத்ததைக் குறைத்தது ஏன்? 12 கிலோவாக அந்த 20 கிலோவை என் குறைத்தீர்கள் என்று கேட்டது அநியாயமா? அப்படிக் கேட்கக் கூடாது என்று கருதுகிறீர்களா 20 கிலோ 12 கிலோவாக குறைக்கப்பட்டதோடு அல்லாமல் 1 கிலோ இனாமாக கொடுத்து வந்ததும் நிறுத்தப்பட்டுவிட்டது.





இன்னொன்று நெல் கொள்முதல் செய்கிற நேரத்திலே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம்......

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூதலிலே கேட்டதற்கு முதலில் பதில் சொல்லி விடுகிறேன். ஒரு குடும்பத்தை நிர்வகிக்கின்ற குடும்பத் தலைவி தன்னுடைய குழந்தைகளுக்கு அல்லது குடும்பத்தினருக்கு தினமும் ஒரே வகையான உணவு வகைகளைத்தான் அளித்து வருகிறார்கள். அதாவது மீன் குழம்பு, கறி குழம்பு போன்ற தன்மையில் ஒரே மாதிரியான சாப்பாட்டைத்தான் தயாரித்து அளித்து வருகிறார்கள். அந்த மாத பட்ஜெட் போக கடைசி நேரத்தில் இரண்டு நாட்களுக்கு கொஞ்சம் அதிகமாக கையிருப்பு இருக்கிறதென்று இரண்டு நாட்கள் பிரியாணி போடுவார். அந்த இரண்டு நாட்கள் பிரியாணி சாப்பிட்ட பிறகு அதற்கு பிறகு அடுத்த மாதம் முதல் நாளிலிருந்து தொடர்ந்து அந்தக் குடும்பத் தலைவர் பிரியாணி போட வேண்டுமென்று கேட்பதைப் போல தான் நீங்கள் கேட்பது இருக்கிறது. அதிகமாக இருந்தது. அதிகமாக இருந்தபோது கொடுக்கப்பட்டது. ஆகவே இருந்த அளவை குறைக்கவில்லை. இரண்டாவது, ஏற்கனவே 1985-ஆம் ஆண்டிற்கு முன்னாலே எல்லா கிராமத்திலும் 6 கிலோ தான் வழங்கப்பட்டது. இப்போது 12 கிலோவாக உயர்த்தி தரப்படுகிறது. இதிலே எங்கே இருக்கிறது குறைவு பிரச்னை என்பது தான் என்னுடைய கேள்வி.

**திரு. மா. மணிமாறன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, நெல் கொள்முதல் செய்கிற போது ஆந்திர பிரதேசம் மற்ற மாநிலங்களிலிருந்து வாங்கிய விலையை நான் குறிப்பிட்டு சொல்லியதற்கு, அதிலே ஒன்றும் ஊழல் நடந்துவிடவில்லை, தவறு நடந்துவிடவில்லை என்று சொன்னார்கள். நான் சுட்டிக்காட்டியது எல்லாம் வெளி மாநிலங்களில் ஒரு குவிண்டாலுக்கு ஏறத்தாழ 110 ரூபாய்க்கு அதிகமாக கொடுத்து வாங்கிய நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு நீங்கள் கொடுத்தது, அதிகமாக அல்ல. (குறுக்கீடு) நான் முடித்து விடுகிறேன், நீங்கள் சிரமப்பட்டதற்கு பின்னால் தான் அதைக் கொடுத்திருக்கிறீர்கள். இன்னொன்று குடும்பத் தலைவர் பிரியாணி, கறி, மீன், முட்டை ஆகியவையெல்லாம் கொடுத்ததாகச் சொன்னார்கள். இதெல்லாம் விவரம் அறியாத குடும்பத் தலைவரைப் பற்றியதாகும். விவரம் அறிந்த குடும்பமாகச் சொல்ல வேண்டும். விவரம் அறியாத குடும்பத்தைப் பற்றி சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, விவரம் அறிந்த குடும்பத்திலே தான் சீராக காரியங்கள் நடக்கும். நான் சொன்னது விவரம் தெரிந்த குடும்பத் தலைவராக இருக்கிற, இந்த மாநிலத்தினுடைய தலைவராக இருக்கிற

புரட்சித் தலைவர் அவர்கள் செய்கிற சீரான நிர்வாகத்தைப் பற்றி தான் சொல்கிறேன். நீங்கள் சொல்வது வேண்டுமானால் உங்களுடைய குடும்பத்தைப் பற்றி இருக்கலாம். அதுபற்றி பரவாயில்லை. ஆகவே தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக குற்றச்சாட்டு எதையும் சொல்லவில்லை. முன்பு சொன்னதையே தான் இப்போதும் சுட்டிக் காட்டினார். அதற்கு தான் நான் தெளிவாக பதில் சொன்னேன். ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் டன் அரிசி தேவையென்று சொன்னால், ஒரு வருடத்திற்கு 12 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. நாம் 35 ரூபாய் இடுபொருள் மானியம் தந்து, நேரிடை கொள்முதல் மூலமாக, ட்ரேட் கிளியரன்ஸ் 50% போக, இப்படி மொத்தமாக அதிகபட்சமாக இங்கே கொள்முதல் செய்கிறோம். அதற்கு மேலே கொள்முதல் செய்ய முடியாது என்று நிலைமை வருகிறபோது தான் வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். அதுவும் கூட ஒரே ஒரு தடவை 1982-83, 1983-84-ம் ஆண்டுகளில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் டன் அரிசி வாங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே இங்கே இருக்கிற விவசாயிகளை கசக்கி, மேலும் ஊக்க போனஸ் கொடுத்து வாங்கினால் நமக்கு, அரசாங்கத்திற்கு ஒரு லட்சம் டன் அரிசி வரும். அதனால் தமிழக மக்கள் தான் பாதிக்கப்படுவார்கள். ஏனென்றால் அவர்களுக்கு சீராக போய் சேர்கிற அரிசி அவர்களுக்கு கிடைக்காமல் போகும். வெளி மார்க்கெட்டிலே தட்டுப்பாடு ஏற்படும். வெளிச் சந்தையில் நியாய விலைக்கு, உரிய விலைக்கு, போதுமான அளவிற்கு அரிசி கிடைக்காது. எனவே தான் 12 லட்சம் டனையும் நாம் வெளியே வாங்கவில்லை. நமக்கு மார்ஜினலாக தேவைப்படுகிற, பொது மக்களுக்கு குறைந்த விலையில் தந்தே ஆகவேண்டுமென்ற நிலையில் இருக்கிற அந்த குறைந்தபட்ச அளவை தான் நாம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி இருக்கிறோம். அதிலே எந்த விதமான ஊழலும், எந்தவிதமான தவறும் நடக்கவில்லை என்பதை தான் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டினேன்.

**மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன்** : தலைவர் அவர்களே, மாநிலத்தினுடைய தேவையை ஈடு செய்வதற்கு பற்றாக்குறைக்கு மட்டும் வெளியே வாங்குகிறோம். வெளியே வாங்குகிறபோது வெளியே என்ன விலை இருக்கிறதோ அதை நாம் தர வேண்டும். வேறு வழியில்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் நாம் தேவையான அளவிற்கு கொள்முதல் செய்து அதற்குரிய விலையை நாம் தருகிறோம். பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கென்று வாங்குகிறபோது அந்த வேலையையும் இந்த விலையையும் ஈடுகட்டிப் பேசுவது சரியாகாது. சான்றாக, இந்திய அரசு சில நேரங்களில் சர்க்கரையை வெளி நாடுகளிலிருந்த இறக்குமதி செய்கிறது. வெளி நாட்டிலே என்ன விலை கொடுக்கிறார்களோ அதைக் கொடுத்து தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை. நம்முடைய தேவையை நிறைவு செய்வதற்கு, ஏற்படுகிற பற்றாக்



குறையை சரிசெய்வதற்கு வெளியேயிருந்து வாங்குகிறபோது அந்த நிலைமை தான் உருவாகும். அப்படி வாங்குகிறபோது சரியாக வாங்குகிறோமா என்பதைத் தான் பார்க்கவேண்டுமே தவிர, அதே விலையை உள்நாட்டிலும் கொடுக்கவேண்டுமென்றால் இங்கே இருக்கிற விலைவாசி உயர்ந்துவிடும்.

**மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு** : தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னதைப் போல முறையாக டெண்டர் மூலமாக கேட்கப்பட்டு அரசினுடைய பொதுத் துறை கார்ப்பரேஷன்கள், மற்ற மாநிலங்களில் இருக்கிற கவர்ன்மென்ட் கார்ப்பரேஷன்கள், தனியார்கள் இப்படி எல்லோரும் டெண்டரில் பார்ட்டிசிபேட் செய்து யார் குறைவாக எடுக்கிறார்கள் என்று பார்த்து, முறையாக அதற்கு கமிட்டி போட்டு, 5 அதிகாரிகள் கொண்ட குழுவினை அமைத்து எல்லோரும் பார்த்துதான் முறையாக நடந்து இருக்கிறது என்பதைத் தான் சுட்டிக் காட்டினேன். அதில் எந்தத் தவறும் நடக்கவில்லை.

(பிற்பகல் 1-40)

**திரு. அ. ரகுமான்கான்** : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது ஒரு குற்றச்சாட்டை எழுப்பிய காரணத்தாலே நான் தங்கள் மூலமாக விளக்கம் கொடுக்க கடமைப்பட்டு இருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கு அரிசி எடுத்துக் செல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது அனுதிக்கப்பட்டது உண்மைதான். காரணம் அன்றைக்கு அரிசிப் பஞ்சம், பற்றாக்குறை வறட்சி இருந்த காரணத்தாலே, இதுபோன்ற நிலைமை ஏற்பட்டது என்பது எங்களுடைய வாதம். ஆனால் இங்கே அமைச்சர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டையே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு). அது பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. கேரளாவிற்கு ஆயிரக்கணக்கான லாரிகள் மூலம் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் போது, தமிழகத்தில் இருந்து கடத்தப்பட்டு மிகப் பெரிய ஊழல், அரிசி பேர ஊழல் நடைபெற்றிருக்கிறது என்ற ஒரு குற்றச்சாட்டை அவர்கள் இங்கே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அப்படி ஏதாவது குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்களா? அவர்கள் சொல்வதிலே உங்களுக்கு உடன்பாடு இல்லை என்றால் நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : தலைவர் அவர்களே, நான் சொன்னதிலே ஏதாவது சந்தேகம் இருந்தால் அவர்கள் விளக்கம் கேட்கலாம். அதற்குமாறாக அரைமணி நேரமாக அவரே பேசிக்கொண்டு இருந்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டு சொன்னதாக சொல்கிறார்கள். குற்றச்சாட்டு சொன்னது உண்மையாக இருந்தால் அவைக்குறிப்பில் இருக்கும், இல்லை என்றால் நீக்கப்படும்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, அவர்கள் இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் அதைக் குறிப்பேட்டிலே பார்க்கலாம். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், இங்கே அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டு சொன்னாலும், அல்லது மற்றவர்கள் மீது சொன்னாலும் தாங்கள் ஆதாரத்தைக் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். எந்த அடிப்படையிலே இவர்கள் குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள்...... (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, தனிப்பட்ட முறையிலே ரகுமான்கான் அவர்கள் பேசுகிறார்.... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதைப் பார்த்துவிட்டு சரி இல்லை என்றால் நீக்கப்படும் (குறுக்கீடு). அதைப்பற்றி உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள், அது சரி, இல்லை என்றால் அவைக்குறிப்பிலே இடம் பெறாது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எதைப்பற்றி வேண்டுமானாலும் சொல்லட்டும். எனக்கு பதில் சொல்வதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் இங்கே பேசியதைப் பற்றி பேசினால் பரவாயில்லை. புதிதாக அவர்கள் பேசினார்கள் என்றால், நானும் புதிதாக பேசுவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் விவாதத்தில் கலந்துகொண்டு, பதில் சொன்னதைப் பற்றி ஏதாவது இருந்தால் நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது ஆயிரக்கணக்கான லாரிகள் மூலம், தமிழகத்தில் இருந்து அரிசி கடத்தப்பட்டு மிகப் பெரிய ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று தனது பதில் உரையில் தெளிவாக மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானால் குறிப்பேட்டைப் பாருங்கள். இல்லை என்று சொன்னால் விவாதமே வராது. நானும் எழுந்திருக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்படி, நான் சொல்லவில்லை, என்னுடைய குற்றச்சாட்டு அப்படி அல்ல என்று சொல்வது ஒருபுறம் இருக்கட்டும். அப்படி இருந்தால் விவாதமே வராது. அவர்கள் தெரிவித்ததற்காக நான் கேட்கிறேன். அதற்கான ஆதாரங்களை வைத்து அதை நிரூபித்தால், ஏற்றுக்கொள்வதற்கு



தயாராக இருக்கிறோம். ஏன் என்றால், குற்றச்சாட்டு சொல்கிறபோது, எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது, அன்றைக்கு அமைச்சராக இருந்த ஒருவர், மீது-உங்களுக்கு எல்லாம் தெரியும்-ஒரு குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. அரிசி பேர ஊழல் செய்தார் ப. உ. ச. என்று அவர்கள் மீது சொல்லப்பட்டது, (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ப. உ. ச. அவர்கள் அமைச்சராக இருந்தாரா, இல்லையா என்பது அல்ல பிரச்சனை. உங்கள் தலைவர் கருணாநிதி அவர்கள் பண்ணினார்கள் என்பதுதான் பிரச்சனை. அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கருணாநிதி அவர்களுக்குத் தெரியாமல் எப்படி நடந்து இருக்கமுடியும். அமைச்சர் அப்போது இருந்தாரா என்பதல்ல பிரச்சனை. உங்களுடைய முதலமைச்சருக்குத் தெரியாமல் எப்படி நடந்திருக்க முடியும். (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, இதற்கு எல்லாம் ஆதாரம் தேவை. அரிசி பேர ஊழல் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்த ஊழலைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அப்போது தி.மு.க. தலைவராக இருந்த கலைஞர் கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்தார்கள். அப்போது நடந்த ஊழலைச் சொன்னேன். அப்போது யார் அமைச்சராக இருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்தபோது நடந்த ஊழலை ஒத்துக்கொண்டதற்காக நன்றி.

**திரு. அ. ரகுமான்கான் ;** தலைவர் அவர்களே, இப்போது சொல்வதற்கு ஆதாரம் இருந்தால் கொடுங்கள் என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பதில் உரையில் இடம் பெறாததை போய் ஏன் சொல்லவேண்டும் (கூச்சல், குழப்பம்) கொள்கை சம்பந்தமாக பேசும்போது நிச்சயமான ஆதாரங்களை சொல்ல முடியும். தனிப்பட்ட விவரங்களைப் பற்றி பேசும்போதோ, ஒரு நாட்டைப்பற்றி பேசும்போதோ, ஒரு நிர்வாகத்தைப்பற்றிப் பேசும்போதோதான் வாதம் பண்ண முடிகிறது. (கூச்சல், குழப்பம், குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்றத்திலே நடைபெற்ற விவாதத்தை அறையிலே இருந்துகொண்டு கேட்டுக்கொண்டிருந்தேன்; திராவிட

முன்னேற்றக் கழக ஆட்சியின் காலத்தில் ஆயிரக்கணக்கான லாரிகளில் கடத்தப்பட்டது என்றுப், அமைச்சர் சொன்னார் என்றும்' அதில் ப. உ. சண்முகம் அமைச்சராக இருந்தபோது நடைபெற்றது என்றும் (கூச்சல், குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நாங்கள் அப்படி சொல்லவில்லை (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் டைவர்ட் செய்ய மாட்டேன். நீதி விசாரணையிலிருந்து நான் அன்றே இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். நான் நிரபராதி என்று நீதிபதியால்—உங்கள் கருத்தல்ல, நீதிபதி கருத்து—நான் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டு நான் நிரபராதி என்று வெளியிலே வந்திருக்கிறேன். அதிலே மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. நான் சொல்ல வந்தது......(குறுக்கீடு) கொஞ்சம் பொறுமையாக இருங்கள் (குறுக்கீடு) **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

நான் எல்லா உறுப்பினர்களுக்கும்தான் சொல்கிறேன். ஒரு உறுப்பினர்மீதோ ஒரு அதிகாரி மீதோ இங்கே ஒரு குற்றச்சாட்டு எழுப்பப்படுமேயானால் அதற்குமுன் அறிவிப்பு கொடுத்து ஆதாரத்தை என்னிடம் காட்டியபிறகே பேசவேண்டும். ஆனால் நிர்வாக சம்பந்தமாக அமைச்சர் இங்கே பேசும்போது அவர்களிடம் ஆதாரத்தைக் கேட்டால் இந்த அவையை நடத்தமுடியாது. அவர்களுக்கு பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்புணர்ச்சியோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை. ஆதாரம் உண்டு. ஏகபோக கொள்முதல் திடீரென்று ஒரு நாள் ரத்து செய்யப்பட்டு நூற்றுக்கணக்கான லாரிகள் அங்கிருந்து போனதும், அங்கிருந்து நெல் கொண்டு போனதும் தஞ்சாவூர் கலக்டரேட்டில் கேட்டாலே தெரியும்.

(பிற்பகல் 1-50)

அதில் ஒன்றும் இல்லாததை நான் சொல்லவில்லை. அதிலே வியாபாரிகள் பல பேர் பயன் அடைந்திருக்கிறார்கள். மக்கள் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் இருந்த நெல் முழுவதும் கேரளாவுக்கு போன காரணத்தால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



தமிழகம் பாதிக்கப்பட்டது; தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டார்கள். அப்போது அமைச்சராக மாண்புமிகு திரு. ப.உ.ச. அவர்கள் இருந்தார்கள் என்று சொல்லுகிறார் அவர். அவர் அப்போது இல்லை. அப்போது வேறு யாரோ ஒருவர் மந்திரியாக இருந்திருப்பார் என்று நினைக்கிறேன். அப்போது யார் அமைச்சர் என்பது கூட எனக்கு கவலை இல்லை. அது முதலமைச்சரா, அமைச்சரா என்று கூட சொல்லவில்லை. அதில் வியாபாரிகள் பலன் அடைந்து இருக்கிறார்கள். அப்போது இருந்த அரசு அதை அனுமதித்தது. இந்த முறைகேடு அப்போது நடந்தது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயரை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதால் தான் நான் கீழே இறங்கி வந்து விளக்கம் சொல்ல வேண்டி வந்தது. இது மாலை பத்திரிக்கையில் கொட்டை, கொட்டை எழுத்தில் வந்து விடும். என் மீது மிகவும் ஆசையும், அன்பும் வைத்துள்ள பத்திரிகைகள் நிறைய இருக்கின்றன. அவர்களுக்கு அந்த அவகாசம் கொடுப்பானேன் என்பதற்காகத்தான் அதை மறுப்பதற்காகத்தான் வந்தேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்பதை நான் மிகத் தெளிவாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் நிரபராதி என்று, ஹைக்கோர்ட்டின் குற்றவாளி கூண்டில் முன் நின்று, தீர்ப்பு வாங்கி வந்து இருக்கிறேன். அது வேறு விவகாரம். ஆகவே தேவை இல்லாமல் என் பெயரை இழுக்க வேண்டாம். அரிசி பேர ஊழல் என்று அவர்கள் சொன்னால் பிறகு நான் கோதுமை பேர ஊழல் என்று சொல்லவேண்டி வரும். இப்படி சொல்லிக்கொண்டே இருந்தால் திரும்ப திரும்ப ப்ரச்சினை வந்து கொண்டே இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, 2 மாண்புமிகு அமைச்சர்களை பேச அனுமதித்தீர்கள். அதுபோல் என்னுடைய கருத்தையும் கேட்டுவிட்டு தீர்ப்பு கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (கூச்சல்-குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறேன், ஆதாரம் இருக்கிறது என்று எல்லாம் இந்த அவையில் சொல்லியிருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் திரு. ரகுமான்கானைப் பற்றியோ அல்லது தனிப்பட்ட முறையில் யாரை பற்றியும் சொல்லவில்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிர்வாக சீர்கேட்டைத் தான் சுட்டிக்காட்டினேன். இப்போது கூட இங்கே அதிகாரிகளைப் பற்றி எல்லாம் குற்றச் சாட்டுகளையும், குறைகளையும் சொன்னார்கள். நாங்கள் பொறுமையாக கேட்டுக்கொண்டு தான் இருந்தோம். அதன் பிறகு இப்போது நாங்கள் பதில் சொல்லுகிறோம். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிர்வாக சீர்கேட்டை தான் சுட்டிக் காட்டினேன். அது உண்மை. உண்மையை சுட்டிக்காட்டினேன். அதற்கு ஏன் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இவ்வளவு கோபப்பட்டு உணர்ச்சி வுசப்படுகிறார் என்று தெரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சியின் மீது ஒட்டுமொத்தமான குற்றச்சாட்டைச் சொன்னேன் என்றும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே அப்படி சொல்லலாம் என்று தாங்களும் சொல்லியிருக்கிறீர்கள். நிர்வாக சம்பந்தமாக ஒட்டு மொத்தமாக குற்றச்சாட்டுகளைச் சொல்லலாம் என்று நீங்கள் சொல்லிவிட்ட பிறகு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னது மாண்புமிகு அமைச்சர்கள் நிர்வாக சம்பந்தமாக இங்கே பேசும்போது அவர்களை ஆதாரம் கேட்டுக்கொண்டு இருந்தால் இங்கே சபையை நடத்த முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் தனிப்பட்ட நபர் மீது ஏதாவது குற்றச்சாட்டை சொல்லவேண்டும் என்றால் ஆதாரத்தை முதலில் என்னிடம் காட்டவேண்டும். மாண்புமிகு அமைச்சர்கள் பேசுவது இங்கே ரெக்கார்டில் இருக்கிறது. ஆகவே உடனடியாக உறுப்பினர்கள் படித்துப் பார்த்து உரிமைப் பிரச்சினையாகக் கொண்டு வரலாம். இப்படி பேசிக் கொண்டே இருந்தால் ஒரு முடிவுக்கு வராது. (குறுக்கீடு)

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து எதிர் பார்ப்பது இந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி வரையில் அந்த 35 ரூபாய் கூப்பன் கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்த பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் வரைக்கும் அங்கே கூப்பன்களை விவசாயிகள் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்த கூப்பனுக்கு உரிய உரத்தை வரும் ஜூன், ஜூலையில் வரக்கூடிய விவசாயக் காலங்களில் உரம் வாங்குவதற்கு அவகாசம் அளிக்கப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35 ரூபாய் இடுபொருளுக்கு மானியம் என்ற அளவில் தரப்படுகிறது. விவசாயிகளுக்கு துறையின் சார்பில் உரம் தரப்படுகிறது. தொடர்ந்து இந்த மாதம் வரை தரப்படும் என்று சொல்லியிருக்கிறோம். ஏற்கனவே தந்து இருக்கிற அந்த கூப்பன்களை பின்னால் பயன்படுத்த முடியுமா என்று கேட்டு இருக்கிறார். அது சம்பந்தமாக துறையோடு கலந்து பேசி என்ன செய்ய முடியுமோ அதைச் செய்கிறோம்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டாப் பகுதியில் உள்ளவர்களுக்கு மட்டும் தான் ரூ. 35 மான்யத்தை இடுபொருளாகக் கொடுக்கிறார்கள். தமிழகத்தை ஒரே மண்டலமாக்கி, எல்லா விவசாயிகளுக்கும், ஒரு குவிண்டாலுக்கு ரூ. 35-ஐ கொடுக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஏகபோக கொள்முதல் அமலில் இருக்கின்ற பகுதியிலே உள்ள விவசாயிகளுக்குத்தான் இன்செண்டிவ்-ஆக கொடுக்கப்படுகிறதே தவிர, மற்றவர்களுக்குத் தர முடியாது. அரசாங்கமே நேரடியாக தஞ்சை மாவட்டத்தில் கொள்முதல் செய்கின்ற பகுதிகளுக்கு மட்டும் மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற தாலுக்காக்களுக்கும் இந்த ரூ. 35-க்கான உரம் தரப்படுகிறது. மற்ற பகுதிகளுக்கு தரப்படாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. பொன்முத்துராமலிங்கம் அவரின் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப்பெற்றது.

திருவாளர்கள் எஸ். என். இராமசாமி, பொ. உத்திராபதி. ஜே. முகம்மது கனி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 145,23,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (3–4–1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

57. தபால் மற்றும் தந்தி இலாக்காவிற்குச் சொந்தமான TMQ 7084 எண்ணுள்ள இழுவைக்கு செலுத்தக்கூடிய மோட்டார் வண்டிகள் வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 6–1–1986–ஆம் நாளிட்ட 19ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)].

58. கும்பகோணம் இந்து மிஷன் மருத்துவமனைக்குச் சொந்தமான TDO 4850 எண்ணுள்ள ஜீப் வண்டிக்கு செலுத்தக் கூடிய வரியினை குறைப்பது குறித்து உள் (போ. 1) துறையின் 8–1–1986ஆம் நாளிட்ட 40ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

59. கர்நாடக மாநிலத்தின் மாதேஸ்வரர் மலையில் நடைபெறும் மகா சிவராத்திரி மற்றும் யுகாதி திருவிழாக்களின் பொருட்டு, கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்குத் தற்காலிக அனுமதி வழங்குதல் குறித்து உள் (போ. VI) துறையின் 24–1–1986ஆம் நாளிட்ட 160ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

60. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1981–82ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

59. கோரிக்கை எண். 35—தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு—1986 (தமிழ், ஆங்கிலம்).





## இணைப்பு I.

(19ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 345 (7772)-க்கான விடையைக் காண்க.)

### அறிக்கை.

(அ) ஆம்.

(ஆ) வேளாண்மை பொறியியல் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு செய்ததில் செங்கல்பட்டு மாவட்டத்தில் சுமார் 2000 ஹெக்டேர் விவசாய நிலங்களில் மணல் மேடிட்டு இருப்பதாக அரசுக்கு தெரிவிக்கப் பட்டது. இதில் 1½ அடிக்கு மேல் மணலால் மூடப்பட்ட 120 ஹெக்டேர் விவசாய நிலங்களை வேளாண்மை பொறியியல் துறையின் புல்டோசர்கள் மூலம் சீர்திருத்தம் செய்ய ரூ. 4.00 இலட்சம் மேற்கண்ட துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி முடிவடையும் நிலையில் உள்ளது. 1½ அடிக்குக் கீழ் மண் மூடப்பட்ட மற்ற விவசாய நிலங்கள் மாவட்ட ஆட்சியாளருக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியம் மூலமாக சீர்திருத்தம் செய்யப்படும். சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகவும் மற்ற விவசாயிகளுக்கு 50% மானியமாகவும் துறை புல்டோசர்கள் மூலம் நில சீர்திருத்தம் செய்து கொடுக்கப்படுகிறது ; ஆனால் மான்யத் தொகை ஏக்கருக்கு ரூ. 1,500 க்கு மேல் அதிகப்படாமல் இருக்க வரம்பு உள்ளது. இவ்வரம்பிற்கு மிஞ்சிய செலவு தொகையை மண்வள பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கடனாக வழங்கப்படும். இக்கடன் 10 வருட தவணையில் வேலை முடிந்த மூன்றாவது வருடத்திலிருந்து வசூலிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 2

## இணைப்பு II.

(64-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### 1. உணவு தானியங்கள் உற்பத்தி மற்றும் கொள்முதல் கொள்கை.

1985–86 ஆம் நிதி ஆண்டின் துவக்கத்தில், மாநிலத்தின் உணவு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருந்தது. 1984 ஆம் ஆண்டு குறுவை மற்றும் 1985 ஆம் ஆண்டு சம்பா பருவங்களில் உணவு உற்பத்தி சிறப்பாக இருந்ததால் வெளிச்சந்தையிலும், அரசிடமும் கணிசமான இருப்பு இருந்தது. 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்தது. 1985 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில், பொது விநியோகத்தில் மட்டும் கேட்பு 1 லட்சம் மெ. டன்களுக்கும் மேல் கூடியது. இதற்கு ஈடான இருப்பு சேர்க்கப்படவில்லையாதலால் கையிருப்பு விரைவில் குறைந்தது. இதற்கு காரணம் பருவமழை காலம் தாழ்ந்து பெய்தமையும், மாநிலத்தின் முக்கிய நீர் தேக்கங்களில் உள்ள குறைந்த நீர் மட்டமும் ஆகும். சென்ற குறுவையில் வழக்கமாக பயிரிடப்படும் பரப்பளவில் 1.46 இலட்சம் ஹெக்டேர் குறைவாக பயிரிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குறைவினால் ஏற்படக்கூடிய உற்பத்தி இழப்பை ஈடு செய்ய வேண்டியுள்ளது.

நடப்புப் பயிராண்டின் துவக்கத்தில், வழக்கமாக இருந்து வரும் 50 சதவித வர்த்தகர் லெவி மூலம் கொள்முதல் செய்ய அரசு முற்பட்டது. ஆனால், விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த இடுபொருள் மானியத்தை குவிண்டாலுக்கு ரூ. 15–இல் இருந்து ரூ. 20 ஆக அரசு உயர்த்தியது. இந்த இடுபொருள் மான்யம், எப்பொழுதும் போலவே, காவிரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு மட்டும் அவர்கள் தாமாகவே அரசுக்கு அளிக்கும் நெல்லுக்கு உரக்கூப்பன்களாக வழங்கப்பட்டது. பொது விநியோகத்தில் கேட்பு அதிகரித்ததினாலும், கார்டுதாரர்களுக்கு வழங்கவேண்டிய அரிசியின் அளவைக் கருத்தில் கொண்டும், 50 விழுக்காடு வர்த்தகர் லெவி மூலம் மட்டும் கொள்முதல் செய்து நமது முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய இயலாது என்று கருதப்பட்டது. எனவே, 1–11–1985 முதல் காவிரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர் மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், காட்டுமன்னார் கோயில் வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி, ஆவுடையார்கோயில், அறந்தாங்கி வட்டங்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சிராப்பள்ளி, உடையார் பாளையம், லால்குடி, அரியலூர், முசிறி, குளித்தலை வட்டங்களிலும் ஏகபோக கொள்முதல் அமல் செய்யப்பட்டது.



1986 ஏப்ரல் 2]

விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட இடுபொருள் மானியமும் குவிண்டாலுக்கு ரூ. 20 லிருந்து ரூ. 35 ஆக உயர்த்தப்பட்டது. மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள விலைகளுக்கும் மேலாக இடுபொருள் மானியம் வழங்கப்படுகிறது.

| ரகம் | குவிண்டால் நெல்லுக்கு. | |
|---|---|---|
| | 1984–85 | 1985–86 |
| (1) | (2) | (3) |
| | ரூ. | ரூ. |
| சாதாரணம் | 137 | 142 |
| சன்னம் | 141 | 146 |
| மிகச் சன்னம் | 145 | 150 |

1985 ஆம் ஆண்டு குறுவையில் 3.75 இலட்சம் விவசாயிகளும், 1986 ஆம் ஆண்டு சம்பா பருவத்தில், 15—2—1986 முடிய 1.80 இலட்சம் விவசாயிகளும் இடுபொருள் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர். குறுவையில் அளிக்கப்பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 11.62 கோடியும், சம்பாவில் இதுவரை அளிக்கப்பட்ட இடுபொருள் மானியத்தின் மதிப்பு ரூ. 5.50 கோடியும் ஆகும்.

குறுவைப் பருவத்தில் ஏகபோகக் கொள்முதல் முறையை அமல்படுத்தியதினால் அரசு சுமார் 2.90 லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்தது. 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெள்ளத்தினால் பயிர்ச் சேதம் ஏற்படாதிருந்தால், குறுவையில் உற்பத்தியும் கொள்முதலும் இன்னும் அதிகமாக இருந்திருக்கும்.

நமது மாநிலத்தில் மட்டும் கொள்முதல் செய்து பொது விநியோகத்தின் தேவையையும், முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கான தேவையையும் பூர்த்தி செய்ய இயலாதென்பதால், மத்திய தொகுப்பிலிருந்து மாதாந்திர ஒதுக்கீட்டை அதிகப்படுத்துமாறு மத்திய அரசை கேட்டுக் கொள்ளப்பட்டது. இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தமிழ் நாட்டிற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் டன்கள் அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்கள். மேலும், உணவு அமைச்சர் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலாளர் மற்றும் உணவுச் செயலாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புது டில்லிக்கு அனுப்பி மைய உணவு அமைச்சர் அவர்களை சந்தித்து தமது கோரிக்கையை வலியுறுத்துவதற்கான ஏற்பாடுகளையும் செய்தார்கள். இதன் பயனாக மத்திய அரசும் மாநிலத்தின் உணவு நிலைமையில் ஏற்படுகின்ற இன்னல்களை கருத்திற்கொண்டு, மத்திய தொகுப்பிலிருந்து மாதாந்திர ஒதுக்கீட்டை படிப்படியாக அதிகரித்தது.

25,000 டன்களாக இருந்த மாதாந்திர ஒதுக்கீடு உயர்த்தப்பட்டு, 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 35,000 டன்களும், அக்டோபர் மாதம் முதல் 40,000 டன்களும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசு ஒருமுறைக்கான சிறப்பு ஒதுக்கீடாக மாதமொன்றுக்கு 50,000 டன் அரிசியை நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், 1986 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் 25,000 டன் அரிசியும் ஒதுக்கிற்று. தமிழகத்தில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றம் வெள்ளமாகவும், வறட்சியாகவும் சம்பா பயிரையும் பாதித்துள்ளது. நடப்பு சம்பா பருவத்தில், 3,025 லட்சம் ஹெக்டேர் பரப்பளவுக்குக் குறைவாக நெல் பயிரிடப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதனால், நெல் உற்பத்தியில் 9.85 லட்சம் டன் குறைவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உற்பத்திக் குறைவை முன்னிட்டும், திருப்திகரமற்ற குறுவை கொள்முதலை கருத்திற்கொண்டும் ஏகபோக கொள்முதல் முறையை 1986 சம்பா பருவத்திலும் தொடர அரசு முடிவு செய்தது. நடப்பு சம்பாவில் 15—3—1986 முடிய மொத்த கொள்முதல் 3.14 லட்சம் அரிசி டன்களாகும்.

மொத்த இருப்பு பொது விநியோகத்தில் ஏற்பட்ட அதிகப்படியான கேட்பு, வெளிச்சந்தை விலைக்கும் பொது விநியோகத்தில் கொடுக்கப்படும் விலைக்குமிடையே இருக்கும் வித்தியாசம் மற்றும் இதனால் ஏற்படக்கூடிய முறைகேடுகளை குறைக்க வேண்டியதின் அவசியம் போன்றவற்றை கருத்திற்கொண்டு அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 15—9—1984க்கு முன்னர் கிராமப் புறங்களில் குடும்ப அட்டை ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு, அதிக பட்சமாக 6 கிலோ அரிசியும் நகர்ப்புறங்களில் 12 கிலோ அரிசியும் வழங்கப்பட்டது. அவ்வாண்டில், உணவு உற்பத்தி மற்றும் கொள்முதல் நல்ல முறையில் அமைந்தபடியால், 15—9—1984 முதல் அனைத்து கார்டுகளுக்கும் அதிக பட்சமாக, மாதம் ஒன்றுக்கு 20 கிலோ வீதம் வழங்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியாலும், வெள்ளத்தாலும் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டதால், அதிக பட்சமாக வழங்கப்படும் அரிசியின் அளவைக் குறைக்க வேண்டி வந்தது. எனினும், தனிநபருக்கான விநியோக அளவுகள் குறைக்கப்படவில்லை. 1—11—1985 முதல் குடும்ப அட்டை ஒன்றுக்கு, மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவு 20 கிலோவிலிருந்து 12 கிலோவாக குறைக்கப்பட்டது. ஆனால், இது 15—9—1984-க்கு முன் இருந்த நிலையைவிட தாராளமாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அச்சமயம் கிராமப்புறங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட அரிசி 6 கிலோவாகும். தற்சமயம் மாநிலம் முழுவதிலும் உள்ள குடும்ப அட்டைகளுக்கு அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு 12 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.



1981 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் மத்திய அரசு ஐந்து தடவை விலையை உயர்த்தியுள்ளபோதிலும், அரசு பொது விநியோகத்தில் அரிசியின் விற்பனை விலையை மாற்றி அமைக்கவில்லை. உணவு உற்பத்தியின் நிலைமையைக் கருத்தில் கொண்டும், உணவு மானியத்தினால் ஏற்படும் நிதிச்சுமையைக் குறைப்பதன் பொருட்டும், பொது விநியோகத்தில் வழங்கிவரும் சன்ன ரக அரிசியின் விலையை கிலோ ஒன்றிற்கு ரூ. 2-லிருந்து ரூ. 2.25 ஆகவும், மிகச் சன்ன ரக அரிசியின் விலையை கிலோ ஒன்றிற்கு ரூ. 2.15-லிருந்து ரூ. 2.50 ஆகவும், 1—11—1985 முதல் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. எனினும், குறைந்த வருமானமுள்ள வகுப்பினரது நலனை கருத்திற்கொண்டு சாதாரண ரக அரிசியின் விலை கிலோவிற்கு ரூ. 1.75 என்றிருந்ததை மாற்றியமைக்கவில்லை.

ஏகபோக கொள்முதல் முறையை நடைமுறைப்படுத்தியும் மத்திய அரசிடமிருந்து அதிகப்படியான ஒதுக்கீட்டை பெற்றும் அரசு உணவு நிலைமையை சிறப்பாக சமாளித்துள்ளது. விநியோக அளவுகளும், பொது விநியோகத்தில் வழங்கப்படும் அரிசியின் விலையும் சீரமைக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளின் பயனாக மாநிலத்தில் உணவு நிலைமை சீராக அமைந்துள்ளது.

## II. பொது விநியோக முறை.

இம்மாநிலத்தில் 20,723 நியாய விலைக் கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 15,648 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், 5,011 கடைகள் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், மீதமுள்ள 64 கடைகள் மலைத் தோட்ட நிர்வாகங்கள், தொழிற் சங்கங்கள் போன்ற அமைப்புகளாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நியாய விலைக் கடைகள் மூலமாக 119.65 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன.

தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் நியாய விலைக் கடைகள் அனைத்தையும் கூட்டுறவு சங்கங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற அரசு ஆணைக்கு உயர் நீதி மன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது. இது குறித்த மற்றொரு வழக்கு உச்சநீதி மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது, இந்த வழக்கில் விரைவில் உச்சநீதி மன்றத்தின் ஆணைகள் பெறத் தேவையான நடவடிக்கைகளை இவ்வரசு எடுத்து வருகிறது.

நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலைபற்றி ஆராய மாநிலக் கருவூலங்கள் மற்றும் கணக்குகள் துறை இயக்குநரை தலைவராகக் கொண்டு அரசு அமைத்த குழு தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சென்னை நகரத்தில் நியாய விலைக் கடைகள் திறக்க வாடகைக்கு இடம் கிடைக்காமல் கூட்டுறவு சங்கங்கள் பெரிதும் அவதிப்படுகின்றன. எனவே பரீட்சார்த்தமாக நியாய விலைக் கடைகள் கட்ட முதன்மை கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி அளிக்கலாமெனக் கருதி, அரசு 1986–87 ஆம் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்கலாமென முடிவெடுத்துள்ளது.

அரிசி :

1985–86 ஆம் ஆண்டில், இதுவரை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு அரிசி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 28—2—1986 வரையில் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்பட்ட மொத்த அளவு 9.98 லட்சம் டன்களாகும். ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் மாதமொன்றுக்கு 1.03 லட்சம் டன்களாக இருந்த அரிசியின் விநியோக அளவு, குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அளவைக் குறைத்ததாலும், போலி குடும்ப அட்டைகளை ஒழிப்பதை தீவிரப்படுத்தியதாலும், ஆண்டின் கடைசி நான்கு மாதங்களில் மாதமொன்றுக்கு சுமார் 70,000 டன்களாக குறைந்துள்ளது.

இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் ஏற்றுக்கொள்ளக் கூடிய தரமான அரிசி இருப்பு இல்லாததால், இம்மாநிலத்துக்கு ஒதுக்கப்படும் மொத்த அரிசியையும் உரிய நேரத்தில் எடுக்க முடிவதில்லை என தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கூறியுள்ளது. இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளிலிருந்து உரிய நேரத்தில் எடுக்க வசதியாக தரமான அரிசியை வைத்திருக்க வேண்டும் என்று அக்கழகத்தை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 9.40 லட்சம் ரூபாய் செலவில் 6.25 லட்சம் உணவுப் பொட்டலங்களை வழங்கியது.

கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் :

மத்திய அரசு முன்பு போலவே இந்த ஆண்டும் மாதமொன்றுக்கு 30,000 டன்கள் கோதுமையை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்தது. ஆனால், பொது விநியோக முறையின் கீழ் கோதுமை வாங்குவது தொடர்ந்து குறைவாகவே உள்ளது. மத்திய அரசின் மொத்த ஒதுக்கீடான 3,30,000 டன்களில் 1—4—1985 முதல் 28—2—1986 வரையிலான காலத்தில், 57,702 டன் கோதுமைதான் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.





மத்திய அரசு 1–2–1986 முதல் கோதுமை விற்பனை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயில் இருந்து 190 ரூபாயாக உயர்த்தியது. இதன் காரணமாக மாநில அரசு கோதுமையின் சில்லறை விற்பனை விலையை கிலோ ஒன்றுக்கு 2.05 ரூபாயாக நிர்ணயித்துள்ளது.

இம்மாநிலத்தில் 42 உருளை மாவு ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மாத உற்பத்தித்திறன் 75,610 டன்களாகும். மத்திய அரசு, இந்த ஆலைகளுக்கு 1985 ஏப்ரல் மாதத்திலிருந்து உரிமத் திறனில் 125 விழுக்காடு வரை கோதுமை அரைக்க அனுமதி வழங்கியது. இதற்கென மொத்தம் 94,350 டன் கோதுமையை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. 27–1–1986 முதல் இந்த ஆலைகளின் அரைவைத் திறனில் 150 விழுக்காடு அரைக்க அனுமதி வழங்கப்பட்டு, மாதமொன்றுக்கு 1,13,220 டன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. மத்திய அரசு புதிய உருளை மாவு ஆலைகள் அமைப்பதற்கான தடையை நீக்கி நாளொன்றுக்கு 30 டன்கள் அரைவைத் திறன் கொண்ட ஆலைகள் துவங்க விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இவ்வாலைகள் திறப்பதில் (1) பொதுத் துறை, (2) கூட்டுறவு சங்கங்கள் மற்றும் (3) முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படவில்லையெனில், தனிப்பட்ட தொழில் முனைவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும். மாநில அரசால் பரிசீலிக்கப்பட்ட விண்ணப்பங்களை மத்திய அரசு பெற 30–5–1986 கடைசி நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு, உருளை ஆலைகளுக்கு வழங்கப்படும் கோதுமை விலையை குவிண்டால் ஒன்றுக்கு 172 ரூபாயிலிருந்து 190 ரூபாயாக 1–2–1986 முதலும், 190 ரூபாயிலிருந்து 220 ரூபாயாக 1–4–1986 முதலும் உயர்த்தியுள்ளது. ரவை மற்றும் மைதாவின் சில்லறை விலை 31–3–1986 வரை கிலோ ஒன்றுக்கு 2·70 ரூபாய் எனவும், 1—4—1986 முதல் கிலோ ஒன்றுக்கு 3.00 ரூபாய் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொது விநியோக முறையில் கோதுமையும், கோதுமைப் பொருட்களும் அதிக அளவில் வாங்கப்படாமல் உள்ளது குறித்து அரசு கவலை கொண்டு, இவற்றை சுத்தம் செய்து, பாக்கெட்டுகளில் அடைத்து, விற்பதன் மூலம் விற்பனையை அதிகரிக்க முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து வருகிறது. கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களின் உபயோகத்தை மக்களிடையே பரப்புவதற்காக, தமிழ் நாடு உருளை மாவு ஆலைகள் சங்கம் மற்றும் ''யு.எஸ்.வீட் அசோஷியேட்ஸ்'' என்ற நிறுவனத்தின் உதவியுடன் திரைப்படம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 2

சர்க்கரை :

நாடு முழுவதும் ஒரே விலையில் விற்கப்படும் லெவி சர்க்கரை நியாய விலைக் கடைகள் மூலம் மாதமொன்றுக்கு நபர் ஒருவருக்கு 450 கிராம் என்ற அளவில் விநியோகிக்கப்படுகிறது. கிலோ ஒன்றுக்கு 4.00 ரூபாயாக இருந்த லெவி சர்க்கரையின் விலை, 1–4–1985 முதல் 4.40 ரூபாயாகவும், 1–12–1985 முதல் 4.80 ரூபாயாகவும் மத்திய அரசால் உயர்த்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டில் ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களிலும், ஆகஸ்ட் முதல் சனவரி 1986 முடியவும், கார்டிற்கு மாதமொன்றுக்கு கூடுதலாக ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்பட்டது. 1985 ஜூன் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் வெளி அங்காடியில் சர்க்கரை விலை உயர ஆரம்பித்தபோது வழக்கமாக இம்மாநிலத்துக்கு ஒதுக்கப்படும் 21,292 டன்களும், கூடுதலாக மாதமொன்றுக்கு 3,402 டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கப்பட்டதால் வெளிச் சந்தை விலை கட்டுப்படுத்தப்பட்டது. இதைத் தவிர, விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்பட்ட சர்க்கரையும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்த வெளிச்சந்தை சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்தி, சர்க்கரை விலை வெளிச் சந்தையில் உயர்வதை இந்த அரசு தடுத்தது.

மண்ணெண்ணெய் :

மண்ணெண்ணெய் விநியோகத்தில், இவ்வாண்டு குறிப்பிடத்தக்க மாற்றமேதும் நிகழவில்லை. மாதம் ஒன்றிற்கு இம்மாநிலத்துக்கு தேவைப்படும் 60,000 கிலோ லிட்டரில், மத்திய அரசு 47,000 கிலோ லிட்டரைத்தான் ஒதுக்கீடு செய்கிறது. வெள்ள நேரத்தில் அதிகப்படியான 1,000 டன் மண்ணெண்ணெய் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. குடும்ப அட்டைதாரர்களின் தேவைக்கு அதிகமாக மண்ணெண்ணெய் இருந்தால், நகராட்சிகள் மற்றும் நகரியப் பகுதிக் குடும்ப அட்டைதாரர்களுக்கு, அதை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. பெட்ரோலியம் பொருட்களின் விலையை மத்திய அரசு ஏற்றிய காரணத்தால், மண்ணெண்ணெயின் விற்பனை விலை சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் லிட்டர் ஒன்றுக்கு 2.25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டங்களில் மண்ணெண்ணெயின் சில்லறை விற்பனை விலையை, மண்ணெண்ணெய்க் கம்பெனிகளின் கிடங்குகளின் தூரத்தைப் பொறுத்து நிர்ணயம் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

1985 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சென்னை திருச்சி சாலையில் உடைப்பு ஏற்பட்டதால், மொத்த விற்பனையாளர்கள் மண்ணெண்ணெயை எடுப்பதில் சிரமம் அடைந்தனர்.



1986 ஏப்ரல் 2]

சுற்று வழியில் மண்ணெண்ணெய் கொண்டு வரப்பட்டதால் போக்குவரத்துச் செலவை கணக்கில் கொண்டு விலையை உயர்த்தித் தர வேண்டுமென அவர்கள் கேட்டனர். மக்களுக்கு தடையின்றி மலிவு விலையில் மண்ணெண்ணெய் கிடைப்பதற்காக இந்த அதிக செலவை மொத்த வணிகர்களுக்கு திருப்பி அளிக்கலாமென அரசு முடிவெடுத்தது.

சமையல் எண்ணெய் :

மத்திய அரசு, இம்மாநிலத்துக்கு மாதமொன்றுக்கு 3,600 டன்கள் சமையல் எண்ணெய் ஒதுக்கீடு செய்கிறது. இது தவிர இந்துஸ்தான தாவர எண்ணெய்க் கழகத்தின் மூலம் மாதமொன்றுக்கு 1,000 டன்கள் டின்களில் அடைக்கப்பட்ட சமையல் எண்ணெயும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சமையல் எண்ணெயை சீராக விநியோகம் செய்வதற்கு தேவையான உள்ளமைப்பை இம்மாநிலம் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளது. 1–4–1985 முதல் 28–2–1986 வரையிலான காலத்தில், 56,645 டன்கள் சமையல் எண்ணெய் பொது விநியோக முறையில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட அளவை விட இந்த ஆண்டு சமையல் எண்ணெய் குறைவாகவே ஒதுக்கப்பட்டிருப்பினும், உள்ளூர் உற்பத்தி அதிகமான காரணத்தால் வெளி அங்காடியில் சமையல் எண்ணெய் விலை கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மத்திய அரசு பாமாலின் விலையை டன்னுக்கு 1,000 ரூபாய் ஏற்றியதால், சில்லரை விலையை கிலோ ஒன்றுக்கு 11.85 ரூபாயாக இவ்வரசு நிர்ணயித்துள்ளது.

கட்டுப்பாட்டுத் துணி :

மத்திய அரசு, 1985 ஏப்ரல் மாதம் கிராமப் பகுதிகளில் உள்ள நலிவுற்றோருக்கு சென்றடையும் வகையில் கட்டுப்பாட்டுத் துணியின் விநியோகம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டது. கட்டுப்பாட்டுத் துணி அனைத்து நலிவுற்றோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வரசு கிராமப் பகுதிகளிலும், நகர்ப்புறங்களிலும் மாதம் 1,000 ரூபாய்க்கு குறைவான வருவாய் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மட்டும் கட்டுப்பாட்டுத் துணி வழங்கப்பட வேண்டுமென ஆணையிட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டுக்கு 18 மில்லியன் சதுர மீட்டர் கட்டுப்பாட்டுத் துணி இந்த மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணியக் கழகம் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் அதிகாரிகளோடு காலமுறைக் கூட்டங்கள் நடத்தி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் கட்டுப்பாட்டுத் துணி வழங்கப்படுவதை கண்காணித்து வருகிறார்.

கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை :

நியாய விலைக் கடையிலுள்ள சராசரி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 575 தான். 1,500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாக உள்ள நியாய விலைக் கடைகள் அனைத்தும் நட்டத்திலேயே நடைபெறுகின்றன. எனவே, நியாய விலைக் கடைகளின் பொருளாதார நிலையை சீர் செய்ய கடைகளில் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனையை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், கூட்டுறவுச் சங்கங்களும் பணியாளர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கி கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனையை அதிகமாக்க திட்டம் தீட்டியுள்ளன.

சென்னை நகரத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தேயிலை விற்கப்பட்டு வருகிறது. " இன்கோசர்வ் " நிறுவனம், இந்த தேயிலையை தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு விநியோகிக்கிறது.

பொது விநியோகத் திட்டத்தைக் கண்காணித்தல் :

இத்துறையின் அதிகாரிகள், மாதமொன்றுக்கு சோதனை செய்ய வேண்டிய கடைகள் மற்றும் குடும்பக் கார்டுகளின் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலும், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளராலும் இந்த செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது. போலி குடும்ப அட்டைகளை நீக்கும் முயற்சியில். கிழக்கு மதுரையில் மட்டும் 3,458 போலி குடும்ப அட்டைகளை, அதாவது, அப்பகுதியில் உள்ள மொத்த குடும்ப அட்டைகளில் சுமார் 10 விழுக்காடு அட்டைகளை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்டுபிடித்து நீக்கியுள்ளார். இவ்வாறு மாநிலம் முழுவதும் முயன்று, போலி குடும்ப அட்டைகளை நீக்குவதன் மூலம் உண்மை நுகர்வோர் அதிக அளவில் அத்தியாவசியப் பண்டங்களைப் பெற இயலும்.

III. ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வரும் பகுதிகளில் மலிவு விலையில் உணவு தானியங்களை விநியோகம் செய்தல்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (Integrated Tribal Development Programme) உள்ள பகுதிகளில் உள்ள கார்டுதாரர்களுக்கு மைய அரசு மிகவும் மலிவு விலையில் உணவு தானியங்களை வழங்கும் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இப்பகுதிகளில் விநியோகம் செய்ய கோதுமையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 125 என்ற விலையிலும், அரிசியை



குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 160 என்ற விலையிலும், மைய அரசு மாநில அரசுக்கு வழங்குகிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு கார்டுக்கு 30 கிலோ கோதுமையும், 12 கிலோ அரிசியும் அதிக பட்சமாக வழங்கப்படுகிறது. நுகர்வோர்களுக்கான சில்லறை விலையை கோதுமைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50 என்றும், அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 1.85 என்றும், நிர்ணயம் செய்யும்படி மைய அரசு யோசனை தெரிவித்துள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ள 9 வட்டாரங்களில் சேலம், வடாற்காடு, தென்னாற்காடு, தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டதை மாநில அரசு அமல்படுத்தியுள்ளது. அரிசிக்கு மிக அதிக அளவில் மாநில அரசு மானியம் வழங்குவதால், பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலை மைய அரசு தெரிவித்துள்ள விலையைவிட குறைவாகவே உள்ளது. எனவே, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சாதாரண அரிசிக்கான விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.40 என்று மாநில அரசு நிர்ணயித்துள்ளது. கோதுமை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50 என்ற விலையில் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தினால் 38,000 குடும்ப கார்டுதாரர்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் உள்ள மசினகுடி என்ற ஊரில் வாழும் பழங்குடி மக்களையும் சேர்த்துக் கொள்ளும்படி, மைய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள எல்லாப் பழங்குடி மக்களையும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படியும் இந்த அரசு மைய அரசுக்கு யோசனை தெரிவித்துள்ளது.

IV. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

1985–86 ஆம் ஆண்டில் 28–2–1986 வரை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 2.02 இலட்சம் டன்கள் அரிசியையும், 28,710 டன்கள் பருப்பு வகைகளையும், 6,179 டன்கள் சமையல் எண்ணெயையும், 66,504 சத்துணவு மையங்களுக்கு வழங்கியது. இதனால் 86.88 லட்சம் குழந்தைகளும், 1,99,794 முதியோர் உதவித் தொகை பெறுவோரும், 112 முன்னாள் படைவீரர்களும் பயனடைகிறார்கள். சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் அறிவித்தபடி, இம்மாநிலத்தின் எல்லா சத்துணவு மையங்களுக்கும், அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய பொருட்களை கொண்டு செல்லும் பணியினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்று நடத்துகிறது.

## V. அரிசி அரவை ஆலைகளை நவீனப்படுத்துதல்

அரிசி அரவை ஆலைகளை நவீனமயமாக்குவதன் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு, இதுவரை 10 கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. 15 செயல்முறை ''விளக்க மையங்களில்'' பொருத்துவதற்கு தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அரிசி ஆலைகளை நவீனப் படுத்துவதற்கான மானிய உதவித் திட்டத்தின் கீழ் நவீன இயந்திரங்கள் வாங்க ரூ. 5,000 மானியம் ஆலையின் அதிபருக்கு வழங்கப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. 12–9–1984 அன்று அல்லது அதற்கு முன்பு நிறுவப்பட்ட அனைத்து ஒற்றை அல்லர் அரிசி ஆலைகளையும் நவீனப்படுத்துதலில் இருந்து அரிசி ஆலைகள் நியமனம் மற்றும் ஒழுங்கு படுத்தல் சட்டத்தின் கீழ் விலக்களித்து மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. அதனால் அரிசி ஆலைகளை நவீனப்படுத்துதலில் கணிசமான முன்னேற்றம் காண முடியவில்லை. ஆயினும், மாநில அரசு இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த முயன்று வருகிறது.

குடிமைப் பொருள் வழங்குதுறை அலுவலர்களுக்கு, அரிசி ஆலைகள் நவீனப்படுத்துதல் பற்றி அண்ணாமலை பல்கலைக் கழகத்திலுள்ள பிராந்திய விரிவுப்பணி மையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## VI. இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் மற்றும் அதன்கீழ் வெளியிடப் பட்ட கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்துதல்.

இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்திலுள்ள பல்வேறு விதிகளையும் மற்றும் அந்த சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு ஆணைகளையும் செயல்படுத்துகின்ற பொறுப்பு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் மற்றும் இத்துறை அலுவலர்கள், காவல் துறை துணைத் தலைவர், உணவுப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு மற்றும் இப்பிரிவில் பணி புரியும் காவல்துறையினர் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில் 31–1–1986 வரை 2,649 வழக்குகள் செயல்படுத்து அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் கைப்பற்றிய பண்டங்களின் மதிப்பு ரூ. 2,51,47,444 ஆகும். கண்டுபிடிக்கப்பட்ட 2,649 வழக்குகளில், 1,423 வழக்குகள் இன்றியமையாப் பண்டங்கள் கடத்தலைச் சார்ந்தவை ஆகும். 519 வழக்குகள் பதுக்கல் குற்றங்கள் தொடர்புடையவையாகும். மீதி வழக்குகள், இதர குற்றங்களைச் சார்ந்தவை.





1985 ஜூலைத் திங்கள் வரை, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் பிரிவு 6-ஏ-ன் கீழ் பறிமுதல் செய்து இடும் ஆணைகளின் மீது வரும் மேல் முறையீடுகளை அரசின் சார்பில் உணவுத்துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் விசாரணை செய்து ஆணையிட்டு வந்தார். 1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் இம்மேல் முறையீடுகளை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், அலுவல்வழி ஆணையாளர் மற்றும் செயலாளர் என்ற முறையில் விசாரணை செய்து ஆணையிட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசு அளவில், உணவுக் கொள்கையை வகுப்பதில் முழு கவனத்தை செலுத்தவும் அதனை நல்ல முறையில் கண்காணிக்கவும் இது உதவுகிறது. அதிக அளவில் மேல்முறையீடுகள் வரப் பெற்றதால், அவற்றை விரைவாக முடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனால், முறையீடுகளை விரைவில் விசாரணை செய்து ஆணையிட ஏதுவாயிற்று. 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முடிய, எட்டு திங்களில் 460 மேல்முறையீடுகள் விசாரணை செய்து ஆணையிடப் பட்டுள்ளன.

கள்ளச் சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதலை நிலைப்பேணுதல் சட்டம் 1980-ன் கீழ் பொருளாதார குற்றங்கள் புரிபவர்கள் மீது சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்து, அவர்களை தடுப்புக் காவலில் வைக்கப் பட்டது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த சட்டத்தின் கீழ் அரசுக்கு லெவி கொடுப்பதை தவிர்த்து சட்ட விரோதமாக நெல்லை கடத்தியதற்காக, தென்னாற்காடு மாவட்டத்தில் மூன்று பேரும், மண்ணெண்ணெயை கள்ளச் சந்தையில் விற்றதால் சென்னை நகரத்தில் ஒருவரும், நெல் மற்றும் அரிசியில் கலப்படம் செய்ததற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் ஒருவரும் இவ்வாண்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வரவு செலவுத் திட்ட சட்ட மன்றத் தொடரில் உணவு அமைச்சரால் அறிவிக்கப்பட்ட அமல் பிரிவு அரசு ஊழியர்களுக்கு ''ஊக்குவிப்பு திட்டம்'' ஒப்பளிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள் வழங்கு துறையில் மாவட்ட வழங்கல் அலுவலர் மற்றும் அவருக்குக் கீழ் நிலையில் உள்ள அலுவலர்கள், வருவாய்த் துறையில் கோட்டாட்சித் தலைவர் மற்றும் அவருக்கு கீழ்நிலையில் உள்ள அலுவலர்கள், காவல்துறையில் துணை கண்காணிப்பாளர் மற்றும் அவருக்குக் கீழ் நிலையில் உள்ள அலுவலர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் கீழ் பரிசு பெற தகுதியுடையோர் ஆவர். வெளி மாநிலங்களுக்கு கடத்தல் செய்வதைத் தடுப்பதிலும், பெருமளவில் பதுக்கலை வெளிக் கொணர்வதிலும் பங்கு வகிக்கும் அரசு ஊழியர்களுக்கு பறிமுதல் செய்யப்படும் பொருள்களின் மதிப்பில் 10 விழுக்காடு பரிசுத் தொகையாக அளிக்கப்படும்.

[1986 ஏப்ரல் 2

## VII. மாநிலத்தில் விலைவாசி நிலைமை

1984 ஆம் ஆண்டுடன் 1985 ஆம் ஆண்டின் மொத்த விலைக் குறியீட்டெண்ணை ஒப்பிடுங்கால் விலைவாசி நிலவரம் பெரும்பாலும் நிலையாக இருப்பது தெரியும். முதன்மைப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டெண் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. உணவுப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டெண் பொதுவாக நிலையாக இருந்தது. தொழிலாளர்களின் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்ணில் காணப்படும் மாறுதல்களில் வெவ்வேறு மையங்களுக்கிடையே பெருமளவு வேறுபாடுகள் இருப்பது புலனாகிறது. 1985 ஆம் ஆண்டில், ஏப்ரல் முதல் அக்டோபர் வரையில், சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் 20 புள்ளிகளுக்கு மேல் அதிகரித்துள்ளது. ஆனால் அதே சமயத்தில் கடலூர், நாகர்கோவில், குனூர் ஆகிய இடங்களில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பொதுவாக நிலையாக இருந்தது.

பருவ நிலை பாதகமாக அமைந்ததைத் தொடர்ந்து நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. ஆகவே, 1985 ஆம் ஆண்டில் மே முதல் செப்டம்பர் வரை வெளி அங்காடியில் அரிசியின் விலை ஓரளவிற்கு அதிகரித்தது. தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவுச் சங்கங்களும் அரிசியை இச்சமயத்தில் வெளிச் சந்தை விலையைவிட குறைந்த விலையில் வெளிச் சந்தையில் விற்பனை செய்ததினால் கடுமையான விலை ஏற்றத்தை தவிர்க்க முடிந்தது. 1985 ஆம் ஆண்டில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 11,05,277 டன்கள் அரிசியும், முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்குத் தேவையான 2,18,646 டன்கள் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு மாதங்களாக வெளிச் சந்தையில் அரிசியின் விலை கட்டுப்பாட்டிற்குள் நிலையாக உள்ளது.

கோதுமை, கோதுமைப் பொருட்கள், சமையல் எண்ணெய், தேயிலை ஆகியவற்றைப் பொறுத்தவரை அவற்றின் விலைகளில் குறிப்பிடும்படியான சரிவு ஏற்பட்டுள்ளது. பருப்பு வகைகள், காய்கறிகள், இலவங்கப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் இயற்கையான பருவகால ஏற்றத் தாழ்வுகளைத் தவிர பொதுவாக நிலையாக இருந்து வந்துள்ளன. 1985 ஆம் வருடத்தில் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையிலான இடைப்பட்ட சிறிது காலத்தில் சர்க்கரையின் விலை அதிகரித்தது. ஆனால் முன்னேற்பாடாக சர்க்கரை இருப்புகளை திறம்பட நிர்வகித்ததின் காரணத்தினால், அதிகரித்த சர்க்கரையின் விலை தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும், பண்டிகைக் காலங்களில் ஏற்படும் தேவையைப் பூர்த்தி செய்ய மாதம் ஒன்றுக்கு குடும்பக் கார்டு ஒன்றுக்குக் கூடுதலாக



1986 ஏப்ரல் 2]

ஒரு கிலோ லெவி சர்க்கரை எட்டு மாதங்களில் வழங்கப்பட்டது. கடந்த ஆறு மாதங்களாக சர்க்கரை விலை கட்டுப்பாட்டில் நிலையாக உள்ளது.

ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு சென்னையில் 8–8–1985ஆம் நாளன்று ஓட்டல் உரிமையாளர்கள் கூட்டத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் கூட்டினார். அக்கூட்டத்தில் சென்னையில் உள்ள சில முக்கியமான நுகர்வோர் நிறுவனங்களும் பங்கு பெற்றன. இட்லி, தோசை, காபி, தேநீர், அளவு சாப்பாடு போன்ற இன்றியமையா உணவுப் பண்டங்கள் விலைகளை தாமே கட்டுப்படுத்தி விற்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் முன்வந்தது. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஓட்டல் உரிமையாளர்களுடன் பேச்சு நடத்தி உணவுப் பண்டங்களின் விலையை நிர்ணயித்துள்ளனர். இந்த உணவுப் பண்டங்கள் விலைகளை தாமே கட்டுப்படுத்தி விற்பனை செய்யும் திட்டத்தை மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரும் கண்காணித்து வருகின்றனர்.

வர்த்தகர்கள், தாங்களாகவே இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துத் தொழில் செய்வதையே அரசு பொதுவாக விரும்புகிறது. இதற்காக வர்த்தகர்கள் பொருள் குழுக்களை ஏற்படுத்துவதை அரசு ஊக்குவித்து வருகிறது. வர்த்தகர்கள் சங்கத்தைக் கூட்டி பொருள் குழுவினை வர்த்தகர்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். பெரியார் மாவட்டத்தில் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகளுக்கு பொருள் குழுக்களை வர்த்தகர்கள் ஏற்படுத்தியுள்ளனர். இதர மாவட்டங்களில் இது போன்ற குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் விலைவாசி நிலைமை கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இன்றியமையாப் பொருளின் விலை எவ்வப்போது அதிகமாக உயருகிறதோ அவ்வப்பொது அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

## VIII. நுகர்வோர் பாதுகாப்பு.

நுகர்வோர் இயக்கத்திற்கு, தேவையான ஊக்கத்தை அளிப்பதற்கு "கிரியா ஊக்கி" போல் செயல்படுவதே நுகர்வோர் பாதுகாப்பில் அரசின் பங்கு ஆகும். இதற்கு நுகர்வோர்

கல்வி அவசியம் ஆகும். இதற்காக மரபு வழிக் கல்விக்கூடங்கள் மற்றும் மக்கள் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. முன்னோடியாக, ஐந்தாவது வகுப்புப் பள்ளிச் சிறுவர்களுக்கு கலப்படத்தின் தீமைகளையும், நுகர்வோர் பாதுகாப்பின் அவசியத்தையும் எடுத்துரைக்க ஒரு பாடம் சேர்க்கப்பட உள்ளது. மேலும் இதுபோன்ற ஒரு விரிவான பாடத்தை எட்டாவது அல்லது ஒன்பதாவது வகுப்புப் பள்ளி மாணவர்களுக்குப் பாடமாக அமைப்பதற்கு ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. உணவுப் பொருட்களில் செய்யப்படும் கலப்படத்தை சோதனை மூலம் கண்டறிவதற்கான ஒரு பாடத்தை சேர்க்குமாறு வேதியியல் பயிற்றுவிக்கும் கல்லூரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. முறைசாரா கல்வித் திட்டத்தில், நுகர்வோர் பாதுகாப்புப் பற்றிய ஒரு பாடமும் சேர்த்துக் கொள்ளப்படும். நுகர்வோர் உரிமைகள் மற்றும் அந்த உரிமைகளைச் செயல்படுத்துவது பற்றிய வழிமுறைகளை நுகர்வோர் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கு 1986–87 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டத் தலைமை இடங்களிலும் கருத்தரங்குகளை நடத்துவது எனவும் அரசு முடிவு செய்துள்ளது.

உணவுப் பொருட்களைச் சோதனை செய்வதற்காக அமைந்துள்ள வசதிகளை மேலும் வலுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளரின் கீழ் செயல்பட்டுவரும் சிறு சோதனைச்சாலை 1985–86-ல் விரிவாக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களில் செய்யப்படும் கலப்படத்தை எளிய முறையில் சோதனை செய்து கண்டறிவதற்கு உதவும் வண்ணம்' ரசாயனப் பொருட்கள், கருவிகள் அடங்கிய சிறு பகுப்பாய்வுப் பெட்டிகள் வாங்குவதற்கு வாணிபக் கழகம் நடத்தும் அமுதம் பல்பொருள் அங்காடி, கூட்டுறவுத் துறை நடத்தும் கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள் ஆகியோருக்கு இப்பகுப்பாய்வு பெட்டிகள் வழங்கப்படும்.

நுகர்வோர் அமைப்புகளுக்கு அரசு போதிய அளவு ஊக்கம் அளித்து வருகிறது. நுகர்வோர் நலன்கள் குறித்து வர்த்தகர்கள் மற்றும் ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றோடு அரசு பேச்சு வார்த்தை நடத்தும்போது, நுகர்வோர் அமைப்புகளும் அழைக்கப்பட்டு, அவர்களும், வர்த்தகர்கள் மற்றும் ஓட்டல் உரிமையாளர்களோடு நடத்தும் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். மாநிலத்தில் உள்ள 19 முக்கிய நுகர்வோர் அமைப்புகளுக்கு மைய அரசு உதவி அளிக்கும் திட்டம் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் இயக்கத்தின் வளர்ச்சிக்காக திருச்சி மாவட்ட நுகர்வோர் கவுன்சிலுக்கு மைய அரசு ரூ. 6,300 நிதி உதவி அளித்துள்ளது. மற்றொரு தன்னியல் அமைப்பு அளித்துள்ள கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்னை, ரோட்டரி சங்கம் ஏற்பாடு செய்து நடத்திய நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கிற்கு அரசு ரூ. 2,000 நிதி உதவி அளித்துள்ளது. அக்கருத்தரங்கிலும் அரசு கலந்து கொண்டது.



அண்மையில், மைய அரசு நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய வரைவு மசோதாவை கொண்டு வந்துள்ளது. நுகர்வோர் பாதுகாப்புக் குழு மற்றும் நுகர்வோரின் குறைபாடுகளை தீர்க்க நீதி மன்றம் ஆகிய அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு இந்த வரைவு மசோதா வகை செய்கிறது. இந்த வரைவு மசோதா அரசின் பரிசீலனையில் உள்ளது.

## IX. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்தல், கொள்முதல் செய்த நெல்லை அரிசியாக்கி, அதை கிட்டங்களில் சேமித்து வைத்தல் மற்றும் இன்றியமையாப் பொருட்களை பொது விநியோகத்திற்கு வழங்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டில், இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 20 கோடியிலிருந்து ரூ. 30 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 19.89 கோடியாகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், குடும்ப அட்டைதாரர்களுக்கான அரிசியை விநியோகம் செய்வதற்காக நெல், அரிசியை தமிழக அரசின் முகவராக இருந்து நேரடிக் கொள்முதல் செய்கிறது. 1985–86 ஆம் ஆண்டில், சம்பாவில் 15–3–1980 வரை இக்கழகம், 4.68 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கென இக்கழகம், 832 நேரடிக் கொள்முதல் நிலையங்களையும், 45 லெவி சேகரிப்பு நிலையங்களையும் நிறுவியுள்ளது.

இக்கழகம் 1985–86 ஆம் ஆண்டில், ஏதன் 3.20 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதியுடன் மேலும் 30,400 டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு வசதியை பெருக்கியுள்ளது. அரசால் அனுமதியளிக்கப்பட்ட 5 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சேமிப்பு கிடங்குகள், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் லெவி கொள்முதல் நிலையங்கள் ஆகியவற்றை ரூ. 73.73 கோடி செலவில் கட்டுவதற்கான திட்டம் ஒன்றை தீட்டியுள்ளது. அரசு,

வரும் நிதியாண்டில், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்காக ரூ. 10 லட்சமும், செயல்முறை சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கு ரூ. 10 லட்சமும் அனுமதி அளித்துள்ளது. 1985–86 ஆம் ஆண்டில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் 13 நவீன அரிசி ஆலைகளின் அரைவை திறனை ஆண்டுக்கு மேலும் 60,000 டன்கள் அதிகரிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதைப்போன்று ஆறு நவீன அரிசி ஆலைகள் கட்டுவதற்கான திட்டத்திற்கும் அரசு அனுமதி அளித்துள்ளது. இதைத் தவிர, ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், இரண்டு நவீன அரிசி ஆலைகளை நிறுவுவதற்கு திட்டக் குழுவினால் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் அனுமதியளிக்கப்பட்டு, தஞ்சாவூர் மாவட்டத்தில், சீர்காழி வட்டத்தில், எருக்கூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் நவீன அரிசி ஆலை, 1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இந்திய உணவுக் கழகத்திடமிருந்து நான்கு நவீன அரிசி ஆலைகளை வாங்குவதற்கான செயற்குறிப்பு, கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இந்த அரிசி ஆலைகளை வாங்குவதற்கான வழிமுறை மற்றும் நிபந்தனைகள் குறித்து இந்திய உணவுக் கழகத்துடன் ஆராயப்பட்டு வருகிறது.

அரசின் மொத்த வணிகராக செயல்படுவதைத் தவிர இக்கழகம், தென்னாற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 5,011 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகிறது. 1985–86 ஆம் ஆண்டு இக்கழகத்தின் மொத்த விற்பனை அளவு ரூ. 526 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1984–85 ஆம் ஆண்டில் இருந்த விற்பனை அளவான ரூ. 443.55 ஐ விட 18.5 விழுக்காடு அதிகமாகும்.

## X. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், தமிழ்நாடு முழுவதும் சேமிப்பு கிடங்கு வசதியை அளிக்கிறது. விவசாய விளை பொருட்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட பொருட்களுக்கு பூச்சிமருந்து அடிக்கும் பணியையும் மேற்கொள்கிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத் தொகை ரூ. 6 கோடியாகும். 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய, இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனத் தொகை ரூ. 5.01 கோடியாக இருந்தது. 1985–86 ஆம் ஆண்டு, அரசு



இந்நிறுவனத்திற்கு ரூ. 20 லட்சம் பங்கு மூலதனமாக வழங்கியுள்ளது. இதேபோன்று மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் அதன் பங்கான ரூ. 20 லட்சத்தை இந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. 1986–87 ஆம் ஆண்டு, இந்நிறுவனம் இதன் பங்கு தொகையை ரூ. 60 லட்சமாக உயர்த்த கருதியுள்ளது.

1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய, இந்நிறுவனம் 43 இடங்களில் 123 கிட்டங்கிகளை நடத்தி வந்தது. இவற்றின் கொள்திறன் 3.37 லட்சம் டன்களாக இருந்தது. 7-வது ஐந்தாண்டு திட்டத்தில், மேலும் 2.52 லட்சம் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்பு வசதியை, ரூ. 12.86 கோடி செலவில் ஏற்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. 1985–86 ஆம் ஆண்டிற்கு, கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்த இந்நிறுவனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 40,000 டன்கள் மட்டுமேயாகும். இந்நிறுவனம், 75,000 டன்கள் கூடுதல் சேமிப்பு வசதியை ஏற்படுத்தி இந்த இலக்கை தாண்டியுள்ளது.

இந்நிறுவனம், விஞ்ஞான ரீதியிலான சேமிப்பு வசதி இருப்பு வைத்தல் மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவற்றில் இந்நிறுவனத்தின் பணியாளர்களுக்கு உள்ள திறமையை மேலும் வளர்ப்பதற்காக ஒரு பயிற்சி வகுப்பினை நடத்தி வருகிறது. இதன்கீழ் முதல் பயிற்சி வகுப்பு, இந்நிறுவனத்தின் சேமிப்பு கிடங்கு மேலாளர்களுக்கும், மற்றும் கிராமப்புற கிட்டங்கிகளில் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் 20—1—1986 முதல் 12—2—1986 முடிய நடைபெற்றது. இந்த பயிற்சி வகுப்பிற்கு விவசாய விளை பொருள் விற்பனை இயக்குநர் தனது இயக்ககத்திலிருந்து 5 பணியாளர்களை அனுப்பியிருந்தார். இந்த பயிற்சிக்கான விளக்கக் குறிப்பு மிகவும் உயர்ந்த தரமுடையதாக உள்ளது.

இந்நிறுவனம், தொடர்ந்து பல ஆண்டுகளாக லாபத்தையே ஈட்டி வருகிறது என்று குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த 5 ஆண்டுகளில் இந்நிறுவனம் ஈட்டியுள்ள லாபம் பின்வருமாறு :—

| ஆண்டு. | லாபம். (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1980—81 | 24.62 |
| 1981—82 | 69.31 |
| 1982—83 | 84.58 |
| 1983—84 | 100.10 |
| 1984—85 | 125.23 |

இந்நிறுவனம், 1984–85 ஆம் ஆண்டிற்கான நிகர லாபத் தொகையான ரூ. 119.24 லட்சத்தில் 2 விழுக்காடு தொகையினை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குடும்ப நலத்திட்டத்திற்காக வழங்கியுள்ளது. இத்தொகை ஒரு மருத்துவ மனையில் குடும்ப நல அறுவை சிகிச்சைகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். 1985–86 ஆம் ஆண்டிலும் இதே போன்ற தொகை இந்நிறுவனத்தினால் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1364.64
சென்னை-600 008.